# இனம் பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

Inam International E-Journal of Tamil Studies (IIETS)

e-ISSN : 2455-0531
UAN : TN03D0061112

நவம்பர் 2022 மலர் : 8 இதழ் : 32

November 2022 Volume VIII Issue 32

**பதிப்பாசிரியர்**

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப் பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 17.

முனைவர் சத்தியராஜ் தங்கச்சாமி
தமிழ் உதவிப் பேராசிரியர்
ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

**Chief Editors**

Dr.M.Munees Moorthy
Assistant Professor in Tamil
Bishop Heber College, Trichy - 17.

Dr. Sathiyaraj Thangasamy
Assistant Professor in Tamil
Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.

**இதழாக்கமும் வெளியீடும்**

**இனம் பதிப்பகம்**
கோயமுத்தூர், தமிழ்நாடு, இந்தியா
inameditor@gmail.com, www.inamtamil.com
Inam Pathippagam
Coimbatore, Tamil Nadu, India
**09677821364, 09600370671**

## ஆலோசனைக் குழு

முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

**முனைவர் ஆ.மணி**
பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, புதுச்சேரி
**முனைவர் க.பாலாஜி**
பூசாகோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.), கோவை
**முனைவர் இரா.குணசீலன்**
பூசாகோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.), கோவை
**முனைவர் ந.இராஜேந்திரன்**
இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.),கோவை
**முனைவர் ப.சிவமாருதி**
சிங்மாய் பல்கலைக்கழகம், தாய்லாந்து
**முனைவர் இரா.இராஜா**
தேசியக் கல்லூரி (த.),திருச்சி
**முனைவர் ச.முத்துச்செல்வம்**
தியாகராசர் கல்லூரி (த.), மதுரை
**முனைவர் எஃப்.எச்.அகம்மது சிப்லி**
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
**முனைவர் கிங்ஸ்டன் பால் தம்புராஜ்**
சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா
**முனைவர் தெ.வெற்றிச்செல்வன்**
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
**முனைவர் பாரதிராஜா சக்கரவர்த்தி**
அயர்லாந்து கால்வே தேசியப் பல்கலைக்கழகம், அயர்லாந்து
**முனைவர் டி.தேன்மொழி**
எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரி, சென்னை
**திருமிகு பு.கமலக்கண்ணன்**
ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி
**திருமிகு யாழ்பாவாணன்**
யாழ்ப்பாணம், வடமாகாணம், இலங்கை

## ADVISORY TEAM

Dr.S.Rajaram (Nagercoil)
Dr.Silambu.N.Selvarasu (Pondicherry)
Dr.N.Veluchamy (Salem)
Mr. S.SriKantharasa (Australia)

## Editorial Team

**Dr.A.Mani**
Bharathidasan Government College for Women, Pondicherry
**Dr.G.Balaji**
PSG College of Arts and Science (Autonomous), Coimbatore
**Dr.R.Gunaseelan**
PSG College of Arts and Science (Autonomous), Coimbatore
**Dr.N.Rajendran**
Hindusthan College of Arts and Science (Autonomous), Coimbatore
**Dr.B.Sivamaruthi**
Chiang Mai University, Thailand
**Dr.R.Raja**
National College (Autonomous), Trichy
**Dr.S.Muthuselvam**
Thiagarajar College (Autonomous), Madurai
**Thiru.F.H.Ahamed Shibly**
South Eastern University of Sri Lanka, Sri Lanka
**Dr.Kingston Paul Thampuraj**
Sultan Idris Education University, Malaysia
**Dr.D.Vetrichelvan**
Department of Tamil Studies in Foreign Countries, Tamil University, Thanjavur
**Dr.Bharathi Raja Sakkaravarthi**
National University of Ireland Galway, Ireland
**Dr.D.Thenmozhi**
SSN College of Engineering, Chennai
**Thiru. P. Kamalakkannan**
Jawaharlal Nehru University, New Delhi
**Thiru. Yarl Pavanan**
Yarlpanam, Vadamaahaanam, SriLanka

# உள்ளே...


புதுக்கவிதைகளில் மனித உரிமைகள் Human Rights in Modern Poetry
முனைவர் ஆ.மேரி இமாகுலேட் | Dr. A. Mary Immaculate 3-8

மணிமேகலைக் காப்பியத்தில் பழந்தமிழ்ச் சமூகமும் அறச் சிந்தனைகளும் Ancient Tamil Society and Moral Values in Manimekalai
முனைவர் அ. கோபிநாத் | Dr. A. GOPINATH 9-15

கல்லாடம்: கவிதையும் காலமும் kallāṭam : Poetry and its Age
முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி | Dr. P .KrishnaMoorthi 16-21

இராபர்ட் கால்டுவெல்லின் பன்முகப் பரிமாணங்கள் The Multi Dimension of Robert Caldwell
ஜா.பிராங்கிளின் தேவராஜ் | J.Franklin Devaraj 22-29

கானகன் நாவலில் காலனியம் Colonism in 'Kaanagan' novel
ப.நவசக்திவேல் | P.Navasakthivel 30-34

வேந்தர் எழுச்சியும் பூதநெறியும் Rise of Tamil Emperor's and Bhuthaneri (Elementalism)
முனைவர் லி. சிவகுமார் | Dr. L. Sivakumar 35-39

கல்மரம் நாவலில் கட்டிடத் தொழிலாளர்களின் நிலை Status of Construction Workers at 'Kalmaram' Novel
முனைவர் க. புவனேஸ்வரி | Dr. K. Bhuvaneswari 40-43

மணிமேகலைக் காப்பியத்தில் 'ஊழ்', 'ஊழ்வினை' : படிநிலை வளர்ச்சி The Hierarchical Development of the concept of 'OOZH' and 'OOZHVINAI' in Manimegalai Epic
முனைவர் மு. முனீஸ்மூர்த்தி | Dr. M. Munees Moorthy 44-49

அன்பின் வழியது இல்வாழ்க்கை Family Life Through by Love
முனைவர் தி. அறக்கலைச்செல்வி | Dr.T. Arakalaiselvi 50-54

சங்க இலக்கியத்தில் குயவர்கள் Potters in Sangam Literature
முனைவர் ஜா. அருணா | Dr. J. Aruna 55-59

கலை இலக்கியங்களில் எதார்த்தவாதத்தின் தோற்றம் The Origin of Realism in Art and Literature
முனைவர் மு.இராஜசேகரன் | Dr.M.Rajasekaran 60-64

தேறல் - அன்றும் இன்றும் USAGE OF 'THAERAL' - BEFORE AND NOW
டே.எட்வின் சார்லஸ் | D.EDWIN CHARLES 65-69

குறுந்தொகைப் பெண்பாற் புலவர் பாடல்களில் சமூகம் Society in Kurunthogai Womens Songs
இரா. யசோதா | R. Yasotha 70-76

சங்ககாலத் திருமண புழங்குபொருள்கள் காட்டும் பண்பாடு SANGAM PERIOD WEDDING RITUAL OBJECTS SHOW CULTURE
முனைவர் இரா. ரவி | Dr. R. Ravi 77-80

கம்பராமாயணம் - பாலகாண்டம் புலப்படுத்தும் சமூக, பண்பாட்டுப் புனைவுகள் Social and Cultural Legends that reveals in Kambaramayana Baalakaandam
முனைவர் மு.புஷ்ப ரெஜினா | Dr. M. Pushpa Regina 81-86

பாரதிதாசனின் படைப்புகளில் பெண்நிலைவாதம் THE STATUS OF WOMEN RIGHTS IN BHARATHIDASAN'S POETRY
முனைவர் சு. மோகனப்பிரியா | DR. S.MOHANAPRIYA 87-91

முல்லைத்திணையுள் ஆயர் வாழ்வியல் Pastoral Life in Mullai thinai
முனைவர் ச.ராஜேஸ் | Dr. S.Rajesh 92-96

சு. தமிழ்ச்செல்வியின் புதினங்களில் கல்வி மறுக்கப்பட்ட சிறுமிகளின் நிலை The Status of Girl child Denied Education in the novels of Su.TamilSelvi
முனைவர் தே.ஷீலா | Dr. D.Sheela 97-100

சங்க இலக்கிய மடலேறுதல் - பெண் மையநோக்கு 'MADAL EARUDHAL' IN SANGAM LITERATURE - FEMINISM VIEW
முனைவர் த. செல்வமணி | Dr. T. Selvamani 101-106

சங்ககால நெய்தல்நில மக்களின் வாழ்வியல் பின்புலம் Neithal Land of Sangam Period and the Background of that People's life
பெ.ராஜா | P.Raja 107-113

அம்மன்கிளி முருகதாஸின் சங்க இலக்கிய ஆய்வு Ammangili murugadasin sanga ilakkiya aaivu
முனைவர் ஆ.நளினிசுந்தரி | Dr. A.Nalini Sundari 114-118

வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் நாவலில் சமுதாயச் சிந்தனைகள் Social thoughts in the novel Vairamuthu's Third World War
கி. கண்மணி | K. Kanmani 119-124

தலயாத்திரையில் திருஞானசம்பந்தரின் அறநெறி Morality of Thirugnanasambandar on Thalayatra
முனைவர் மோ.ஸ்ரீதர் | Dr. M.Srithar 125-129

# புதுக்கவிதைகளில் மனித உரிமைகள் Human Rights in Modern Poetry

முனைவர் ஆ.மேரி இமாகுலேட் | Dr. A. Mary Immaculate

Associate Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli – 620 017.
E-mail: amicr29@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

நாட்டு மக்களுக்குச் சமுதாயம், பொருளாதாரம், அரசியல், நீதி ஆகியவற்றில் சம மதிப்பும் உரிமைகளும் உள்ளன. இவற்றில் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் அடங்கும். நம்நாட்டின் விடுதலைக்குப் பின் இத்தகைய அடிப்படை உரிமைகள் மனிதனுக்கு மறுக்கப்படுவதைப் புதுக்கவிதை வெளிப்படுத்துவதன்வழி இக்கட்டுரை ஆய்கிறது.

**Abstract**

Every citizen has an equal right and equal values in social, economic, political and justice. It also includes freedom of speech and authorship. This paper explores from modern poetry these basic rights refused the fulfillment for each citizen after independence.

**திறவுச்சொற்கள் (Keywords):** சம உரிமை, அரசியல், பேச்சுரிமை, அடிப்படை உரிமைகள், equal right, politics, freedom of speech, basic rights

**முன்னுரை**

இந்தியாவில் வாழும் மக்களுக்கு சமுதாயம், பொருளாதாரம், அரசியல், நீதி முதலியவற்றில் சம மதிப்பும் உரிமைகளும் உள்ளன. பேச்சுரிமையும் எழுத்துரிமையும் இவற்றில் அடங்கும். நம்நாடு விடுதலை பெற்றபின் இத்தகைய அடிப்படை உரிமைகளும் பாதுகாப்பும் சராசரி மனிதனுக்கு நிறைவளித்துள்ளனவா? என்பது கேள்விக்குரியே. ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு வகையில் தனது உரிமைகளை நிலைநாட்டிக்கொள்கிறான். அதில் அவன்பெறும் வெற்றியும் தோல்வியும் சமூகம் அல்லது அரசு சார்ந்த நிலையைப்பொறுத்தே அமைகின்றன.

**உரிமைக்குக் குரல்**

மனித உரிமையின் அடிப்படைகளை பேச்சிலோ எழுத்திலோ எடுத்துக்கூறுவது கவிஞர்களுடைய இயல்பு. மனிதஉரிமைக்கு குரல்கொடுக்கும் கவிஞர்களை கவிஞர் சக்தி கனல் "வார்த்தைகளில் கூறுவோமானால் கவிஞர்கள் நாட்டின் மனசாட்சிகள். சமுதாயம் சஞ்சலப்படும்போது அவர்களின் இதயம் உடைந்து இரத்தம் கசிகின்றது. அநீதி இழைக்கப்படும்போது அவர்களின் நெற்றிக்கண் விழித்துக்கொள்கிறது" என்று குறிப்பிடுகிறார்.

உரிமையைப் பெற்று நம்வாழ்வு சிறக்க உழைக்கவேண்டும் என்று எண்ணும் கவிஞர் இளங்கோவன் "நமது உழைக்கும் கைகளை உரிமைக்காக உயர்த்தினால் நமது வாழ்வு நமதே" என்று உரிமைகுரல் கொடுக்கிறார். உரிமைக்கு கைகொடுப்போம் என்ற சிந்தனையை வழிமொழிவதுபோல் தணிக்கைசெல்வன் அவர்களும் "உடமையை உரிமையை ஒருசிலர் களவாடி அடிமையாய் ஆண்டிடும் கொடுமையைத் தாக்கும் அணிகட்டு புரிவோம் நம்கடமையை" என்று உரிமைகுரல் எழுப்பினர்.

"சேரியின் ஓரங்களில்
வயல்வெளிகளின் புலம்பல்களில்
ஊர்வலங்களில்
உரிமை முழக்கங்களில்
எந்த இராகங்களை இசைத்துச்சென்றோமோ
அந்த இராகங்களுக்கு நானே வீணை மூட்டுகிறேன்"

என்ற இன்குலாபின் சிந்தனை உரிமை முழக்கத்திற்கு ஒத்திசைவாக உள்ளது.

இவ்வாறாக கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் கடமையும் உரிமையும் தமது நோக்கமாக இருந்தமையை வெளிப்படுத்தியுள்ளனர். நாட்டு முன்னேற்றத்திற்குச் சமூக அமைப்பு, அரசியல், நீதி ஆகியவை தடையாக உள்ளபோது அதைச் சுட்டிக்காட்டும் உரிமையை கவிஞர்கள் பெறுகிறார்கள்.

**மனிதஉரிமையும் வாழும் கடமையும்**

நாட்டு நடப்பையும் மக்களாட்சியின் அமைப்பையும் ஆள்வோரின் சுயரூபத்தைக்கொண்டு அறியமுடிகிறது. அவர்கள் மக்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளைக் கொண்டு அதை உறுதிசெய்யமுடியும். உண்மையான அரசு மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்குவதும் உரிமைக்குப் பாதுகாப்பு அளிப்பதும் தலையாயக் கடனாகும். அடிப்படைத்தேவைகளை மக்கள் எல்லோரும் பெறுவதற்கான வழியை எந்த அரசால் நிறைவேற்றமுடிகிறதோ அவ்வரசே கல்வி முதலான உயர்ந்த பண்புகளை மக்களிடையே வளர்க்க துணைபுரிவதாக அமையும். இது மக்களின் உரிமைவாழ்வை உரமிட்டு வளர்ப்பது போன்றதாகும்.

"சலிப்பின்றி உழைப்பதற்கு
சக்திக்கேற்ற பணியினையும்
களிப்போடு வாழ்வதற்குத்
தேவைக்கேற்ற ஊதியமும்
அடிகோல வேண்டாமா?"

என்று கேட்கிறார் தங்க அன்பழகன். உரிமையை நிலைநாட்டிக்கொள்வதற்கும் மக்கள் மனதிலிருக்கும் அச்சம் தவிர்ப்பதற்கும் ஆண்மை தவறாதிருப்பதற்கும்; சீறுவோரைக் கண்டு சீறுவதற்கும் போர்த்தொழில் பழகுவதற்குமான சிந்தனைகள் கவிஞர்களது போர்கவசங்களாகி வருவதை நாம் காணமுடிகிறது.

**உரிமை வேட்கை**

வாழ்க்கையை உரிமையின் அடிப்படையில் வாழவேண்டும் என்பது உரிமை வேட்கை. வாழ்வது என்பது அர்த்தமாகவேண்டும் என ஒவ்வொருவரும் நினைப்பதுண்டு. நமக்கு வானம் வசப்படுகிறதோ இல்லையோ வாழ்க்கை வசப்படவேண்டும் என எண்ணுவதில் தவறில்லை. இதனால் அனைவரிடமும் உரிமையும் சுரண்டலற்ற தன்மையும் இயல்பாக இருத்தல் வேண்டும். இதையே கவிஞர் தாரா பாரதி,

"பொம்மைகள் தாமா பொதுமக்கள்
பொய்யர்கள் தாமா தலைமக்கள்
நம்மை நாமே சுரண்டுவதா?
நகமே விரலை விழுங்குவதா?"

என கேட்பதன்மூலம் உரிமைவேட்கை சிந்தனைக்கு அடித்தளம் அமைக்கிறார்.

**உரிமை பாதுகாப்பு**

சட்டம் மனித உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதாய் இருத்தல் வேண்டும். மனித உரிமைகளை செயல்படுத்தும் சட்டங்களை அரசு ஏற்படுத்த வேண்டும். உரிமை பாதுகாப்பு என்பது சமூகத்தில் தன்னைக் காத்துக் கொள்வதற்கும் பிற உரிமைகளைக் காத்துக்கொள்வதற்கும் உதவியாய் இருத்தல் வேண்டும். சட்டப்பாதுகாப்பு மனிதனுக்கு உண்மையான உரிமை வழங்குவதாகவும் இருத்தல் வேண்டும்.

"நமக்குள்
நாம்
பிளவுபடும்போது சுலபமாய் அதிகார வர்க்கம்
நமது உரிமைகளை
அபகரித்துக்கொள்ளும்
நமக்குள் ஓட்டைகள் விழுந்தால்
உரிமைகள்
ஒழுகிப்போய்விடும்
ஒன்றாக
நாம்
உரிமைக்குரல் எழுப்பினால்
சமரசம் பேச
இமையம் கூட
எழுந்துவரும்"

என்ற கூற்று உரிமையும் பொதுமையும் எல்லோருக்கும் கிடைக்க எல்லோரும் ஒன்றுபடவேண்டியதை வலியுறுத்துகிறது.

மக்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிக்க முன்வருவதோடு மட்டுமின்றி அதை நிறைவேற்றுவதில் முழுமையான உறுதியையும் அரசு தரவேண்டும். உரிமைக்கு உறுதியான பாதுகாப்பு என சொல்லி காலம்கடத்தும் அரசின் அலட்சியப்போக்கைப் போபாலில் ஏற்பட்ட நச்சுக்காற்றுக் கசிவு நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்தி,

"வாயு கசிவுக்கு
வாரிசு யாரெனப்
பன்னாட்டு வழக்கர்
பகடைக்காய் உருட்டும்முன்
நீதியின் நிழலை
நீந்தும் மழலை
கரையொதுங்கும்
நரைதிரையுடன்"

எழுதப்பட்ட இக்கவிதையில் உரிமையைக் கேட்டுப் பெறுவதில் கூட நீதிமன்றத்தின் விசாரணைக் கரங்கள் நீண்டுகொண்டே போகின்றன என்று குறிப்பிடப்படுகிறது.

நீதிமன்றம் மக்களுக்கு உரிமைகளை வழங்குவதில் வேறுபாடுகளைக் காட்டக்கூடாது. ஏழைகளுக்கு எதிரான நீதியும் உடமை வர்க்கத்திற்கு ஒத்து ஊதுவதையும் கண்டிக்கும் கவிஞர் இன்குலாப்,

"கொளுத்தும் நில பிரபுத்துவக் கரங்களைக்
குலுக்கிக்கொண்டே நீதி மன்றங்கள்
காயப்பட்ட எங்கள் கரங்களுக்கே
சட்ட விளக்கம் செய்து சங்கிலி மாட்டியது
நாம்
தாக்கவேண்டியது அரசு அதிகாரத்தை
தண்டிக்கவேண்டியது நீதிமன்றத்தை"

என்று சிந்தனை முழக்கம் செய்திருப்பதன் அடிப்படைக் காரணம் மக்களுக்கு நீதிமன்றம் சரியான உரிமைப்பாதுகாப்பினை வழங்கவேண்டும் என்பதே.

அரசும் தன்பங்கிற்கு கண்துடைப்பினை அவ்வப்போது செய்துவருவதை தமிழன்பன்,

"அரசு
ஏழைகளின்
கண்ணீர்க்குரிய காரணத்தைப்
போக்கவேண்டும்
கைக்குட்டைகள்
தந்ததுபோதும்"

என சுட்டிக்காட்டியிருப்பதிலிருந்து உரிமை என்ற பெயரில் சிறிய சலுகைகளைத் தந்து தற்காலிகமாக தப்பித்துக்கொள்ளும் அரசின் போக்கை உணர்த்துகிறது.

**கல்வியும் உரிமையும்**

அடிப்படைக் கல்வி பெறுவது நமது உரிமைகளில் ஒன்று. இது அனைவருக்கும் பொதுவானது. ஆனால் இன்றைய கல்வி மக்களுக்குப் பயனளிப்பதாக இல்லாமல் குறைபாடுகள் உள்ள கல்வியாக இருப்பதை கவிஞர் தமிழன்பன்,

"பாரதி
உன்
படிப்புக்கூட
பாதியில் நின்றது.
கொடுத்துவைத்தவன் நீ
ஏனெனில் பள்ளிகளுக்குச் சென்று
உள்ள ஞானத்தையும்
இழந்தனர் பலர்"

என இடித்துரைப்பதன் மூலம் கல்வித்திட்டங்களில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறார். கல்விக்கூடங்கள் கூட பலசரக்குக் கடைகளாகிவிட்டன. வணிகமாகிவிட்ட கல்வியை கவிஞர் இரண்டாம் நக்கீரன்,

"விதவிதமாய் கடைகள்
அங்கு
விற்கும் பொருள்
பலவகைகள்
கொடுக்கும் கொடைக்கு ஏற்றபடி
குனிந்துகொடுக்கும் விதிமுறைகள்"

எனக் கூறியிருப்பது சிந்தனைக்குரியது.

**பெண்ணுரிமை**

பெண்ணுரிமை பற்றிப் பல கோணங்களில் கவிஞர்கள் சித்திரித்துள்ளனர். பெண்களுக்கு வாழும் உரிமையை அளித்துள்ள சமுதாயம் அதனை முழுமையாக அளித்துள்ளதாகத் தெரியவில்லை. ஆண்களோடு சமஉரிமை, வேலைவாய்ப்பு, மறுமணம், கலப்புத்திருமணம் முதலிய நிலைகளில் முழு உரிமையைப் பெண்கள் எதிர்நோக்கியுள்ளனர். விடுதலை உணர்வு பெறுவதற்கு அறியாமை, அடிமைத்தனம், பழமைப்போக்கு முதலியவற்றிலிருந்து பெண்கள் மீட்கப்படவேண்டும் என்பதை கவிஞர் இரா. தமிழன்னை,

"நாங்கள்
விலங்குகளல்ல.
மானுட வரலாற்றின் முகவரிகள்
நாங்கள்
இயந்திரங்கள் அல்ல.
ஆறறிவு படைத்த அறிவு ஜீவிகள்
எங்களை அலங்கார பதுமை என்றா எண்ணுகிறீர்கள்
அவலங்களை அழித்துத் தேய்க்கும் ஆற்றலும் எமக்குண்டு
வாய்ப்புக்கிடைத்தால் வாளேந்தவும் அஞ்சமாட்டோம்"

என்று வீரமுழக்கமிடுகிறார். புரட்சிக்கு பூபாளம் பாடும் பூவையரின் நெஞ்சம் வன்மையாக மாறும் வாய்ப்பையும் பெறும் என்பதை உறுதிசெய்கிறது இக்கவிதை.

பெண்விடுதலை பேச்சளவே உள்ளது என்பதை கவிஞர் கோ.ச. பலராமன்,

"பெண் விடுதலைக்காக
மேடையேறி பேசுபவர்
வீட்டில்
தன்னை அழைக்க
வந்தவர் முன்னிலையில்
அடியே! அக்கம் பக்கம் போகாதே
கதவைப் பூட்டு
என்று கர்சித்துவிட்டு
மேல்துண்டை மாற்றிப்போட்டு
மிதியடி
பூட்டினார்
அதிர்ந்துபோனார்
அழைக்கவந்தவர்"

என குறிப்பிட்டிருப்பது இக்கவிதை வழி உண்மையாகிறது.

கவிஞர் வைரமுத்து தனது திருத்தி எழுதிய தீர்ப்புகள் கவிதையில்,

"இல்லறக் கிரிக்கெட்டில்
"ரன் எடுத்தே ரணமாகிப்போன"

பெண்ணினம் பற்றி குறிப்பிடுகிறார்.

பெண்களுக்கு தட்டிக்கேட்கும் உரிமை மறுக்கப்படுவதோடு கற்பும் பறிபோவதைக் காவல்நிலையக் காட்சி ஒன்று காட்டுகிறது.

"கைதுசெய்யப்பட்ட
கணவனை மீட்கக்
காவல் நிலையம்
போன பொன்னியின்
கற்பு
அடடா
சகல
மரியாதையுடன்
சவஅடக்கமானது"

என்ற கவிதை மூலம் கவிஞர் இரா. வேலுச்சாமி பெண்களின் அவலநிலையைச் சுட்டுகிறார். மென்மைக்கு வன்மை வேண்டும். உரிமை அவ்வழியே வரவேண்டும் என எண்ணுகிறது பெண்மை மனம்.

இவ்வாறாக உரிமை மனிதவாழ்க்கையில் உயர்ந்தது, அடிப்படையானது. அடிப்படையான இவ்வுரிமைகளை மதிக்கத் தெரிந்திருக்கவேண்டும். உரிமையை மதிப்பதுபோன்றே சமூகக் கடமையையும் மதித்தல் வேண்டும். மனித வாழ்வில் உரிமைகள் யாவும் அறவழியில் தொடர்வன என்று அறிதல் வேண்டும். ஆளும் அரசின்மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட உரிமை தேவையாகிறது. மனித உரிமைகளை மதிக்கத்தெரிந்த அரசே உயர்வுகொள்ளும். மனித உரிமைகளின் அடிப்படையை அறிந்துகொண்டு சமூகமேன்மைக்குப் பாடுபடும் பொறுப்புணர்ச்சியைத் தருவனவாகக் கவிதைகள் விளங்குகின்றன.

**துணைநின்றவை (References)**


- அரங்கராசு, (பதி.), (1987), *தமிழ்ப் புதுக்கவிதைத் திறனாய்வு*, சென்னை.
- தமிழன்பன் ஈரோடு, (1982), *நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம்*, சென்னை : பூம்புகார் பதிப்பகம்.
- மீரா, (1974), *ஊசிகள்*, தஞ்சாவூர் : அன்னம் வெளியீடு.
- வல்லிக்கண்ணன், (2009), *புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்*, சென்னை : பாரி நிலையம்.
- வைரமுத்து, (2010), *திருத்தி எழுதிய தீர்ப்புகள்*, சென்னை : திருமகள் நிலையம்.


- அரங்கராசு, (பதி.), (1987), தமிழ்ப் புதுக்கவிதைத் திறனாய்வு, சென்னை.
- தமிழன்பன் ஈரோடு, (1982), நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம், சென்னை : பூம்புகார் பதிப்பகம்.
- மீரா, (1974), ஊசிகள், தஞ்சாவூர் : அன்னம் வெளியீடு.
- வல்லிக்கண்ணன், (2009), புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், சென்னை : பாரி நிலையம்.

# மணிமேகலைக் காப்பியத்தில் பழந்தமிழ்ச் சமூகமும் அறச் சிந்தனைகளும் Ancient Tamil Society and Moral Values in Manimekalai

முனைவர் அ. கோபிநாத் | Dr. A. GOPINATH

Associate Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli – 620 017.
E-mail: gopiazhagar@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மணிமேகலைக் காப்பியத்தில் பழந்தமிழ்ச் சமூகம் பற்றியும் அறச்சிந்தனைகள் பற்றியும் செய்திகள் ஆராயப் பெற்றுள்ளன. வாழ்வியல் கூறுகளில் பழந்தமிழர் கலைகள் (இசை, ஓவியம், நாடகம், கட்டிடம் முதலான) சமூக அமைப்பு, வாழ்வியல் முறைகள் விளக்கப்பட்டுள்ளன. மேலும் மக்கள் கடைபிடிக்க வேண்டிய அறச்சிந்தனைகள் (கொல்லாமை, நிலையாமை, பொய் கடிதல், குற்றம் கடிதல் முதலான) ஆய்வுச் செய்திகளாக விளக்கப்பெற்றுள்ளன. காப்பிய அறிமுகம், கதைச்சுருக்கம், கலை வகைகள், வாழ்வியல் கூறுகள், கதை மாந்தர்களின் பண்புநலன், அறச்சிந்தனைகள் ஆகிய செய்திகள் இவ் ஆய்வில் காணப்பெறுகின்றன.

**Abstract**

This topic describes the ancient Tamil Society and Moral values in Manimekalai. It contains the art of ancient Tamilnadu (paintings, Idols, Buildings, music) as well as moral value. So that we understand the classical life-style of Ancient Tamil Society. We utilize the moral values for younger generation. Through the study of Manimekalai, we understood the social values and ethics.

**திறவுச்சொற்கள் (Keywords):** காப்பியம், அறச்சிந்தனைகள், கலைகள், பண்பாடு, பழந்தமிழ்ச் சமூகம், பசிப்பிணி, Epic, Ethical values, Arts, Culture, Ancient Tamil Society, Hungry.

**முன்னுரை**

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூலின் பயனாகும். இப்பொருண்மைகளை உள்ளடக்கிய காப்பியமாக இரட்டைக்காப்பியங்களுள் ஒன்றான பௌத்த சமயக் கொள்கையுடைய மணிமேகலை திகழ்கின்றது. பழந்தமிழரின் நாகரிகம், பண்பாடு, வாழ்வியல் கூறுகள், கலைகள், அறச்சிந்தனைகள் இவற்றை உணர்த்தும் கருத்துப் பெட்டகமாய்ச் செவ்வியல் இலக்கியங்கள் விளங்குகின்றன. அவற்றுள் மணிமேகலை காப்பியமும் ஒன்று.

பாட்டு, தொகை ஆகிய இலக்கியங்களைக் காட்டிலும் காப்பியங்கள் மக்களை எளிதில் சென்றடைவதாகத் திகழ்கின்றன. மக்களுக்குக் கதை கேட்கும் ஆர்வத்தின் விளைவாய்த் தமிழில் காப்பியங்கள் முகிழ்த்தன. ஐம்பெருங்காப்பியங்களில் பொதுவான சமூக மதிப்புகளாக து. சீனிச்சாமி (2000:341) அவர்கள் குறிப்பிடும் கூற்று ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

1. வாழ்க்கை மூலம் தத்துவ நவிற்சி பெறல்
2. அறம், சமயம் பற்றிய போதனையாகக் கூறல்
3. மன்னரின் முதன்மை நிலையை உணர்த்துதல்
4. மன்னர் - அமைச்சர் உறவின் சிறப்பு
5. வணிகர் - அந்தணர் சிறப்பிடம் பெறல்

இவ்வாறு பல்வேறு சமூக மதிப்புகளை உள்ளடக்கிய மணிமேகலை காப்பியம் இயற்றப்பட்ட சூழல், அக்காலத் தமிழ்ச் சமூக நிலை குறித்த செய்திகள், அறச் சிந்தனைகள் ஆகியன இக்கட்டுரையில் ஆராயப் பெறுகின்றன.

**மணிமேகலைக் காப்பியம்**

"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்" (மணி.பதிகம் 95-98)

எனும் காப்பியப் பதிகத்தால் ஆசிரியர் கூலவாணிகன் பற்றியும் அவருடன் நட்பு பூண்டிருந்த இளங்கோ அடிகள் பற்றிய செய்தியும் நமக்குக் கிடைக்கின்றன. வருண பேதமற்ற வாழ்வு, நிலையாமை, துறவு, பசிபோக்கல், பௌத்தத் தத்துவ விளக்கங்கள் ஆகிய சிறப்புத் தன்மை வாய்ந்த சமூக மதிப்புகளை உள்ளடக்கியதே மணிமேகலை காப்பியம் ஆகும். இக்காப்பியம் இயற்றப்பட்ட காலம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு என அறிஞர் பல்லோர் கருதுவர்.

"மணிமேகலை, சிலப்பதிகார வரலாற்று நிகழ்ச்சிகள் சேர, சோழ, பாண்டியர் ஆட்சிக் காலத்தில் (கடைச்சங்க காலம்) நிகழ்ந்தவை. அந்நிகழ்ச்சிகள் நடந்த அண்மைக் காலத்திலேயே இரட்டைக் காப்பியங்கள் எழுதப்பட்டன. கி.பி. 200 க்குள்ளாகவே இவை இயற்றப்பட்டிருக்க வேண்டும். அதன் பிறகு களப்பிரர் தமிழ்நாட்டைப் பிடித்துக் கொண்டார்கள்" என்கிறார் மயிலை, சீனி வேங்கடசாமி (2011:197). இக்கூற்று மணிமேகலைக் காப்பியம் 2 ஆம் நூற்றாண்டிற்குள் இயற்றப்பட்டது எனும் கருத்திற்கு அரண் சேர்ப்பதாகும்.

**கலைகள்**

சிலப்பதிகாரம் அரங்கேற்றக் காதையின் வாயிலாக எவ்வாறு நாம் பழந்தமிழரின் இசை மற்றும் நாடகக்கலை சிறப்புகளை உணர்கிறோமோ அவ்வாறே மணிமேகலை காப்பியத்திலும் பழந்தமிழரின் நுண்கலை பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. அவற்றுள் சில கலைகளைப் பற்றிய செய்திகள் ஆராயப் பெறுகின்றன.

பழந்தமிழர் தங்கள் உறையுள், அங்காடிகள், அரண்மனை போன்றவற்றைக் கலைநயத்தோடு படைத்தனர். கட்டிடக் கலை வல்லுநர்களைக் கொண்டு அரண்மனைகள் அமைக்கப்பெற்றன என்பதை,

"மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்
பால்பெற வகுத்தப் பத்தினிக் கோட்டமும்..."

எனும் அடிகள் உணர்த்துகின்றன. உறுதியான கட்டிட அமைப்பிற்குச் சுட்ட மண்ணைப் பயன்படுத்திய செய்தியை,

"சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதோறும்" (காதை 3:127)

"சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்" (காதை 6:59)

ஆகிய அடிகள் உணர்த்துகின்றன. வீட்டின் புறத்தே அக்கால மக்கள் செய்குன்றுகளையும், வீட்டினுள் பளிக்கறைகளையும் அமைத்துக் கொண்டனர்.

"இன்னிள வேனிலும் இளங்காற் செல்வனும்
எந்திரக் கிணறும் இடுங்கற் குன்றமும்..." (காதை 19:102-103)

பளிக்கறை அமைக்கப்பெற்று சந்தனக் குழம்பால் மெழுகப் பெற்ற வீடுகள் காணப்பட்டதை,

"பைஞ்சேறு மெழுகா பசும்பொன் மண்டபத்து" (காதை 19:115)

எனும் அடியால் அறியலாம். இவ்வாறு கட்டிடக் கலையில் வியத்தகு நுட்பத்தினைப் பழந்தமிழர் பயன்படுத்தியமையை உய்த்துணரலாம்.

**ஓவியக்கலை**

மணிமேகலைக் காப்பியத்தின் பல்வேறு இடங்களில் பழங்கால ஓவியக்கலை பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. மாதவியை அறிமுகப்படுத்தும் முகத்தான் சாத்தனார்.

"ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை" (காதை. 2:31-32)

மணிமேகலை மலர்வனம் புகுவதன் முன்னரும், பின்னரும் விளக்கமாகக் காணுமிடத்து, பண்டைத் தமிழரின் நுட்பமான ஓவியக் கலையை உரைக்கிறார் சாத்தனார்.

"வெண்கதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியங் கண்டு நிற்குநரும்" (காதை. 16:130-131)

மணிமேகலை வண்ணம் தீட்டப்படாத கோட்டின் ஓவியம் போல் ஆதிரை முன் நின்றாள் என வருணிக்குமிடத்துச் சாத்தனார்,

"மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும்" (காதை. 16:130-131)

என விவரிக்கின்றார். மேற்கண்ட அடிகள் பலவற்றின் வாயிலாகத் தமிழர் ஓவியக்கலையில் சிறந்தமை நன்கு புலனாகும்.

**வணிகநிலை**

பண்டைத் தமிழகம் வணிகத்தில் சிறப்புற்று இருந்தமையை அயலக வரலாற்றுக் குறிப்புகள், இலக்கியச் சான்றுகள் ஆகியவற்றால் நன்கு உணர்ந்து கொள்ளலாம். பழங்காலத் துறைமுகங்கள், ஏற்றுமதி - இறக்குமதிப் பொருட்கள், அயல்நாட்டு வாணிபத் தொடர்பு போன்ற செய்திகள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை, ஆற்றுப்படை இலக்கியங்கள் போன்றவற்றில் காணக்கிடக்கின்றன.

"இன்ப வாழ்விற்கான பண்டங்கள் பலவற்றை உற்பத்தி செய்வதில் தமிழ்நாட்டுக் கைவினைஞருடன் அயல்நாட்டுத் தொழிலாளரும் கலந்து கொண்டனர்" என்கிறார் கே.கே.பிள்ளை (2008:152).

"மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினிது இயற்றிய கண்கவர் செய்வினை" (காதை. 19:107-110)

எனும் மணிமேகலை அடிகள் தமிழக வணிகநிலை பற்றிச் சான்று பகர்கின்றது.

**சமயநிலை**

ஆன்மாவினைப் பக்குவப்படுத்தும் சமய நிறுவனங்கள் பல தமிழகத்தில் அற்றை நாளில் இருந்தன. தமிழகத்தில் ஒவ்வொரு நிலத்திற்கு ஒரு வழிபாட்டு முறை இருந்தமையைத் தொல்காப்பியம் உணர்த்துகின்றது.

"மாயோன் மேயக் காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேயத் தீம்புனல் உலகமும்
வருணன் மேயப் பெருமணல் உலகமும்..." (தொல். பொரு. 5)

சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகளும் பூம்புகார் நகரத்தில் பல்வேறு சமயத்தவர் வழிபடும் கோயில்கள் இருந்தமையை,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்" (புகார். இந்திர: 169-174)

எனச் சுட்டிச் செல்கிறார்.

மணிமேகலைக் காப்பியம் தமிழ்நாட்டில் பௌத்த சமயம் செழிப்புற்ற காலத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். சமணம், வைதீகம் போன்ற சமயங்களும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்தன. சமயப் போட்டியால் கலகமும், பூசலும் விளைந்தது. இதனை ஒடுக்க அரசன் எச்சரிக்கை முரசறைந்தான் என்பதை,

"ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்
பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமுஞ் செய்யா தகலுமின்" (காதை. 6:60-63)

எனும் மணிமேகலை அடிகளால் அறியலாம்.

**வறுமையும் கொடையும்**

சங்கச் செவ்வியல் இலக்கியங்கள் மற்றும் காப்பியங்கள் அக்கால மக்களின் வாழ்வியலைத் தெளிவுறப் படம் பிடித்துக் காட்டுகின்றன. வளமை ஒருபுறம் இருந்தாலும் வறுமையும் மக்களை வாட்டிய நிலையை இலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன.

குப்பையில் விளைந்த கீரையை உப்பின்றி சமைத்த புலவரின் மனைவி, பால் மணம் அறியாக் குழவி, அடுப்பில் உறங்கும் பூனை, வள்ளலை நாடும் பாணர்கள், உடல் வளம் அற்ற விறலியர் என ஆற்றுப்படை இலக்கியங்களும் அக்கால வறுமைச் சூழலைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. மணிமேகலை காப்பியமும் இதற்கு விதிவிலக்கு அன்று. மயிலுக்கு ஆடை போர்த்திய பேகனும், முல்லைக்குத் துணைக்கோலாய்த் தேரினை ஈந்த பாரியும், தம்பிக்குத் தன் தலையைத் தரத் துணிந்த முதிர மலைக் குமணனும் இடுக்கண் களைந்து இன்முகம் காட்டிய வள்ளலாய்த் திகழ்ந்தனர். இந்த வரிசையில் மாபெரும் பாத்திரம் ஏந்திய மடக்கொடியாய்,

"மண்டினி ஞாலத்து உயிர் வாழ்வோருக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (காதை. 11: 95-96)

என வாடிய உயிரை வளர்த்தத் தலைவியாய் நிகரற்று விளங்கியவள் மணிமேகலை. சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய காதை இதனை நன்கு உணர்த்தும். கல்லுக்குள் தேரை என்பதைப் போல் சிறைவாசிகளை மனித நேயம் மிக்கோராய் மாற்றும் வியத்தகு நிகழ்ச்சி பௌத்த சமயக் கொள்கையாகிய அன்பு நிலையைப் பறைசாற்றி நிற்கின்றது.

"அதிர்கழல் வேந்தன் அடிபிழைத் தாரை
ஒறுக்குந் தண்டத் துறுசிறைக் கோட்டம்
வருப்பொடும் புகுந்து வெய்த்துயிர்த்துப் புலம்பி

ஆங்குப் பசியுறும் ஆருயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்தநின் றூட்டலும்..." (காதை 19:42-46)

இதேபோன்று அமுதசுரபி பாத்திரம் கிடைக்கப்பெற்ற ஆபுத்திரனும் மதுரை மாநகரில் மாற்றுத் திறனாளிகளுக்கு உணவளித்து அறச் சிந்தனையுடன் வாழ்ந்ததைச் சாத்தனார்,

"காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துடன் ஊட்டி
உண்டொழி மிச்சில் உண்டோடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளுங் காவலன் றானென்...." (காதை 13: 111-115)

இவ்வாறு உணவே மருந்தாய், அறம் உரைத்தலே கொடையாய் மிகப் பெரிய சமூக மாற்ற முயற்சி தமிழகத்தில் நிகழ்ந்து வந்தமையைச் சீத்தலைச் சாத்தனார் உணர்த்தியுள்ளார்.

**பிற செய்திகள்**

நாவலந்தீவு (பரதக் கண்டம்), சம்பாபதி (பூம்புகார்), தக்கண மதுரை வாரணாசி, சாவகத் தீவு, காஞ்சிபுரம் முதலான ஊர்ப்பெயர்கள் பற்றிய குறிப்புகள் இக்காப்பியத்துள் காணப்படுகின்றன. இந்திரன், வருணன், சிந்தாதேவி (கலைமகள்), மணிமேகலா தெய்வம், பௌத்த சமயக் கடவுளாகிய புத்தர் முதலான கடவுள் வழிபாட்டு நிலையும் நன்கு புலனாகின்றது.

**மாந்தர்கள்**

மணிமேகலைக் காப்பியத்தில் பல்வேறு மாந்தர்கள் காணப்படுகின்றனர். மாவண் கிள்ளி, உதயகுமரன், ஆபுத்திரன், அறவண அடிகள், காஞ்சனன், மாதவி, சுதமதி, ஆதிரை, சித்ராபதி முதலானோர் இன்றியமையாதவர்கள் ஆவர். மாவன் கிள்ளி தன் மனைவி சீர்த்தியொடு ஒரு பூங்காவில் வீற்றிருக்குங்கால் காயசண்டிகை வடிவம் கொண்ட மணிமேகலையைத் தீர விசாரித்து அவளின் அரும்பணிகளுக்குக் கொடையாக நின்றவன்; தன் புதல்வன் உதயகுமரனை இழந்தவன் ஆகிறான்.

உதயகுமரன் புகார் நகரில் 'காலமேகம்' என்னும் பட்டத்து யானையை அடக்கியவன்: மணிமேகலையின் மீது மையல் கொண்டவன்; விஞ்சையனால் கொல்லப்படுகிறான். அறவண அடிகள் மாதவிக்கும், மணிமேகலைக்கும் பௌத்த சமயக் கோட்பாடுகளை அறிவித்தவர், மணிமேகலையைச் சிறை மீட்டவர். காஞ்சனன் காயசண்டிகையின் கணவன். உதயகுமரனைக் கொன்றவன். மாதவியின் தாயானவள் சித்திராபதி, கணிகையர் குலப் பண்பு மாறாதவள். மணிமேகலையை உதயகுமரனிடம் உடன்படுத்த விழைந்தவள், பொருளையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டவள்.

**மாதவி**

கணிகையர் குலச் சிந்தையின்றும் வேறுபட்டவள். தான் ஈன்ற மணிமேகலையை யார் என்று கேட்டோர்க்கு,

"காவலன் பேரூர் கனையெரி ஊட்டிய
மாபெரும் பத்தினி மகள்" (காதை.2:54-55)

எனப் புகன்றவள்; கலைபல கற்றவள், பௌத்த சமயத் துறவியாகி தன் மகள் மணிமேகலையை உலகப் பற்றுக்கு உட்படுத்தாது உன்னத மகளாய் வளர்த்தவள்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" (குறள் 396)

எனும் வள்ளுவரின் கூற்றின்படி கற்கும் தோறும் ஆயும் தோறும் இன்பம் வல்ல நல்குவது மணிமேகலைக் காப்பியம் ஆகும்.

"அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே"

என நன்னூலார் கூற்று மணிமேகலை காப்பியத்திற்கு மிகுதியும் பொருந்தும்.

**அறச் சிந்தனைகள்**

மணிமேகலா தெய்வம் உதயகுமரனின் காம எண்ணத்தை மாற்ற அறிவுரைப் பகர்கின்றது. அவ்வுரைகள் கற்போருக்கும் ஏற்றதாய் அமைந்துள்ளது. அவ்வாறே இராசமா தேவிக்கு மணிமேகலை அறிவுப் புகட்டுவதாக அமைக்கப்பெற்றுள்ளது.

"மன்னவன் மகனே!
கோள் நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்
தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த
அவத்திறம் ஒழிக..." (7:7-14)

எனவும்

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மகள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை" (11:32-6)

எனவும்,

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா..." (22: 135-8)

எனவும்,

"உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ?
எவ்வுயிர்க் காயினும் இரங்குதல் வேண்டும்" (23:73-79)

எனவும் அறவுரைகளை நிரம்பப் பெற்றுள்ளது இக்காப்பியம். மேலும் புலால் மறுத்தல், கொல்லாமை ஆகிய அறக்கருத்துக்களும் இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன.

**நிறைவுரை**

மணிமேகலைக் காப்பியம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குள்ளாகவே இயற்றப்பட்டது. பௌத்த சமயக் கொள்கையை நிலைநாட்ட இயற்றப்பட்டது இக்காப்பியம். மாவண்கிள்ளி, உதயகுமரன், சீர்த்தி முதலான சோழர்குலத்தின் மாந்தர்களை அறிமுகப்படுத்துவது இக்காப்பியம். அந்தணர்கள் வேள்வியில் உயிர்ப்பலி இடப்படும் செய்திகள், முனிவர்கள் பிறந்த புராணக் கூறுகள் இந்நூலினிடத்தே இடம்பெற்றுள்ளன. பூம்புகார் (காவிரிப்பூம்பட்டினம்), மதுரை, வாரணாசி, கன்னியாகுமரி, காஞ்சி முதலான பழங்கால நகரம் பற்றிய குறிப்புகளைக் காப்பியத்தின் வாயிலாக அறியலாம்.

இந்திரவிழா மிகச் சிறப்பாக 28 நாட்கள் நடைபெற்றது. விழாவில் சமய வாதங்கள், பட்டி மண்டபங்கள் நடந்தேறின, வாணிபம் சிறப்புற்றிருந்தது, ஏற்றுமதி - இறக்குமதி கடல் வாணிபம் சிறந்து விளங்கியது. யவனர், மகத நாட்டுக் கலைஞர், மராட்டியர், அவந்தி நாட்டுத் தொழில்வினைஞர் ஆகியோருக்கும் தமிழக வணிகப் பெருமக்களுக்கும் உள்ள தொடர்பு புலனாகின்றது. கட்டிடம், ஓவியம், சிற்பம், நடனம் முதலான கலைகள் தமிழரிடையே வளம் பெற்றிருந்தன. உயிர் இரக்கம், பசி

களைதல், மாற்றுத் திறனாளிகளின் துயர் நீக்குதல், உயிர்க்கொலைத் தடுத்தல் முதலான அறக்கோட்பாடுகள் வலியுறுத்தப்பெற்றுள்ளன.

**துணைநின்றவை (References)**


- சீனிச்சாமி, து. (2000), *தமிழில் காப்பியக் கொள்கைகள்*, தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம்.
- பிள்ளை, கே.கே. (2008), *தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்,* சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
- வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ.) (2013), *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்* சென்னை : ராமையா பதிப்பகம்.
- வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ.) (2013), *மணிமேகலை மூலமும் உரையும்,* சென்னை : சாரதா பதிப்பகம்.
- வேங்கடசாமி சீனி மயிலை (2011), *பௌத்தமும் தமிழும்*, சென்னை : சுபா பதிப்பகம்.

# கல்லாடம்: கவிதையும் காலமும் kallāṭam : Poetry and its Age

முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி | Dr. P .KrishnaMoorthi

Assistant Professor of Tamil, Bishop Heber College (Autonomous), Tiruchirappalli – 620 017.

kmtamilvendhan@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழில் பக்தி இலக்கியக் காலத்தை ஒட்டி எழுந்த நூல்களில் கல்லாடம் இன்றியமையாத ஒன்று. அதனைக் கால வரையறை செய்த ஆய்வறிஞர்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு எழுந்த நூலாகவே பெரும்பான்மையும் முடிவு செய்கின்றனர். எனினும், நூலினுள் விரவிக் கிடக்கும் முந்தைய நூல்களின் தாக்கம், கையாளப்படுகின்ற உவமைகள் போன்றவற்றின் அடிப்படையில் நூலின் காலத்தை கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டு வரையிலானதாக இவ்ஆய்வு முன்மொழிகின்றது.

**Abstract**

The research paper discuss about the time of the *kallāṭam*, it is one of the essential literary work of the *pakti* literary Period. Many of the scholars who are derived the conclusion of the age of the literary work is around the 8th century A. D. or after that period. encountered the work with multi-dimension include its age. On the basis of the literary technique like inspiration of the previous literary works, literary traditions, prosody and its similes etc., the paper come to the conclusion, the *kallāṭam* emerged between the period of 5th and 8th century A.D.

**திறவுச்சொற்கள் (Keywords):**

கல்லாடம், பக்தி, இலக்கியக் காலம், இலக்கியத் தாக்கம், உவமைகள் (*kallāṭam, pakti, ilakkiyam, ilakkiya kālam, ilakkiyat tākkam, uvamaikaḷ).*

**அறிமுகம்**

தமிழ் இலக்கிய மரபையும் நெறியையும் முன்னெடுத்துச் செல்லும் பணியில், ஒரு இலக்கியப் போக்கின் முடிவிலும், புதிய இலக்கியப் போக்கின் தொடக்கத்திற்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தும் ஊடுபாலமாகக் கல்லாடம் நிற்கின்றது. சங்க இலக்கிய மரபின் முடிவிற்கும், பக்தி இலக்கிய மரபோடு அக இலக்கிய மரபைப் பிணைக்க முயற்சிக்கும் காலத்திற்கும் இடையில் கல்லாடத்தை வைப்பதே பொருத்தமானது. கல்லாடம் பெற்றுள்ள இலக்கியத் தாக்கங்களின் அடிப்படையில் அதன் காலத்தை ஒருவாறு வரையறுக்க இக்கட்டுரை முனைகின்றது.

**கல்லாடம் : கால ஆய்வுகள்**

கல்லாடத்தின் கால ஆய்விற்கு அதன் அகப்பொருள் துறைகளும், சங்க இலக்கிய நடையிலான ஆசிரியப்பாவும் அறிஞர்களால் முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கல்லாடத்தில் அமைந்துள்ள அகப்பொருள் துறைகள் பெரும்பான்மையும் திருக்கோவையாருடன் பொருந்தி நிற்பதால், திருக்கோவையார் பாடல்களை விளக்குவதற்காகவும், அதன் மேன்மையைப் புலப்படுத்துவதற்காகவும் அதிலிருந்து நூறு துறைகளை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றை விரிவாக விளக்கும் வகையில் கல்லாடம் அமைந்திருக்கின்றது என்பர் அறிஞர் (மு.அருணாசலம், 2005:16). பெரும்பான்மையும் கல்லாடத்தின் காலம் கி.பி.11ஆம் நூற்றாண்டிலிருந்து 13ஆம் நூற்றாண்டு வரையாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால், நூலின் எந்தப் பகுதியிலிருந்தும், கல்லாடம்

திருக்கோவையாரையும், மாணிக்கவாசகரையும், திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களையும் ஏற்றிப் போற்றுகின்றது என்பதற்கு அகச்சான்றுகள் இல்லை. ஏனெனில் நூலில் தமக்கு முன்பிருந்த இன்றியமையாத நூல்களை எல்லாம் ஆசிரியர் கல்லாடர் வெளிப்படையாகவே ஏற்புடைய இடங்களில் சொல்லிச் செல்கின்றார்.

**கல்லாடத்தில் பயிலும் அகமரபுகள்**

அகப்பொருள் மரபை வலியுறுத்தும் நூல் எனும் கருத்தின் அடிப்படையில் சங்ககாலத் திணை மரபையும், அவற்றில் பயின்று வருகின்ற துறைகளையும் சற்றே எளிமைப்படுத்தும் வகையில் கல்லாடம் அமைந்திருக்கின்றது. அன்பின் ஐந்திணை என்னும் அகமரபைப் போற்றும் வகையில் தொல்காப்பியத்தை விடவும் இறையனார் களவியலை இந்நூல் பெரிதும் பின்பற்றுகின்றது என்று கூறலாம்.

உலகியல் நிறுத்தும் பொருள்மரபு ஒடுங்க
மாறனும் புலவரும் மயங்குறு காலை
முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கால்
அன்பின் ஐந்திணை என்று அறுபது சூத்திரம்
கடல்அமுது எடுத்துக் கரையில் வைத்ததுபோல் (கல்.3:10-14)

என அன்பின் ஐந்திணை மரபைக் கல்லாடம் விளக்குகின்றது. இறையனார் களவியல் என்ற நூலையேயன்றி அதற்கான நக்கீரர் உரையையும் இந்நூல் வழிமொழிகின்றது.

குளவன் குன்றக் கூடல்அம் பதிநிறை
மஞ்சடை குழல்பெறு செஞ்சடைப் பெருமான்
அருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பாடல்
வாவியில் கேட்ட காவிஅம் களத்தினன்
திருக்கண் கண்ட பெருக்கினர் போல் (கல். 52.26-30)

என்று நக்கீரர் உரையைக் கேட்டதும் கண்களில் கண்ணீர் வழிந்ததாகக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது (நக்கீரர்,1953:8).

**கல்லாடமும் திருக்குறளும்**

தமிழுக்குச் சிறப்பான அன்பின் ஐந்திணையை மட்டுமின்றி மிகச்சிறந்த நூலான திருக்குறளையும் கல்லாடம் வழிமொழிகின்றது.

சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது என்ற
வள்ளுவன் தனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான் (கல்.14:20-23)

என்று திருவள்ளுவருக்கும், திருக்குறளுக்கும் 'மாலை' பாடிய புலவர்களில் முதற்புலவர் யார் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் கல்லாடம் பாடலை யாத்திருக்கின்றது.

திருவள்ளுவருக்கு, கல்லாடனார் என்ற புலவர் ஒருவரும் மாலை பாடியிருக்கின்றார்; அவர் பாடிய மாலையில் உள்ளதுதான் "சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவர்" என்னும் கருத்துடைய அடிகள். எனவே கல்லாடர் தனக்கு முன்பே திருவள்ளுவமாலை பாடிய புலவரைக் குறிக்கின்றார். எனவே கல்லாடம் பாடிய கல்லாடரும், வள்ளுவ மாலை பாடிய கல்லாடரும் ஒருவரா அல்லது வேறானவரா என்பது மேலும் ஆய்வுக்குரிய பகுதியாகும்.

கல்லாடர் தான் பாடிய வள்ளுவமாலை அடிகளையே தன்னுடைய நூலான கல்லாடத்திலும் எடுத்தாண்டிருப்பது, கல்லாடர் ஒருவரே என்னும் கருத்துக்கு வலிமையான சான்றாகின்றது. சமயக் கணக்கர்தம் திறம் கூறாது என்று இதே கருத்தை 65ஆம் பாடலிலும் கல்லாடர் கையாளுகின்றார்.

இவையன்றியும், திருக்குறளை நூலின் பெயரைக் குறிப்பிட்டே ஒரு பாடலில்(62) சுட்டிக் காட்டுகின்றார்.

நிறைமதி புரையா நிறைமதி புரையா
தேரான் தெளிவெனும் திருக்குறள் புகுந்து (கல்.62:1-2)

என்கிறார் கல்லாடர்.

மேற்கண்ட கருத்துகள் யாவும் கல்லாடர் தாம் நூல் இயற்றியதற்கான நோக்கத்தை, நூல்களின் பெயரை வெளியிடுவதின் வாயிலாகக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். இவ்வாறு தனக்கு முன்பிருந்த புலவர்களையும், மரபுகளையும் வெளிப்படையாகவே எடுத்துக்காட்டும் கல்லாடர் மாணிக்கவாசகரையும் திருக்கோவையாரையும் எந்தவொர் இடத்தும் சுட்டிக்காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்லாடமும் சங்க இலக்கியங்களும்**

தாம் போற்றும் நூல்களை மட்டுமன்றி, பாடலின் கருத்துக்களையும் வடிவங்களையும்கூட கல்லாடர் மிக வெளிப்படையாகவே தம்முடைய பாடல்களில் பயன்படுத்தியிருக்கின்றார். ஒரு பாடலில் (கல்.35:14-18) குறுந்தொகையில் உள்ள இறையனார் (குறுந்.2) பாடலான, கூந்தலில் மணம் குறித்துத் தலைவன் வண்டிடம் வினவுகின்ற செய்தியை அப்படியே தமது பாடலில் விளக்கமுறையில் பாடியுள்ளார். மற்றொரு பாடலில் (கல்.18:9-20) பாலைக்கலியின் 9ஆம் பாடற்கருத்தையும் பயன்படுத்தியுள்ளார். சந்தனம், முத்து, யாழிசை போன்ற பொருட்கள், அவை பிறக்கின்ற இடத்துக்குப் பெருமை சேர்க்காமல், அவை சேர்கின்ற இடத்துக்குப் பெருமை சேர்க்கும் என்ற முத்தான மூன்று உவமைகளை அப்படியே பயன்படுத்துகின்றார் கல்லாடர்.

சங்க இலக்கிய உவமைகளையும் கருத்துகளையும் ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களில் விளக்கமாகப் பாடல்களில் தொடர்ச்சியாகப் பாடும் முறை பாண்டிக்கோவையிலும் காணப்படுகின்றது (பாண்டி. 4-9; 10-12). இதன்மூலம் தமக்குத் தாக்கம் ஏற்படக் காரணமாக இருந்த, அல்லது தாம் விரும்பிய நூல்களை வெளிப்படையாகவே சுட்டிக்காட்டுகின்ற போக்கு இவரிடத்துக் காணப்படுகின்றது. திருக்கோவையாரையோ, மாணிக்கவாசகரையோ ஏற்றிப் போற்றுவதுதான் கவிஞரின் நோக்கமென்றால், கல்லாடர் அவற்றைத் தம் பாடல்களில் வெளிப்படுத்தாமல் இருக்க எந்தவிதமான தடையும் இருக்கவில்லை என்பதையும் இங்குக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

**கல்லாடமும் பதினெண் கீழ்க்கணக்கும்**

கல்லாடத்தில் பயின்று வருகின்ற சில உவமைகள், கருத்துகள் பதினெண் கீழ்க்கணக்கு மற்றும் கலித்தொகையை நினைவூட்டுகின்றன. 'படிறர் சொல்எனக் கடுவுநஞ்சு இரைப்ப' (கல்.17:16), 'ஈயாது உண்ணுநர் நெடும்பழி போல' (கல்.31:6), 'கரியுடன் உண்ணார் பழிவளர் ஒத்த' (கல்.97:7) என வருகின்ற உவமைகள் அற இலக்கியக் காலத்தைக் காட்டுகின்றன.

மேலும், அகப்பொருள் மரபில் பாடல்கள் புனையும்போது அறக்கருத்துகளைப் பொருத்திக் கூறும் போக்கு கலித்தொகையில் அதிகம் காணப்படுகின்றது. 'ஈதலிற் குறைகாட்டாது அறனறிந்து ஒழுகிய / தீதிலான் செல்வம்போல மரன்நந்த' (கலித்.27:1-2), 'மடியிலான் செல்வம்போல் மரன்நந்த' (கலித்.35:1), 'அருள்தீர்ந்த காட்சியான் அறன்நோக்கான் நயஞ்செய்யான் / வெருவுற உய்த்தவன் செல்வம்போல் பைபய' (கலித்.120:1-2), 'பிறர்நோயும் தம்நோய்போற் போற்றி அறனறிதல் / சான்றவர்க் கெல்லாம் கடன்' (கலித்.139:2-3) என்பன போன்ற அறம்சார் உவமைகள் பலவும் கலித்தொகையில் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் கல்லாடரும் தம்முடைய பாடல்களில் அறம்சார் உவமைகளைப் பயன்படுத்துகின்றார் என்று கருதவும் இடமுண்டு. 'கதிர்நிரை பரப்பும்' எனத் தொடங்கும் பாடலில்,

முன்னையள் அல்லள் முன்னையள் அல்லள்
அமுதவாய்க் கருவிழிக் குறுந்தொடி நெடுங்குழல்

பெருந்தோள் சிறுநகை முன்னையள் அல்லள் (கல்.47:47-49)

என்ற பாடலடிகள் இடம்பெறுகின்றன. இது, "துறக்குவன் அல்லன் துறக்குவன் அல்லன், தொடர்வரை வெற்பன் துறக்குவன் அல்லன்" என்ற கலித்தொகை (கலி. 41:35-36) அடிகளையும், சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடலில் 'போற்றிப் பாடும்' அடுக்குத் தொடர்களையும் கையாண்டு எழுதப்பட்டிருப்பது போல் தோன்றுகின்றது. கலித்தொகையின் பாடல் வடிவம் ஒன்றையும் கல்லாடம் எடுத்தாள்கின்றது (கலித்.7). தலைவன் பிரிகின்றபோது தலைவன் தலைவியரின் தன்மையையும், பண்பையையும் தனித்தனியே எடுத்துக்காட்டி, பிரிவின்போது ஒவ்வொருவரும் எப்படியிருந்தனர் என்பதை 'இவனே', ' இவளே' என்று சுட்டிக் கூறும் கலித்தொகையின் கூற்றுமுறை, கல்லாடத்தில் பாடலில் சிறிதும் மாறாமல் அப்படியே கையாளப் பெற்றுள்ளது (கல். 53: 9-24) மேற்கண்ட சான்றுகளிலிருந்து கலித்தொகையின் அண்மைத் தாக்கத்தைக் கல்லாடம் பெற்றுள்ளது என்பதை அறியலாம்.

**கல்லாடமும் நாயன்மார்களும்**

இனி, கல்லாடத்தில் சிவனடியார்கள் குறித்த செய்திகளையும், திருவிளையாடற் புராணச் செய்திகளையும் ஆராய்ந்தால், சேரமான் பெருமாள் நாயனார் (கல்.12:25-27), காரைக்கால் அம்மையார் (கல்.63:38-40), சாக்கிய நாயனார் (கல். 69:14), மூர்த்தி நாயனார் (கல்.57:17-19), புலிக்கால் முனிவன் (கல்.42:5) ஆகிய பெரியபுராணப் பாத்திரங்கள் குறிப்பிடப்படுகின்றன. மேலும்,

மதுரை வவ்விய கருநட வேந்தன்
அருகர்ச் சார்ந்துநின்று அருட்பணி அடைப்ப (கல்.57:13-14)

என்று பாண்டிய மரபு வீழ்ந்து கருநாடக மன்னர்களின் ஆட்சி நடைபெற்ற காலத்தைக் கல்லாடம் சுட்டிக்காட்டுகின்றது. சிவனடியார்களின் வரலாற்றைத் தொகுத்து எழுதிய சேக்கிழார் பெருமானுக்கு, அவர்க்கு முன்பிருந்த சிவனடியார்களின் வரலாற்றை அறிந்துகொள்ளக் கல்லாடம் துணையாக இருந்தது என்று கொள்ளுதல் பொருத்தமாகத் தோன்றுகின்றது. அதேபோன்று திருவிளையாடற் புராணச் செய்திகளும் கல்லாடப் பாடல்களில் காணப்படுகின்றன. இசைவாது (கல்.43:32-34), பிட்டுக்கு மண்சுமந்தது (கல்.49:22-26), மாமனாக வந்து வழக்குரைத்தது (கல்.45:24-27) போன்ற திருவிளையாடற் புராணச் செய்திகளும் கல்லாடத்தில் குறிப்பிடப்படுகின்றன. மேலும் திருக்கோவையார் தில்லையைப் போற்றுகின்ற மரபையும், கல்லாடம் மதுரையைப் போற்றுகின்ற மரபையும் பின்பற்றுகின்றன.

**கல்லாட உவமைகள்**

மேற்கூறிய அகப்பொருள் வழியாகத் தோன்றிய அறம்சார் உவமைகள் கடவுளுடன் இயைபுகொண்டு மாற்றம் பெற்றதும் கல்லாடத்தில் காணக் கிடக்கின்றது. 'கூடல்அம் பெரும்பதி கூறார்கிளை என' (கல்.3:18), 'தெய்வம் கொள்ளார் திணிமனம் என்ன' (கல்.5:25), 'முக்கட் கடவுள் முதல்வனை வணங்கார் / தொக்கதீப் பெருவினை சூழ்ந்தன போல' (கல்.39:27-28), 'கூடற்கு இறைவன் இருதாள் விடுத்த / பொய்யினர் செய்யும் புல்லம் போல' (கல்.38:31-32)) என்று கடவுள் அல்லது சிவபெருமானை வணங்காதவர்கள் அமையும் துன்பம்போல என்ற அறம்சார் உவமமரபு, தெய்வம்சார் உவம மரபாக மாற்றம் பெற்றிருப்பதைக் காணலாம்.

பொதுவாக, தெய்வங்கள் உவமங்களில் (உள்ளுறை) இடம்பெறாதென்ற சங்ககாலக் கவிமரபு இங்கு மீறப்பட்டுள்ளது என்பதையும் காண முடிகின்றது. இந்த தெய்வம்சார் உவமமரபு தொடர்ந்துவரும் கோவை நூல்களிலும் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதையும் பாடல்களின் வழியாக அறிய முடிகின்றது. திருக்கோவையார் 5, 11, 42, 43, 87ஆம் பாடல்களில் இத்தகைய உவமமரபு பின்பற்றப்பட்டுள்ளது. இந்த உவமைகள் மேலும் ஒரு வகைப்பாட்டைத் தமக்குள் உருவாக்கிக் கொள்கின்றன. எவ்வாறென்றால் "கடவுளை வணங்குபவர் அடையும் பயன்போல, கடவுளை வணங்காதவர் அடையும் துன்பம்போல" என்று இரு வகையாகக் கிளைத்துச் செல்வதையும் உணர முடியும். இத்தகைய போக்கிற்குக் கல்லாடமே காரணமாயிற்று எனலாம்.

**கல்லாட யாப்பு**

கல்லாடப் பாடல்கள் அனைத்தும் ஆசிரியப்பாவால் இயன்றவை. கல்லாடத்தில் பயின்றுவரும் ஆசிரியப்பாக்கள் சங்க இலக்கிய ஆசிரியப்பாப் போலவோ அல்லது பிற்கால ஆசிரிய விருத்தங்கள் போலவோ அல்லாமல் தனித்திருக்கின்றன. சங்க இலக்கியக் காலத்திற்குப் பின் அற இலக்கியங்களில் வெண்பா வடிவங்களே புலவர்களால் கையாளப்பட்டுள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வெண்பாக்களால் இயன்றன. இந்த வெண்பா வடிவங்களின் தாக்கம் தொடர்ந்து வந்த பக்தி இயக்கத் தோற்றுநர்களான காரைக்கால் அம்மையார், முதலாழ்வார்கள் மூவர் பாடல்களிலும் இருப்பதைக் காண்கின்றோம். இவர்களுக்குப் பிறகு பெரும்பாலும் விருத்தப்பாக்களும், கலித்துறைகளுமே கவிஞர்களால் கையாளப்பட்டுள்ளன. வெண்பாக்களின் காலம் முடிந்தவுடன் விருத்தங்களின் காலம் தொடங்கிவிடுகின்றது. சங்க இலக்கியத்திலும் மிக நீண்ட ஆசிரியப்பாக்கள் பத்துப்பாட்டில் உள்ள பாடல்களே ஆகும். எனினும் கல்லாடத்தில் கையாளப்பட்ட ஆசிரியப்பாவிற்கும், பத்துப்பாட்டில் உள்ள ஆசிரியப்பா அமைப்புக்கும் கால இடைவெளி மிகுதியாக உள்ளது. இனி, கல்லாட ஆசிரியப்பா அமைப்பை ஒட்டிய வேறு நூல்கள் ஏதேனும் உண்டோ என்றால், உண்டு; அது, பெருங்கதை.

பெருங்கதையில் கையாளப்பட்ட ஆசிரியப்பா நடைக்கும், கல்லாட ஆசிரியப்பா நடைக்கும் மிகுதியும் ஒற்றுமை காணப்படுகின்றது. அதில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று, பாவின் தொடையமைப்பு. அடுத்தடுத்த இரண்டு அடிகளுக்கிடையில் எதுகை மோனை அமைப்பதை விடவும், ஒரே அடியில் சீர்களுக்கிடையில் எதுகை மோனை அமைப்பதில் இவ்விரண்டு நூல்களின் ஆசிரியர்களும் அதிக ஆர்வம் காட்டியிருக்கின்றனர். எனவே பெருங்கதையின் அண்மைத் தாக்கமும் கல்லாடத்தில் காணப்படுகின்றது என்பதையும் நாம் அறியலாம்.

> பூசியும் புனைந்தும் பூட்டியும் சூட்டியும்
> நிறுத்தியும் நிரைத்தும் நெறித்தும் செறித்தும்
> எழுதியும் தப்பியும் இயைத்தும் பிணித்தும்
> கட்டியும் கலத்தியும் கமழ்த்தியும் மறைத்தும் (கல்.56:18-22)

என்று உம்மைகள் கொடுத்துப் பாடற்பொருளை விரித்துச் செல்லும் கல்லாடத்தின் பாடற்போக்கைப் போலவே, பெருங்கதை,

> தோணியும் மரமும் துறைநா வாயும்
> நீர்இயல் மாடமும் நீந்தியல் புணையும்
> சுண்ணமும் சூட்டும் சுவைநறுந் தேறலும்
> செண்ணச் சிவிகையும் தேரும் வையமும் (பெருங்.1.37:266-272)

எனப் பாடுகின்றது. இதேபோன்று பொருள்களைச் சுருக்கிச் செல்லும் முறையைப் பல இடங்களிலும், குறிப்பாக நீண்ட அடிகளில் அடுக்கிச் செல்லும் முறையிலும், பெருங்கதையும் கல்லாடமும் ஒத்திருக்கின்றன.

அன்றியும், எண்களைக் குறிப்பதில் ஐந்நூறு, ஆயிரம் என்ற எண்களையும், ஐந்நூற் றிரட்டி, ஆயிரத்திரட்டி என்ற அதன் மடங்குகளையும் குறிப்பிடுவது பல இடங்களிலும் காணக் கிடக்கின்றது. சிலப்பதிகாரத்தின் தாக்கமும் பெருங்கதையிலும், கல்லாடத்திலும் பரவலாக இருக்கின்றது.

**நிறைவுரை**

கல்லாடப் பாடல்களின் உருவம் மற்றும் உள்ளடக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டு கல்லாடத்தின் காலத்தை வரையறை செய்தால் அது, கி.பி.5ஆம் நூற்றாண்டிலிருந்து 8ஆம் நூற்றாண்டுக்குள் அடங்கும். தமிழ் இலக்கியம் பக்திப் பெரும்பரப்புக்குள் நுழையும்போது, பழந்தமிழ்ப் பாடல்களில் மண்டிக்கிடக்கின்ற அகமரபுக்கு ஏற்பு ஒன்றை வழங்கும் நோக்கில் கவிஞர்கள் பக்தியுடன் அகமரபைப் பிணைத்துப் பாடல்கள் புனைந்தனர். அப்போக்கில் கல்லாடம்

குறிப்பிடத்தகுந்த நூல்களில் ஒன்றாகக் காட்சி அளிக்கின்றது. அதற்கு ஏதுவாக, சங்கப் பிற்காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் இறையனார் களவியல், கலித்தொகை, சிலப்பதிகாரம், பெருங்கதை போன்ற நூல்களின் தாக்கம் கல்லாடத்தில் காணப்படுவதால் அதன் காலத்தை மேற்கண்டவாறு வரையறுக்கலாம்.

**துணைநின்றவை (References)**


- அருணாசலம் மு., (2005), *தமிழ் இலக்கிய வரலாறு - 11ஆம் நூற்றாண்டு*, சென்னை : தி பார்க்கர்.
- இராமசுவாமி சு.அ., (1944), *கல்லாடம் உரைநடை*, சென்னை : ஒற்றுமை ஆபிஸ்.
- சாமிநாதையர் உ.வே. (உ.ஆ), (1955), *குறுந்தொகை*, சென்னை : கபீர் அச்சுக்கூடம்.
- சாமிநாதையர் உ.வே (ப.ஆ)., 2000, *பெருங்கதை - பகுதி - 1 உஞ்சைக் காண்டம்*, சென்னை : டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்.
- சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.), 1955, *சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்*, சென்னை : கபீர் அச்சுக்கூடம்.
- சோமசுந்தரனார் பொ.வே. (உ.ஆ.), (1970), *கலித்தொகை நச்சினார்க்கினியருரை*, சென்னை : திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
- துரைசாமி வே. (ப.ஆ.), (1964), *பாண்டிக்கோவை*, சென்னை : ஸ்டார் பிரசுரம்.
- நாராயண வேலுப்பிள்ளை எம் (உ.ஆ.), (1994), கல்லாடம், சென்னை : முல்லை நிலையம்.
- பாலசாரநாதன் சு. (ப.ஆ.), (1995), *திருச்சிற்றம்பலக் கோவையார் மணக்குடவர் உரை*, சென்னை : டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்.
- பாலசாரநாதன் சு. (ப.ஆ.), 1953, *களவியல் என்ற இறையனார் அகப்பொருள் - நக்கீரர் உரையுடன்*, சென்னை : திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.

# இராபர்ட் கால்டுவெல்லின் பன்முகப் பரிமாணங்கள் The Multi Dimension of Robert Caldwell

ஜா.பிராங்கிளின் தேவராஜ் | J.Franklin Devaraj

Assistant Professor, Dept. of Tamil, Bishop Heber College (Autonomous), Tiruchirappalli – 620 017.
E-mail: frankmathew254@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

கிறித்தவச் சமயப் பரவலாக்கத்திற்காக வந்த மேலைநாட்டுத் தொண்டர்கள் தமிழ்க் கற்றுத் துறைபோகிய வல்லுநர்களாயினர். எனினும், வேறுபல நற்செயல்களும் செய்தனர் என்பதற்குக் கால்டுவெல் நல்லதோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். சமயப்பணி, சமுதாயப்பணி, கல்விப்பணி ஆகிய முப்பெரும் பணிகளைச் செய்த இப்பெருமகனார் இப்பணிகளின் உட்பிரிவுகளுக்குள் சென்று நன்மை பயக்கும் செயல்களைச் செம்மையுற ஆற்றினார். கட்டடக்கலை, அகழ்வாராய்ச்சி, இசைக்கலை, ஓவியக்கலை, மொழிபெயர்ப்பு உள்ளிட்ட பல நற்செயல்களைச் செய்து இடையன்குடி மட்டுமின்றி இலக்கியத்திலும் அழியாப்புகழ் பெற்றவராய்த் திகழ்ந்தார். வேதாகமத் திருத்தப்பணி என்பதும் ஆலயமணி அமைப்பு என்பதும் இன்றும் என்றும் நினைத்து மகிழ்தற்குரிய மகுடப்பணியாக உள்ளது. இக்கருத்தாக்கத்தில் 'இராபர்ட் கால்டுவெல்லின் பன்முகப் பரிமாணங்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**Abstract**

Though the Foreigners came to India to spread the gospel to Indians and Tamilians, they became genious and experts in Tamil Literature. Robert Caldwell is a very good example for this. Though he concentrated on Religeon, Social and Education activities, he went in to the branches of the said three and achived his goal. His attempts concentrated Artchitectur, Archeology, Music, Art. The Translation and etc. All these works gave him name and fame. Not only at Idayankudi but in the Literature world. Bible Translation and Bell Tower are crown activates of him. In this them the article is structured.

**திறவுச்சொற்கள் (Keywords):** கால்டுவெல், வல்லுநர், அகழ்வாராய்ச்சி, மகுடம், பரிமாணம், கருத்தாக்கம், Caldwell, Genious, Dimension, Archeology, Crown, Dimension, ideal.

**முன்னுரை**

மேல்நாட்டுத் திருத்தொண்டர்கள் இந்தியாவிற்கு வருகை புரிந்தமையால் குறிப்பாகத் தமிழகத்திற்குப் பற்பல பயன் கிட்டின. அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் காண்பதற்கு இத்திருத்தொண்டர்கள் அயராது உழைத்தனர். அவர்களுள் ஒருவர் கால்டுவெல். அவரது பன்முகப் பரிமாணங்கள் எண்ணி எண்ணி வியக்கத்தக்கன. கால்டுவெல் மொழியியல், இலக்கிய வரலாற்றியல், தொல்லியல், அகழ்வாய்வியல், ஒப்பியல், இனவரைவியல், மொழிபெயர்ப்பியல், அருளுரையியல், திருப்பணி விடையியல், இசையியல் எனப் பல துறைகளில் முத்திரை பதித்துள்ளார். குறிப்பாக மேல் நாட்டுக் கலைக்கல்லூரி மாணவரான இவரது கலைப்பங்களிப்பிற்குச் சான்றாகத்திகழும் இடையன்குடித் 'தூய திரித்துவ தேவாலய'த்தின் கோதிக் கட்டட அமைப்பு, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைப் புலமை பற்றி விளக்குவதற்கு இக்கட்டுரை முற்படுகிறது.

**கால்டுவெல் - கலைஞர்**

1830-இல் தன்னுடைய 16-வது வயதில் 'டப்ளின்' எனும் இடத்தில் தங்கி ஓவியக் கல்லூரியில்

தனது கலைப்பயிற்சியைத் தொடங்கினார் கால்டுவெல். அடிப்படையிலேயே ஓவியம், சிற்பம், இசை முதலிய துறைகளில் ஈடுபாடு கொண்ட இப்பெருமகனார் தான் கற்ற கலைகளைத் தான் அருள்தொண்டாற்றக் கால்பதித்த இடங்களில் செயல்படுத்தினார் என்பதே அவரது ஆர்வத்திற்குச் சான்றாகும்.

1838-ஆம் ஆண்டு 24-ஆம் வயதில் சென்னை வந்திறங்கிய கால்டுவெல் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டபிள்யு ஹெட்ச். ட்ரூ எனும் ஐரோப்பிய அறிஞரிடம் தமிழை முறையாகக் கற்றார். தமிழில் பாடல்கள் எழுதும் அளவிற்குத் தமிழை நன்கு கற்றுத் தேறினார். தனது நடைப் பயணத்தின் போது தஞ்சை சுவிசேடக் கவிராயர் வேதநாயக சாஸ்திரியாரைச் சந்தித்து ஓரளவு இசை நுணுக்கங்களை அறிந்து கொண்டார். அவர் மீதும், இசை மீதும் பெரிதும் நாட்டம் கொண்ட கால்டுவெல் விழாக் காலங்களில் மக்கள் அவர் பாடிய பாடல்களை விரும்பிப் பாடியதையும் பதிவு செய்துள்ளார். அதோடு தமிழ் இசை மரபினையும் ஓரளவு கற்றுக் கொண்டார்.

சோழநாட்டுக் கோயில்கள் கால்டுவெல்லைத் தன்பால் ஈர்த்தன. தஞ்சைப் பெரிய கோயில், திருச்சி சிறீரங்கம் பெருமாள் கோயில் அவரைப் பெரிதும் கவர்ந்ததமையினையும் பதிவுசெய்தார். இப்பதிவுகள் கால்டுவெல் ஒரு கிறித்தவத் திருதொண்டர் மட்டுமல்ல அவர் ஒரு கவின்கலைக் கலைஞர் என்பதையும் காட்டுகிறது. இசைக்கலை, கட்டடக்கலை ஆகியவற்றில் பெரிதும் நாட்டம் கொண்ட கால்டுவெல், தாம் இறைதொண்டாற்றத் தெரிவுசெய்த இடையன்குடியில் இக்கலைகளைச் செயல்படுத்த எண்ணம் கொண்டு முயற்சியில் இறங்கினார்.

### இடையன்குடியில் கால்டுவெல்

1843-ஆம் ஆண்டு இடையன்குடிக்கு வந்து சேர்ந்தார் கால்டுவெல். இடையன்குடியில் 1847 முதல் 1880 வரை 33 ஆண்டுகள் அவருடைய முயற்சியின் விளைவாய் எழுந்தது தூய திரித்துவ ஆலயம். இத்திருக்கோயில் அவருடைய கலைத்துறைப் பங்களிப்புகளுக்குச் சான்றாக நிற்கிறது.

### கட்டடக் கலை

தாம் இறைத்தொண்டு நிகழ்த்த வந்த இடையன்குடி மக்களுக்காகப் பெருங்கோயிலைக் கட்டவேண்டும் என்ற பேராவல் இவருக்கு இருந்தது. இக்கோயிலைக் 'கோதிக்' கட்டடக்கலை முறையில் விரிவமைக்க எண்ணினார். கி.பி 13-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் பேராலயங்கள், அரண்மனைகள், மாளிகைகள் இம்முறையில் கட்டப்பட்டதை அறிந்து அவ்வாறே அதனை வடிவமைக்கப் பெரிதும் முயன்றார். கூர்மையான வளைவுகள், மெல்லிய உயரமான தூண்கள், வெளிப்புறமாகப் புடைத்த கோடுகள், சித்திரவேலைப்பாடுகளுடன் அமைந்த சாளரங்கள் ஆகியன கோதிக் கட்டிட மரபுடன் கட்டப்பட்டன. இதனை,

> "காலதர்களும் கதவுகளும் கூர்மையான வளைவைக் கொண்டுள்ளன. இத்திருக்கோயிலின் நுழைவாயில் திருப்பீடத்துக்கு நேரே அமைக்கப்பட்டவில்லை. மாறாக, வலப்பக்க ஓரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி அமைக்கப்ட்டதற்குக் காரணம், 'அக்காலத்தில் சிறுதெய்வ வழிபாடு மேள தாளத்தோடு சாமி ஆட்டங்களுடன் நிகழும்; இந்த ஆட்டங்கள், தேவாலய வழிபாட்டிற்கு இடையூறாய் இருக்குமென்றெண்ணி வாயிலைப் பீடத்திற்கு நேரே அமைக்காமல் வலப்பக்க ஓரத்தில் அமைத்துள்ளார் கால்டுவெல்" என்று ஆய்வாளர் ஞா. ஸ்டீபன் கூறுகிறார். (ப. டேவிட் பிரபாகர், 2014:520-521)

திருக்கோயில் முழுமையும் கருங்கற்களாலேயே கட்டப்பட்டுள்ளது. நார்தம்டன்ஷா என்ற இடத்திலிருந்து திருக்கோயிலின் வரைபடத்தைப் பெற்றுவந்து 1847-ஆம் ஆண்டு அடிக்கல்லிடப்பட்ட இக்கோயில் 1880-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம்நாள் மங்கலப் படைப்பு செய்தார். 1200 பேர் அமரும் வகையில் விரிவாக அமைக்கப்பட்டுள்ளது. முகப்பு, இடப்பக்கம் 25 அடி உயரத்தில் தொடங்கி இரண்டாம் பங்கு, மூன்றாம் பங்கு என 65 அடி வரை உயருகிறது. முதற்பங்கு கோயிலின் இடப்பகுதியாகவும் மூன்றாம் பங்கு வலப்பகுதியாகவும் குறிப்பாக, மணிகளின் கூண்டு இருக்கும்

கோபுரமாக அமைக்கப்பட்டுள்ளது.

தூயத்திரு இருக்கையின் மேற்கூரையும் சுற்றி உள்ள அமைப்புகளும் கோதிக் கலைமரபைச் சார்ந்தவை. திருமேடைச்சுவரில் உள்ள முப்பொருள் உண்மையை விளக்கும் ஓவியங்கள் கால்டுவெல்லின் படைப்பாகும். கண்ணாடிகளில் வரையப் பெற்றுள்ள வண்ண ஓவியங்கள் ரோம மற்றும் அரபுக் கலைமரபைச் சார்ந்தவை. உட்புறத்தில் ஐந்து கூர்மையான வளைவுகளின் மீது மரத்தாலான கட்டைகள் மேல் கூரை வேயப்பட்டுள்ளது. செங்குத்து சாய்வாக அமைக்கப்பெற்றுள்ள கூரை அமைப்பு பனி பெய்யும் நிலங்களில் அமைக்கப்பெறும் முறையாகும்.

இடையன்குடி கோயிலின் சுவர்களும் தூண்களும் கருங்கற்களால் ஆனவை. மேல் பகுதியைத் தாங்கும் தாங்கிகளும் கதவு, காலதர்களில் இருக்கும் சிறு கட்டைகள், பலகைகள், கண்ணாடிகள் தவிர மீதம் யாவும் கருங்கற்களால் ஆனவை. கதவுகள், காலதர்கள் மேல் இருக்கும் சிற்ப வேலைப்பாடுகள் அனைத்தும் கால்டுவெல்லால் களிமண்ணில் மாதிரிகளாக முதலில் செய்துகாட்டப்பட்டுப் பின்னர் கல் மற்றும் மரத் தச்சர்களால் செதுக்கப்பட்டவை. கருங்கற்களால் எழுப்பப்பட்டுள்ள பெரிய தூண்கள் காலதர் மேலிருக்கும் கலைவடிவங்களும் வண்ணம் பூசப்பட்டதால் அவை சுதைமர வேலைப்பாடுகள் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால், அவை கருங்கற்களால் செதுக்கப்பட்டவைகளாகும். இடையன்குடி கோயிலைத்தவிர ஏனையவை இயல்பான நிலையில் தான் கட்டப்பட்டுள்ளன.

**ஓவியக்கலை** அடிப்படையில் கால்டுவெல் ஓர் ஓவியர். ஓவியக்கல்லூரியில் முறையாகப் பயின்றவர் இவர் கட்டிய இடையன்குடி கோயிலிலின் திருப்பீடச்சுவரில் காணப்படும் சிற்ப ஓவியங்கள் தனிச்சிறப்புடையன. சிற்ப முறையில் அமைந்துள்ள பீடச்சுவர், கிறித்தவத்தின் முப்பெரும் தத்துவமான திரித்துவத்தை கலை வடிவத்தில் எடுத்தியம்புகிறது. தந்தை, மகன், தூயஆவி எனும் முப்பெரும் சிந்தாந்தத்தை விளக்கப் பல்வேறு வகையான வடிவங்களையும் நுட்பங்களையும் இச்சிற்பத்தில் காணமுடியும். இங்குத் தூய ஆவியாருக்கு மேலிருந்து கீழிறங்கும் புறாவையும் மகனுக்குத் திருச்சிலுவையும் தந்தைக்குத் திராட்சைக் கொடி போன்ற குறியீட்டையும் கொண்ட புடைப்பு சிற்பம் அமைக்கப்பட்டு வண்ணம் பூசப்பட்டுள்ளது. இவைகளுக்கு மேலே கூரை போன்ற அமைப்பில் வானம், வெண்மேகம் போன்றவை ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. வண்ணம் தீட்டப்பட்டிருக்கும் பீடச்சுவர் காண்போரைக் கவரும் வகையில் உள்ளது. இவ்வாறு திருத்தொண்டாற்றும் இவர் கட்டடக்கலை வல்லுனராகவும் இருந்தார் என்பதற்குத் திரித்துவ ஆலயம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

**இசை**

இறைவனைப் போற்றிப் பரவும் முறையில் இசையானது பெரும் பங்கை வகுக்கிறது. ஆழ்வார்கள், நாயன்மார்கள், உள்ளிட்ட பக்தர்கள் இறைவனைப் போற்றிப் பாடியது இசை வழியில் என்பது பக்தி இலக்கியங்கள் வழி அறியப்பட்டுள்ளது. கிறித்தவ சமயப் பெரியார்களும் இவர்களைப் போல இசையில் நாட்டம் கொண்டு கீர்த்தனைகள், பாமாலைகள் பாடினர். கால்டுவெல் அவர்களும் இசையில் மூழ்கியவர்.

கிறித்தவ சமய, வழிபாட்டில் இசைக்கும் பெரும்பங்கு உண்டு. இறைவழிபாட்டில் இறைவேண்டல், திருமறை வாசிப்பு, அருளுரை, பாடல்கள் போன்றவை இன்றியமையாதவையாகும். பாடலில்லாமல் எந்தக் கிறித்தவ இறை வழிபாடும் நிகழ்த்தப்படுவதில்லை. இதையுணர்ந்த கால்டுவெல், முதலில் சில பாமாலைகளை மொழிபெயர்த்தார். 'ஏசையா பிளந்த ஆதிமலையே மோசநாளில் உன்னில் ஒளிப்பேனே' என்ற பாடல் கால்டுவெல் இயற்றப்பட்டது. இவ்வழிபாட்டுப் பாடல் பல்லவி, சரணங்கள் முதலிய கீர்த்தனை வடிவங்களைக் கிறித்தவக் கீர்த்தனைத் தொகுப்பில் ராக் ஆப் ஏஜஸ் எனும் தலைப்பில் இடம்பெற்றிருந்தது. இப்போதும் இக்கீர்த்தனை இறைவழிபாட்டில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஞானப்பாடல்கள் மொழிபெயர்ப்பு**

ஆங்கிலம் மற்றும் ஜெர்மன் மொழியில் இயற்றப்பட்ட பாடல்களை முதலாக சீகன்பால்கு மொழிபெயர்த்தார். இவை ஞானப்பாட்டுகள் என்றும் வழங்கப்படுகின்றன. மேலும், பலர் மொழிபெயர்ப்பு செய்து பாடல்களை வெளியிட்டனர். இவர்களைத் தொடர்ந்து கால்டுவெல்லும் பாடல்களை மொழிபெயர்த்தார். அவை

1. சபையின் அஸ்திபாரம் - புதிய ஆலயக்கட்டுமானத் திறப்புவிழா மற்றும் பொதுவான நிகழ்ச்சி பாடல்.

2. ஏதேனில் ஆதிமணம் உண்டான நாளிலே - திருமண ஆராதனை - தொடக்கப்பாடல்.

3. தூய தூய தூய திரியேக தேவா - பொதுவான ஆராதனை தொடக்கப்பாடல்.

4. கேள் ஜென்மித்த ராயர்க்கே - கிறித்து பிறப்பு நாட்களில் பாடுதல்.

5. அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா இப்போது போர் முடிந்தது - உயிர்த்தெழுந்த நாளில் பாடுதல் என்பவனவாகும். இவற்றில் அனைத்துப்பாடல்களும் மிக மிக இன்றிமையாப் பாடல்கள்களாக கருதப்படுகின்றன. இன்றும் ஆலயங்களில் இவை பாடப்படுகின்றன.

**சபையின் அஸ்திபாரம்**

The church's one foundation என்னும் ஆங்கிலப் பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு சபையின் அஸ்திபாரம் என்னும் ஞானப்பாடலாகும். கால்டுவெல் இடையன்குடியில் சுமார் முப்பது ஆண்டுகளாகக் கட்டப்பட்டு வந்த ஆலயத்தை 1880 ஜுலை 6 ஆம் நாள் மங்களப்படைப்பு செய்து வைத்தார். அன்று நடைபெற்ற மங்கலப்படைப்பு ஆராதனையில் பாடுவதற்காக, கால்டுவெல் The church's one foundation என்னும் ஆங்கிலப் பாடலைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

**ஏதேனில் ஆதிமணம் உண்டான நாளிலே**

கால்டுவெல் தமது மூத்த மகள் இசபெல்லாவின் திருமணத்தின்போது பாடுவதற்காக The voice that breathed o'er Eden என்னும் ஆங்கிலப் பாடலைத் தமிழில் 'ஏதேனில் ஆதிமணம் உண்டான நாளிலே பிறந்த ஆசீர்வாதம் மாறாதிருக்குமே' என மொழிபெயர்த்தார். இடையன்குடியில் 1868 பிப்ரவரி 19 ஆம் நாள் நடைபெற்ற இத் திருமணத்தில் இப்பாடல் தமிழில் முதன் முதலாகப் பாடப்பட்டது. இப்பாடலைப்பாடாத திருச்சபைகளில் இல்லை. திருமண ஆராதனையின் போது முதன்முதலில் பாடப்படும் பாடலாக இது கருதப்படுகிறது.

**கதா காலட்சேபம்**

'1876 ஆம் ஆண்டில் ஆழ்வார்திருநகரி, குலசேகரப்பட்டணம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களுக்குத் தம் குழுவினரோடு சென்று இரவு நேரத்தில் கதாகாலட்சேபம் மூலமாகச் செய்தியளிப்பது வழக்கம். மேலும் வேத, புராண, சாஸ்திரங்களைக் குறித்த தெளிவான அறிவோடு சொற்பொழிவாற்றினர். மேற்சொன்ன இடங்களுக்குச் சென்று கால்டுவெல்லார் தனது குழுவினருடன் மாலை நேரங்களில் இசைக்கதை நிகழ்ச்சி செய்திருக்கிறார். இசைக்கதை நிகழ்ச்சி என்பது கதைகூறும் பகுதி குறைவாகவும், பாடல்கள் அதிகமாகவும் இடம்பெறும் நிகழ்த்து முறையாகும். தமிழ் மொழியில் உள்ள இசை கூறுகளை கால்டுவெல் நன்கு அறிந்து இருந்தார். மேலும், வேதநாயக சாஸ்திரியாரை அணுகியதாலும் இந்து சமயக் கோயில்களில் உள்ள வழிபாட்டில் கண்ட இசை மரபு அவரை ஈர்த்தாலும் பல்வேறு இசை நிகழ்ச்சிகளைச் சமயம் கிடைக்கும் பொழுது கிராமத்து மக்களுக்கு ஏற்ற முறையில் நிகழ்த்தினார். இக்கருத்தை

> "கால்டுவெல்லாருக்குத் தமிழ்மொழியில் உள்ள இசை வடிவங்கள் நன்கு அறிமுகமாகி இருந்தன. வேதநாயக சாஸ்தியாரைச் சந்தித்தபோதும்; தஞ்சை, திருவரங்கம் முதலிய கோயில்களைக் கண்டபோதும் ஆங்குக் கிடைத்த தமிழகத்து இசை மரபு அவரை

ஈர்த்திருக்கும். இதன் வாயிலாகவே மேற்கண்ட பாடல், ஹந்துஸ்தானி, சங்கராபரணம் ஆகிய பண்களோடு ரூபகதாளம் ஆகியன பொருத்தி இசைக்குமளவிற்குப் பாடல் புனைவதில் ஆற்றல் பெற்றிருந்தார்" என்ற பகுதி அரண் செய்கிறது. (ப. டேவிட் பிரபாகர், 2014:523)

**மணிக்கூண்டு கோபுரம்**

இவ்வாலயத்தின் நுழைவாயில் மற்றும் மணிக்கூண்டு கோபுரம் இங்கிலாந்து தவிர வேறு எங்கும் பார்க்கவியலாத சிறப்பு அம்சம் வாய்ந்தது. இங்கிலாந்தில் வெஸ்ட்மின்ஸ்டர் ஆபேயில் மட்டுமே இது காணப்படுகிறது. இக்கருத்தை

> "ஆலயத்தின் மூன்று நுழைவாயில்களில் எதுவும் ஆல்தருக்கு நேராக இல்லை. காற்றுக் காலத்தில் தூசி உள்ளே வருவதைத் தடுக்க இவ்வாறு கால்டுவெல் வடிமைத்திருக்கலாம். இங்குள்ள 'ஜாய் பெல்ஸ்' என அழைக்கப்படும் ஆலய மணிகள் இங்கிலாந்திலிருந்து 1876 ஆம் ஆண்டு தருவிக்கப்பட்டவை. இந்த மணிகள் ஆங்கில 'கிளெஃப்' இசைக்குறிப்புகளின்படி இசைக்கப்படுகின்றன. இந்த மணிகளில் நான்கு கிளெஃப்கள் இசைக்கமுடியும். இன்றும் ஆங்கில குறிப்புகள் படியே இந்த ஆலயத்தில் மணிகள் இசைக்கப்படுகின்றன. நான்கு மணிகளையும் மாற்றி மாற்றி இசைக்கின்றனர். மணியோசை ஐந்து கிலோமீட்டர் தொலைவு வரை கேட்பதாக சொல்லப்படுகிறது. ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று தேசிய கீதம் இந்த மணிகள் மூலம் இசைக்கப்படுகிறது. திருமணம், விழாக்களில் கீர்த்தனைகளும் மணிகள் மூலமே இசைக்கப்படுகின்றன. இங்கிலாந்தின் வெஸ்ட்மின்ஸ்டர் ஆபேயில் ஏழு மணிகள் இவ்வாறு இசைக்கப்படுகின்றன. அதற்கடுத்து இடையன்குடியின் நான்கு மணிகள். ஊலகில் வேறெங்கும் இவ்வாறான ஜாய் பெல்கள் இல்லை" (நிவேதிதா லூயிஸ்,2022:342).

**மணியின் பொதுப்பயன்பாடு**

காலையில் 8.15 மணிக்குப் பள்ளிக்கு மாணவர்கள் செல்ல நினைவூட்ட ஒற்றைமணியும், நண்பகல் 12 மணிக்கு கால்டுவெல் காலத்தில் காலராவால் இறந்துபோன 41 பேரை நினைத்துப்பார்க்கின்ற நினைவேந்தும் நிகழ்வாக 41 முறையும் 1.45 மணிக்கு பெண்களின் ஜெபக் கூடுகைக்காக ஒரு மணியும் அடிக்கப்படுகிறது. பின்னர் 4.40க்கும் 7 மணிக்கும் சிறப்பு மணியடிக்கப்படுகிறது. ஏதேனும் அவசரத் தேவையெனில் அனைவரும் கூடுவதற்காக அபாயமணி ஒலிக்கும். மரண நிகழ்ச்சியின் போது இறந்தவரின் உடல் கோயிலுக்குள் கொண்டுவரும் போது அடிக்கப்படும் மணி 'துக்க' மணியாக அறியப்படுகிறது. இவ்வாறு பொது நிகழ்வுகளுக்கு அடிக்கப்படும்போது மூன்றாம் மணி கயிறால் இழுக்கப்பட்டுத் தரையிலிருந்தவாறே அடிக்கப்படுகிறது. இன்று வரையிலும் இம்முறை வழக்கத்தில் உள்ளது.

கிறித்து பிறப்புக் காலங்களில் கிறித்துமஸ் பாடல்கள் மட்டும் இசைக்கப்படுகின்றன. இதுபோலவே தவக் காலங்களில் துவக்கப்பாடல்களும், உயிர்ப்பு விழா அன்று உயிர்தெழுந்த பாடல்களும் இசைக்கப்படுகின்றன. இவ்வாறு கட்டடக்கலை மட்டுமின்றி மணி ஒலிப்பு முறையிலும் ஒரு முறைசெய்த கலை நுட்பமானவர் என்பது புலனாகிறது. சூழ்நிலைக்கு ஏற்பவும், கிறித்தவ விழாக்காலங்களுக்கு ஏற்பவும் பாடல்கள் இசைக்கப்படுகின்றன.

6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் இடையன்குடியைச் சேர்ந்த மாணவர்களே இம்மணியை இசைக்கின்றனர். பெண் மாணவர்கள் இசைப்பதில்லை. முதலில் வருவோர் இரண்டு மாதங்கள் மரப்படிகளில் அமர்ந்து இசைப்பதைக் கவனித்தல் வேண்டும். பின்னர் நாவைப் பிடித்திசைக்காமல் மணியின் மேல் பகுதியில் கைகளில் தட்டி பயிற்சியளிக்கப்படுகிறது. இவ்வாறு ஒரு ஒழுங்கு முறையினைக் கால்டுவெல் காலத்திலிருந்து இன்று வரை இடையன்குடி மக்கள் பின்பற்றி வருகின்றனர். சிறார்களுக்கு இவர்கள் பயிற்சி கொடுத்து ஆலய மணியை இயக்கும் திருப்பணியையும் செய்வதற்குத் தலைமுறை தோறும் இவர்கள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகிறார்கள்.

**தமிழிசைக் கலைஞர்**

தமிழ்மொழியின் சிறப்பை உயர்தனிச் செம்மொழி என உரக்கச் சொல்ல ஆற்றல் அளித்தவர் கால்டுவெல்லே. அவ்வாற்றலே, பெயர்மாற்றிப் பறித்துக்கொண்ட தமிழிசையை மீட்டெடுக்க வந்த ஆபிரகாம் பண்டிதருக்கு வலுச்சேர்த்திருக்கிறது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கருணாமிர்த சாகரம் 1917-ஆம் ஆண்டு வெளிவந்திருக்கிறது. முதலில் சித்த மருத்துவத்திற்காகவும் பின்னர் தமிழிசைக்காகவும் தரவுகளைச் சேகரித்து, தமிழிசை ஆய்வு மாநாடுகளை நிகழ்த்திய ஆபிரகாமிற்கு 1856 இல் வெளிவந்த கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூல் கிடைக்கப் பெற்றிருக்கலாம் என்பது இசை ஆய்வாளர்களின் கருத்தாகும். இக்கருத்தை

"இந்திய இசை மரபிற்குத் தமிழரின் தமிழிசையே கடைக்காலாக இருந்தது என்னும் ஆய்வை நிகழ்த்துவதற்குக் கால்டுவெல்லின் மொழி ஆய்வை அடிகோலியது. இந்துஸ்தானி இசை மரபே இந்தியாவின் இசை மரபு என்ற கருத்து கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் என்ற நூல் வெளியாகும் வரை வலுப்பெற்றிருந்தது. '1856 இல் இந்நூல் வெளிவந்த பின் கால்டுவெல்லின் நூல் 1856 இல் இந்தியாவில் இந்தியவியல் ஆய்வுகளுக்கு ஒரு முடிவு கண்டது. 1917 இல் ஆப்ரஹாம் பண்டிதர் கருணாமிர்த சாகரம் என்ற தமிழிசையியல் நூலைத் தோற்றுவிக்க வழிகோலியது" என்று நிர்மல் செல்வமணி குறிப்பிடுகிறார். (ப. டேவிட் பிரபாகர், 2014:526-527)

**மொழிபெயர்ப்புப் பணி**

கால்டுவெல்லின் இறைப்பணிகளுள் 'சுட்டிச்சொல்' திறம்பட செயலாற்றியதாகும். இவரது கடினமான உழைப்பினாலும் தமிழ்ப் புலமையினாலும் வேதாகமத்தின் திருத்தியத் தமிழ்ப் பதிப்பு சிறப்புடன் காணப்படுகின்றது. வேதாகமம் மட்டுமன்றி ஆராதனை முறைமை நூல் மற்றும் ஞானப்பாடல் தமிழ் நூல் திருத்தப் பணிகளிலும் இவரது ஆளுமை வெளிப்படுகின்றது.

**வேதாகமம் - திருத்தப் பணிகள்**

வேதாகம நூலின் திருத்தமான மொழிபெயர்ப்புக் குழுவின் பன்னிருவரில் கால்டுவெல்லும் ஒருவராக இருந்து திறம்படச் செயல்பட்டார். இக்குழுவினர் 1858-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி, 1869-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 11 ஆண்டுகள் கடினமாக உழைத்து, தம் பணியைச் செவ்வனே நிறைவு செய்தனர். 1861-ஆம் ஆண்டு ஏப்ரல் 29-ஆம் நாள் மொழிபெயர்ப்பாளர்களின் முதல் கூடுகையில் கால்டுவெல், சார்ஜென்ட், ட்ரேசி, பவர் ஆகிய நால்வர் மட்டுமே கலந்து கொண்டு 6 வாரங்கள் நடைபெற்றது. இதில் 4 நற்செய்தி நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. 1863-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் நாள் முதல் ஆகஸ்டு 12 ஆம் நாள் வரை இரண்டாவது முறையாக கொடைக்கானலில் நடைபெற்ற கூடுகையில் கால்டுவெல், சார்ஜென்ட், பவர், கோலாப் ஆகியோர் பங்கு பெற்று, புதிய ஏற்பாட்டுச் சொற்களையும் வாக்கிய அமைப்பையும் மூலத்தில் உள்ளபடி மொழியாக்கம் செய்ய வேண்டும் என தீர்மானித்தனர். அதன் அடிப்படையில் புதிய ஏற்பாடு முழுவதையும் திருத்தும் பணி நிறைவுற்றது. மூன்றாவது கூட்டம் 1866 ஆகஸ்டு 2 ஆம் நாள் நடைபெற்றது. பழைய ஏற்பாட்டு நூல்கள் அனைத்திற்கும் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது.

மொழிபெயர்ப்பின் இறுதிக் கூட்டமான நான்காவது கூடுகை 1868 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24 ஆம் நாள் தொடங்கி நடந்தது. இக்கூடுகையில் மூலமொழியின் பொருளை மாற்றாமல் தமிழ் நடையை மேம்படுத்தினர். இக்கூட்டத்தில் வேதாகமம் முழுமையும் திருத்தியமைக்கப்பெற்று அதற்கு முழுமையான வடிவம் கொடுக்கப் பெற்றது. சென்னைக்கிளையின் சார்பாக கால்டுவெல் நியமிக்கப்பட்டார். கால்டுவெல் தலைமையில் நடைபெற்ற வேதாகமத்தின் புதிய மொழிபெயர்ப்பு முழுமனதுடன் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்பதிப்பு 'பவர் பதிப்பு' என அழைக்கப்பட்டது. முழு வேதாகமமும் 1871-இல் மக்களுக்குக் கிடைத்தது. இம்மொழிபெயர்ப்பில் பவர், கால்டுவெல், சார்ஜென்ட் ஆகிய மூவரின் முயற்சிகளும் பணிகளும் சிறப்புடையதாக அமைந்தன. எபிரேய மொழியில் புலமை பெற்ற குழு உறுப்பினர் அனைவரின் பணியிலும் கால்டுவெல்லின் பணியே போற்றுதலுக்குரியதாகக் காணப்பட்டது. சுருங்ககூறின் கால்டுவெல்லின்

தலைமைத்துவத்தால் திருமறை முழுவதும் மொழிபெயர்க்கப்பட்டு 5000 பிரிதிகள் விநியோகம் செய்யப்பட்டன. இவ்வாறு மொழிபெயர்ப்பு என்ற பரிமாணத்திலும் கால்டுவெல் சிறந்து விளங்கினார்.

**சமுதாயப் பணி**

கால்டுவெல் எண்ணிலடங்காச் சமுதாயப் பணிகளை மேற்கொண்டார். பார்த்தால் தீட்டு, நிழல் பட்டாலும் தீட்டு என்ற நிலை மாறி அனைவரும் சமம் என்ற சமத்துவத்தைக் கொண்டுவந்தார். இவரது முயற்சியினால் கிராம மக்கள் கல்வியிலும், சமூகத்திலும் முன்னேறினர். மருத்துவப்பணி, பெண்கல்வி ஆகியனவற்றை பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் புகுத்தியவர். சுருங்கக்கூறின் ஆண்டான் அடிமை என்ற பாகுபாட்டை வேர் அறுத்தவர். இடையன்குடியில் பல்வேறு பணிகளைக் கால்டுவெல் செய்து ஒரு முன்மாதிரியான கிராமமாக உயர்த்தியதைக் கேள்விப்பட்ட று.று ஹன்டர் என்பவர் இலண்டன் டைம்ஸ் என்ற ஆங்கில இதழில்

> "1838 பழங்குடி மக்களை திருநெல்வேலி பகுதியில் கிருத்துவ மதத்திற்கு மாற்றியதை பிராமாணர்கள் 'அரிசி கிருத்தவர்கள்' (சுi உந ஊhசளைவயைளெ) என்று இழித்துரைத்தனர். அறியாமை, வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்ட புதிய கற்றறிந்த இந்து சாதியினரை கால்டுவெல் உருவாக்கினார். சென்னை உயர்கல்வி இயக்குநரகம் கால்டுவெல் அவர்களின் பகுதியில் வாழ்ந்த பழங்குடி கிருத்துவர்கள் கல்வியில் முன்னேற்றத்தையும் தென்னிந்தியாவில் அரசுப் பணிகளில் முதன்மையான பதவிகளையும் பெற்றிருந்தனர் என எழுதினார்". (வெ. சிவப்பிரகாசம், 2015:39)

**அகழ்வாராய்ச்சி**

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கால்டுவெல் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டார். தென்கடற்கரையில் தூர்ந்து கிடந்த சிற்றூர்களையும் ஆங்காங்கு கிடைத்த பழங்காசுகளையும் ஆராய்ந்து தமிழ்நாட்டின் சிறப்பினையும் பழம்பெருமையினையும் எடுத்தியம்பினார். அகழ்வாய்வுகளின் மூலமாக பல பண்டைய கட்டிடங்களின் அடிப்படைகளையும் நாணயங்கள், முதுமக்கள் தாழிகள் போன்றவற்றையும் கண்டுபிடித்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார். மேலும், பாண்டிய நாட்டின் மீன் சின்னம் பொறித்த தங்கக் காசுகளையும் கண்டறிந்தார். இவ்வாறு அகழ்வாரய்ச்சியிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். சான்றாக,

> "இலங்கையிலுள்ள மகாவம்ச நூலை ஆதாரமாகக் கொண்டு தமிழகத்திற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பை விவரித்துள்ளதுடன், விசயன் என்னும் சிங்கள மன்னன் பாண்டிய அரசனின் மகளைத் திருமணம் புரிந்து, பாண்டிய அரசனுக்கு ஆண்டுக்கு இருநூறாயிரம் ரூபாய் மதிப்புள்ள முத்தும் சங்கும் கொடுத்தான் என்ற செய்தியினையும் சுட்டிக்காட்டியுள்ளார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பழந்தமிழர்கள் கடல் கடந்து பிற நாடுகளில் குடியேறி செய்த வாணிபத்தைப் பற்றிக் கால்டுவெல் விவரித்துள்ளார். பழைய ஈபுரு மொழியில் வழங்கும் துகி என்னும் சொல், தமிழ் மொழியிலுள்ள தோகை என்னும் சொல்லின் சிதைவென்றும், மேலைநாட்டுச் செம்மொழிகளுள் சிறந்த கிரீக்கு மொழியில் அருசா என்று வழங்கும் சொல், தமிழ் மொழியிலுள்ள அரிசி என்னும் சொல்லின் சிதைவென்றும் கால்டுவெல் நிரூபித்துள்ளார்" (யோ. ஞான சந்திர ஜான்சன், 2019:179)

**முதுமக்கள் தாழிகள்**

கால்டுவெல் பல முதுமக்கள் தாழிகளைக் கண்டு பிடித்தார். அனைத்தும் மிகப்பெரிய அளவில் மண்ணால் செய்யப்பட்டவையாகும். அவற்றுள் மனித எலும்புகள் சிதைந்து போன நிலையில் காணப்பட்டன. கால்டுவெல் 11 அடி சுற்றெல்லையை உடைய பெரிய தாழிகளையும் 4 அல்லது 5 அடி சுற்றெல்லையை உடைய சிறிய தாழிகளையும் கண்டு பிடித்தார். ஒவ்வொரு தாழியும் வெவ்வேறு அமைப்புடன் காணப்பட்டன.

### கொற்கையின் புதைபொருள் ஆய்வு

கால்டுவெல் கொற்கையிலும் அதைச் சுற்றியிருந்த ஊர்களிலும் புதைபொருள் ஆய்வினை மேற்கொண்டார். முற்காலத்திலுள்ள கொற்கைத் துறைமுகம் பிற்காலத்தில் அதிலிருந்து கடல் விலகிச் சென்ற காரணத்தால் அத்துறைமுகம் பழம்பெருமையை இழந்ததென்று எண்ணினார். அக்கசாலை என்னும் பகுதி நாணயம் செய்யும் இடமாக அக்காலத்தில் திகழ்ந்தது என்பதனைக் கண்டுபிடித்தார்.

### முடிவுரை

மேலைநாட்டுத் திருத்தொண்டர்கள் இறைப்பணி மட்டும் செய்யவில்லை. சமூகப்பணி, கல்விப்பணி ஆகியனவற்றையும் தங்களது இறைபணியுடன் இணைத்துக் கொண்டனர். மேலும், அன்றைய தேவை என்ன? அடிப்படைத் தேவை என்ன? என்பதை அறிந்து அதற்கேற்றபடி தங்களது சேவையினைத் தொடர்ந்தனர். கால்டுவெல் மட்டுமன்றி பல பிரிவினரும் இவரைப் போல் தொண்டாற்றினார். ஆனால், கால்டுவெல் இடையன்குடியில் இரண்டறக்கலந்து அம்மக்களுள் ஒருவராகவே மாறிவிட்டார் என்பது தான் உண்மை. கிறித்தவச் சமயத்தைச் சார்ந்தவர் என்றாலும் கிறித்தவரல்லாத சமயத்தினரும் கால்டுவெல்லின் நிழலை ஒட்டியே வாழ்ந்தனர் என்பது அவரது வாழ்வின் பற்பல நிகழ்வுகள் காட்டும் ஆதாரங்களாகும். ஒரு கலை ரசிகர், ஓவியர், கவிஞர், ஆராய்ச்சியாளர், மொழிநூல் வித்தகர், சிறந்த இறையியல் வல்லுநர், ஒப்பற்ற நிர்வாகி, அருள்தொண்டர், எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் வினையாற்றலினர். மனித நேயமிக்கப் பண்பாளர், பன்மொழி வித்தகர், ஆற்றல் மிக்க நற்செய்தியாளர், நல்ல பேராயர் என்பதான பன்முகத் திறமைகளும் கால்டுவெல் என்ற ஒரு தனி மனிதரிடத்தில் எந்த முரண்பாடுகளுமின்றிச் சங்கமித்துக் கிடப்பது நம்பை மிகவும் ஆச்சரியப்படச் செய்கின்றது. கால்டுவெல் இன்னும் எங்களோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறார் என இடையன்குடி மக்கள் கூறுகின்றனர். இதுவே அவருக்குக் கிடைக்கப் பெற்ற நற் சான்றிதழாகும். கால்டுவெல் இடையன்குடியில் புதைக்கப்படவில்லை; விதைக்கப்பட்டு இருக்கிறார் என்பதே இன்றைய வாக்காக விளங்கிறது என்பதில் ஐயமில்லை.

### துணைநின்றவை (References)


- சிவப்பிரகாசம் வெ, (2015). தமிழ்த்திருமகன் கால்டுவெல் தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்புமுனை, சென்னை : கலாம் பதிப்பகம்.
- ஞான சந்திர ஜாண்சன் யோ, (2019). அருட்பணியாளர் இராபர்ட் கால்டுவெல், சென்னை : மோரியா ஊழியங்கள்.
- டேவிட் பிராபகர் ப. (பதி.), (2014). கால்டுவெல் பார்வையும் பங்களிப்பும், சென்னை: தமிழ்த்துறை, சென்னை கிறித்தவக் கல்லூரி.
- நிவேதிதா லூயிஸ், (2022). அறியப்படாத கிறிஸ்தவம் தமிழ்நாட்டில் ஒரு வரலாற்றுத் தேடல் (பகுதி-1), சென்னை : கிழக்கு பதிப்பகம்.

# கானகன் நாவலில் காலனியம் Colonism in 'Kaanagan' novel

ப.நவசக்திவேல் | P.Navasakthivel

Assistant Professor, Dept. of Tamil, Bishop Heber College, Tiruchirappalli – 620 017.

E-mail: navasakthivel84@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய உலகமயச் சூழலில் மானுட மதிப்புகள் மலிந்துகொண்டே வருகின்றன. இயற்கை மற்றும் பழங்குடிகள் மீதான வன்முறை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. இதற்கு அனைத்தையும் தன்வயப்படுத்திக் கொள்ளும் முதலாளித்துவ மனநிலையும் காலனியத் தன்மையும் காரணங்களாக அமைகின்றன. இக்கருதுகோளடிப்படையில் 'கானகன்' புதினமானது இக்கட்டுரையில் ஆயவிற்கு உட்படுத்தப் பெறுகிறது.

**Abstract**

In today's globalized circumstances, human values are also being destroyed, Violence against nature and tribes continues due to the exploitative capitalist mentality and colonial nature. The 'Kaanagan' novel Based on this hypothesis, race is examined in this article.

**திறவுச்சொற்கள் (Keywords):** உலகமயம், காலனியம், மானுட மதிப்புகள், இயற்கை, பழங்குடி.

**Key words :** Globalize, Colonism, Human values, Nature, Tribes.

**முன்னுரை**

'கானகன்' புதினம் லஷ்மி சரவணகுமாரால் எழுதப்பட்டதாகும். இப்புதினமானது வேட்டை குறித்தும் பளியர் பழங்குடியினர் வாழ்வியல் குறித்தும் எடுத்துரைக்கின்றது. குறிப்பாகக் காலனியச் சூழலால் பளியர் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள தாக்கத்தினையும், 'வேட்டை முறை' இயற்கைச் சூழலில் ஏற்படுத்தும் பாதிப்புகளையும் இப்புனைவு வெளிப்படுத்தும் பாங்கினை இக்கட்டுரையில் காணலாம்.

**கதையமைப்பும் போக்கும்**

கதையானது ஆசிரியன் நோக்கு நிலையில் அமைந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையின் கேரளப் பகுதிகளையொட்டிய தவளை நாட்டில் நவமலை, நாகமலை, வெள்ளிமலை, அகமலை போன்ற மலைப்பகுதிகள் காணப்படுகின்றன. அகமலைப் பகுதியில் 'மொக்க நிலை' என்ற இடத்தில் நாற்பத்திரண்டு பளியர் குடும்பங்கள் வாழ்கின்றனர். கதையில் இப்பளியர் குடியின் மூத்த பளியனாக 'பூசணி' என்ற முதியவர் விளங்குகின்றார்.

அகமலைப் பகுதியில் மாட்டுப்பண்ணை வைத்திருக்கும் அன்சாரியின் தொழுவத்தில் புலி இறங்குகின்றது. பண்ணை மாடுகள் புலியால் கொல்லப்படுகின்றன. இந்நிலை நீடித்தால் பண்ணை அழிந்துவிடும் என்பதால் 'கருமாண்டி'யாகிய தங்கப்பனின் உதவியை அன்சாரி நாடுகின்றான். தங்கப்பனின் வேட்டை வெறியினால் பெண்புலி கொல்லப்படுகின்றது. பொதுவாகத் தங்களின் தேவைக்காகவன்றிப் பழங்குடிகள் விலங்குகளை வேட்டையாடுவதில்லை. தங்கப்பன் கருமாண்டியாக இருந்தபோதும் அவ்வபோது காட்டை விட்டு நகர்ப்பகுதிக்குச் சென்று வந்த பழக்கம் அவனை பழங்குடியிடமிருந்து அந்நியத் தன்மை மிக்கவனாக மாற்றியிருந்தது. பெண்புலியின் மரணமானது 'மொக்கநிலை' பளியர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஏனெனில் காட்டையும் விலங்குகளையும், 'பளிச்சி' என்ற தெய்வம் காப்பதாக அவர்கள் கருதினர். இந்நிலையில் கொல்லப்பட்ட புலியினால் பளிச்சியின் சாபம் தங்களுக்கு வந்துவிடும் என அவர்கள் அச்சத்தோடு இருந்தனர். இதற்காக மூத்த

பளியர் பூசணி ஆலோசனையின் பேரில் குழுவாகக் கூடித் தாங்கள் வாழும் மொக்க நிலையை விட்டு வெளியேறிவிடலாமா என்று கருதினர்.

ஏனெனில் கொல்லப்பட்ட பெண்புலியின் குட்டிகள் ஆட்கொல்லிகளாக மாற வாய்ப்புள்ளதாக அவர்கள் கருதினர். இன்னும் சொல்லப்போனால் புலியின் மரணத்தைக் காட்டின் மரணமாகக் கருதினார்கள். பொதுவாகப் புலிகள் பளியர் பழங்குடிகளைக் கொல்வதில்லை ஏனெனில், அவர்கள் வணங்கும் 'பளிச்சியின்' ஆன்மா புலியில் இருப்பதாக அவர்களுக்கு நம்பிக்கை. பளிச்சியின் கோயில் கம்பத்திற்கு அருகே உள்ளது. கண்ணகியின் தத்துப்பிள்ளையாக பளிச்சியம்மன் கருதப்படுகின்றாள்.

தங்கப்பனின் மனைவியர் மாரி, செல்லாயி, சகாயராணி என மூவராவர். சடையன் என்ற பளியன் காட்டிற்கு வரும் ஆபத்துக்களை அறிந்தவனாக, அதனைத் தடுக்கும் காவலனாக விளங்குகின்றான். சடையனுக்கும் செல்லாயிக்கும் பிறந்த மகன் வாசி. வாசி என்ற கதாப்பாத்திரம் தான் 'கானகன்'. செல்லாயியும், தங்கப்பனும் வாசி சிறந்த கருமாண்டியாக விளங்க வேண்டுமென விரும்புகின்றனர். ஆனால், காட்டையோ விலங்குகளையோ அழிப்பதில் விருப்பமில்லாதவனாக வாசி காணப்பட்டான்.

தங்கப்பனுக்கும் செல்லாயிக்கும் பெண் குழந்தை பிறக்கின்றது. இந்நிலையில் அன்சாரியின் நண்பரான புதுக்கோட்டை ஜமீன் தனது குடும்பத்துடன் வேட்டைக்கு வருகின்றார். தங்கப்பன் கூறியதற்கு ஏற்ப வாசி அவர்கள் வேட்டையாடுவதற்கு உதவி புரிகின்றான். இருந்தபோதும் அவனுக்கு வேட்டையில் உடன்பாடில்லை.

இந்நிலையில் அகமலைப் பகுதியில் பளியர் பழங்குடிகளைத் தவிர்த்து அந்நியர்களின் படையெடுப்பு அதிகமாக காணபடுகிறது. 'முதலாளி' என்று அழைக்கப்படும் ஒருவரால் காடுகள் அழிக்கப்பட்டுக் கஞ்சா பயிரிடப் படுகிறது. கோடைக் காலங்களில் யானைகள் நீரைத்தேடி கஞ்சாத்தோட்டம் அருகே உள்ள சுனைநீர்ப் பகுதிகளில் நடமாடின. இதனால் கஞ்சாத்தோட்டம் பாதிக்கப்பட்டது. யானைகளை விரட்ட முதலாளி, தங்கப்பனின் துணையை நாடினார். இந்நிலையில் பளியர் இனமக்கள் மாறிவரும் வாழ்வியலுக்கு கஞ்சாத் தோட்டத்திற்கு கூலிகளாக வேலைக்குச் சென்றனர்.

தங்கப்பன் முதலாளியினது கஞ்சாத் தோட்டத்திற்கு வரும் யானைகளை காட்டுக்குள் விரட்டுவது என்பது அவனது முதல் உத்தியாகயிருந்தது. பிறகு வேட்டை வெறியின் காரணமாக யானைகளைக் கொல்ல நினைத்தான். இந்நிலையில் முதலாளியின் கஞ்சாத் தோட்ட விரிவாக்கத்திற்குப் பளியர் குடிகள் தடையாக இருப்பதால் யானைகளைப் பளியர் குடிகளுக்குள் விரட்டி அம்மக்களை அப்புறப்படுத்தி நிலங்களை அபகரிக்கும் முதலாளியின் தந்திரம் தெரியாதவனாய் தங்கப்பன் யானை வேட்டையை நிகழ்த்தியிருந்தான். வாசியின் தந்திரத்தால் பளியர் குடியும், யானைகளும் தங்கப்பனிடமிருந்து காப்பாற்றப்பட்டது.

இந்நிலையில் தங்கப்பன் யானை வேட்டை, மரம் வெட்டுதல் போன்ற பல்வேறு வழக்குகளில் சிக்கி வனத்துறையால் சிறையில் அடைக்கப்பட்டான். பிறகு முதலாளி உதவியினால் விடுதலை பெற்றான். இந்நிலையில் தொண்டு நிறுவனங்கள் பளியர் பழங்குடிகளுக்கு உதவுவதாக ஏமாற்றி, காட்டிலுள்ள மூலிகைகளைக் கொள்ளையடிக்கத் திட்டமிடுகின்றனர். அகமலை 'மொக்க நிலையில்' மீண்டும் புலிகள் நடமாட்டம் காணப்படுகின்றது. இம்முறை புலிகளை வேட்டையாட தங்கப்பன் வாசியையும் அழைத்துச் சென்றான். வாசியின் சூழ்ச்சியினால் தங்கப்பன் அவன் கொன்ற பெண் புலியின் குட்டிகளால் வேட்டையாடப்பட்டான்.

**கதைமாந்தர்கள்**

1) தங்கப்பன் 2) வாசி, 3) சடையன் 4) மாரி 5) செல்லாயி 6) சகாயராணி 7) அன்சாரி 8) பூரணி 9) சேட்டன் 10) புதுக்கோட்டை ஜமீன் 11) ஜமீன் மனைவி 12) ஜமீன் மகள்கள் 13) ராமர் 14) கட்டையன் 15) குயிலி 16) காட்டு ரேஞ்சர் 17) கம்யுனிஸ்ட் தோழர்கள் 18) முதலாளி 19) தொண்டு நிறுவனத்தினர் 20) தமீம் 21) இஸ்மாயில்.

**கானகனும் வேட்டையும்**

'கானகன்' எனும் புதினமானது வேட்டை எனும் பொருளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். இப்புதினத்தில் வேட்டை என்பது குறியீட்டுப் பொருளாக அமைந்துள்ளது. அதாவது, காட்டை வேட்டையாடுதல்(பொருளாதார அடிப்படையில்), விலங்குகளை வேட்டையாடுதல் (நுகர்வு அடிப்படையில்), உடல்களை வேட்டையாடுதல் (பாலியல் அடிப்படையில்) என அமைகின்றது. இம்மூன்றின் வரிசை முறையே, முதலாளி, ஜமீன், தங்கப்பன் ஆகியோர் தங்களது வேட்டைகளை நிகழத்துகின்றனர். மேலும், தங்கப்பனின் பாலியல் வேட்டை அவனது செயல்கள் மற்றும் உளவியல் அடிப்படையில் காடு என்பது பெண்ணுடலாகவும் மிருகங்கள் புலன்களாகவும் குறியிட்டுத் தன்மையில் நுட்பமாக அமைந்திருப்பதை உணர்த்துகின்றது.

**கானகனும் காலனியமும்**

கானகன் கதையாடல் தொடக்கத்தில் அன்சாரி என்ற பண்ணை முதலாளியின் மாடுகள் பெண் புலியால் கொல்லப்படுகின்றன. தன் தொழிலுக்கு இடையூராக உள்ள புலியைத் 'தங்கப்பன்' என்ற 'கருமாண்டியை' (வேட்டையாள்) வைத்துக் கொல்கின்றான். இதுவொரு காலனியத் தன்மையாகும். ஏனெனில், காலனியம் என்பது தொடர்பாக,

> "ஒரு நாடு, இன்னொரு நாட்டை அதனுடைய சமூக அரசியல், பொருளாதாரத்தால் பண்பாடுகளைத் தனக்கு கீழ் - தன்னுடைய அலட்சியதிகாரத்தின் கீழ் கொண்டு வந்து ஆதிக்கம் செலுத்துகின்ற போது அதனை காலனித்திய நிலை" (தி.சு.நடராசன், 2017:4)

என்பர். இதனடிப்படையில் பளியர் வாழும் 'மொக்கநிலை' என்ற பகுதியை தனது கட்டுப்பாட்டின் கீழ் அன்சாரி கொண்டுவர நினைப்பதும் இதே தன்மையாகும். பழங்குடிகள் உணவுத் தேவைக்காகவன்றி வேட்டையாடுவதில்லை. குறிப்பாக இனவிருத்திக்காகப் பெண்விலங்குகளை வேட்டையாடுவதில்லை. இப்புதினத்தினை தங்கப்பன் என்ற கருமாண்டி பழங்குடித் தன்மையை மீறி அன்சாரியினால் பெண்புலியினை வேட்டை செய்வது காலனியத்தால் பழங்குடிகள் பண்பாட்டைச் சிதைக்கும் தன்மை கருதப்படுகின்றது.

மேலும், பளியர் பழங்குடிகளின் வாழிடமாகவுள்ள காட்டினை அன்சாரி தனது நண்பரான புதுக்கோட்டை ஜமீன் மூலம் வேட்டையாட அனுமதிப்பதும் கருவுற்று இருக்கும் விலங்குகளை வேட்டையாடுவதும் பண்ணை முதலாளி அன்சாரி காட்டினை தன் காலனியாக கொண்டுவந்த தன்மையினை வெளிப்படுத்துகின்றது.

இப்புதினத்தில் அன்சாரி மட்டுமல்ல 'முதலாளி' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படும் நபர் காட்டுக்குள் கஞ்சாத்தோட்டம் அமைக்கின்றார். அவர் கஞ்சாத்தோட்டதை விரிவு செய்ய, இடையூறாக இருப்பது பளியர் குடியிருப்புகளும் யானைகளும் தடையாக உள்ளன. அதனால், தங்கப்பனைக் கொண்டு யானை வேட்டையை நிகழ்த்துகின்றனர். இது காட்டையும் பழங்குடிகளையும் சுரண்டும் காலனிய முதலாளித்துவம் ஆகும்.

**பழங்குடிகளும் பளியர்களும்**

பொதுத்தளத்தில் அட்டவணைப் பழங்குடிகள் அனைவரையும் பழங்குடிகள் (Tribe) என அழைக்கின்றனர். மானுடவியல் ஆய்வாளர்கள் பயன்படுத்தும் இச்சொல்லானது காலனியச் சொல்லாகவே கருதப்படுகின்றது. மேலும் ஆதிக்குடி, ஆதிவாசி, மலைவாழ் மக்கள், காட்டுவாசி அல்லது வனவாசி, மலையக மக்கள், பூர்வகுடிகள், முதுகுடி, தொல்குடி என்ற பன்மியச் சொற்களால் இலக்கியவாதிகள் பழங்குடி மக்களை அழைக்கின்றனர். மகாத்மா காந்தி ஹரிஜன் எனவும் மார்க்சியர்கள் இனக்குழுக்கள் எனவும் எட்கர் தார்ஸ்டன் போன்ற மானிடவியலார் குலக்குடி எனவும் டாக்டர் அம்பேத்கார் அட்டவணைப் பழங்குடிகள் எனவும் பழங்குடி மக்களை அழைக்கின்றனர். மேலும், பழங்குடிகளின் தலைவராக இருந்த ஜெய்பால் சிங் 'ஆதிவாசி' என்றே பழங்குடிகளை அழைக்க வேண்டும் என்கிறார்.

ஐக்கிய நாடுகளின் அமைப்பு 1993-ஆம் ஆண்டை 'உலகப் பூர்வீகக் குடிகள் ஆண்டு' என அறிவித்தது. பூர்வக்குடி (Indigenous people) எனும் சொல் வழக்கைப் பரப்பியுள்ளது. பழங்குடிகள் பற்றிய ஐரோப்பிய ஆய்வாளர்கள் பெய்லி மற்றும் ஆந்த்ரே பெத்தெய்ல் என்பவர்களிடையே இரு விதமான ஆய்வுப் போக்கு காணப்படுகின்றது. பெய்லி இந்தியாவில் பழங்குடிகள் இடரீதியாகவும், காலரீதியாகவும், சிறுகுடிகளாகத் தங்களை உருவாக்கி கொண்டுள்ளனர் என கூறுகின்றார். ஆந்த்ரே பெயத்யெல் வரலாற்று அணுகுமுறை தொடங்கிப் படிமலர்ச்சி அணுகுமுறை வரை தனது பார்வையைச் செலுத்தி 'பழங்குடிகள் தன்மை என்பது' இந்து நாகரிகத்திலிருந்து வெகுதூரம் விலகியுள்ளதை எடுத்துரைக்கின்றார். இக்கருத்தானது பழங்குடி மக்களை மதத்திற்குள் திணிக்கும் முயற்சிக்கு எதிரான முக்கியக் கருத்தாக கருதப்படுகின்றது.

> பளியர்கள் தொல்குடி தமிழர்களாவர் "பளியர்கள்' பழையோர் (ஆதி மக்கள்) என்ற பெயர் பெற்றிருந்தனர். காலவோட்டத்தில் பழையோர் - பழியர் - பளியர் என்றாகிவிட்டது. பழையர் பற்றிய குறிப்புகள் அகநானூற்றில் காணப்படுகின்றன. (பக்தவச்ல பாரதி, க 2017:86)

பளியர்கள் தொல்குடிகளாக இருந்தபோதிலும் கிராமிய, சாதியச் சமூகமாக வாழ்ந்தவர்களாக இருந்தார்கள். தங்களுக்கேற்பட்ட மிகப்பெரும் வரலாற்று நெருக்கடிகளைச் சமாளிக்க மலைப்பகுதிகளுக்குச் சென்று பழங்குடிகளாக மாறிவிட்டதாகப் பக்தவச்சல பாரதி குறிப்பிடுகின்றார். இதற்குச் சான்றாக சைவ, வைணவக் கடவுளர்களை இவர்கள் விடாமல் வழிபட்டு வருகின்றனர் என்ற கருத்தினை முன்மொழிகின்றார்.

> மேலும், "பழனிமலைக்குரிய பழனியன் 'பளியர்' என்று மருவிட்டது என்ற மற்றொரு கருத்தும் உள்ளது. இன்று இப்பளியர் இரு பிரிவுகளாக காணப்படுகின்றனர். 1) கீழ்மலைப் பளியர், 2) மேல்நிலைப் பளியர்." (பக்தவச்லபாரதி,2017:88)

இதில் மேல்நிலைப் பளியர் தாங்களை உயர்ந்தவர்களாக கருதும் போக்கு காணப்படுகின்றது.

**பளியர்தம் வழிபாட்டு முறைகள்**

கானகன் புதினத்தில் பளியர்கள் தாய்த்தெய்வ வழிபாடு, ஆவிகளை வழிபடும் (Animism) மக்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். பளியர்கள் பளிச்சியம்மனை வழிபடுபவர்களாகவும் ஆண்டிற்கு ஒருமுறை படையலிடும் வழக்கம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். 'பளிச்சி இறங்குதல்' என்ற விழா பளியர் குடியில் இருக்கும் ஆண் அல்லது பெண் மீது பளிச்சி தெய்வம் இறங்கிக் குறி சொல்லும் வழக்கம் காணப்படுகின்றது. இந்நிகழ்வினைப் பூசாரி மற்றும் வாசி என்ற கதாப்பாத்திரங்கள் குறிசொல்வது போல் புதினத்தில் படைக்கப்பட்டுள்ளது.

> "வாசி எழுந்து ஆடத்துவங்கினான் ஆணுமில்லாத பெண்ணுமில்லாத ஒரு ராட்சஷனாய் அவன் ஆட ஆட பொடவைச் சுற்றி வந்திருந்த பளியர்கள் அனைவருக்கும் ஆக பளிச்சி என்பது புரிந்தது." (2019:103)

> "திரும்பி வந்த கட்டையன் கையில் ஒரு சேவல் துடிக்க மெதுவாக பாறையில் ஏறியவன் கண்கள் சிவந்து எல்லோரையும் எரித்துவிடுவது போல் பார்த்துக்கொண்டிருந்த பளிச்சியின் கைகளில் கொடுத்தான். சேவல் பலிக்குத் தயாராகிவிட்ட அச்சத்தில் அலறியப்படியே துடிக்க பளிச்சி ஆவேசமாக அதன் தொண்டையைக் கடித்தாள். வாயெல்லாம் குருதி வழிந்தோட சேவல் துடித்தடங்கியது." (2019:103)

மணவாழ்க்கையும் மக்கட்பேறும்

பளியர் பழங்குடியில் அகமண முறை பின்பற்றப்படுகின்றது. கட்டற்ற பாலியல் என்பதும் காணப்படுகின்றது. மக்கட்பேறு பளியர் வாழ்வியலில் மிக முக்கியமானதாகும். பேறு காலங்களில் கருவுற்றிருக்கும் பெண் தன் பேறுகாலச் செயல்பாடுகளைச் சுயமாக யாருடைய உதவியுமின்றித் தானே செய்துகொள்ள வேண்டும் என்பது அவர்களின் மரபாக உள்ளது.

**தொழில்**

பளியர்கள் உணவுக்காக வேட்டையாடுதல் உண்டு. பெரும்பாலும் தேனெடுத்தல் என்பது அவர்களுடைய முக்கியத் தொழிலாக உள்ளது. சடையன் என்ற கதாப்பாத்திரமானது தன்னுடைய மகனான வாசி என்பவனுக்குக் காட்டுத்தேனை கொடுப்பது இதனை உறுதிப்படுத்துகின்றது. பளியர்கள் 'கத்தி என்ற கருவியைத் தேனெடுப்பதற்கு மட்டும் பயன்படுத்தினர்' என மானிடவியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**முடிவுரை**

இக்கட்டுரையானது 'கானகன்' புதினத்தில் இயற்கையும் பளியர் வாழ்வியலும் காலனிய முதலாளித்துவப் பொருளாதார வேட்டையால் சிதைக்கப்படுவதை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

**துணைநின்றவை (References)**


- இரத்தினக்குமார் ந., (தொ.ஆ), (2017), *பின்காலனியம் சமூகம் - இலக்கியம் - அரசியல்*, சென்னை : பாவை பிரிண்டர்ஸ்.
- பக்தவத்சல பாரதி (2017), *தமிழகப் பழங்குடிகள்*, திருச்சிராப்பள்ளி : அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்.
- லஷ்மி சரவணகுமார் (2019), *கானகன்*, சென்னை: எழுத்து பிரசுரம்.

# வேந்தர் எழுச்சியும் பூதநெறியும் Rise of Tamil Emperor's and Bhuthaneri (Elementalism)

முனைவர் லி. சிவகுமார் | Dr. L. Sivakumar

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli – 620 017.
E-mail: lingamparvathithayan@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பழந்தமிழகத்தில் இனக்குழுக்களின் அழிவிலிருந்து மூவேந்தர்கள் தோற்றம் பெற்றனர். மூவேந்தர்கள் ஒற்றை மன்னர்களாக இல்லாமல் கிளைக்குடிகளாக ஆட்சி செலுத்தினர். இதற்குக் காரணமாக அமைந்த பூதநெறிச் சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

**Abstract**

The Tamil emperor's (Chera-Chozha-Pandiya) originated from the destruction of ethnic groups in ancient times. The Ancient Tamil emperor's ruled as tributaries rather than as single monarchs. This article examines the Buddhist ideas that led to this.

**திறவுச்சொற்கள் (Keywords):**

வேந்தர் எழுச்சி, பூதநெறி, வைதீகம், வகுப்புப் பாகுபாடு, கிளைக்குடி, இரத்த உறவுக் கொலை, காட்சியம்.

Rise of Tamil Kings, Emporer's, Elementalism, Vaithiha, Class division, Sub clan, Homicide within the Clan, Philosophy.

**முன்னுரை**

பழந்தமிழகத்தின் அரசு எழுச்சியானது வேந்தர்களின் எழுச்சியாக அமைந்தது. வட இந்தியாவில் தோன்றிய அரசு ஒற்றைத் தன்மை வாய்ந்ததாகவும் வலிமையானதாகவும் இருந்தது. ஆனால் தமிழகத்தில் தோன்றிய அரசு சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்றாக இருந்ததோடு அவை இனக்குழுத்தன்மை வாய்ந்ததாகவும் விளங்கியது. வட இந்திய அரசு எழுச்சிக்குப் பின்புலமாக அமைந்த கருத்தியல் வடிவங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளன. ஆனால் தமிழக அரசுருவாக்கம் பற்றியும் அதற்குப் பின்புலமாக அமையும் கருத்தியல் வடிவங்கள் பற்றியும் ஆய்வுகள் விரிவாக மேற்கொள்ளப்படவில்லை. இக்கட்டுரை தமிழக வேந்தர் எழுச்சிக்குப் பின்னால் அமையும் கருத்தியல் வடிவங்கள் பற்றி ஆராய்கின்றது.

**இனக்குழுச் சமூகமும் வேந்தர்களின் எழுச்சியும்**

வேந்தர்கள் இனக்குழுச் சமூகத்தில் இருந்து எழுச்சிபெற்றனர். இனக்குழுச் சமூகம் எளிய வாழ்க்கையையும் மேல், கீழ் என்ற வகுப்புப் பாகுபாடு அற்ற சமத்துவ சமூகத்தையும் கொண்டிருந்தது. இவ்வாழ்க்கை அரசின் தோற்றத்தால் அழிவுற்றது. இவ்வழிவை எங்கெல்சின் புகழ்பெற்ற மேற்கோள் எடுத்துரைக்கின்றது. "அவர்கள் பண்டைக் கூட்டு வாழ்க்கையின் தொப்பூழ்க் கொடியுடன் பிணைக்கப் பட்டிருந்தார்கள். இந்தப் பண்டைக் கூட்டு வாழ்க்கையின் பலத்தை உடைக்க வேண்டியதாக இருந்தது. அது உடைக்கப்பட்டது. ஆனால் அதை உடைத்த செல்வாக்குடைய சக்திகள் பண்டைக் காலக் குலச் சமுதாயத்தின் எளிமையான தார்மீக மேன்மையிலிருந்து இழிநிலையாகவும் வீழ்ச்சியாகவும் நமக்குத் தொடக்கத்திலிருந்தே தோன்றுகின்றன. கீழ்த்தரமான பேராசை, விலங்குத்தனமான காமவெறி,

பொருளாசை, பொதுச் சொத்துகளைச் சுயநலத்துக்காகக் கொள்ளை யடித்தல் ஆகிய இழிந்த நலன்களே புதிய நாகரிக சமுதாயத்தை வர்க்க சமுதாயத்தை வரவேற்கின்றன. திருட்டு, கற்பழித்தல், ஏமாற்றுதல், நம்பிக்கைத் துரோகம் ஆகிய மிகவும் மோசமான வழிவகைகள் வர்க்கங்கள் இல்லாத பழைய குல சமுதாயத்தைக் குழிபறித்துக் குப்புறத் தள்ளி விடுகின்றன." (2008:83) இம்மேற்கோள் சுட்டுவதைப் போன்று வகுப்புப் (வர்க்கப்) பாகுபாடற்ற சமூகத்தில் இருந்து வகுப்புப் பாகுபாடுடைய சமூகம் அரசின் தோற்றத்தோடு வெளிப்பட்டது. பேராசையின் காரணமாக நடைபெற்ற எண்ணற்ற போர்கள் இனக்குழுக்களை அழித்தன. தமிழகத்தில் இருந்த எண்ணற்ற இனக்குழுக்களின் அழிவில் இருந்து சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்று அரசுகள் ஆற்றங்கரைகளில் எழுச்சிபெற்றன.

சேரர் குடி பெரியாற்றங்கரையிலும் சோழர் குடி காவிரி ஆற்றங்கரையிலும் பாண்டியர் குடி தண்பொருநை, வைகை ஆற்றங்கரையிலும் எழுச்சிபெற்றன. இவ்வாற்றங்கரையில் நடைபெற்ற நெல் வேளாண்மையால் இக்குடிகள் மிகை உற்பத்தி நிலையை அடைந்தன. மிகை உற்பத்தி அயல்நாட்டு வணிகத்திற்குக் காரணமாக அமைந்ததோடு அரசு தோன்றவும் வழிவகுத்தது. தமிழக வேந்தர்கள் ஒற்றை மன்னர்களாக இல்லாமல் கிளைக் குடிகளாகப் பிரிந்து இருந்தனர். 'சேரர்கள் சில கிளைக்குடிகளாகவும் சோழர்கள் ஒன்பது கிளைக்குடிகளாகவும் பாண்டியர்கள் ஐந்து கிளைக்குடிகளாகவும் பிரிந்து ஆட்சி செலுத்தினர்' (ர. பூங்குன்றன், 2016:99). இவ்வாறு கிளைக்குடிகளாக வேந்தர்கள் பிரிந்து ஆட்சி செலுத்தியதற்குப் பூதநெறியே காரணமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

**பூதநெறியும் வைதீகமும்**

பூதநெறி இரத்த உறவுக் கொலைகளைத் தடைசெய்கின்றது. இதனை மகாபாரதத்தில் வரும் சாருவாகன் கதை காட்டுகின்றது. இக்கதையைச் சாந்தி பர்வத்தின் முதல் பகுதியான ராஜதர்மானுசாசன பர்வத்தின் 39ஆம் பகுதி விளக்குகின்றது.

மகாபாரதப் போரின் முடிவில் பாண்டவர்கள் வெற்றிக் களிப்புடன் திரும்புகின்றனர். அவர்களை வாழ்த்துவதற்காக ஆயிரக்கணக்கான பிராமணர்கள் குழுமியிருந்தனர். பிராமணர்களின் வாழ்த்தொலி பரவியது. பின்னர் பிராமணர்கள் அமைதியாக இருந்தனர். அவர்களுள் பிராமண வேடம் தரித்த சாருவாகன் வெளிப்பட்டு அவன் "இந்தப் பிராமணர்கள் அனைவரும் என்னைப் பேச்சாளனாக நியமித்தனர். நீ! பொல்லாத அரசன். நீ உறவினர்களைக் கொன்றவன் ஆனாய். இதன்மூலம் நீ அடைந்த பயன் என்ன? ஓ! குந்தியின் மகனே! உன் குலத்தை இவ்வாறு அழித்துவிட்டு என்ன அடையப் போகிறாய்? பெரியோரையும் ஆசிரியரையும் கொன்ற நீ! உன் உயிரை விடுவதே முறையாகும்" (பிரதாப் சந்திர ராய் 1891:86) என்று அவன் பேசினான். அவன் பேசியதைக் கேட்ட பிராமணர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாகினர். தருமன் மனம் வருந்தினான்; தன் உயிரை விடத் துணிந்தான். மற்ற பிராமணர்கள் தெளிவடைந்து இவன் தங்கள் பிரதிநிதி அல்லன் என்றும் இது தங்கள் கருத்து அல்ல என்றும் சார்வாகன் ஒரு ராட்சசன்; அவன் துரியோதனனின் நண்பன் என்றும் குறிப்பிட்டு தர்மனைத் தேற்றினர். இறுதியில் சாருவாகனைத் தீயிலிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கினர். இக்கதையில் வரும் சாருவாகன் சமற்கிருத இலக்கியங்களில் குறிப்பிடப்படும் சாருவாக நெறியைச் சேர்ந்தவன் என்பது புலப்படுகின்றது. இச்சாருவாக நெறி தமிழகத்தில் புகழ்பெற்று விளங்கிய பூதநெறியோடு தொடர்புடைய நெறியாக விளங்குகின்றது.

சாருவாகன் வெளிப்படுத்தும் மேற்கண்ட செய்திகள் இனக்குழுச் சமூகத்தோடு தொடர்புடையதாக அமைகின்றது. இனக்குழுச் சமூகம் இரத்த உறவுடையவர்களைக் கொல்லக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றது. இதனை எடுத்துக்காட்டும் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, "பழங்குடி இன மக்களின் வரலாறு முழுவதிலும் குல உறவு மிகவும் புனிதமான ஒன்று. பழங்கால நார்மன் மனிதர்களைப் பற்றி எழுதும்போது கிரான்பெச என்பவர் இரத்த உறவு உள்ளவர்களைக் கொல்வது எவ்வளவு பயங்கரமானது என்பதைக் கூறுகிறார். குலங்களுக்குள்ளாக நாம் நுழையும்போது வாழ்க்கையின் புனிதம் உயர்வாகக் கருதப்படுகிறது. உறவினர்களைக் கொல்வது துரோகம், குருட்டுத்தனம், தற்கொலை என்று கூறப்படுகிறது. ஊசி கொண்டு நரம்பைக் குத்தும்போது நிகழும் பிரதிச்செயல் போல அதற்குப் பதில் கிடைக்கிறது" (2014:41) என்று குறிப்பிடுகின்றார். இரத்த

உறவுடையவர்களைக் கொல்லக் கூடாது என்ற இனக்குழுச் சமூகச் சிந்தனையைப் பூதநெறி தனக்குரியதாக மாற்றியிருக்கின்றது. பூதநெறியைப் பின்பற்றிய பழந்தமிழ்ச் சமூகத்தில் இச்சிந்தனை பற்றிய பதிவுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

மகாபாரதம் காட்டும் சாருவாகன் கதையில் சாருவாகன் தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றான். இது இனக்குழுச் சமூகத்தின் சிந்தனைகளைத் தீயிட்டுக் கொளுத்துவதைக் காட்டுகின்றது. இதன்வழி இரத்த உறவுக் கொலைகளை வைதீகம் காட்சியமாக (தத்துவமாக) வளர்த்தெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இக்காட்சியத்தைப் பகவத்கீதை புலப்படுத்துகின்றது. இதனை விளக்கும் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா "குருசேத்திரப் போர் தொடங்குவதற்கு முன்னால் அர்ச்சுனன் கலக்கம் அடைந்திருந்தான். தனது உறவினர்களையும் மூத்தோர்களையும் கொல்ல வேண்டும் என்ற பிரச்சினை அவன் முன்னால் இருந்தது. அவன் போரிட மறுத்தான். எனவே இத்தகைய கொலைகளை நியாயப்படுத்த கிருஷ்ணருக்கு அவனது ஆன்மாவை ஒரு உயர்ந்த கட்டத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டியிருந்தது. அவ்வாறு செய்வதற்கு முன்னால் அவர் லௌகீகமான விஷயங்களைப் பேசினார் 'இந்தப் போரில் நீ இறந்தால் உனக்கு சொர்க்கம் கிட்டும். நீ வெற்றிபெற்றால் இந்த உலகத்தையே ஆண்டு அனுபவிக்கலாம்' (2014:41-42) என்று விளக்குகின்றார்.

இரத்த உறவுக் கொலைகளைக் காட்சியமாக (தத்துவமாக) வளர்த்தெடுத்த வைதீகம் அரசைக் கைப்பற்றவும் அரியணை ஏறவும் மகன் தந்தையைக் கொல்வதையும் வலியுறுத்துகின்றது. இதனை, "அரசனுக்கும் பட்டத்துக்குரிய இளவரசனுக்கும் உள்ள போட்டி செம்மைப்படுத்தப்பட்டு முழுமையாக அர்த்தசாஸ்திரத்தில் தனி அதிகாரத்தில் இடம்பெறுகின்றது. அரசன் இளவரசனைக் கண்காணிக்க வேண்டும் என்றும் இளவரசன் சந்தேகப்படும் தந்தையை எவ்வாறு ஏமாற்றுவது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது", என்ற டிடி.கோசம்பியின் கூற்று (தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, 2014:625) வெளிப்படுத்துகின்றது. இங்கு, வைதீக நூலான கௌடில்யரின் அர்த்தசாத்திரம் தந்தை மகன் கொலையை வலியுறுத்துவது சுட்டத்தக்கது.

**வேந்தர்களின் எழுச்சியும் பூதநெறியும்**

தமிழகத்தில் வேந்தர்கள் எழுச்சி பெற்ற காலத்தில் புலவர் மரபோடு பூதநெறியும் வளர்ச்சி பெற்றது. அதனால் இரத்த உறவுக் கொலைகள் தடைசெய்யப்பட்டன. இத்தடை கிளைக்குடிகளைத் தோற்றுவித்தது. மூவேந்தர்கள் பிற இனக்குழுக்களை அழித்தனர். எனினும் தம் கிளைக்குடிகளைப் பாதுகாத்தனர். இக்கிளைக் குடிகள் தங்களுக்குள் கூட்டமைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்பது புலப்படுகின்றது. இக்கூட்டமைப்பின் தன்மையை, "நாள்மகிழிருக்கையின் கூறுகள் கணசங்க அமைப்பின் கூறுகளை ஒத்துள்ளன. நாண்மகிழிருக்கை, வேத்தவை ஆகிய சொற்கள் ஒரு பொருளைக் குறிக்குமாயின் வேந்தர் மரபும் வஜ்ஜியர் கூட்டமைப்பு போன்றதொரு கூட்டமைப்பினைக் கொண்டது எனலாம்" என்று ர.பூங்குன்றன் (2016:134) குறிப்பிடுகின்றார். வஜ்ஜியர்களின் ஒற்றுமை மகதப் பேரரசாலும் வெல்ல முடியாததாக இருந்தது. அதைப் போன்று மோரியர்கள் படையெடுத்து வந்தபொழுது தமிழ்ப்படைகள் வெல்ல முடியாததாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

மூவேந்தர்களுள் சேரரும் பாண்டியரும் இரத்த உறவுக் கொலைகள் செய்தனரா என்பதை அறிய இலக்கியச் சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் சோழர்கள் பற்றிய பழந்தமிழ் இலக்கியப் பாடல்களில் இரத்த உறவுகளிடையே நடந்த போர் பற்றிய சான்றுகள் கிடைத்துள்ளன.[1] அவை முறையே 1. கரிகால் பெருவளத்தானின் கிளைக்குடிப் போர், 2. நெடுங்கிள்ளி - மாவளத்தான் போர், 3. நெடுங்கிள்ளி - நலங்கிள்ளி போர், 4. கோப்பெருஞ்சோழன் போர் என்று அமைகின்றன.

**கரிகால் பெருவளத்தானின் கிளைக்குடிப் போர்**

கரிகால் பெருவளத்தான் வாகைப் பறந்தலை என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஒன்பது மன்னர்களை வென்றான் என்று அகநானூறு (125:19) குறிப்பிடுகின்றது. இவ்வொன்பது மன்னர்களும் சோழர்களின் கிளைக்குடியினர் என்று ர. பூங்குன்றன் (2016:100) எடுத்துரைக்கின்றார். அதற்குச் சான்றாக, பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்தின் பதிகத்தில் வரும், "சோழர் குடிக்குரியோர் ஒன்பதின்மர் வீழ" என்ற 18, 19-ஆம் அடிகளைக் காட்டுகின்றார். சிலப்பதிகாரம், ஆர்புனை தெரியல் ஒன்பது

மன்னரை (சிலப். 28:116) என்றும், ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர் (சிலப். 27:119) என்றும், சோழர் கிளைக்குடிகள் ஒன்பது பேரைக் குறிப்பது சுட்டத்தக்கது. கரிகால் பெருவளத்தான் (அகம். 125:19), கிள்ளிவளவன் (சிலப். 27:118-123) ஆகிய வேந்தர்களின் தலைமையைக் கிளைக்குடிகள் ஏற்கவில்லை. அதனால் போரின்மூலம் இம்மன்னர்கள் தம் தலைமையை நிறுவினர். கிடைக்கும் இலக்கியச் சான்றுகள் கிளைக்குடிகளின் அழிவை வெளிப்படுத்தவில்லை என்பது சுட்டத்தக்கது.

**நெடுங்கிள்ளி - மாவளத்தான் போர்**

சோழன் நெடுங்கிள்ளி ஆவூரில் ஆட்சி செலுத்தி வந்தான். அவன் மீது தம்பி மாவளத்தான் படையெடுத்தான். அதனால் நெடுங்கிள்ளி ஆவூரை அடைத்திருந்தான். இதனை அறிந்த கோவூர்கிழார் இவ்வாறு அடைத்திருப்பது தவறு என்பதைச் சுட்டிக்காட்டியதைப் புறநானூற்றின் 44-ஆம் பாடல் புலப்படுத்துகின்றது. இதனை ஏற்றுச் சோழன் நெடுங்கிள்ளி கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டுப் போரிடாமலேயே சென்றுவிட்டான் என்று மயிலை சீனி. வேங்கடசாமி (1983:306) குறிப்பிடுவது சுட்டத்தக்கது.

**நெடுங்கிள்ளி - நலங்கிள்ளி போர்**

சோழன் நெடுங்கிள்ளி ஆவூரில் இருந்து உறையூருக்குத் தம் ஆட்சிப் பொறுப்பை மாற்றினான். அப்போது உறையூரில் ஆட்சி செலுத்திய நெடுங்கிள்ளிக்கும் சோழன் நலங்கிள்ளிக்கும் இடையே போர் மூண்டது. நெடுங்கிள்ளி தம் கோட்டைக் கதவுகளை அடைத்திருந்தான். நலங்கிள்ளி உறையூருக்கு வெளியே போரிடக் காத்திருந்தான். இதனை அறிந்த கோவூர்கிழார் இருவருக்கும் இடையே நடைபெற்ற போரைத் தவிர்க்கச் செய்தார்.

ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே **(புறம்.**45:5)

என்று குடிகளுக்குள் போரிடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்துகின்றார். இக்கருத்து, "உன் குலத்தை இவ்வாறு அழித்துவிட்டு என்ன அடையப் போகிறாய்?" என்ற சாருவாகன் கூற்றோடு பொருந்துவது சுட்டத்தக்கது.

**கோப்பெருஞ்சோழன் போர்**

கோப்பெருஞ்சோழனுக்கும் அவன் மக்களுக்கும் இடையே போர் மூண்டது. இப்போரைத் தவிர்க்க முனைந்த புல்லாற்றூர் எயிற்றியனார், "நீ இறந்ததற்குப் பிறகு இந்நாடு உன் மக்களை அடையும். நீ போரில் வென்றால் அந்த வெற்றியால் என்ன பயன்" என்ற கேள்வியைக் கேட்கிறார் (புறம். 213). இக்கேள்வி உறவினர்களைக் கொன்றதால் நீ அடைந்த பயன் என்ன? என்ற சாருவாகன் எழுப்பும் வினாவோடு பொருந்துகின்றது.

கோப்பெருஞ்சோழன் தம் மக்கள் மீதான போரைக் கைவிட்டு வடக்கிருந்து உயிரைவிட்டு மடிந்தான். இது தம் மக்களைக் கொன்று உயிர் வாழ்வதை விட உயிர் விடுவதே மேல் என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றது. இது வைதீக நூலான அர்த்த சாத்திரத்திற்கு எதிரான பூதநெறிக் கருத்தாக அமைவது கருதத்தக்கது.

போரை விரும்பிப் பாடும் பழந்தமிழ்ப் புலவர்கள் வேந்தர்கள் ஏற்படுத்திய அழிவைச் சிறப்பித்துப் பாடுகின்றனர். வேந்தர்கள் இனக்குழுக்களை அழிப்பதையும் அதனால் பெற்ற கொள்ளையால் வேந்தனின் நாடு வளம் பெற்றதையும் புகழ்கின்றனர். ஆனால், இரத்த உறவுகளுக்கிடையில் நடக்கும் போரைத் தவிர்க்கச் செய்ய போராடுகின்றனர். இது புலவர்களின் பூதநெறிச் சார்பையே காட்டுகின்றது.

**தொகுப்புரை**

பழந்தமிழ்ச் சமூகத்தில் வேந்தர்களின் எழுச்சி இனக்குழுக்களின் அழிவிலிருந்து தோற்றம் கொள்கின்றது. இனக்குழுக்களை அழித்து எழுச்சிபெற்ற சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் ஒற்றை வேந்தர்களாக எழுச்சிபெறவில்லை. சேரர் சில கிளைக்குடிகளாகவும் சோழர் ஒன்பது கிளைக்குடிகளாகவும் பாண்டியர் ஐந்து கிளைக்குடிகளாகவும் பிரிந்து ஆட்சி செலுத்தினர். இதற்குக் காரணம் இரத்த உறவுக் கொலையைப் பழந்தமிழ்ச் சமூகம் தடை செய்திருந்ததே ஆகும். இத்தடைக்குப் பூதநெறிச் சிந்தனைகள் அடிப்படையாக இருந்தன. வைதீகம் இரத்த உறவுக் கொலைகளையும் தந்தையை மகன் கொலை செய்வதையும் வலியுறுத்தியது. இதற்கு எதிராகப் பேசிய சார்வாகனை எரித்துச் சாம்பலாக்கியது. சார்வாகனின் நெறியாகிய சாருவாகம் பூதநெறியோடு தொடர்புடையது. இப்பூதநெறியைப் பின்பற்றிய பழந்தமிழ்ப் புலவர்கள் இரத்த உறவுக் கொலைகள் நடைபெறுவதற்கான சூழல் ஏற்பட்டபோதும் இரத்த உறவு உடையவர்களிடையே போர் ஏற்பட்ட போதும் அதைத் தவிர்க்கப் பாடுபட்டனர்.

கோவூர்க் கிழார் நெடுங்கிள்ளிக்கும் புல்லாற்றூர் எயிற்றியனார் கோப்பெருஞ்சோழனுக்கும் அறிவுரை கூறி இரத்த உறவுப் போர்களைத் தவிர்த்தனர். கரிகால் பெருவளத்தானும் கிள்ளிவளவனும் ஆட்சிப் பொறுப்பேற்கும் பொழுது ஒன்பது சோழக் கிளைக்குடிகளும் எதிர்த்தன. இவ்வெதிர்ப்பைப் போரின் மூலம் எதிர்கொண்ட இவ்விரு மன்னர்களும் தம் தலைமையை நிறுவினர். கிடைக்கும் இலக்கியச் சான்றுகள் கிளைக்குடிகளின் அழிவை வெளிப்படுத்தவில்லை என்பது சுட்டத்தக்கது.

**சான்றெண் விளக்கம்**

1. குமணனுக்கும் இளங்குமணனுக்கும் இடையே நடைபெற்ற போரில் குமணன் காட்டிற்குத் துரத்தப்பட்டான் என்பதையும் குமணனின் தலையைக் கொண்டு வருபவர்களுக்குப் பரிசில் தருவதாக அறிவித்திருந்தான் என்பதையும் பழந்தமிழ் இலக்கியமான புறநானூறு (164, 165) குறிப்பிடுகின்றது. மூவேந்தர்களுள் ஒருவனாக இல்லை என்பதால் இக்கட்டுரையில் குமணன் வரலாறு ஆராயப்படவில்லை. குமணன் பழந்தமிழ் இலக்கியங்களின் இறுதிக்காலத்தில் வாழ்ந்தவன். உற்பத்திச் சக்திகளின் பெருக்கமும் இனக்குழுச் சிந்தனை மரபின் நீட்சியாக இருந்த பூதநெறிக்கு மாற்றான சமயங்களின் எழுச்சியும் இளங்குமணன்களை உருவாக்கியிருக்க வேண்டும்.

**துணைநின்றவை (References)**


- எங்கல்ஸ்., (2008), *குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்,* நா. தர்மராஜன் (மொ.ஆ.), மதுரை : கருத்து = பட்டறை.
- தேவிபிரசாத் சட்டோபத்யாயா., (2014), *உலகாயதம் பண்டைக்கால இந்தியப் பொருள்முதல்வாதம் பற்றிய ஆய்வு,* எஸ். தோதாத்ரி (மொ.ஆ.), சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- பூங்குன்றன் ர., (2016), *தொல்குடி, வேளிர், வேந்தர் பண்டைய தமிழகத்தில் அரசுருவாக்கம் பற்றிய ஆய்வு,* சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- வேங்கடசாமி மயிலை சீனி., (1983), *சோழர் (நூலின் பகுதி), தமிழ்நாட்டு வரலாறு, சங்க காலம் - அரசியல்,* சென்னை : தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.
- Pratap Chandra Roy., (1891), *The Mahabharatha of Krishna - Dwaipayana Vyasa,* Vol. VIII, Shanti Parva (Part-I), Calcutta : Oriental Publishing Co.

# கல்மரம் நாவலில் கட்டிடத் தொழிலாளர்களின் நிலை Status of Construction Workers at 'Kalmaram' Novel

முனைவர் க. புவனேஸ்வரி | Dr. K. Bhuvaneswari

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017.

E-mail: bhuvaneshwari5310@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

வேளாண்மைத் தொழில் நலிவடைந்துவிட்டதால், பெரும்பாலும் கிராமப்புற விவசாயிகளே கட்டடத் தொழில் செய்ய வருகின்றனர். இவர்கள் தங்களது சொந்த ஊரைவிட்டு கட்டட வேலைக்காக நகரங்களுக்குச் சென்று நடை பாதைகளில் வாழ்ந்து வருகின்றனர். உழைப்புச் சுரண்டலுக்குள்ளாகின்றனர். எனவே, கல்மரம் புதினம் சுட்டும் கட்டடத் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார நிலை குறித்து இக்கட்டுரை விவரிக்கிறது.

**Abstract**

'Kalmaram' Novel written by Thilagavathy I.P.S. This novel narrate the story of building labours. Due to decrease of Agriculture (Various reasons). Many people transferred from native they depend big metropolitan cities and set them life style as it is. Also this novel narrates Social, Economic status of labours.

**திறவுச்சொற்கள் (Keywords):**

வேளாண்மை நசிவு, கட்டடத் தொழிலாளர்கள், பொருளாதாரம், வாழ்வியல், விளைநிலங்கள், கட்டடங்கள், Agricultural Decay, Construction Workers, Economy, Life, Cropland - Phases.

**முன்னுரை**

புதினம் என்ற கலை வடிவம் தமிழ் மொழிக்கு அறிமுகமாகி நூறாண்டுகள் கடந்துவிட்டன. புதினம் என்ற கலை வடிவத்தில் தமிழ் வாழ்க்கையின் பல்வேறு நிலைகள் சித்திரங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. மரபார்ந்த நிலையில் சோதனை முயற்சி வடிவில், கோட்பாட்டை முன்னிறுத்தி புதினம் வடிவத்தின் வழியே தமிழ் வாழ்க்கை கூர்ந்து நோக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பதிவு செய்யப்படாத எத்தனையோ பெருந்திரளான மக்களின் வாழ்க்கை முறைகள் இந்த மண்ணில் இன்னும் இருக்கவே செய்கின்றன என்பதை மறுக்க முடியாது. இலக்கியப் படைப்புகளின் மூலம் பொதுப் பார்வைக்கு வராத வாழ்க்கை முறையில் ஒன்றுதான் கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறை.

20-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தமிழகத்தில் பெருமளவில் தொழிற்சாலைகள் உருவாகின. இதன் காரணமாகத் தொழிலாளர் வர்க்கம் என்னும் ஒரு பிரிவு நகரம் சார்ந்து உருவாயிற்று. அடுத்தடுத்த நிலையில் பரவலான கல்வியும், வேலை வாய்ப்பும் உருவான சூழலில் நடுத்தர வர்க்கம் என்ற மற்றொரு பிரிவும் உண்டாயிற்று. நகரம் சார்ந்து உருவான இந்த இரு பிரிவு மக்களின் பிரதானமான லட்சியம் என்பதை விட பெரும் கனவாக இருப்பது வீடு. வீடு என்பது கனவு மட்டுமல்ல பெரிய சாகசமும் கூட. ஒரு வகையில் நடுத்தர வர்க்கத்தின் தன்னலப் பேராசையால் வயல்வெளிகள், ஏரிகள், குளங்கள், பொது இடங்கள் ஆகியவை வீட்டு மனைகளாகி காங்கிரீட் கட்டிடங்களாக மாறிவருகின்றன. நடுத்தர வர்க்கத்தின் ஆசையை, கனவை, கட்டிட ஒப்பந்தக்காரர்களும் ரியல் எஸ்டேட் முதலாளிகளும் சாதுர்யமாகப் பணமாக மாற்றிக்

கொண்டிருக்கிறார்கள். இந்தத் தந்திரமான வியபாரிகளிடம் மாட்டிக்கொண்டு விழிப்பது நடுத்தர வர்க்கத்து மனிதர்கள் மட்டுமல்ல. அன்றாட சோற்றுக்கே அல்லல்படும் கட்டிடத் தொழிலாளர்களும்தான்.

கட்டிடத் தொழிலாளர்களாக இருப்பவர்கள் பெரும்பாலும் கிராமத்து ஏழைகளே. மழை இல்லை, விவசாயம் இல்லை, கூலி வேலைக்குச் செல்ல வழியில்லை என்ற நிலையில் நகரத்தைத் தேடிவரும் மக்களுக்காகவே காத்திருக்கிறது கட்டிடத் தொழில். ஏதோ ஒரு காலத்தில் பிழைப்பைத் தேடி நகரத்தை நோக்கி வந்து பல்வேறு காரணங்களால் நகரத்திலேயே தங்க நேரிட்டவர்களும் கட்டிடத் தொழிலாளர்களாகிறார்கள். இவர்கள் தங்குவதற்காகவே உருவானதுபோல் இருக்கிறது. சென்னை கூவம் நதியின் கரையில் கூட இடம் கிடைக்காதவர்கள்தான் பிளாட்பாரவாசிகளாக நடைபாதை வாசிகளாக இருப்பவர்கள். இவர்கள் பொதுப்பார்வையில் அருவருப்புக்குரிய சமூக அவலங்கள், ஏளனத்திற்கும் சிரிப்புக்கும் உரியவர்கள். இவர்களைப்போலவே இவர்களுடைய உழைப்பும் மதிப்பிழந்ததாகவே இருக்கிறது. இது நம் சமூகத்தின் உள்முகம். நம் சமூகத்தின் உள்முகத்தின் ஒரு பகுதியை இந்தக் கல்மரம் புதினம் வாழ்வனுபவமாக்க முயன்றுள்ளது.

### சுரண்டல்

கடுமையான உழைப்பைக் கொடுத்தும் கூலிக்காக காத்திருக்கிற கட்டிடத் தொழிலாளர்களின் அவல நிலையை என்னவென்பது? கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கை தரம் மிகவும் தாழ்ந்திருப்பதற்குக் காரணம் அவர்களுடைய உழைப்பு சுரண்டப்படுவதேயாகும். தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி மேஸ்திரிகளும் காண்டிராக்டர்களும் சுகபோகமாக வாழ்கிறார்கள் அதனால் கட்டிடத் தொழிலாளர்கள் தங்களுடைய தினசரி வாழ்வையே ஓட்ட முடியாத நிலையில் செறிவான வாழ்க்கையைக் குறித்துச் சிந்திக்கவே முடியாத நிலையில் தங்களுடைய அடுத்த தலைமுறையினர் கூட இந்த அவலத்திலிருந்து விலக முடியாத நிலையிலிருக்கும் கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கை நம் கண்முன் வாழப்படும் வாழ்க்கை, கட்டிட ஒப்பந்தக்காரர்களிடம் வாழ்வுரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக கிட்டத்தட்ட கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அவலம் இன்று தொடர்ந்து கொண்டுயிருக்கிறது என்பதை இப்புதினம் நமக்கு உணர்த்துகிறது.

### நிர்வாகச் சீர்கேடு

மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சுகாதாரம், மின்சாரம், சாலைவசதி ஆகியவற்றை நிறைவேற்றுவதில் அரசு நிர்வாகம் பெரிதும் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் இவற்றின் நிர்வாகத்தில் சீர்கேடான நிலையையே காண முடிகிறது. கக்கூஸ் நாத்தத்தைப் பார்த்தியா? அங்கக் கிடக்கிறதை எடுத்து கார்ப்பரேஷன் கட்டிடம் மேலே வீசியடிக்கணும் அப்போதான் புத்திவரும். பொறுப்புல இருக்கிறவங்களுக்கு எனவரும் பகுதியில் அரசின் நிர்வாகச் சீர்கேட்டினையும் அந்நிலையை எதிர்த்துக் குரல் கொடுக்கும் மக்களின் குரலையும் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

### கட்டிடத் தொழிலாளர் நிலை

கட்டிடத் தொழிலாளரின் உழைப்பு உறிஞ்சப்படுவதோடு அவர்களுக்கு எவ்விதப் பாதுகாப்பும் சட்டரீதியாக இல்லை. நாட்டிலே அனாதையா இருக்கிறவங்க கட்டிடத் தொழிலாளர்களும் விவசாயக் கூலிகளும்தான். இதுல நம்ம பொழப்பு சர்க்கலப் பொழப்பு, நமக்கு இ.எஸ்.ஐ ஆஸ்பத்திரி இருந்தால் கம்சலையின் ஆஸ்பத்திரி செலவுக்கு வருத்தப்பட வேண்டியது இல்லை. கம்சலையின் கால் அடிப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அழைத்து செல்ல ஆட்டோவுக்கு கூட காசு இல்லாமல் அவர்கள் படும் கஷ்டத்தை அதற்காக அவர்கள் எல்லோரிடமும் கேட்டு பணம் இல்லை என்றவுடன் "ஓணர்கிட்ட சொல்லி நீதம்மா எதனாச்சும் வாங்கிக் கொடுக்கணும். இப்ப ஆஸ்பத்திரிக்குப் போறதுக்கு உங்கையிலேயிருந்து எதுனா குடுத்துட்டு அப்புறமா ஓணர் கையில் வாங்கிக்கம்மா"[1] என்று லெட்சுமிக் கிழவி ராகினியிடம் சொன்னாள். அவளும் இல்லை என்று கைவிரித்த போது உடன் வேலை செய்யும் காவேரி தான் தனது பைக்குள் வைத்திருந்த சின்னஞ்சிறு பர்சை விரித்து ஐந்து ரூபாய் இரண்டு ரூபாய் என்று அழுக்கேறிக் கிடந்த நோட்டுக்களை எடுத்து எண்ணினாள். முப்பத்தி நாலு ரூபாய் தேறியது அதைக் காசியிடம் நீட்டினாள். பொறப்படுங்க என்றாள்.

நமக்குன்னு சரியான சட்டதிட்டம் இல்லை, வேலைக்குத் தக்கபடி நாம இயங்கணும், நமக்கு தக்கபடி வேலை இயங்காது. சம்பளத்துலயும் விதிமுறை இல்ல, காண்டிராக்டருக்குத் தக்கபடி வாரத்துல நாலு நாளைக்கு வேலை இல்ல, ஒன் புருஷன் மாதிரி விபத்துல இறந்தால் கேட்க நாதியில்ல. நாய் இறந்தா கூட கார்ப்பரேஷன் புதைக்கும். உடம்பை விற்கிற தாசியை விட உழைப்பை விற்கிற நம்ம பிழைப்பு மோசமான பொழப்பு என்னும் கருத்தை 'ஒருநாள் போதுமா?, கல்மரம் புதினமும் கட்டிடத் தொழிலாளர்களின் அவல நிலையைப் புலப்படுத்துகிறது. சென்னை நகரில் காணும் கட்டிடத் தொழிலாளர்களின் ஆதரவற்ற இத்துயர நிலையைப் படைத்துக் காட்டும் ஆசிரியர், அவர்களின் வாழ்க்கைநிலை உயர வேண்டுமென்பதற்காகப் பொதுநலச் சிந்தனையையும் வலியுறுத்துவதன் மூலம் சமுதாயத்தின் மீது கொண்டிருக்கும் தன் விசாலப்பார்வையைச் சிறப்பாக இரு ஆசிரியர்களும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

**குடும்பச் சூழ்நிலை**

எதார்த்தமாக ஆதிலெட்சுமி கணவன் கட்டிட விபத்தில் இறந்ததால் பையனை அதே தொழிலுக்குப் போகவிடாமல் தடுக்க நினைக்கும் தாயுள்ளம், சைக்கிள் வாங்க முடியாத நிலை, அன்றாட உணவுக்கும் வேலைக்கும் தேடல் எனத் தொடங்கும் உழைப்பாளர் குடும்பத்தில் வேலையின்றிச் சுற்றி அலையும் பையனுக்கு 'பெண் பார்த்து திருமணம் முடிப்பதால் பையன் பொறுப்பாயிடுவான்' என நினைக்கும் ஆதிலெட்சுமி காசி வேலையில் இருப்பதாகப் பொய் சொல்லி திருமணம் புரிவதும், ராகிணியின் கனவுகள் கரைந்து, கணவனுக்கு வாட்ச்மேன் வேலை பெற்று, பிளாட் கட்டுமிடத்தில் தங்குமிடமும் ஏற்பட தானும் கணக்கப்பிள்ளையாக வேலை செய்கிறாள். முதலாளிக்கு விசுவாசமாய் இருந்தும், அவர் தொழிலாளர்களைக் கசக்கி பிழிவதைக் கண்டு மனம் வெதும்புகிறாள். விபத்து ஏற்படும் போதெல்லாம் சிடுசிடுப்பாகி மனிதத் தன்மையற்ற அவருடைய அரக்க குணத்தைக் காணும்போதுதான் அவளுக்கு புரிகிறது. தன் கணவனாலும் தன் குடும்ப சூழலாலும் இங்கு நடக்கும் மனிதாபிமான செயல்களையும் சற்று புரிந்து வருத்தம் அடைந்தாள் எனபதை ஆசிரியர் அழகுடன் உணர்த்துகிறார். இயல்பான அடிதட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்காக அவர்கள்படும் துன்பத்தை, துயரத்தை எதார்த்தமாக படைத்துக் காட்டியுள்ளார்.

**ஊழல்வாதிகள்**

இன்று எல்லாத் துறையிலும் ஊழல் மலிந்து போய்விட்டது. பொதுப்பணித்துறையில் ஒப்பந்த வேலை எடுப்போர், சிமெண்டையும் மண்ணையும் கலவை குறைத்துக் கட்டிடம் கட்டுவதால் பல விளைவுகள் ஏற்படுகின்றன. இதிலிருந்து தப்ப அரசியல் வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் பணம் கொடுக்கின்ற நிலை தொடர்ந்து வருகின்றது. அவ்வாறு காண்டிராக்ட் எடுத்த நாயகம் கட்டிய கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்துவிட்டது. அவரது காண்டிராக்ட் அலுவலகம் தகுதியற்றது என்று கூறப்பட்ட பின் வேறொரு பெயரில் அலுவலகம் தொடங்குகிறார். ஊழல் வாதிகளுக்குப் பணம் கொடுத்தல் பிரச்சனையைப் பெரிதுபடுத்தாமல் விட்டுவிடுகிறார்கள். அவரை மேய்க்கும் அதிகாரிகளோ அல்லது அவர் மேய்க்கும் அரசியல் வாதிகளோ இதனால் கூடித்தான் போனார்களாமே தவிர, குறைந்து போகவில்லையாம், கொட்டுவதை என்ன விகிதத்தில் யார் யாருக்குக் கொட்ட வேண்டும் என்று தெரிந்த மனிதராம் என்னும் கருத்து ஊழல் வாதிகளாக விளங்கும் அரசியல் வாதிகளையும் அதிகாரிகளையும் அம்பலப்படுத்துகிறது என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

**கேளிக்கை**

இன்றை சமுதாயத்தில் கேளிக்கை ஏற்படுத்தியுள்ள கொடூரங்கள் அதிகம். சென்னையில் சரிகா கொடூரச் சாவிற்குப் பிறகு, இதனைத் தடுக்கத் தமிழக அரசு கடுமையான சட்டத்தை நிறைவேற்றியது. இருப்பினும் இக்கொடுமை இன்னும் ஆங்காங்கே தலை நீட்டியபடியே இருக்கிறது. ஒரு நாள் போதுமா?

"கொத்தனாரே எனக்கு ஒரு ஐடியா தோனுது இந்த அறியாத வயசுப் பொண்ணுங்களை சேட்டைப்பன்ற காலேஜ் பசங்கள சாரத்துல ஏத்தி பாண்டுவ தலையில கொடுத்துட்டாப் போதும், பொண்ணுங்க தாராளமாய் நடமாடலாமுன்னு நெனக்கிறேன்"[2] ப.157 என்று தாயம்மா என்னும் பாத்திரம் வாயிலாக ஆசிரியர் கூறுகிறார். இக்கருத்து கேளிக்கை என்னும் சமுதாயச் சீர்கேடு

தீரவேண்டும் என்ற அவருடைய நோக்கத்தைத் தெளிவுப்படுத்துகிறது. "எனக்கென்னமோ உடம்புல உழைப்பு இல்லாட்டி மனசுல கோளாறு வருமுன்னு தோனுது"[3] ப.158. தாயம்மா இவ்வாறு கூறுவதன் மூலம், கேளிக்கதைக்கான அடிப்படைக் காரணம் உழைப்பில்லாததே என்பதை அறியலாம். மேலும் இச்சிக்கல் களையப்பட, உடல் உழைப்பே உகந்த தீர்வாகும் என்பதும் சுட்டப்படுகிறது. மாணவ சமுதாயத்தில் நீண்டகாலமாகக் காணப்படும் இச்சிக்கல் தீர்ந்தால் எதிர்காலம் வளமுடையதாக அமையும் என்பதாலேயே ஆசிரியரின் நோக்கு இவ்வாறு அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

'கல்மரம்' என்னும் புதினம் கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. கட்டிடத் தொழிலாளர்கள் வெறும் கல் மண் சுமந்து கட்டிடங்களை உருவாக்குபவர்கள் மட்டுமல்ல, எந்த மதத்தினரும் வணங்க கோயில், சர்ச், மசூதி என்றும் சாலைகளையும் ஆலைகளையும் உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மஹாலையும் உருவாக்கியவர்கள் கட்டிடத் தொழிலாளிகள். அவர்களின் வாழ்வியலை கதைகளமாக கொண்டு ஆசிரியர் திலகவதி அவர்கள் அவர்களின் உரிமைகளையும், போராட்டங்களையும் மையப்படுத்தி ஆதிலட்சுமி, காசி, காவேரி, ராகினி, சுசீலா போன்ற பாத்திரங்களை படைத்து, சமுதாயச் சூழலுக்கேற்ற கோலங்கொண்டு துணிச்சல் மிக்க புரட்சியுடைய இலட்சியப் பெண்களே இனி உருவாக வேண்டும் என்னும் பரந்துபட்ட நோக்கமே இவரது விருப்பமாகத் திகழ்கிறது.

**துணைநின்றவை (References)**


- சமுத்திரம் சு., 2014, வேரில் பழுத்த பலா, சென்னை: சாரதா பதிப்பகம்.
- சமுத்திரம் சு., 2014, வேரில் பழுத்த பலா, சென்னை: சாரதா பதிப்பகம்.
- திலகவதி, 2005, கல்மரம், சென்னை, அமிர்தா பதிப்பகம்.

# மணிமேகலைக் காப்பியத்தில் 'ஊழ்', 'ஊழ்வினை' : படிநிலை வளர்ச்சி The Hierarchical Development of the concept of 'OOZH' and 'OOZHVINAI' in Manimegalai Epic

முனைவர் மு. முனீஸ்மூர்த்தி | Dr. M. Munees Moorthy

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli – 620 017.

E-mail: moovendhan1887@gmail.com, ORCiD: https://orcid.org/0000-0002-7878-0946

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் 'ஊழ்' எனும் சொல் இடம்பெற்றுள்ளது; 'ஊழ்வினை' எனும் சொல் இடம்பெறவில்லை. தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள ஊழ் எனும் சொல்லும் ஊழ்வினைக் கருத்தினை முன்வைக்கும் சமயச்சார்புப் பொருளில் வழங்கப் பெறவில்லை. அச்சொல்லானது 'முறை' எனும் இயல்பான பொருளிலேயே கையாளப் பெற்றுள்ளது. தமிழின் தொன்மையான இலக்கியத் தொகுப்புகளான சங்க இலக்கியப் பாடல்களில் 'ஊழ்' எனும் சொல் இடம்பெற்றுள்ளது; 'ஊழ்வினை' எனும் சொல் இடம்பெறவில்லை. சங்க இலக்கியப் பாடல்களில் இடம்பெற்றுள்ள ஊழ் எனும் சொல்லும் ஊழ்வினைக் கருத்தினை முன்வைக்கும் சமயச்சார்புப் பொருளில் வழங்கப் பெறவில்லை. அச்சொல்லானது 'முறை', 'மலர்தல்', 'முதிர்தல்', 'உதிர்தல்' எனும் இயற்கை சார்ந்த பொருளிலேயே கையாளப் பெற்றுள்ளது.

இந்நிலையில் தமிழ்க் காப்பிய வரலாற்றில் முதன்மை பெறும் இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில்தான், முதன்முறையாக 'ஊழ்வினை' எனும் சொல் கையாளப் பெற்றுள்ளது. தொடர்ந்து மணிமேகலையிலும் அச்சொல் இடம்பெற்றுள்ளது. மணிமேகலைக் காப்பியத்தில் 7 இடங்களில் 'ஊழ்' எனும் சொல் இடம்பெற்றுள்ளது. மேலும், மணிமேகலையில் இடம்பெற்றுள்ள ஊழ் எனும் சொல்லானது தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியப் பாடல்கள் முன்வைக்கும் இயற்கை சார்ந்த (முறை, மலர்தல், முதிர்தல், உதிர்தல் என்பன போன்ற) பொருளில் வழங்கப் பெறாமல், சமயச்சார்புப் பொருளான 'ஊழ்வினை' எனும் பொருளிலேயே வழங்கி வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதுதவிர, வினை எனும் சொல்லும் முன், பின் ஒட்டுக்களுடன் 90 இடங்களில் மணிகேலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. வினையின் வகை, வினையின் இயல்புகள், வினைக்குரிய நிலைக்கலன்கள், வினையின் விளைவுகள் பற்றி மணிமேகலைக் காப்பியம் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கின்றது.

காலந்தோறும் சமயவாதிகளும் இறைநம்பிக்கையுடையோரும் முன்வைக்கும் 'ஊழ்வினை' எனும் கருத்தாடலானது சிலப்பதிகாரக் காப்பியத்தின் அருவப் பாத்திரம் (உருவமில்லாப் பாத்திரம்) எனக் கூறும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்ற ஒன்று என்பது அறிவுலகம் அறிந்த ஒன்றே! அதேவேளை, மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள ஊழ், ஊழ்வினை குறித்த பதிவுகள் ஆய்வுநிலையில் அதிகம் விவாதிப்புக்கு உட்படுத்தப் பெறவில்லை. எனவே, இத்தகைய கண்ணோட்டத்தில் "மணிமேகலைக் காப்பியத்தில் 'ஊழ்', 'ஊழ்வினை' : படிநிலை வளர்ச்சி" எனும் இந்த ஆய்வுரை அமைகின்றது.

**Abstract**

The word 'OOZH' is mentioned in Tolkappiyam, an ancient grammar book of Tamil; The word 'OOZH' does not appear. The word 'OOZH' in the Tolkappiyam is not mentioned in the context of religion. The word has been treated in its natural sense of 'Order'. The Sangam literary hymns, the oldest literary collections of Tamil, contain the word 'OOZH'; The word 'OOZH' does not appear. The word "corruption" in Sangam

literature is not presented in a religious context that presents the concept of 'OOZH'. The word has been used in the natural sense of 'pattern', 'blooming', 'maturity', 'falling off'.

In this case, it is the first 'irattai kaappiyangal in the history of Tamil Epic literature It is in Silapathikaram that the word 'OOZHVINAI' is used for the first time. The word is also found in Manimegalai. The word 'OOZH' is used in 7 time in the Manimegalai. Also featured in Manimegalai The word 'OOZH' is presented in Tolkappiyam and Sangam literatures Present in natural (pattern, flowering, maturing, shedding etc.) material Instead of receiving it, they have been giving it in the form of 'life', which is religious Here is a notable one. Also, with affixes before and after the word 'VINAI' 90 places in Manimegalai are featured in Kappiyam. Kind the word 'VINAI' in Manimegalai about natures, fate, destiny, effects of the 'VINAI' The copy is detailed and descriptive.

One of the narrators of Thirukkural, Parimelazhagar, while explaining the official title of 'OOZH", would mention, "Nyati, oozh, order, method, truth, deity, destiny are all one and the same". Although the word 'Vidhi' is present, the word is not given in 'VINAI' concept.

The intellectual world knows that the concept of 'OOZHVINAI' presented by religious people and theists from time to time has become so influential that it is said that it is an invisible character (characterless character) of the bureaucracy! At the same time, the entries of 'OOZH' and 'OOZHVINAI' contained in the Manimegalai file have not been discussed much in the research stage. Therefore, from such a perspective, this research is "The Hierarchical Development of 'OOZH' and 'OOZHVINAI' in Manimegalai Epic".

**திறவுச்சொற்கள் (Keywords):** ஊழ், ஊழ்வினை, மணிமேகலை, தொல்காப்பியம், விதி, OOZH, OOZHVINAI, Manimegalai, Tolkappiyam, destiny.

### வினை தொடர்பான அவைதிகக் கருத்தியல் - அறிமுகம்

சமணம், பௌத்தம், ஆசீவகம், வைதிகம் (சைவம், வைணவம் உள்ளிட்டவை) எனச் சமயங்கள் பலவகையினதாக அமைந்தாலும் ஒருசில கொள்கை அடிப்படையில் அவற்றினிடையே சில அடிப்படை ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் நிலவுவது தவிர்க்க இயலாததாகும். வினைக்கொள்கை (பழவினை, முன்வினை) எனும் நிலையில் சமண, பௌத்த, ஆசீவக சமயங்கள் 'அவைதிகம்' எனும் அடையாளத்துடன் வைதிக சமய வினைக் கொள்கையுடன் முரணி நிற்கின்றன.

பௌத்த சமயத்தைப் பொறுத்தவரையில் 'பழவினை' என்பது இறைவனுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். ஏனெனில் பௌத்தர்கள் கடவுள் என்ற ஒன்றை ஏற்றுக் கொள்ளாதவர்கள். சமணர்தம் கருத்தும் இத்தன்மையதே ஆகும்.

> "பிறப்புகள் பலவென்பதும் உயிர் ஒரு பிறப்பிலே செய்த தன்மங்களின் பலன்களையே மறுபிறப்பில் அனுபவிக்கின்ற தென்பதும் இந்துக்களின் (வைதீக சமயத்தாரின்) கருத்து. ஆனால் கன்மம் தானாகவே தன்னைச் செய்தானைச் சென்று சேரும் வல்லமை உடையதன்று. தனது முன்வினைகளுக்கேற்ற உடலை எடுக்கவும், அவ்வினைகளைத் தேடிச் சேரவும் உயிரால் இயலாது. அந்தந்த உயிரோடு அதனதன் தன்மங்களைக் கூட்டுவதே இறைவனது முதலாம் தொழில். படைத்தல் எனப்படுவதும் இதுதான். பழவினை கழியும்போது புதுவினை வந்து சேராது தடுத்து, உயிர் வினைத் தொடர்பிலிருந்து முற்றாக நீங்கத் துணை செய்வது இறைவனது இரண்டாவது தொழில், பௌத்தர்களும் பிறப்புப் பல என்றும், ஒரு பிறப்பிற் செய்த கன்ம பலனுக்கு ஏற்பவே மறுபிறப்பு அமைகின்றது என்றும் கொள்ளுகின்றனர், ஆனால் கடவுளுண்டு எனக் கொள்ளார். எனவே, கடவுளுண்டென்போர் கடவுள் ஒருவராலேயே ஆகத்தக்கனவெனக் கொள்ளும் மேற்கூறிய செயல்கள் இரண்டும் நிகழ்வதற்கு வழி சொல்ல வேண்டிய பொறுப்பு பௌத்தருக்கு ஏற்படுகின்றது." (2000:141)

என பௌத்தர்தம் வினைக்கொள்கை தொடர்பான விவாதத்தை முன்வைப்பார் கி.லட்சுமணன். இத்தகைய இக்கட்டான சூழலில், வினைக்கருத்தியலில் வைதிக சமயத்தாரை எதிர்கொள்வதற்குப் பௌத்த சமயத்தார், 'பெருந்தொகையான பசுக்கள் நிற்கும் தொழுவத்தில் ஒரு கன்றை விடின், அது எவ்வாறு ஏனைய பசுக்களைத் தவிர்த்துத் தன் தாய்ப்பசுவைத் தேடி அடைகிறதோ அதுபோல் பழவினையும் தனக்குரியாரைத் தானே தேடி அடையும்' எனும் சமணக் கொள்கையுடன் உடன்பட்டுச் செல்கின்றனர். அவ்வகையில், மணிமேகலைக் காப்பியத்துள் பழவினைக் கருத்துடன் இறைவனை இயைபுபடுத்திய பதிவுகள் எவ்விடத்தும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

> "சிலப்பதிகார ஆசிரியர் பிறசமயக் கோட்பாடுகள் பலவற்றுக்கும் வேறாகவும் மேலாகவும் அமைந்துள்ள 'ஊழ்' என்னும் கோட்பாட்டை நம் உணர்ச்சிக்கு விருந்தாக அமையும் வகையில் விளக்குகிறார். இவரிடம் தருக்க அடிப்படையில் தம் கருத்தை விளக்கும் பாங்கில்லை. பௌத்த சமயத்தைச் சார்ந்த மணிமேகலை ஆசிரியரோ உணர்ச்சிக்கு விருந்தாகவும் அதே சமயத்தில் தருக்க நிலையில் தம் கோட்பாட்டை விளக்கி அறிவைத் தூண்டும் வகையிலும் படைத்துள்ளார் எனக் கூறல் வேண்டும்" (1971:19)

எனும் ப.அருணாசலத்தின் கருத்துரையும் மணிமேகலையில் இடம்பெறும் வினைக்கொள்கையின் தெளிவுநிலையை எடுத்தியம்புவதாக அமைகின்றது.

**மணிமேகலையில் ஊழ்**

காலந்தோறும் சமயவாதிகள், இறைநம்பிக்கையுடையோர் முன்வைக்கும் 'ஊழ்வினை' எனும் கருத்தாடலானது சிலப்பதிகாரக் காப்பியத்தின் அருவப் பாத்திரம் (உருவமில்லாப் பாத்திரம்) எனக் கூறும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்ற ஒன்று என்பது அறிவுலகம் அறிந்த ஒன்றே! அதேவேளை, மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள ஊழ், ஊழ்வினை குறித்த பதிவுகள் ஆய்வுநிலையில் அதிகம் விவாதிப்புக்கு உட்படுத்தப் பெறவில்லை. அந்தவகையில், இனிவரும் பகுதியில் மணிமேகலையில் இடம்பெற்றுள்ள ஊழ், ஊழ்வினைக் கருத்துநிலைகள் தொடர்பான பதிவுகளும் அவற்றுக்கான பொருண்மைகளும் அடையாளப்படுத்தப் பெறுகின்றன.

மணிமேகலைக் காப்பியம் சிலப்பதிகாரம் போலவே முப்பது காதைகளை உடையது. இந்நூலுள் 7 இடங்களில் 'ஊழ்' எனும் சொல் இடம்பெற்றுள்ளது. அவ்வேழு பதிவுகளும் அவற்றுக்கான பொருண்மைகளும் வருமாறு: *(மேற்சுட்டிய 7 பதிவுகளில் 2 இடங்களில் 'ஊழ்வினை' எனும் சொல்லாட்சி இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது).*

மணிமேகலையின் தோழி சுதமதியானவள் மணிமேகலையின் இயல்பினை உதயகுமரனுக்குக் கூறுமிடத்து.

> "**ஊழ்**தரு தவத்தள் சாப சரத்தி" (5:16)

என்கிறாள். இத்தொடருக்குக் குறிப்புரை தரும் உ.வே.சாமிநாதையர், 'ஊழ் முறை; பௌத்தர்களுக்கு ஊழ்வினை உடன்பாடாகலின் ஊழ்வினையால் தரப்பட்ட தவத்தை யுடையளென்றுமாம்' எனக் குறிப்பிடுகின்றார். ஊழ் என்பது 'முறை' என்று சமயம்சார் வினைக் கருத்துநிலைக்கு அப்பாற்பட்ட பொருளைக் குறித்து வருவதற்குப் பாடலில் இடம்பெறும் 'தவம்', 'சாபம்' என்னும் சமயச்சார்புச் சொற்கள் முரணி நிற்கின்றன. எனவே மேற்குறித்த 'ஊழ்' எனும் சொல் பழவினைப் பொருளிலேயே பயின்று வந்துள்ளதாகக் கொள்ளலாம்.

சார்ங்கலன் என்னும் பார்ப்பனச்சிறுவன் மிகக் கொடிய தன்மையதான சுடுகாட்டிற்குத் தன் அறியாமையால் அதனை நகரமென எண்ணி இரவில் தனியே செல்ல, அங்கே களித்தாடிய பேயால் தாக்கப்பட்டு, அஞ்சித் தன் தாயாகிய கோதமையை அடைந்து உயிர் நீக்கிறான். இதனைக் கண்டு மனம் பொறாத கோதமை, காவல் தெய்வமான சம்பாபதியிடம் முறையிட, அதற்குச் சம்பாபதி, 'உன் மகன் உயிரைப் பேய் கவரவில்லை; அவனது அறியாமையைப் பற்றுக்கோடாகக் கொண்டு ஊழ்வினையே உயிரைக் கவர்ந்து சென்றது' என்கிறாள். இதனை,

'அணங்கும் பேயும் ஆருயிர் உண்ணா
பிணங்குநூல் மார்பன் பேது கந்தாக
**ஊழ்வினை** வந்திவன் உயிருண்டு கழிந்தது' (6:150-152)

என்னும் பாடலடிகளின்வழி அறியலாம்.

காயசண்டிகையின் வடிவில் இருந்த மணிமேகலை சம்பாபதி கோயிலை அடைந்து வாழ்ந்தாள். இதனையறிந்த உதயகுமரன் இரவில் ஒருநாள் தன் அரண்மனையை விட்டு நீங்கி உலகவறவியை அடைந்து அதன் உள்ளே நடந்து சென்றதை

'ஆயிழை இருந்த அம்பலம் அணைந்து
வேக வெந்தீ நாகம் கிடந்த
போகுயர் புற்றளை புகுவான் போல
ஆகம் தோய்ந்த சாந்தலர் உறுத்த
**ஊழ்**அடி யிட்டுஅதன் உள்ளகம் புகுதலும்' (20:97-101)

எனக் குறிப்பிடுகிறது காப்பியம். பாடலில் இடம்பெறும் 'ஊழ் அடியிட்டு' என்பதற்கு 'முறையே அடிவைத்து' எனப் பொருளுரைக்கின்றார் உவே.சாமிநாதையர். இத்தகு பொருண்மையானது உ.வே.சா.வின் சங்க இலக்கிய வாசிப்பால் நேர்ந்த பிறழ்வாகும். *(சங்க இலக்கியங்களில் 'ஊழ்' எனும் சொல்லானது 'முறை, மலர்தல், முதிர்தல், வுஉதிர்தல்' என்பனவாகிய சமயச்சார்பற்ற பொருளிலேயே வழங்கி வந்துள்ளது.)* மணிமேகலையில் இடம்பெறும் 'ஊழடியிட்டு' என்பதற்கு 'முறையே அடிவைத்து' என்பது சிறப்புடைத்தன்று. மாறாக, 'ஊழ்' என்பதற்கு 'ஊழ்வினை' என்று பொருள் கொள்வதே பொருத்தமாக அமையும். 'உலக அறவியில் மணிமேகலையைப் பின்தொடர்ந்த உதயகுமரனை அவன் மார்பில் பூசியிருந்த சந்தனம் அவன் வரவை அம்பலத்தில் இருப்போர்க்குப் பறைசாற்றும் அளவுக்கு ஊழ்வினை முன்னே செல்ல உதயகுமரன் பின்னே செல்கிறான்' என்பதே இவ்விடத்து நேரிய பொருளாகும். மேலும் ஊழ்வினை காரணமாகவே உலகவறவியில் விஞ்சையனால் நன்கு ஆராய்ந்தறியப்படாது உதயகுமரன் கொல்லப்படுகிறான் என்பதனையும் இணைத்து நோக்க 'ஊழ்' என்பதற்கு 'ஊழ்வினை' என்பதே பொருத்தமுடையதாகிறது.

தன் மனைவி காயசண்டிகையின் உருவிலிருந்த மணிமேகலையைப் பின்தொடர்ந்த உதயகுமரனை வாளால் வெட்டி வீழ்த்தினான் காஞ்சனன், இச்செயலுக்கு,

'**ஊழ்வினை** வந்திங்கு உதய குமரனை

ஆருயிர் உண்டது (20:123-124)

உதயகுமரனின் ஊழ்வினையே *(மடைத்தொழில் செய்தவனை முற்பிறப்பில் வாளால் வெட்டியதே)* காரணம் என உரைக்கிறது கந்திற்பாவை.

சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதையில் ஆசீவகவாதி மணிமேகலையிடம் தம் சமயக்கொள்கை பற்றிக் கூறுமிடத்து,

'முன்னுள **ஊழே** பின்னும் உறுவிப்பது

மற்கலி நூலின் வகையிது' (27:164-165)

என்கிறான். ஆசீவகவாதி கூறும் இப்பதிவானது, ஊழ் என்னும் சொல் 'ஊழ்வினை' என்னும் பொருளுடையது என்பதனைத் தெளிவாக்குகின்றது.

**மணிமேகலையில் வினைக்கருத்தியலைக் குறிக்கும் சொற்கள்**

சமயச் சார்புக் காப்பியமான மணிமேகலையுள் வினை, செய்வினை, பழவினை, ஊழ்வினை, வெவ்வினை, தீவினை, அருவினை, தொடர்வினை, வல்வினை, செவ்வினை, கடுவினை. இடர்வினை, அவல வெவ்வினை, துயர்வினை, செயப்பாட்டுவினை, தீதுறு வெவ்வினை, நல்வினை, வினைப்பயன், கன்மம், கருமம், கரும ஈட்டம், கன்மக் கூட்டம் என்னும் சொற்கள்வழி வினைக் கருத்தியலைக் குறித்து **90** பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

**மணிமேகலையில் 'ஊழ்' : மடைமாற்றம்**

தமிழின் தொன்மை நூல்களான தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் 'ஊழ்வினை' எனும் சொல் இடம்பெறவில்லையாயினும் அந்நூல்களில் ஊழ்வினை எனும் கருத்தைக் குறிக்க முன்வினை, பழவினை, பால், இருவினை, வினை என்னும் சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. (2011:60-140) ஆனால் சிலப்பதிகாரத்துள் வினைக்கருத்தினை முன்வைக்க 'ஊழ்வினை' எனும் சொல் வழங்கி வந்துள்ளது. தவிர 'ஊழ்' என்பதற்குச் சங்கநூல்கள் முன்வைக்கும் சமயச்சார்புக்கு அப்பாற்பட்ட பொருண்மையான 'முறை' எனும் பொருளில் 'ஊழ்' எனும் சொல் சிலப்பதிகாரத்துள் இடம்பெற்றுள்ளது. இத்தகைய பின்புலத்துடன் மணிமேகலையில் இடம்பெறும் 'ஊழ்' எனும் பதிவை அணுகும்போதுதான் மடைமாற்ற நிலை நன்கு புலப்படுகின்றது.

மணிமேகலையில் 'ஊழ்' எனும் சொல் இடம்பெற்றுள்ளது. ஆனால் அந்நூலில் அச்சொல்லானது சங்கநூல்கள் முன்வைக்கும் சமயச்சார்புக்கு அப்பாற்பட்ட பொருண்மைகளான முறை, மலர்தல், முதிர்தல், உதிர்தல் எனும் பொருண்மைகளில் பயின்று வரவில்லை. மாறாக 'ஊழ்' எனும் சொல் 'ஊழ்வினை' எனும் பொருளிலேயே வழங்கி வந்துள்ளது. இத்தகைய வழக்காறு (அதாவது, ஊழ் எனும் சொல்லே ஊழ்வினைக் கருத்தைக் குறித்து நிற்றல்) சிலப்பதிகாரத்தில் இடம்பெறாதது என்பது இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதனைப் பின்வரும் ஒப்பீட்டு அட்டவணைவழி உய்த்துணரலாம்.

| நூற்பெயர் | ஊழ்வினை | ஊழ் |
|---|---|---|
| **தொல்காப்பியம்** | 'ஊழ்வினை' எனும் சொற்பயன்பாடு இல்லை.<br><br>வினை, பால் எனும் சொற்கள் ஊழ்வினை எனும் கருத்தில் பயின்று வருதல். | 'ஊழ்' எனும் சொற்பயன்பாடு உண்டு.<br><br>(முறை எனும் பொருளில்) |
| **சங்க இலக்கியம்** | 'ஊழ்வினை' எனும் சொற்பயன்பாடு இல்லை.<br><br>வினை, பால், பழவினை எனும் சொற்கள் ஊழ்வினை எனும் கருத்தில் பயின்று வருதல். | 'ஊழ்' எனும் சொற்பயன்பாடு உண்டு.<br><br>(முறை, மலர்தல், முதிர்தல் உள்ளிட்ட சமயச்சார்பற்ற பொருளில்) |
| **சிலப்பதிகாரம்** | 'ஊழ்வினை' எனும் சொற்பயன்பாடு உண்டு.<br><br>வினை, பால், பழவினை, ஊழ்வினை எனும் சொற்கள் ஊழ்வினை எனும் கருத்தில் பயின்று | 'ஊழ்' எனும் சொற்பயன்பாடு உண்டு.<br><br>(முறை எனும் பொருளில்) |

| | | |
|---|---|---|
| | வருதல். | |
| **மணிமேகலை** | 'ஊழ்வினை' எனும் சொற்பயன்பாடு உண்டு.<br><br>வினை, பழவினை, ஊழ்வினை, ஊழ், கன்மம் எனும் சொற்கள் ஊழ்வினை எனும் கருத்தில் பயின்று வருதல். | 'ஊழ்' எனும் சொற்பயன்பாடு உண்டு.<br><br>(ஊழ்வினை, முடிவு எனும் சமயச்சார்புப் பொருளில்) |

மேலும், வினைக் கருத்துநிலையைக் குறித்து கன்மம், கருமம் எனும் சொற்கள் மணிமேகலையில் வழக்குப் பெற்றுள்ளன. இவையும் சிலப்பதிகாரத்துள் இடம்பெறாதவை என்பது குறிப்பிடத்தக்கது.

**தொகுப்புரை**

- ➔ தமிழின் முதற் காப்பியமாகச் சிலப்பதிகாரம் திகழினும் வெளிப்படையாகச் சமய அடையாளத்துடன் தோன்றிய முதல் காப்பியம் மணிமேகலை ஆகும்.
- ➔ மணிமேகலைக் காப்பியத்தில் 7 இடங்களில் 'ஊழ்' எனும் சொல் இடம்பெற்றுள்ளது. இவ்விடங்களில் ஊழ்வினை, முடிவு எனும் பொருண்மைகளில் அச்சொல் பயின்று வந்துள்ளது.
- ➔ மணிமேகலை குறிப்பிடும் வினைக்கருத்து நிலைக்கும் சிலப்பதிகாரம் குறிப்பிடும் வினைக்கருத்து நிலைக்கும் பெருமளவு வேறுபாடு இல்லை.
- ➔ வினை வகை, வினையின் இயல்புகள், வினைக்குரிய நிலைக்கலன்கள், வினையின் விளைவுகள் பற்றி மணிமேகலைக் காப்பியம் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கின்றது.
- ➔ மணிமேகலையில் 'விதி' எனும் சொல் வினைப் பொருண்மையில் வழங்கி வரவில்லை.

**கருத்து**

எந்த ஒன்றுக்கு அறிவியல் அடிப்படையில் விடைகாண இயலவில்லையோ அந்த இடத்தில் சமயம் முன்னிலை பெறுவது இயல்பு. அவ்வகையில், எந்தத் தீமையும் செய்தறியாத ஒருவன் தன் வாழ்நாளில் துன்பங்களை மட்டுமே அனுபவிக்கக் காரணம் என்ன என்பதற்கு விடைகாண இயலாநிலையில் முன்வினை (பழவினை), பழம்பிறப்புக் கருத்தியல்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கி விடுகின்றன. இத்தகு பழவினைக் கருத்தியல் என்பது பொதுவாக எல்லாச் சமயக் கோட்பாடுகளிலும் இடம்பெற்றிருப்பதால் பழங்காலத்தில் மிகுந்த எதிர்ப்பின்றி அது எளிதில் மக்களைச் சென்றடைந்து பரவலாகியுள்ளது எனலாம்.

**துணைநின்றவை (References)**


- அருணாசலம் ப., (1969), *பக்தி இலக்கியம்*, சென்னை : பாரி புத்தகப் பண்ணை.
- சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.), (2008), *மணிமேகலை,* சென்னை : டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்.
- முனீஸ்மூர்த்தி மு., (2011), *தமிழ்ச் செவ்வியல் படைப்புகளில் ஊழ் : கருத்தியல் மாற்றம்,* காரைக்குடி : தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்.
- லட்சுமணன் கி., (2000), *இந்திய தத்துவ ஞானம்,* சென்னை : பழனியப்பா பிரதர்ஸ்.

# அன்பின் வழியது இல்வாழ்க்கை Family Life Through by Love

முனைவர் தி. அறக்கலைச்செல்வி | Dr.T. Arakalaiselvi

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017.

**Email:** arakalaikavish@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க அகப்பாடல்கள் களவு, கற்பு என்ற இரு நிலைகளில் பிரிக்கப்படுகின்றன. களவில் தொடங்கிய உறவு கற்பில் சென்று முடிவதே சிறப்பாகும். பிற திணைகளை விடப் பாலைத்திணையே அகவுணர்வுகளை அதிகமாக எதிரொலிக்கும் நிலையில் உள்ளது. அதற்குக் காரணம் அந்நிலத்திற்குரிய உரிப்பொருளாகும். கூடியிருக்கும் நிலையை விடப் பிரிந்திருக்கும் நிலையிலேயே தலைவன் தலைவியின் உள்ளன்பும் உணர்வுப் போராட்டமும் அதிகமாகும் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**Abstract**

Sangam literature are divided into two levels, Kalavu and Karpu. The song is more resonant than the other songs. The reason for that is the material belonging to the other land. This article explains that in the state of being separated, the inner struggle of the leader and the leader is more than when they are together.

**திறவுச்சொற்கள் (Keywords):** களவு, கற்பு, இல்வாழ்க்கை, அன்பு, Kalavu, Karpu, Family life, Love.

### முன்னுரை

தலைவனையும் தலைவியையும் ஒன்றாகப் பிணைத்து வைப்பது அன்பு. அவர்கள் ஒருவர்மீது ஒருவர் அன்பு கொள்ளாவிட்டால் அவர்களுடைய இல்லறமும் நல்லறமாக நடவாது. அன்பிருந்தால் தான் அவர்களில் ஒருவர் தவறு செய்தாலும் மற்றவர் அத்தவற்றைப் பொறுத்துக் கொள்ளுவர். இவ்வுண்மை சங்க அகப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மகிழ்ச்சியுள்ள இல்லற வாழ்வின் அடிப்படையான அன்பு இன்றியமையா பங்கினை வகிக்கின்றது. அன்பு என்ற உள்ளத்து உணர்வை வரையறுத்துக் கூற முடியாது. ஒரு சில வாழ்வியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டும் செயல்பாடுகளைக் கொண்டும் அதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அன்பு என்பது ஒரு நெகிழ்ச்சிப் பண்பாதலால் அது தொடர்புடையாரிடத்தில் கண்ணீராய்த் தோன்றும். வாழ்வின் இன்பத்திற்கு அடிப்படையாகவுள்ளது அன்பு. அன்பு என்பது ஒருவர் நெஞ்சம் மற்றவர் நெஞ்சத்தோடு ஒன்றிக் கலப்பதாகும்.

### வள்ளுவர் கூறும் இல்லறம்

இல்லறம் நாகரிகத்தின் உயர்நிலையைக் காட்டுவதாகும். விலங்கு நிலைகளிலிருந்து வேறுபடுத்துவதாகும். நினைத்தவுடன் கூடி வெறுத்தவுடன் பிரிந்து போவது மாக்களுக்கு உரியவை. உயர் மக்களுக்கு ஆகாது. ஒருவனும் ஒருத்தியும் காதலால் பிணிப்புண்டு கடிமணம் புரிந்து கொண்டு இல்லறப் பொறுப்பேற்று இனிதே வாழத் தொடங்கிய காலம்தான் மாந்தர் உயர்நிலையும் பண்பாடும் உற்ற காலமாகும். இதனால்தான் இல்லறம் அல்லது நல்லறமில்லை என்று கூறியிருக்கின்றனர். வாழ்வியல் அறம் கூறப்புகுந்த வள்ளுவர் பாயிரத்திற்குப் பின் இல்வாழ்க்கை பற்றி எடுத்துரைத்து இதன் ஏற்றத்தைப் புலப்படுத்துகிறார். மேலும் அன்புடைமை என்ற அதிகாரத்தின் மூலம் அன்பின் உயர்வினை எடுத்துரைக்கிறார்.

### அன்பே உயர்வு

எவ்விதக் கட்டுப்பாடுமின்றித் தனிமனிதனாக வாழ்ந்த காலத்தில் மனிதனுக்கு அன்பாகிய நற்பண்பைக் குறித்து எவரும் கற்பிக்கவில்லை. இல்லறத்தில் ஈடுபட்டுக் குடும்பமாய்ச் சேர்ந்து சமூகமாய்க் கூடிவாழக் கற்றுக்கொண்டபோது சமுதாயத் தேவைக்கேற்ப மேலும் அவரவர் பின்பற்ற

வேண்டிய நீதிமுறைகளும் நற்சிந்தனைக் கூறுகளும் அன்பால் உயர்ந்த மாந்தரை உலகம் போற்றிச் சிறப்பிக்கும் மக்கட் சமுதாயம் உயர்ந்த பண்பாட்டுடன் சிறந்து விளங்குதல் வேண்டும்.

அன்பு இம்மை, மறுமை இன்பங்களைத் தரவல்லது என்பது முன்னோரது கருத்து. இல்லறம் இனிது நடப்பதற்கும், பிற உயிரிடத்து அருள் பிறப்பதற்கும் அன்பே காரணமாக இருக்கின்றது. அன்பின் பயன் இல்லற இனிமையை அளிக்கின்றது. இல்வாழ்வான் தன்னுடன் பழக நேரிடுகிற அனைவரிடத்திலும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். தெரிந்த, தெரியாத அனைத்து உயிரிடத்தும் அன்பு காட்டுதல் வேண்டும் என்பதுவே இல்லறத்தாரின் சிறந்த உயர்ந்த பண்பாகும். இதனை வள்ளுவர்,

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள்.72)

என்று கூறுகின்றார். அன்புடைமையால் இன்பம் தழைக்கும், அன்பு அறத்திற்கு மட்டுமல்ல மறத்திற்கும் துணையாக வல்லது.

"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (குறள்.76)

என்று வள்ளுவர் உணர்த்துகிறார். அன்பினால் பக்தி உண்டாகும். அன்பு சிறந்த நட்பையும் நற்குணங்களையும் ஒழுக்கமுடையவராக வாழும் தன்மையையும் தரவல்லது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள்.45)

என்று இல்லற வாழ்வின் பண்பும் பயனுமாக அன்பையும் அறத்தையும் வள்ளுவர் கூறுகின்றார்.

**தலைவனின் அன்பு வெளிப்பாடு**

தலைவியிடம் தலைவன் கொண்ட அன்புணர்வு ஒவ்வொரு துறையில் விளக்கமுறுகின்றன. இலக்கணத்தில் வகுத்துரைத்த அன்பின் ஐந்திணைகளின் உரிப்பொருள்களைப் பிரிவாயும், பிரிவின் நிகழ்வாயும் பிரிவை உள்ளடக்கியும் அமைந்திருந்தன. அப்பிரிவின் வழி அன்பு வெளிப்பாடு மிகுந்திருந்தது. "தலைவன் வினையின் காரணமாகவும், பொருள்தேடும் விருப்பத்தின் காரணமாகவும் தலைவியை விட்டுப் பிரியும் சூழல் நேர்கின்றது" (இராமகிருட்டிணன் ஆ., 1982) என்று விவரிக்கிறார். தலைவன் தன் நெஞ்சுக்கு உரைத்த பாடல்களின் வழி அவனது அன்பினை வெளிப்படுத்துகிறான். "பொருள் வயிற்பிரிவு என்னும் இத்துறை சங்கப் புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று. இன்பமும் கடமையும் போராடும் இடமாக நல்ல உணர்ச்சிகள் மோதிக் கொள்ளும் இடமாக இத்துறை அமைந்திருப்பதைக் காணலாம்" (மாணிக்கம் வ.சுப. 2009) என்று விளக்குகிறார்.

**அன்பின் காரணமாகச் செலவழுங்குதல்**

தலைவன் தலைவி மீது கொண்ட அன்பின் காரணமாகப் பிரிய மறுக்கின்றான். தலைவியையே பொருளாக எண்ணியும் அவளின் கண்ணீரைக் கண்டும், இளமையின் அருமை கருதியும் செலவழுங்குகின்றான். பொருள் வேட்கையினால் பிரிய நினைத்த தலைவன் தலைவியையே பொருளாக எண்ணிச் செலவு தவிர்க்கின்றான்.

"மருந்து எனின் மருந்தே வைப்பு எனின் வைப்பே
அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை
பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்
கல்கெழு கானவர் நல்குறுமகளே" (குறு. 71)

இப்பாடல்வழி, தலைவியையே தான் தேடிச் செல்லும் பொருளாகவும் அப்பொருளால் கிடைக்கும் இன்பமாகவும் எண்ணுகிறான். மேலும் பொருள் தேட விழைந்த தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறி இவளைப் பிரியாது இருத்தலே பொருள் என நினைத்துச் செலவு தவிர்த்தான். அறப்பயன், பொருட்பயன், இன்பப்பயன் அனைத்தும் தலைவியே என நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு தவிர்த்தான். மற்றொரு பாடலில் தலைவியைப் பிரியாமையே பொருள் என எண்ணிச் செலவு தவிர்த்தான் தலைவன்.

"மன்உயிர் அறியாத்துன் அரும் பொதியில்
சூருடை அடுக்கத்து ஆரம்கடுப்ப
வேனிலாளே தண்ணியள் பனியே" (குறு. 376)

என்ற இப்பாடலில் தலைவியின் இரு இயல்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தலைவி பனிக்காலத்தில் வெம்மையுடையவளாகவும் வெயில் காலத்தில் குளிர்ச்சியுடையவளாகவும் இருப்பதாக உணர முடிகிறது. ஆதலால் இவளைப் பிரியாமையே பொருள் என தன் நெஞ்சிற்குக் கூறி தலைவன் செலவு தவிர்த்தான்.

**இடைச்சுரத்தில் தலைவியை நினைத்தல்**

இடைச் சுரத்து நின்ற தலைவனின் உணர்வுகள் புற வாழ்வின் கடமையையும் அகவாழ்வில் தலைவியோடு கொண்ட மன ஒற்றுமைகள் இடையே நடைபெறும் மனப் போராட்டத்தையும் விளக்கி நிற்கின்றன. பொருள் தேட விரைந்த தலைவனின் நெஞ்சம் தலைவியின் நினைவால் மாறுபட்டுப் பிரிந்து வந்தமைக்காக வருந்தி நிற்கும். ஆகையால் வழியிடங்களிலே நின்று தலைவன் புலம்புகின்றான். ஆண் புறா பெண் துணையுடன் பயிலும் காட்சியைத் தலைவன் கண்டான். தலைவி தன்னை நினைந்து அழுது கொண்டிருப்பாள் என்ற எண்ணம் தலைவனை நெஞ்சழியச் செய்கிறது. இந்த உளவியலை,

"பொய்யா மரபில்பிணவு நினைத்து இரங்கும்
விருந்தின் வெங்காட்டு வருந்தும் யாமே" (நற்.103)

என்ற பாடல்வழி அறிய முடிகிறது. மேலும் அகநானூறு 249 வது பாடலில் தலைவி அடைந்த துன்பத்தினை இடைச்சுரத்தில் பட்டியலிட்டு நினைத்துப் பார்க்கிறான் அப்பாடல் தரும் செய்திகள்.

1. அழகு பொருந்திய அவளது முகம் விடியற் காலத்து நிலவினைப் போல அழகினை இழந்தது.
2. நிலம் நோக்கி முகம் கவிழ்ந்தாள்
3. கால் பெருவிரலால் நிலத்தைக் கிளர்ந்தாள்.
4. கண்கள் நீரினைச் சொரிந்தன.
5. கால்கள் நிலைத்து நில்லாது தடுமாறத் துன்பத்தால் நெஞ்சு கலங்கினாள்.
6. கருமணல் போன்ற கூந்தல் அவிழ்த்து முகத்தை அதனுள் மறைத்தாள்.
7. நாக்கு நடுக்கமுற பொருள் வயின் செலவு மாட்சிமை பெற்று திருத்தமுறுவதாக என்று கூறி பெருமூச்சு விட்டாள். இந்நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக நினைக்கின்றாள். ஆதலால் வருத்தத்தில் மூழ்கியுள்ள தலைவியை மறந்து இவ்விடம் தங்குதல் அரிதாக உள்ளது என்று மிகுந்த வருத்தமடைகிறான்.

**பாசறையில் தலைவன் நிலை**

வேந்தன் போர்வினைத் தணிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் தன் பிரிவுத்துயர் கெட தலைவியைக் கண்டு மகிழ வேண்டும் என்ற ஆர்வமும் பாசறைத் தலைவனின் கூற்றுகள் முழுவதும் காணப்படுகின்றன. கார்காலத்தில் திரும்ப வேண்டிய தலைவன் திரும்பாதது கண்டு கலங்கும் தலைவியின் கலக்கம் பற்றிய எண்ணமே பாசறையில் தலைவனைக் கலங்கச் செய்கிறது. அரசனின் போர்த் தொழிலும் இயற்கையில் கார் வரவும் ஒன்றாக வந்தபோது தலைவியை மறந்து போர்த் தொழிலில் ஈடுபாடு கொண்டோனாகக் காட்டப்படவில்லை. கார்காலம் கண்டதும் தலைவனின் போர் ஈடுபாடு மறைகிறது. தலைவியின் நினைவால் துயரையும் தூக்கமின்மையையும் எதிர்கொள்கின்றான்.

"வேறுபுல வாடை அலைப்பத்
துணியிலேம் தனியேம் பாசறை யேமே" (நற்.341)

என காரும் போரும் முன்நிற்கும் போது பாசறையில் இருந்து தலைவியை நினைந்து புலம்பும் தலைவனின் அன்புணர்வு மனம் அகத்தில் வெளிப்படுகிறது.

**வினைமுற்றி மீளும் தலைவனின் அன்பு புலப்பாடு**

வினைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகற்கு உரைக்கும் கூற்றுக்கள் தலைவியைச் சந்திக்கத் துடிக்கும் தலைவனின் மன வேகத்தையும் பாகனை விரைவுபடுத்தத் தலைவன் கையாளும் உத்திகளையும் விளக்கி நிற்கின்றன. வினை முடித்துத் தலைவன் வருவதற்குள் அவனது நெஞ்சம் விரைவாகத் தலைவியை நோக்கிச் செல்கிறது. நற்றிணை 21 வது பாடலில் பொருள் ஈட்டச் சென்ற

தலைவன் அவ்வினை முடித்து மீளுங்காலை, தேர்ப்பாகனை நோக்கி, "பாக நம் வீரர் பின்னே வருவாராக நீ விரைந்து தேரைச் செலுத்துக கானக்கோழி இரையைப் பெற்றுத் தன் பெடையை நோக்குவதை பார்ப்பாயாக" என்று கூறுகிறான். இவ்வண்ணமே தானும் தலைவியை நோக்கி மகிழக்கூடும் எனக் குறிப்பிடுகிறார்.

**தலைவியின் அன்பு புலப்பாடு**

தலைவன், தலைவி உறவு நிலையில் அமையும் செறிவு தலைவன்பால் உள்ள தலைவியின் அன்பை மையமாகக் கொண்டது. தலைவனைப் பிரிந்த தலைவி மிகுந்த துன்பமடைகிறாள். அவளின் வருத்த மிகுதியால் உடல் மெலிவு, பசலைபடர்தல், அழகழிதல் போன்ற மாற்றங்கள் ஏற்படுகின்றன. தலைவனின் பிரிவை அன்பின் காரணமாக ஆற்றியிருக்கும் நிலையினும் தலைவி படைக்கப்பட்டுள்ளாள். ஆற்ற இயலாத நிலையிலும் படைக்கப்பட்டுள்ளாள். தலைவி பொருளின் அருமையையும் தலைவனின் கடமையுணர்வையும் ஏற்றுக் கொண்டு ஆற்றியிருக்கின்றாள். எக்காலத்தும் தீய நெறியில் செல்லாத வாழ்க்கையும், பிறர் வீட்டு வாயிலில் சென்று நின்று இரவாத மேம்பாடும் ஆகிய இவ்விரண்டும் பொருளால் ஆகும் என்று தலைவன் கூறியதை நினைத்துத் தலைவி ஆற்றியிருக்கின்றாள் என்பதை,

"அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்" (அகம்.155)

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன. தாம் நோயுற்று வருந்துவதால் தலைவன் கருதிச் சென்ற பொருள் ஈட்டல் கைகூடாது போய்விடுமோ என்று கலங்கிய தலைமகள் 'நாம் நோயுற்றாலும் அவர்தம் செய்வினை முடிக்க' என்று தலைவனை வாழ்த்துகின்றாள்.

**வழியின் கொடுமை**

தலைவன் சென்ற வழியின் கொடுமையை எண்ணித் தலைவி பெரிதும் வருந்துகிறாள்.

"எவ்விளை ஞெகிழச் சாஅய் ஆய் இழை
நல்எழிற் பனைத்தோள் இருங்கவின் அழிய" (அகம்.188)

என்ற இப்பாடலில் தலைவி வழியின் கொடுமையையும் தலைவனின் இரக்கமற்ற செயலினையும் நினைத்து வருந்துகின்றாள். தலைவன் கடந்து சென்ற காடு வெப்பத்தையுடையது. பசுமை அற்றுக் காய்ந்தது. பருக்கைக் கற்களைக் கொண்ட அகன்ற இடத்தை உடையது. மூங்கில்கள் வெடித்துத் தெறிக்கும் தன்மைக் கொண்டது. இலையே இல்லாது பூக்களாகவே மலர்ந்திருக்கும் இலவ மரங்கள் கொண்ட செறிந்த மலையைக் கொண்டது. இத்தகைய வழிகளை நினைத்து வருந்துகிறாள்.

**தலைவி அழகினை மீண்டும் பெறுதல்**

தலைவன் வந்ததும் தலைவி மீண்டும் அழகினைப் பெறுகின்றாள். தலைவன் பிரிந்திருந்த பொழுது தலைவியின் அழகு சிதைந்ததைக் கொண்டு மனம் வெறுப்புற்றாள். தலைவன் திரும்ப வந்ததும் தலைவி தான் இழந்த அழகினை மீண்டும் பெற்றாள்.

"காண்மதி பாணா - இருங்கழிப்
பாய்பரி நெடுந்தேர்க் கொண்கனொடு
தான் வந்தன்று என்மாமைக் கவினே" (ஐங்.134)

பாணனே பெரிய கழிகளிடத்துப் பாய்ந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேரினைக் கொண்ட கொண்கன் வந்தான். அவனோடு சென்ற என் மாமைக் கவினும் வந்தது என்பதன் வழித் தலைவியின் அன்பு வெளிப்படுகிறது.

**முடிவாக,**

காதல் உணர்வு, கடமை உணர்வு என்ற இரண்டிற்கும் இடையில் பாலைத்திணை தலைவன் தவிக்கின்றான். சில நேரங்களில் காதல் உணர்வினால் தலைவியின் தனிமை நிலையினைப் புரிந்து கொண்ட செலவு தவிர்க்கின்றான். சில நேரங்களில் கடமை உணர்வு மேலிட பொருள் ஈட்டச் செல்கிறான். வினைமேல் சென்ற தலைவன் குறித்த பருவம் வராமைக்கண்டு தலைவி வருந்துகிறாள். மேலும் அழகழிவு, பசலைநோய் ஏற்படுகிறது. தலைவன் மீண்ட வந்த நிலையில் இழந்த அழகினை

மீண்டும் பெறுகிறாள். தலைவியைப் பேணும் பொறுப்பும், பாதுகாக்கும் தன்மையும் தலைவனுக்கு உரியதாகிறது.

**துணைநின்றவை (References)**


- இராமகிருட்டிணன். ஆ. (1982), அகப்பொருள் மாந்தா் ஓா் ஆய்வு, மதுரை : சரவணா பதிப்பகம்.
- மாணிக்கம். வ.சுப. (2009) தமிழ்க்காதல், சென்னை: ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ்.
- வையாபுரிப்பிள்ளை எஸ். (1967), சங்க இலக்கியம் பாட்டும் தொகையும், சென்னை : பாரி நிலையம்.

# சங்க இலக்கியத்தில் குயவர்கள் Potters in Sangam Literature

முனைவர் ஜா. அருணா | Dr. J. Aruna

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017. **Email:** wesleyaruna@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்களில் பயின்று வரும் குயவர்கள் மற்றும் குயவர்களால் வனையப்படும் மட்பாண்டங்கள் முதலான பொருட்கள் எவ்வாறு வனையப்பட்டது என்றும் எவ்வெற்றிற்குப் பயன்படுத்தினர் என்றும் குயவர்களின் பிற வாழ்வாதாரங்கள் குறித்தும் பொருண்மை அடிப்படையில் ஆய்வாகக் கட்டுரை உருப்பெற்றுள்ளது.

**Abstract**

In Sangam literature Learn will come Potters will be surrounded and Products such as pottery by potters How was it framed? And always for what purpose the potters. Other Livelihoods regarding the article have been developed as research based on objectivity.

**திறவுச்சொற்கள் (Keywords):** சங்க இலக்கியம், குயவர், மட்பாண்டம், வாழ்வாதாரம், sangam literature, potter, pottery, livelihoods.

தமிழில் கிடைக்கும் பழமையான இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை மட்பாண்டக்கலை - கலைஞர் குறித்த செய்திகள் பயின்று வருகின்றன. குறிப்பாகத் தமிழக நாட்டுப்புற வழக்காறுகளில் இக்கலையானது முதலில் தொழிலை அடிப்படையாகக் கொண்டு பயன்பாடுடைய பொதுக் கலையாகவும் பின், நுண்கலையாகவும் வளர்ந்து இன்று அறிவியலின் முன்னேற்றத்தால் எந்திர உதவியுடன் புதிதாகப் பரிணமித்திருப்பதை அறிகிறோம். இத்தகைய சிறப்பு வாய்ந்த இக்கலையும், இக்கலைதனை வனையும் குயவர்கள் குறித்தும் அதன்மீது தமிழர்தம் வாழ்வும், கலை கலாச்சாரமும் மண்பாண்டக் கலையோடு இரண்டறக் கலந்துள்ள முறை குறித்தும் ஆய்ந்தறிந்து தக்க சான்றுகளுடன் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

### குயவர் - பெயர்க்காரணம்

'குயவர்' என்ற இனம் செய்யும் தொழிலின் பெயரால் ஏற்பட்ட பழமை வாய்ந்த ஓர் இனமாகும். இக்கலை பழமை வாய்ந்த ஒன்றென்பதிலிருந்து, மட்பாண்டம் வனைபவர்களைக் 'குயவர்' என்ற சொல் கொண்டு அழைத்தனர். எட்கர் தாஸ்டன் என்பவர் "குயவர் என்ற சொல் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து உருவாயிற்று; அதில் 'கு' என்பது மண்ணுலகத்தையும், இதன் இடப்பொருளாக அவர்கள் பயன்படுத்தும் மண்ணையும் உணர்த்தும். 'அவன்' என்பது தொழில் செய்யும் மனிதனையும் குறிக்கும்" என்கிறார்.

மண்பாண்டங்கள் செய்பவர்களைக் குயவர்கள் என்கிறோம். குயவன் என்ற சொல்லுக்கு மண்வேலை செய்பவன் (Potter) என்று பொருள்.

### குயவர் தோற்றம் பற்றிய செய்திகள்

மனித சமூக வளர்ச்சியில் வேளாண்மை யுகத்தில் மட்பாண்டத் தொழிலும் நல்ல இடத்தைப் பெற்றிருந்ததால் குயவர்களும் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். இவர்கள் தங்கள் குலம் தோன்றியது குறித்துப் பல கதைகளைக் கூறுகின்றனர். 'குலாலன்' அம்புச முனியை முதலாகக் கொண்ட சந்ததியினை இவனைச் 'சுயம்பு' என்பர். பிராமணத் தந்தைக்கும், சூத்திரத் தாய்க்கும் பிறந்தவர்கள்

குலாலர்கள். ஆகவே தந்தையின் தொழிலான பூசாரித் தொழிலையும் குலாலர் மேற்கொண்டதாகச் சொல்வர்.

எட்கர் தர்ஸ்டன் "குயவர்கள் பிராமணத் தந்தைக்கும், சூத்திரத் தாய்க்கும் பிறந்தவர்களென்றும் வேதங்களின் கருத்துப்படி இவர்கள் குருகுலத்தவர்களென்றும், இந்த குருக்கள் மட்பாண்டங்களைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்தவர்களென்றும், அந்தப் பாண்டம் அவர்களால் செய்யப்பட்டது" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

இக்கருத்தை வலுச் சேர்ப்பதற்குச் சான்றாகக் குயவர்கள், முப்புரி நூல் அணிவது, தலையின் முன்பகுதியைச் சிரைத்துக் கொள்வது, குடுமி வைத்திருப்பது, பூசாரித் தொழில் செய்வது, வடமொழி மந்திரங்களைப் பூசைக்குப் பயன்படுத்துவது போன்ற பிராமணியப் பிரதிபலிப்புகளாக உள்ளன. ஆனால் "உணவு முறையில் இவர்கள் அசைவர்கள், குலாலர்கள் அனைவரும் பூசாரிகளாக இருப்பதில்லை. சிலர் பானை செய்கிறார்கள்" என்று செ. குமார் மட்பாண்டத் தொழிலாளி கள ஆய்வின் போது இக்கருத்தைத் தெரிவித்தார்.

**சங்ககாலக் குயவர்நிலை**

இலக்கியம் என்பது மக்கள் வாழ்க்கையின் காலக்கண்ணாடி. இலக்கியங்களில் குறிப்பிடப்படும் கருத்துக்கள் அவ்வக்கால மக்களைப் பற்றியதாக அமையும். அவ்வகையில் சங்க இலக்கியங்கள், சங்க காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றி எடுத்தியம்புவதாக அமைகின்றன. சங்க இலக்கியங்களில் மண்பானை பற்றியும் குயவர்களைப் பற்றியும் அநேக இடங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

"கண்ணி கட்டிய கதிர அன்ன
ஒண்குரல் நொச்சித் தெரியல் சூடி
யாறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்
'சாறு'என நுவலும் முதுவாய்க் குயவ
ஈதும் ஆங்கண் நுவன்றிசின் மாதோ" (நற். 200)

ஊர்க்குயவன் திருவிழா நிகழ்வதை அறிவிக்கத் தலைப்படுகின்றான். அவனைத் தோழி அழைத்துத் தலைவனின் வாயிலாகப் பாணனின் பொய்மொழியை ஊராரெல்லாம் அறியுமாறு கூறுக, இப்பாணன் பொய்மொழி தன் வாழ்க்கையில் ஓயாத அல்லலை விளைவித்தது என்றும், ஊர்த்திருவிழாவை அறிவிக்கின்ற குயவனைத் தன் வாழ்க்கை அனைத்தையும் கூறவேண்டும் என்று வேண்டுவதின் மூலம் சமூக நிகழ்வுகளில் குயவர்களின் பங்கினை அறிய முடிகிறது.

"மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடி
பலிக்கள் ஆர் கைப்பார் முதுகுயவன்
இடு பலி நுவலும் அகன்தலை மன்றத்து
விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர் " (நற்.293)

நீலமணி போலும் பூங்கொத்துக்களைக் கொண்ட நொச்சி மாலையைச் சூடிப் பலிகளை இடுகின்ற செயல் புரியும் கையினையுடைய மிக முதிய குயவன் தான் இடுகின்ற பலியை உண்ணுதற்காகத் தெய்வங்களையும் காக்கைகளையும் அழைப்பான்.

சங்க காலத்தில் ஊர் மக்களுக்கு அங்கு நடைபெறும் விழாவினைப் பற்றி அறிவித்தல் மற்றும் விழாவில் பலியிடுதல் இவற்றைக் கொண்டு ஆராய்கையில் சங்க காலத்தில் குயவர்களே விழா நிகழ்த்தும் உரிமை பெற்றிருந்ததை அறிய முடிகிறது. பழந்தமிழகத்தில் குயவர்கள் விழா நடத்துவோராக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

குயவர்கள் குறிபார்த்தல், பேயோட்டுதல் ஆகிய வினைகளை நிகழ்த்தி வருவதோடு சிறுதெய்வக் கோயில்களில் பூசாரிகளாகவும் செயல்படும் நிலை பண்டைய மரபின் எச்சமாகக்

கருதப்படுகிறது. இன்று கோயில்களில் அந்தணர் ஆற்றும் பணியினைச் சங்க காலத்தில் குயவர்கள் ஆற்றியதாகத் தெரிகிறது.

இன்றும் குயவர்கள் அய்யனார் போன்ற சிறுதெய்வங்களுக்குப் பூசை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் செய்கின்ற தொழில் வழிபாட்டோடு தொடர்புடையதாக இருப்பதன் மூலம் பழங்காலத்தில் குயவர்கள் பெற்றிருந்த சிறப்பும், அந்நிலை இன்றும் தொடர்ந்து வருகிறது என்பதையும் உணர முடிகிறது. கிராம தேவதைகளுக்கும் குறுஞ்சாமிகளுக்கும் இவர்களே பூசாரிகளாகவும் திகழ்கின்றார்கள்.

**சங்க இலக்கியங்களில் மட்பாண்டக்கலையும் கலைஞர்களும்**

மட்பாண்டம் பற்றிய செய்திகள் சங்ககாலச் செய்யுள் தொட்டு இக்கால ஹைக்கூக் கவிதை வரை பயின்று வருதலைக் காணமுடிகிறது.

**குறுந்தொகை**

"நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்ப்
பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல" (29)

**ஐங்குறுநூறு**

"புதுக்கலத் தன்ன கனிய வாலம்" (303)

**நற்றிணை**

"மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடி
பலிக்கள் ஆர்கைப் பார' முதுகுயவன்" (293)

**புறநானூறு**

"கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே" (228)

என்று விளிப்பதன் மூலம் கட்டுரைக்கு அரண் செய்வதாகவும் உள்ளது.

குயவர்கள் மூதூரில் இருந்தனரென்பதும் மண்கலத்தைச் சூளையிலிட்டுச் சுட்டனரென்பதும் அப்போது மிக்க புகை எழுந்ததென்பதும் முடவனார் பாடலில் பின்வரும் மூன்று குறிப்பிடுகின்றன.

"இருள்திணிந் தன்ன குருஉத்திரள் பரூஉப்புகை
அகலிரு விசும்பி னூன்றுந் சூளை
நனந்தலை மூதூர் கலஞ்செய் கோவே" (228)

கோவூர்க்கிழார் சோழன் நலங்கிள்ளியின் வள்ளன்மையைக் குறிக்கும்போது

"வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த
பசுமண் குரூஉத்திரள் போல, அவன்
கொண்ட குடுமித்தும் இத்தன்பணை நாடே" (32)

என்று வியந்து பாராட்டுகிறார். இதில் 'வேட்கோ' என்பது குயவரையும் 'வேள்' என்பது மண்ணையும் 'கோ' என்றால் மண் தொழில் செய்பவரையும் குறிக்கும்.

சேர மன்னனின் படைத்துணைவனாகிய பிட்டங்கொற்றன் என்பவன் போரில் கிடைத்த செல்வத்தையெல்லாம் ஈந்து புகழ் பெற்றான் என்பதைப் புறநானூற்றுப்பாடலின் மூலம் கருவூர்க் கதவிள்ளைச் சாத்தனார் பாடும்போது,

> "மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்
> மான்றடி புழுக்கிய புலவுநாறு குழிசி" (168)

என்கிறார். சந்தன விறகு கொண்டு மட்பாண்டத்தில் சமைக்கப்பட்ட கறியுணவை அறிந்து மகிழ்ந்தான் என்ற செய்தியை இதனால் அறிய முடிகிறது. (புறநானூறு குழிசி - புலால் நாறும் பானை).

இவ்வாறு பரிசும் பட்டமும் கொடுத்துக் குயவர்களைப் போற்றி வந்தனர். குயம் என்ற மூலச் சொல்லில் இருந்துதான் ஆண்பாலைக் குறிக்கும் குயவன் என்ற சொல்லும் பெண்பாலைக் குறிக்கும் குயத்தி என்ற சொல்லும் வழங்கி வந்திருக்கின்றது. குயவர் இனத்தைச் சார்ந்த பெண்பாற் புலவர் வெண்ணிக் குயத்தியார் ஆவார். இவர் கரிகாற் பெருவளத்தானைப் பற்றி பாடிய பாடல் புறநானூற்றில் 66 ஆம் பாடலாக அமைந்துள்ளது.

**அகநானூறு**

> "குறுநெடுந் தூம்பொடு முழவுபுணர்ந் திசைப்ப
> கார்வான் முழக்கின் நீர்மிசைத் தெவுட்டும்" (301)

என்ற அடிகளின் மூலம் மண்கொண்டு செய்யப்பட்ட மண்முழவு (இசைக்கருவி) பற்றிய செய்தியை அறிய முடிகிறது.

**பொருநராற்றுப்படை**

> "மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ்
> ஒண்நுதல் விறலியர் பாணி தூங்க" (109-110)

என்ற அடிகளின் மூலம் மண் பூசப்பட்ட முழவு ஒலிக்க, அம்முழவோசைக்கு ஒத்திசைக்கும் பண்ணோசைக்கு ஏற்ப விறலியர் ஆடினர் என்பதும் அறியப்படுகிறது.

**பெரும்பாணாற்றுப்படை**

> "காடிவைத்த கலனுடை மூக்கின்
> மகவுடை மகடூப் பகடுபுறம் துறப்ப" (57, 58)

என்னும் தொடர் ஆடுவதற்காகக் கொண்டு வரப்பட்ட வாரால் இறுக்கிக் கட்டிய மத்தளத்தை ஒப்பக்காடி வைத்த மிடா வண்டியின் கயிற்றால் வரிந்து கட்டப்பட்டிருந்தது என்றும், சாடி என்பது தாழியைக் குறிக்கும் சொல் என்பதையும்,

> "வல்வாய்ச் சாடியின் வழைச்சு அற விளைந்த" (280)

என்னும் தொடர் காட்டுகிறது. மேலும் ஆழ்ந்த கிணற்றில் அமைந்த இல்லூற்றைத் தோண்டி உவரி நீரைக் கொணர்ந்து பழைய விளிம்பு உடைந்த பானைகளில் வார்த்து உலையை முரிந்த அடுப்பில் ஏற்றிச் சோறு சமைத்தனர். இதனை,

> "வல்ஊற்று உவரி தோண்டி, தொல்லை
> முரவுவாய்க் குழிசி முரி அடுப்பு ஏற்றி
> வாராது அட்ட, வாடு ஊன் புழுங்கல்" (98-100)

என்று கூறுவதிலிருந்து பானை முதலான புழங்கு பொருட்களைப் பயன்படுத்தி வந்துள்ளமை அறியப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் மண்ணாலான பொருட்களைக் (பாண்டம்) குறித்த இன்னபிற சொற்களும் இடம்பெறுகின்றன.

1. குழிசி (புறம். 168)
2. கலம் (அகம். 308)
3. தாழி (அகம். 165, 369)
4. சாடி (புறம். 297)
5. மண்டை (கலி. 106)
6. தகம்பு (நற். 84)
7. கன்னல் (நெடுநல். 63)
8. அகல் (புறம். 228)

இதுமட்டுமன்றி, முழவு, பத்தர், தடவு, மிடா, அகழி, இந்தளம், கடம், முகை, குடம், வள்ளம் போன்ற சொற்களாலும் மட்பாண்டங்கள் வழங்கப்பெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

தமிழின் பழமையான இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்களில் குயவர்கள் பற்றியும் குயவர்கள் வனையும் பாண்டங்கள் பற்றியும் செய்திகள் கிடைக்கப்பெறுவதின் மூலம் மட்பாண்டக் கலையின் தொன்மையை அறிய முடிகிறது. மேலும் சங்க காலத்தில் குயவர்கள் விழா நடத்துவோராக இருந்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் குறிபார்த்தல், பேயோட்டுதல் போன்ற செயல்களையும் நிகழ்த்தி வந்துள்ளனர். கோயில்களில் பூசாரிகளாகவும் இருந்து சமூக மதிப்புடன் காணப்பட்டனர் என்பது இக்கட்டுரையின் வழிப் புலனாகிறது.

**துணைநின்றவை (References)**


- துரைசாமிபிள்ளை ஔவை. (உரை.), (2011), ஐங்குநுறூறு, சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- துரைசாமிபிள்ளை ஔவை.(உரை.), (2009), புறநானூறு, சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
- துரைசாமிபிள்ளை ஔவை. (உரை.), (2012), அகநானூறு, சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
- பாலையன் அ.ப.(உரை.), (2010), நற்றிணை, சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
- புலியூர்க்கேசிகன் (உரை.), (2008), பெரும்பாணாற்றுப்படை, சென்னை: சாரதா பதிப்பகம்.
- Thurston E., (1909), Caste and Tribes of South India, Madras: Government Press.

# கலை இலக்கியங்களில் எதார்த்தவாதத்தின் தோற்றம் The Origin of Realism in Art and Literature

முனைவர் மு.இராஜசேகரன் | Dr.M.Rajasekaran

Associate Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620017.
E-mail: rajasekaranheber@gmail.com, ORCiD: https://orcid.org/0000-0002-8129-1887

**ஆய்வுச்சுருக்கம்**

'கலை இலக்கியங்களில் எதார்த்தவாதத்தின் தோற்றம்' எனும் இக்கட்டுரை எதார்த்தவாதத்திற்கு முன்னிருந்த கலை இலக்கிய நிலைமைகளைப் பற்றியும், எதார்த்தவாதம் தோன்றுவதற்கு ஏற்ற சூழ்நிலை நிலவி வந்ததையும் கூறுகிறது. அதன்பின்னர் 'எதார்த்தம்' என்ற சொல் உருவான விதம் குறித்துக் கூறிவிட்டு, ஓவியங்கள், நாவல்கள், நாடகங்கள் முதலான கலை இலக்கிய வடிவங்களில் எதார்த்தவாதம் தோற்றம் பெற்றதைக் குறித்து விவரிக்கிறது. 1850 களில் குஸ்டாவ் கோர்பெட் தனது ஓவியங்களை எதார்த்தவாத பாணியில் வரைந்ததிலிருந்து இக்கோட்பாடு ஓவியங்களில் தொடக்கம் பெற்றது. மேலும் இக்கட்டுரை பிரான்ஸ் நாவலாசிரியரான பால்சாக் என்பவரின் நாவல்களிலிருந்து எதார்த்தவாத பாணி தொடங்கியது என்பதைச் சுட்டிக்காட்டி அது நாவல்களில் எவ்விதம் வளர்ந்து வந்தது என்பதையும் கூறுகிறது. மேலும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாடகங்களில் எதார்த்தவாதம் நுழைந்தது குறித்தும், எதார்த்தவாத நாடக ஆசிரியர்கள் பலரைக் குறித்தும் கூறி, இன்றைய காலகட்டத்தில் கலை இலக்கியங்களில் எதார்த்தவாதத்தின் பங்கு என்ன என்பதையும் விளக்குகிறது.

**Abstract**

This article, 'The Origin of Realism in Art and Literature', deals with the conditions of art and literature that existed prior to realism and the conditions under which realism arose. Thereafter, it describes the origin of the term 'reality' and describes the emergence of realism in art and literature such as paintings, novels, plays, etc. This theory has been in paintings since Gustav Corbett painted his paintings in a realist style in the 1850s.The article also points out that the realist style began with the novels of Balzac, the author of the French novel, and how it developed in the novels. It also talks about the entry of realism into dramas in the late 19th century and the many realistically playwrighters, and explains the role of realism in art and literature in today's period.

**திறவுச்சொற்கள் (Keywords):** எதார்த்த வாதம், ரொமாண்டிசிஸம், இயற்கை வாதம், எதார்த்த அரசியல், எதார்த்தவாத அழகியல், எதார்த்தவாத நாவல், Realism, Romanticism, Naturalism, Realist Politics, Realist Aesthetics, Realist Novel.

## முன்னுரை

எதார்த்தவாதம் என்பது செயற்கைத் தன்மை இல்லாமலும், புனைவுகள் இன்றியும், இயற்கைக்கு அப்பாற்பட்ட கூறுகளைத் தவிர்த்தும், புலப்படுத்த வேண்டிய நிகழ்வை அல்லது காட்சியை உண்மையாகச் சித்திரிக்கின்ற முயற்சியாகும். அதற்காக இது இயற்கையை அப்படியே பிரதிபலிக்கின்ற இயற்கைவாதம் அன்று; அதற்கு மிகவும் நெருக்கத்தில் இருப்பது. கலையில் இயற்கைவாதம் என்பது பெரும்பான்மையளவில் இயல்புத்தன்மை மாறாதவாறு ஒரு பொருளைச் சித்திரிப்பதாகும். இந்த இயற்கை வாதத்திலிருந்து சிறிதளவு வேறுபட்டதாக, பிரெஞ்சுப் புரட்சிக்குப்

பின்னர் பிரான்ஸில் தோன்றிய கலை இலக்கிய இயக்கமே எதார்த்தவாதமாகும். இடதுசாரியின் எழுச்சியும், அதன் விளைவாக எழுந்த சாதாரண மக்கள் மீதான பார்வையும், உள்ளதை உள்ளவாறே காட்டவேண்டிய நிர்பந்தம் குஸ்டாவ் கோர்பெட் முதலான கலைஞர்களுக்கு ஏற்பட்ட தன் விளைவாகவே எதார்த்தவாதம் உருவாயிற்று. இதனால் அதுவரை பிரெஞ்சுக்கலை இலக்கியங்களில் ஆதிக்கம் செலுத்திவந்த ரொமாண்டிசிஸம் என்னும் இலட்சியவாதம் நிராகரிக்கப்படத் துவங்கியது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்கைவாதம் எதார்த்த வாதத்திலிருந்து பிரிந்து அரசியல், மற்றும் சமூகப் பிரச்சனைகளைப் பேசாதபடிக்கு, இயற்கையின் வரலாறு, உயிரியல் அறிவியல் போன்றவற்றைப் பேசும் இயக்கமாக மாறிவிட்டது. அதன்பின்னர் எதார்த்தவாதம் ஓவியங்கள், நாவல்கள், நாடகங்கள், இசை நாடகங்கள், இத்தாலிய நவீன திரைப்படங்கள் போன்றவற்றில் கோலோச்சத் துவங்கியது.

ரொமாண்டிசிஸத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள கலை இலக்கியங்கள் தெரிந்து கொண்ட பாதையே ரியலிசம் ஆகும். தொடக்கத்தில் இதுசில எதிர்ப்புகளைக் கொண்டிருந்தாலும் கலை இலக்கியங்களில் முதல் நவீன இயக்கமாக எதார்த்தவாதம் அங்கீகரிக்கப்படுகிறது. நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதர்கள், நிகழ்ச்சிகள், சூழ்நிலைகள், மனக்குழப்பங்கள் போன்றவற்றைக் கலை இலக்கியங்களில் துல்லியமாக விவரிக்கும் பண்பை எதார்த்தவாதிகள் கொண்டிருந்தனர். "உண்மைப் பண்புகளைக் கற்பனைக்கு இடந்தராமல் விளக்குவது" என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். (அரங்க. சுப்பையா, 2007:305) அறிவொளி காலத்துக்கும், தொழிற்புரட்சிக்கும் பின்னர், பாரம்பரிய கலை இலக்கியங்கள் மற்றும் சமூக அமைப்புகள் காலாவதியாகி விட்டன என்று கூறி எதார்த்தவாதம் இவற்றை நிராகரித்துவிட்டது.

"ஜெர்மானியச் சொல்லான 'Real Politik' என்பதிலிருந்து ரியலிஸம் என்னும் சொல் வந்தது. 'Real' என்பது எதார்த்தத்தைக் குறிக்கிறது. 'Politik' என்பது அரசியலைக் குறிக்கிறது. 'எதார்த்த அரசியல்' என்ற பதத்தை பிஸ்மார்க் முதன்முதலில் பயன்படுத்தினார். ஐரோப்பிய அரசியலில் அதிகாரம் எல்லாருக்கும் சமஅளவில் பகிரப்பட வேண்டியே எதார்த்த அரசியல் எனும் சொல்லை அவர் பயன்படுத்தினார்." (எம்.ஜி.சுரேஷ், 2005:80) இதிலிருந்தே ரியலிஸம் எனும் சொல் பிறக்கிறது.

1840களில் பிரான்ஸில், ஓவியத்தில் தொடங்கி எதார்த்தவாதம் புரட்சியை ஏற்படுத்தியது. கலை பற்றிய கருத்தாக்கங்களை அது விரிவுபடுத்தியது. புரட்சி மற்றும் பரவலான சமூக மாற்றத்தால் குழப்பமான மனநிலையில் வேலை செய்த எதார்த்தவாத ஓவியர்கள், பாரம்பரிய கலையின் கருத்துமுதல்வாதம் ஓவியங்கள் மற்றும் இலக்கியத்தின் பெருமைகளை சமகால வாழ்க்கை நிகழ்வுகளுக்கு ஏற்ப மாற்றினர். இது பெரும் வரலாற்று ஓவியங்களுக்கொத்த மதிப்பை, சமூகத்தின் விளிம்புநிலை பற்றிய ஓவியங்களுக்கு வழங்கியது. ஒவ்வொரு நாளும் அவர்கள் வரையத் தெரிவு செய்து கொள்ளும் ஓவியங்கள் கலையையும் வாழ்க்கையையும் ஒன்றிணைக்கும் அவண்ட்- கார்டு விருப்பத்தின் ஆரம்பகால வெளிப்பாடாக இருந்தது. அதுவரை இருந்த ஓவிய நுட்பங்களை நிராகரித்ததோடு இருபதாம் நூற்றாண்டு நவீனத்துவத்தின் பல வரையறைகளை மாற்றி அமைத்தது.

நவீன உலகமும் அதற்குரிய அன்றாட வாழ்க்கையுமே கலையின் கருப்பொருள்கள் என்று எதார்த்தவாதம் கருதியதால் இதுவே நவீனத்துவத்தில் முதல் இயக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாரம்பரிய மதிப்பீடுகள் மற்றும் பழைய நம்பிக்கைகளை மறுஆய்வு செய்து, அவற்றைக் கவிழ்ப்பதன் மூலம் தன் தேடலைத் தொடங்கி, நவீனத்துவத்தின் முற்போக்கான லட்சியங்களைத் தழுவிக் கொண்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மையப்பகுதியில் வாழ்க்கை சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார ரீதிகளில் எவ்விதத்தில் கட்டமைக்கப்பட்டது என்பதில் எதார்த்தவாதம் அக்கறை கொண்டிருந்தது. உண்மையில் 1850 க்கும் 1880 க்கும் இடையில் உருவான நாவல்கள் மற்றும் ஓவியங்களில் எதார்த்தவாதம் ஒரு முக்கியமான இயக்கமாகப் பார்க்கப்பட்டது. இதுவே முதன் முதலில் வெளிப்படையான நிறுவன எதிர்ப்புக் கொண்டதும், ஒத்துழையாமை செய்கின்ற கலை இயக்கமாகவும் இருந்தது. தொழில்புரட்சியினாலும், செய்தித்தாள் மற்றும் ஊடகங்களின் பரவலினாலும் கலைஞர்கள் தம் படைப்புகளை சுயமாக வெளியிடும் வசதியை எதார்த்தவாதம் ஏற்படுத்தியது. பிரெஞ்சுக் கலை இலக்கியவாதிகள் கிளாஸிசிஸம் மற்றும் ரொமான்டிசிஸம்

இரண்டின் செயற்கையான பாசாங்குத்தனத்தை நிராகரித்து, கலைப்பணியில் சமகாலத் தேவையின் அவசியத்தை ஏற்றுக்கொண்டனர். அவர்கள் மத்திய வர்க்க மற்றும் கீழ்த்தட்டு மக்களின் வாழ்க்கை, அவர்தம் தோற்றங்கள், பிரச்சினைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றைச் சித்திரிக்க முயன்றனர். உண்மையில் அவர்கள் சமகாலவாழ்க்கை மற்றும் சமூகத்தின் அனைத்துப் புறக்கணிக்கப்பட்ட அம்சங்களையும் மீட்டுருவாக்கம் செய்யும் படியாகப் புறப்பட்டனர்.

**ஓவியங்களில் எதார்த்தவாதம்**

எதார்த்தவாத அழகியலை அறிவித்து, அதனைப் பயிற்சி செய்த முதல் ஓவியர் குஸ்டாவ் கோர்பெட் ஆவார். 1854 இல் ' தி ஸ்டுடியோ' எனும் தலைப்பின் கீழ் அவர் வரைந்த எதார்த்தவாத பாணி ஓவியங்கள் உலக ஓவியக்கண்காட்சியால் நிராகரிக்கப்பட, அவற்றையும் இன்னும் பிற படைப்புகளையும் அவர் 'எதார்த்த வாதம் ஜி. கோர்பெட்' எனும் பெயரில் பிரத்தியேக ஓவியக்கண்காட்சியை நடத்தினார். Alicja Zelazko, (britannica.com/art/realism-art/The-novel) கோர்பெட் தனது கலையில் லட்சியவாதத்தைக் கடுமையாக எதிர்த்தார். அதற்குப்பதிலாக சமகாலச் சித்திரிப்பை முதன்மைப்படுத்த வேண்டும் என பிறகலைஞர்களை வலியுறுத்தினார். அன்றாட வாழ்க்கையின் காட்சிகளை வெளிப்படையாக சித்தரிப்பதை ஓர் உண்மையான ஜனநாயகக் கலையாக அவர் கருதினார்.

1849 இல் அவர் வரைந்த 'பரியல் அட் ஓர்னான்ஸ்' மற்றும் 'ஸ்டோன் பிரேக்கர்ஸ்' போன்ற ஓவியங்கள் பொதுமக்களையும் விமர்சகர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கின. ஓவியங்களில் ஏழ்மை நிலையிலிருந்த அலங்கரிக்கப்படாத விவசாயிகளும் தொழிலாளிகளும் வெளிப்பட்டிருந்தனர். இது கலை உலகில் ஒருவன் முறை எதிர்வினையை உருவாக்கியது. கோர்பெட்டின் படைப்புகளின் பாணியும் பொருண்மையும் பார்பிஸன் ஓவிய பாணியைப் பின்பற்றிய தியோடர்ரூஸோ, சார்லஸ் பிரான்காய்ஸ்டாப்னி, ஜூன்பிரான்காய்ஸ்மில்லட் போன்றவர்களால் ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்டிருந்தன.

1930 களின் தொடக்கத்தில் பிரெஞ்சு கிராமமான பார்பிசோனை சீரமைப்புச் செய்யும்படியான நோக்கத்துடன் சில ஓவியர்கள் அங்கே குடியேறினர். இவர்கள் ஒவ்வொருவரும் தமக்குரிய தனித்தன்மைகளில் வரைந்து கொண்டிருந்தாலும் அவர்கள் அனைவரும் பிரம்மாண்டங்களை ஓவியமாக்குவதை விட சாதாரணங்களையும், எளிமைகளையும் ஓவியமாக்குவதில் விருப்பம் கொண்டிருந்தனர். எதார்த்தத்தில் இன்னுமொரு முக்கியமான பிரெஞ்சு ஓவியர் ஹானர்டௌமியர். இவர் அரசியல் கேலிச்சித்திரங்களை அதிகமாக வரைந்தவர். பிரான்ஸின் சேரிகளிலும் வீதிகளிலுமே இவர் தன் நாயகர்களையும் நாயகிகளையும் கண்டெடுத்தார். கோர்பெட்டைப் போலவே இவரும் ஒரு தீவிரமான ஜனநாயகவாதி. கேலிச்சித்திர கலைஞர் என்ற வகையில் அரசியல் அறிவுறுத்தலில் தனது திறமையை வெளிக்கொண்டு வந்தார். டௌமியர் தனது ஓவியங்களில் ஆற்றல்மிக்க நேரியல் பாணியைப் பயன்படுத்தி பிரெஞ்சு சமூகத்தில் காணப்பட்ட ஒழுக்கக்கேடுகளையும் அருவருப்புகளையும் வெளிப்படையாக ஓவியங்களில் படைத்துக்காட்டினார்.

பிரான்சுக்கு வெளியே எதார்த்தவாத ஓவியங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் செல்வாக்கு அடைந்தன. அங்கேவின் சுலோஹோமரால் சக்தி வாய்ந்த வெளிப்பாடுகளுடன் படைக்கப்பெற்ற கடல்சார்ந்த ஓவியங்களும், தாமஸ்ஈகின்ஸின் படகுகாட்சிகள், உருவ ஓவியங்கள் மற்றும் பிறபடைப்புகள் யாவும் சமகாலச் சிக்கல்களை வெளிப்படையாகத் தோலுரித்துக்காட்டின.

இருபதாம் நூற்றாண்டின் கலைகளில் எதார்த்தவாதம் தனித்துவமான போக்கைக் கொண்டிருந்தது. மேலும் வழக்கமான அன்றாட வாழ்க்கையின் நேர்மையான தேடல் மற்றும் இலட்சியவாத கருத்துக்களை முன்வைக்க கலைஞர்களுக்கு எதார்த்தவாதம் ஒரு வடிகாலாக அமைந்திருந்தது. அவர்களின் சமூக மற்றும் அரசியல் விமர்சனங்களை எடுத்துச் செல்வதற்கு இது ஒரு வழித்தடமாக அமைந்தது. 'தி எய்ட்' என்ற அமெரிக்க ஓவியர்களின் குழுவுக்கு கரடுமுரடான நகரவாழ்க்கையின் சிக்கல்களை வெளிப்படுத்துவதற்கு எதார்த்தவாத பாணி பயன்பட்டது. மறுபுறத்தில் 'நியூசச்லிச்கெய்ட்' எனும் ஜெர்மன் கலை இயக்கம் முதல் உலகப்போருக்குப் பிந்தைய

ஜெர்மனியின் ஏமாற்றம் மற்றும் எரிச்சல் முகத்தை வெளிப்படுத்த எதார்த்தவாத பாணியைக் கையில் எடுத்தது. அந்தக் காலத்தில் அமெரிக்காவில் சமூக எதார்த்தவாதம், அமெரிக்கச் சமூக அநீதிகள் மற்றும் தீமைகளைச் சித்திரிப்பதில் இதேபோன்ற கடுமையான மற்றும் நேரடியான எதார்த்தவாதத்தை ஏற்றுக்கொண்டது. 1930 தொடங்கி 1991 வரை இருந்த சோவியத் ஒன்றியத்தில் உருவாக்கப்பட்ட சோஷலிச எதார்த்தவாதம் என்று அழைக்கப்பட்ட மார்க்சிய அழகியல் அங்குள்ள வாழ்க்கையின் உண்மையான கண்ணாடியாக இருந்தது. அரசின் சித்தாந்தத்திற்கும் தொலைநோக்குச் சிந்தனைகளுக்கும் தேவையான சமூகத்தைப் படைப்பதற்கு இந்த சோசலிச எதார்த்தவாதத்தைப் பயன்படுத்திக் கொண்டு சோஷலிச இலட்சிய மாந்தர்களைச் சித்திரித்தது.

**நாவல்களில் எதார்த்தவாதம்**

நாவல்கள் பெரும்பாலும் எதார்த்தவாதத்தையே கொண்டிருக்கின்றன. கதை கூறலில் எதார்த்தத்திற்கு மாறுபடாமல் சொற்களையும் சம்பவங்களையும் அமைக்க வேண்டியிருப்பதால் பெரும்பாலான நாவல்கள் எதார்த்தவாத நாவல்களாகவே அமைந்து விடுகின்றன. (க.பூரணசந்திரன், 2012:104) இலக்கியத்தில் எதார்த்தவாதத்தின் முன்னோடியாக விளங்கியவர் நாவலாசிரியர் ஹானர்டிபால்சாக். இவருடைய 'லாகாமெடிஹூமைன்' எனும் நாவலில் பிரஞ்சு சமூகத்தைப் பற்றிய முழுமையான ஆவணங்களை உள்ளடக்கிய விவரணைகள் இடம்பெற்று இருந்தன. ஆனாலும் 1850 கள்வரையிலும் பிரெஞ்சு ஓவியர் கோர்பெட் தன் ஓவியங்களின் மூலமாக எதார்த்தவாத அழகியலை பிரான்சில் அறிவிக்கும் வரை இலக்கிய எதார்த்தவாதம் தோன்றியிருக்கவில்லை. கோர்பெட்டின் ஓவிய பாணியைப் பிரபலப்படுத்திய பிரெஞ்சு பத்திரிகையாளர் 'சாம்ஃப்ளூரி' தன்னுடைய 'லி-ரியலிஸ்மி' எனும் தொகுப்பில் இலக்கியத்தில் எதார்த்தவாதக் கோட்பாடுகளை முன்மொழிந்தார். இதில் அவர் 'ஒரு நாவலின் நாயகன் தன்னிகரில்லாத் தலைவனாக இருக்க வேண்டியதில்லை, அவன் ஒரு சாதாரண மனிதனாக இருந்தால் போதும்' என்றார்.

1857இல் குஸ்டாவ் ஃப்ளாபேயின் 'மேடம்பவாரி' எனும் நாவல் வெளிவந்தது. ரொமாண்டிசிஸம் பெண்களைத் தேவதைகளாகக் கொண்டாடிக் கொண்டிருந்த நேரத்தில் எம்மாபவாரி என்ற இளம்பெண் தனது பூர்ஷ்வாத்தனமான கனவுகளுக்காக சோரம் போன கதை வாசகர்களை அதிரடித்தது. எதிர்பூர்ஷ்வா நாவலான இது எதிர் ரொமாண்டிசிஸ நாவலாகவும் ஆனது. அதனாலேயே ரியலிஸ நாவலாகவும் கொண்டாடப்படுகிறது.(எம். ஜி. சுரேஷ், 2017,80) இவருடைய இன்னுமொரு எதார்த்தவாத நாவல் 'எல் எஜுகேஷன் செண்டிமென்டேல்' (1870) என்பது. இது மன்னர் லூயிஸ் ஃபிலிப்பின் ஆளுகையின் கீழிருந்த பிரான்ஸ் பற்றிய முழுவிவரணைகளும் அடங்கிய நாவலாகும். ஜூல்ஸ் மற்றும் எட்மன்ட்கோன்கோர்ட் எனும் இலக்கிய சகோதரர்கள் முக்கியமான எதார்த்தவாதிகள். இவர்களின் தலைசிறந்த எதார்த்தவாதப் படைப்பு 'ஜெர்மனி லேசர்டியூக்ஸ் (1864) எனும் நாவலாகும். சமூகத்தில் காணப்படும் மேல் மற்றும் கீழ்த்தட்டு மனிதரிடையே காணப்படும் சமூக உறவுகளை வெளிப்படையாகத் தங்கள் நாவல்களில் விவரிப்பது இவர்களது பாணியாகும்.

எதார்த்தவாதக் கோட்பாடுகள் 1860 மற்றும் 70களில் ஐரோப்பிய இலக்கியத்தின் மைய நீரோட்டத்தில் நுழைந்தன. பற்றற்ற தன்மை மற்றும் புறத்தோற்றம் மீது எதார்த்தவாதம் ஏற்படுத்தும் கவனயீர்ப்பு, துல்லியமான அவதானிப்பு, சமூகச்சூழல் மீதான விமர்சனம், தார்மீகத் தீர்ப்பு பற்றிய மனிதப் புரிதல்கள் போன்றவை யாவும் ஊடுபாவாகப் பின்னப்பட்டு இலக்கியங்கள் பிறந்தன. இங்கிலாந்தில் சார்லஸ் டிக்கன்ஸ், அந்தோணிட்ரோலோப் மற்றும் ஜார்ஜ் எலியட் ஆகியோரும், ரஷ்யாவில் இவான்துர்கனேவ், லியோடால்ஸ்டாய் மற்றும் பியோதர் தஸ்தயெவ்ஸ்கி ஆகியோரும், அமெரிக்காவில் வில்லியம் டீன்ஹோவெல்ஸ் மற்றும் கோட்பிரீட்கெல்லர் ஆகியோரும், ஜெர்மனியில் தாமஸ்மாண் என்பவரும் தங்கள் நாவல்களில் எதார்த்தவாதக் கூறுகளை இணைத்துக் கொண்டனர்.

**நாடக அரங்குகளில் எதார்த்தவாதம்**

நாடக அரங்குகளில் எதார்த்தவாதம் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு பொது இயக்கமாக மலர்ந்து, நாடகம் நிஜவாழ்க்கைக்கு நெருக்கமான நம்பகத்தன்மை கொண்டதாக மாற உதவியது. எதார்த்தவாத நாடக ஆசிரியர்களான ஸ்காண்டிநேவியாவின்

ஹென்றிக் இப்ஸன் மற்றும் ஆகஸ்ட் ஸ்ட்ரின் பெர்க், ரஷ்யாவின் ஆண்டன்செகாவ் மற்றும் மாக்சிம்கார்க்கி ஆகியோர் தங்களுடைய நாடகங்களில் ரொமாண்டிசிஸத்தை நிராகரித்துவிட்டு எதார்த்தவாதச் சித்திரிப்புகளைப் புகுத்தினர். சிக்கலான கதைக்களத்தை விட்டுவிட்டு சமகாலச் சிக்கல்களை எளிமையாக மக்கள் முன் காட்சிப்படுத்தினர். கவிதை மொழி மற்றும் ஆடம்பரமான வசனங்களைத் தவிர்த்துவிட்டு, அதற்குப்பதிலாக இயல்பான, பேச்சுமொழி சார்ந்த உரையாடல்களைப் பயன்படுத்தினர். எதார்த்தவாதம் புராண நாடக வசனங்களையும் மிகைநடிப்பையும் மாற்றிவிட்டு, இயல்பான நடிப்பையும் அங்க அசைவுகளையும் பேச்சுநடையில் அமைந்த உரையாடல்களையும் சேர்த்துக்கொண்டது. அரங்குகளும் கூட பிரம்மாண்டத்தை விட்டுவிட்டுச் சாதாரணமான சுற்றுப்புறங்களைக் கொண்டவையாக மாறிப்போயின.

**முடிவுரை**

கலை இலக்கியங்களில் எதார்த்தவாதத்தை நாம் மறுக்க முடியாத அளவில் அதன் பங்களிப்பு அமைந்திருக்கிறது. எதார்த்தவாதம் ஓவியத்தில் தொடங்கியிருந்தாலும், புகைப்படத் தொழில்நுட்பத்திற்குப் பிறகு அத்துறையில் அது நிலைத்திருக்கவில்லை. அச்சு அசலான பிம்பத்தைப் புகைப்படம் வெளிப்படுத்தும்போது எதார்த்த ஓவியங்கள் பயனற்றுப் போய்விட்டன. ஆனாலும் எதார்த்தவாதம் கதை சொல்லலில் தன்னுடைய பங்களிப்பை அதிகரித்துக் கொண்டது. இன்றளவும் சிறுகதைகள், நாவல்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், வலைத்தளத் தொடர்கள் போன்றவை யாவும் எதார்த்தவாதத்தைப் பெருமளவில் பயன்படுத்திக் கொள்கின்றன.

**துணைநின்றவை (References)**


- சுப்பையா அரங்க., (2007), இலக்கியத் திறனாய்வு : இசங்கள் - கொள்கைகள், சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ்.
- சுரேஷ் எம்.ஜி., (2005), இஸங்கள் ஆயிரம், சென்னை: மருதா வெளியீடு.
- பூரணச்சந்திரன் க., (2012), கதையியல், திருச்சிராப்பள்ளி: அடையாளம் வெளியீடு.
- Alicja Zelazko, http://britannica.com/art/realism-art/the-novel.

# தேறல் - அன்றும் இன்றும் USAGE OF 'THAERAL' - BEFORE AND NOW


## டே.எட்வின் சார்லஸ் | D.EDWIN CHARLES

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017.

**Email:** edwindavid2402@gmail.com



**ஆய்வுச்சுருக்கம்**

இந்த ஆய்வின் நோக்கம் விருந்தோம்பல் மற்றும் பண்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கிய தமிழர்கள் பொழுதுபோக்கு மற்றும் உற்சாக மிகுதிக்காகப் பயன்படுத்திய, மனமயக்கம் தரக்கூடிய 'தேறலை' எனும் மதுவகையைச் சங்ககாலத்திலும் தற்காலத்திலும் பயன்படுத்திய, பயன்படுத்தும் முறையை ஒப்பிட்டு விளக்க முனைகிறது. சங்க இலக்கியச் சான்றுகளை அதற்குச் சான்றாகக் கொண்டுள்ளது. தமிழர்கள் தொடக்கத்தில் கள்ளை, பிறரை(புலவர்களை) மகிழ்விக்கவும், போரில் வெற்றி பெற்றதற்காகவும் வீரர்கள் பயன்படுத்தினார்கள். அப்படி, அறிவை மயக்கும் பானங்களில் ஒன்று தேறல். அந்தத் தேறல் இன்று மதுபான வடிவில் மாற்றம் அடைந்துள்ளது. இன்று, இளைஞர்கள் எல்லா (இன்ப, துன்ப நிகழ்வுகளில்) நேரங்களிலும் மதுவை அதிகம் பயன்படுத்துகிறார்கள். இதனால், பல இளைஞரின் வாழ்க்கையும், பெண்களின் வாழ்வும் கேள்விக்குறியாக உள்ளது.

**Abstract**

The purpose of this study is to learn about the hospitality system and how the party has evolved. During the Sangam period alcohol was used to entertain others and for success. One of those types of alcohol was 'Thaeral'. Nowadays, the youngsters, Minors are mostly use alcohol for everything. Due to this, the youngster's lives become questionable. This research paper is based on Thaeral and the songs and references about it in the Sangam period.


**திறவுச்சொற்கள் (Keywords):** இளைஞர்கள், மதுபானம், தேறல், கொண்டாட்டங்கள், நவநாகரிகம், Youngster, Liquor, Thaeral, Treat, Modernity.

**முன்னுரை**

தமிழர்கள் பழங்காலத்திலிருந்து விருந்தோம்பல் முறையைக் கடைப்பிடித்து வாழ்ந்து வருகிறார்கள். மனித வாழ்வில் விருந்தும், மருந்தும் பிரிக்க முடியாது ஒன்று. விருந்தும் மருந்தும் மூன்று நாட்களுக்கு என முன்னோர் கூறுவார்கள். "விருந்தே தானும், புதுவது புனைந்த பழமை மேற்றே" (தொல்.பொருள்.540) என விருந்து என்றால் புதுமை என கூறுகிறார் தொல்காப்பியர். அரசனைப் புகழ்வதற்காக நீண்ட தூரத்திலிருந்து வரும் புலவர்களுக்குச் செய்யப்படும் உபசரிப்பும், திருமணம் முடிந்து முதல்முறையாக வீட்டிற்கு வருபவர்களுக்குச் செய்யப்படும் உபசரிப்புகளும் விருந்து என்றே சொல்லப்படுகிறது.

தேறலைத் தொடக்க காலத்தில் மகிழ்ச்சியான நேரத்தில் தான் பயன்படுத்தியிருக்கிறார்கள். வெற்றி பெற்றபோது தங்களுடைய வெற்றிக்களிப்பை வெளிப்படுத்துவதற்காக கள்ளை பயன்படுத்தினார்கள். சங்ககாலத்தில் மன்னர்கள் தன்னைப் புகழ்ந்து பாடி மகிழ்விக்க வரும் பாணர்களையும், புலவர்களையும் அவர்களுக்கு தேவையான உணவுகளையும், ஆடைகளையும் கொடுத்தார்கள். சில மன்னர்கள் மட்டும் உற்சாகம் தரக்கூடிய கள், தேறல் போன்றவற்றை அவர்களுக்குக் கொடுத்து மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறார்கள். தேறல் என்றால் "தெளிவு, தெளிந்த

மது, கள்ளின் தெளிவு, நொதித்துப்போன பழச்சாறு, தேன், பூக்களிலிருந்து எடுக்கப்படும் தேன்" எனப் பலவகையான பொருளைத் தருகிறது சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம். கூறுகிறது.

**சங்க இலக்கியத்தில் தேறல்**

"தேறல்" என்பது மதுபானத்திற்குரிய ஒரு பொதுச்சொல்லாக ஆரம்பக்காலத்தில் இருந்திருக்க வேண்டும். அது இயற்கையாகவே உருவாக்கப்பட்டது. தென்னங் கள் (அல்லது) பனங்கள் இயற்கை முறையில் கிடைப்பவை. மண்ணுக்கடியில் புதைத்தும் மயக்கம் தரக்கூடிய தேறலையும் தயாரித்து உள்ளனர். பூக்களிலிந்து கிடைக்கும் தேனினை ஒன்றாகச் சேர்த்து வைத்து உண்பதும் தேறலாக சொல்லப்பட்டு வந்தது. மதுபான வகைகளில் குளிர்ச்சி பொருந்திய வகைகளிலும், சூடான முறையில் இந்த, தேறலை மக்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். தேறலைப் பற்றி சங்க இலக்கியத்தின் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. எனினும், சுருக்கம்கருதி, எட்டுத்தொகையில் புறநானூறு, அகநானூறு ஆகிய இரண்டு நூல்களில் இடம்பெற்றுள்ள தேறல் தொடர்பான பதிவுகளை விவாதிக்கின்றது இக்கட்டுரை.

**புறநானூற்றில் தேறல்**

புறநானூற்றில் நக்கீரர் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடிய ஒரு பாடலில்,

"யவனர் நன்கலம் தந்த தண்கமல் தேறல்" (புறம்.56:18)

தன்னைப் பாடிப் புகழும் புலவர்களுக்கு நன்மாறன் யவனர்களால் அதாவது, கிரேக்கர்களால் செய்யப்பட்ட நல்ல அழகிய கலங்களில் குளிர்ச்சி மிக்க மணத்துடன் கூடிய கள்ளைக் கொடுத்திருக்கிறான் என்பதை அறிய முடிகிறது.

உறையூர் முடமோசியார் கடையெழு வள்ளல்களில் ஒருவனான ஆய் பற்றிய பாடலில் அந்த ஊரில் வாழும் குறவர்கள் மூங்கில்குழாயில் புளித்த மதுவை வைத்திருந்து, அதனைப் பருகி, குரவைக்கூத்து ஆடினார்கள் என்கிற செய்தியை அறிய முடிகிறது.

"...குறவர் மக்கள்

வாங்குஅமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து" (புறம்.129:1-2)

கபிலர் தன் நண்பரான பாரியைப் பாடிய புறநானூற்றுப் பாடலில்,

"நிலம்புதைப் பழுனிய மாட்டின் தேறல்

புல்வேய்க் குரம்பைக் குடிதோறும் பகிர்ந்து

நறுநெய்க் கடலை விசைப்ப சோறு அட்டு" (புறம்.120:12-14)

பாரியின் பறம்புமலையின் சிறப்புகளையும் மக்களின் வாழ்க்கை முறையையும் கூறும் கபிலர் அங்கு நிலத்தில் புதைக்கப்பட்ட முதிர்ந்த மதுவை, சிறிய வீடுகள் உள்ள இடங்களில் எல்லாம் பருகக் கொடுப்பார்கள். அதனுடன், சேர்த்து கடலை, சோறு போன்றவற்றையும் கொடுத்திருப்பதைக் கூறுவதை அறிய முடிகிறது.

உறையூர் தாமோதரனார்_பிட்டன்கொற்றனைப் பாடிய பாடலில் மன்னன் தன்னை நாடி வந்த விறலியர்க்கும், பாணர்க்கும் பலவகையான பொருளைக் கொடுத்துள்ளார்கள். விறலிக்கு(பெண்) யானையின் தந்தத்தில் செய்த பொருளைக் கொடுத்தான். பாணர்களுக்கு(ஆண்) உணவுடன், மதுவையும் கொடுத்திருக்கின்றான் என அறிய முடிகிறது.

"ஒளிதிகழ் முத்தம் விறலியர்க்கு ஈந்து

தார்பிழிக் கொண்ட வெங்கட் தேறல்" (புறம்.170:11-12)

பாணர்களுக்குத் துணியால் வடிகட்டி பிழிந்த தேறலைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இப்பாடலடிகள்வழி அறிய முடிகிறது.

புறநானூற்றில் அதிகப் பாடலை பாடியவர் ஔவையார்.

"ஏந்திய

நார்அரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து" (புறம்.367:6-7)

அணிகலன்கள் அணிந்த மகளிர் பொற்கலத்தில் ஏந்தித் தந்த மதுவைப் பருகி மகிழ்ந்திருந்தார்கள் என இதன் பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. ஔவையார் அதியமானின் மகன் பொகுட்டெழினியைப் பாடிய பாடலில்,

"உண்எனத் தேட்கடுப்பு அன்ன நாட்படுதேறல்" (புறம்.392:156)

உண்ணுக என்று தேள்கடி போன்ற பழைய மதுவை விண்மீன்களைப் போன்ற கிண்ணங்களில் பெய்து உண்ணச் செய்தான் எனக் கூறப்பட்டுள்ளது. தேள் கடித்தால் எப்படி இருக்குமோ அதுபோல மதுபானங்களை அருந்தும் போது உடல் முழுவதும் ஏதோ ஒரு மாற்றம் ஏற்படுவதை இப்பாடல் உணர்த்துகிறது.

"நன்றும்

அரவு வெகுண்டன்ன தேறலோடு சூடு தருபு

நிரயத்து அன்ன என் வறன் களைந்து"(புறம்.376:13-14)

இப்பாடலில், பாம்பு தீண்டிய போது உடலில் எப்படி உணர்வு ஏற்படுமோ அதுபோல உள்ள மதுவுடன், இறைச்சியையும் தந்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்தியதை அறிய முடிகிறது. அதியமான் இறந்தபோது ஔவையார் பாடிய கையறுநிலைப் பாடலிலும் கள் பற்றிய குறிப்பு உள்ளது. புறநானூற்றில் மாங்குடி மருதனார் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய பாடலில்

"இரவலர் மக்கள் ஈகை நுவள

ஒண்தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய

ஆங்கினிது ஒழுகுமதி" (புறம்.24:30-32)

ஒளிடைய வளையல்களை அணிந்த மகளிர் கொடுத்த, மணமுடைய என்பதால் இதில் வாசனை அதிகரிக்க பல வகையான பழங்கள் சேர்க்கப்பட்ட பழைய கள்ளை, வந்தவர்களுக்குக் கொடுக்க, அதனைப் பருகி மகிழ்ந்து வாழ்வாயாக என வாழ்த்தியுள்ளார்.

கோதமனார் தருமபுத்திரனைப் பாடிய பாடலில்,

"செங்கண் மகளிரொடு சிறுதுனி அளைஇ

அம்கட் தேறல் ஆய்கலத்து உகுப்பக்

கெடல்அறிந் திருவர்" (புறம்.366:14-16)

“பெருமகனே! உழுது முதிர்ந்த எருது வைக்கோலை தின்றாற் போல சிவந்த கண்களை உடைய மகளிரோடு சிறிது ஊடல் கொண்டு, அழகிய கள்ளின் தெளிவை கலத்தில் இட்டுத் தர, குறையாத வளமுடையவனே!” என இப்பாடலில் அவனுடைய பெருமைகளோடு இதனையும் சேர்த்துக் சொல்லப்பட்டுள்ளது. புறநானூற்றில் மூவன் பெருந்தலைச் சாத்தனாரின் பாடிய பாடலில்

"நெய்தல்அம் கழனி நெல்அரி தொழுவர்

கூம்புவிடு மென்பிணி அவிழ்ந்த ஆம்பல்

அகல்அடை அரியல் மாந்தி" (புறம்.209:2-4)

நெய்தல் பூக்கள் மலர்ந்த வயலில் நெல்லை அறுக்கும்போது மலர்ந்த மெல்லிய இதழ் விரிந்த அல்லியின் அகன்ற இலையில் மதுவை ஊற்றி அதனைப் பருகி ஆரவாரம் செய்து ஆடுவர். மதுபானம் அருந்த அந்த இடத்தில் கிடைக்கும் அல்லியினுடைய இலையை அவர்கள் மது அருந்தும் கிண்ணமாகப் பயன்படுத்தி இருப்பதை இப்பாடலில் அறிய முடிகிறது. புறப்பொருள் வெண்பாமாலையின் வெட்சித்திணையில்,

"தொட்டிமிழுங் கழன்மறவர்

மட்டுண்டு மகிழ்தூங்கின்று" (கொளு-14)

என்று, காலில் கட்டப்பட்டு ஆரவாரிக்கும் வீரக்கழலையுடைய வெட்சி மறவர்கள், தாம் வென்ற மகிழ்ச்சியாலே, கள்ளுண்டு ஆடினார்கள் என உண்டாட்டுத் துறை எடுத்தியம்புகிறது.

**அகநானூற்றில் தேறல்**

எட்டுத்தொகை அக இலக்கியங்களில் ஒன்று அகநானூறு. அகநானூற்றிலும் கள் பற்றிய குறிப்புகள் பல பாடல்களில் காணப்படுகின்றன.

"சாரற் பலவின் சுளையோடு ஊழ்படு

பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்" (அகம்.2:3-4)

என்ற பாடலில் மலைப்பாங்கான இனிமையான சுவையுடன் கூடிய பலாப்பழங்கள் நிறைய இருந்தன. அந்த, பலாச்சுளையிலிருந்து தேன் வடிந்து கொண்டே இருந்தது என்கிறது. அகநானூற்றின் மற்றொரு பாடலில்,

"தீம்பழப் பலவின் சுளைவிளை தேறல்

விளை அம்பின் இளையரோடு மாந்தி"(அகம்.182:3-4)

வேங்கை மலர்களைச் சூடிக்கொண்டு, தோளில் வில்லை மாட்டிப் பலாப்பழத்தில் விளைந்த தேனைப் பருகி என்ற பொருளில் உள்ளது.

"நனைவிளை நறவின் தேறல் மாந்தி

புனைவினை நல்இல் தருமணல் குவைஇ" (அகம்.221:1-2)

புதுமணல் பரப்பித் திருமணம் நடந்த இடத்தில் தேன் போன்ற இனிமையான தேறலைப் பருகினார்கள் என இப்பாடல் கூறுகிறது. தெளிவான கள்ளைக் குடித்துவிட்டுத் தங்கள் அழகிய குடங்களை பக்கத்தில் வைத்துவிட்டு, தன் கணவன்மாரின் பண்பற்ற பரத்தமை ஒழுக்கத்தைப் பழித்துப் பாடினார்கள் என்பதை,

"தெண்கள் தேறல் மாந்தி, மகளிர்

நுண்செயல் அம்குடம் இரீஇ" (அகம்.336:6-7)

என இப்பாடல் கூறுகிறது. அம்மூவனார் பாடிய ஒரு பாடலில்,

"தோப்பிக் கள்ளோடு துரூஉப்பலி கொடுக்கும்

போக்குஅருங் கலைய புலவுநாறு அருஞ்சுரம்" (அகம்.35:9-10)

இப்பாடலில் "நெல்லினால் சமைத்த கள்ளோடு, செம்மறியாட்டுக் குட்டியைப் பலியிடும் இடத்தைக் கடந்து" எனச் சொல்லப்படுகிறது. நெல்லினால் சமைத்த உணவை மண்ணுக்கடியில் நீண்ட நாட்களுக்கு ஊற வைத்து, அதனை, நீண்ட நாட்களுக்குப் பிறகு எடுத்துப் பயன்படுத்தும் போது, அது கள் போன்ற மயக்கத்தை தரும் என்பதை இப்பாடலின் மூலம் நாம் அறிய முடிகிறது.

**இன்றைய நிலையில் தேறல்**

"மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு" என்ற வாசகத்தைப் பல இடங்களில் விளம்பரப்படுத்தினாலும், அதனால், வருமானம் மட்டும் குறையவில்லை. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு மதுபானங்களான கள், பனங்கள், தென்னங்கள் சாராயம், சுண்டக்கஞ்சி இன்னும் பலவற்றை மயக்கம் தரும் பொருள்களாக, உற்சாக பானமாகப் பயன்படுத்தினார்கள். பின் நாட்களில் சாராயம், கள், சுண்ட கஞ்சி போன்ற பொருள்கள் அரசால் தடை செய்யப்பட்டன. ஆனால், மதுபானங்கள் மட்டும் தனியாரால் விற்பனை செய்யப்பட்டு வந்தது. அப்போது, விலையை அவர்களை நிர்ணயம் செய்து வந்தார்கள். கடைகளும் அந்த அளவிற்கு இல்லை. தற்போது மாநில அரசும் தனியார் தங்கும் விடுதிகளும் மதுவிற்பனையை உரிமத்துடன் நிர்வகித்து வருகின்றன.

இன்றைய இளைய சமூகத்தினர் எதற்கெடுத்தாலும் கொண்டாட்டம் (Treat) என்ற நினைப்பில் மதுவை பயன்படுத்தி வருகிறார்கள். பழைய காலத்தில் மகிழ்வான, சாதனைகளைச் செய்தால் அதாவது, போரில் வெற்றி பெற்றபோது மதுவை உண்டார்கள். வேலை செய்யும்போது உடலில் அலுப்பு ஏற்படாமல் இருக்க மதுவைக் குடித்து இருக்கிறார்கள். ஆனால், இன்று ஏதாவது விழா, திருவிழா, துக்கம், மகிழ்வு என எதற்கும் மது முக்கியமான இடத்தைப் பெறுகிறது. பெரியவர்கள் முன்பு மதுவை அருந்த சற்று பயந்து இருந்தார்கள். ஆனால் இன்று இளைஞர்கள் எதற்கும் பயப்படாமல் அருந்தத் தொடங்குகிறார்கள். அருந்தியதற்குப் பிறகு, சமூகத்திற்குப் பலவிதமான சிக்கலையும் ஏற்படுத்துகிறார்கள். இப்படியே தாங்கள் அதற்கு அடிமையாக வேண்டிய சூழலும் ஏற்பட்டு விடுகிறது. பல பெண்கள் இன்று வாழ்க்கை இழந்தும் வருகிறார்கள். இதனால், அந்தக் குடும்பத்தின் எதிர்காலமே கேள்விக்குறியாக மாறுகிறது. பலர் மதுபானங்களை அருந்துவதால் உடலில் பல உறுப்புகளை இழந்து நடைபிணமாக வீட்டிலே இருக்கிறார்கள். இன்றைக்கு மதுபானம் அருந்துவது ஒரு நவநாகரிகம்(modernity) என எண்ணித் தங்கள் வாழ்க்கையைப் பல இளைஞர்கள் இழந்து கொண்டிருக்கிறார்கள்.

**துணைநின்றவை (References)**


- கௌமாரீஸ்வரி எஸ். (பதி.ஆ.), (2008)., தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை, சென்னை: சாரதா பதிப்பகம்.
- சாரங்கபாணி (பதி.ஆ.), (2001), சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தஞ்சை: தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு.
- சுப்பிரமணியன் ச.வே. (உரை.ஆ.), (2010) புறநானூறு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- சுப்பிரமணியன் ச.வே. (உரை.ஆ.), (2010) அகநானூறு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- சோமசுந்தரனார் பொ.வே. (உரை.ஆ.), (2004), புறப்பொருள் வெண்பாமாலை, சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

# குறுந்தொகைப் பெண்பாற் புலவர் பாடல்களில் சமூகம் Society in Kurunthogai Womens Songs

இரா. யசோதா | R. Yasotha

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017
**Email:** yasodhavasu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

"குறுந்தொகைப் பெண்பாற்புலவர் பாடல்களில் சமூகம்" என்ற தலைப்பில் பெண்பாற்புலவர் பாடல்களில் காணலாகும் சமூகச்சிக்கல்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. சமூகக் காரணிகளாக பொருள்தேடல், காதல், காமம், பரத்தை நிலை பற்றி ஆராயப்பட்டுள்ளன. குறுந்தொகைப் பாடல்களில் பெரும்பான்மையும் தலைவன், தலைவியரது மன அகவெளிப்பாடே அதிகம் காணப்படுகிறது. அத்தகைய அகமனக்கூறுகளால் சமூகத்தில் நிகழும் உளவியல் சிக்கல்களைப்பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. இதில் பொருள் தேடலால் நேரும் சிக்கல் பற்றியும், நிலையாமை பற்றியும், தலைவன் வேட்கையால் தலைவியின் உளவியல் சிக்கல் பற்றியும், பரத்தை சமூகத்தில் ஏற்படும் தாக்கம் பற்றியும் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டுள்ளன. பெண்பாற் புலவர் பாடல்களின் வழி அவர்களின் உள்ளப்போக்கினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**Abstract**

Under the title "Society in Kurunthogai Womens Songs," the social issues seen in the songs of female poets are explained. Social factors have been explored based on material search, love, lust and sex. Most of the short songs are mostly about the leader and leader's mental expression.This article is based on investigate the psychological problems that occur in society due to such internal reason. The purpose of this article is to explore the path of female poets in their songs.

**திறவுச்சொற்கள் (Keywords):** சமூகம், பெண்பாற் புலவர்கள், பொருள்தேடல், காதல், உளவியல், Society, Feminism, Materialism, Love, Psychology.

**முன்னுரை**

பண்டைத்தமிழர் வாழ்வானது இயற்கையோடு இயைந்த வாழ்வாகப் பழந்தமிழ் இலக்கியப் பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. சங்க காலத்தில் திணை, நிலம் வாரியாக சமூக வாழ்வானது கட்டமைக்கப்பட்டுள்ளது. மக்கள் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நில அடிப்படையில் வாழலாயினர். காடுகள், மலைகள், வயல்கள், கடற்கரைப்பகுதிகள் என அனைத்து நிலப்பகுதிகளையும் வாழ்விடங்களாகக் கொண்டு வாழ்ந்து வந்ததாகச் சங்க இலக்கியப் பாடல்கள் விளக்குகின்றன. இப்பாடல்களில் சமூக வாழ்வியலாக போர், கொடை, காதல், வீரம், நட்பு, இல்லறம், கற்பு, பண்பாடு, சடங்குகள் போன்றவை இடம்பெறுவதைக் காணலாம். குறுந்தொகைப் பாடல்களும், மேற்கண்ட சமூக வாழ்வியலை மையமிட்டே பின்னப்பட்டுள்ளன. அக வாழ்விலும், புற வாழ்விலும் சமூக நெறிகளின் ஒழுங்கு முறைக்குள், வரையறுக்கப்பட்டு சங்கப்பாடல்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறுந்தொகைப் பெண்பாற் புலவர் பாடல்களில் காணும் சமூகம் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

**பெண்பாற் புலவர்கள்**

தமிழின் தொன்மையையும், பெருமையையும் பறைசாற்றி நிற்பது சங்கப்பாடல்கள். அரசன் முதல் குறமகளிர் வரை பல்வேறு தொழில் செய்பவர்களும், எவ்வித பேதமின்றி பாடல்கள் பாடியுள்ளனர். ஆண்களைப் போலவே சங்ககாலப் பெண்களும் கல்வியில் சிறந்து விளங்குவதோடு பெண்கள் கவிபாடுவதிலும், வீரத்தை வெளிப்படுவத்திலும் திறமை மிக்கவர்களாக இருந்தனர். அதோடு கைம்மை நிலை, உடன்கட்டை ஏறுதல் போன்ற அவலநிலைகளையும், அடிமைத்தனத்தையும் சுட்டிக்காட்டுவதிலும் பெண்கள் தயங்குவதில்லை. இங்கு "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்று பெண்களின் விடுதலைக்காகக் குரல் கொடுக்கும் மகாகவியின் வரிகளை நாம் நினைவில் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையைப் பலரும் பல்வேறு கணக்கில் பதிவிட்டுள்ளனர். அதிகமாகக் குறிப்பிடப்படுவது 41 பெண்பாற் புலவர்கள். குறுந்தொகையில் மொத்தம் 13 புலவர்கள் உள்ளனர். ஆதிமந்தி, ஊண்பித்தை, ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், கழார் கீரன் எயிற்றியனார், காக்கைப் பாடினியார், நன்னாகையார், நெடுமல்லியத்தை, பூங்கணுத்திரையார், வருமுலையார், வெண்புதியார், வெள்ளிவீதியார் போன்றோர். இவர்களில் ஔவையார், வெள்ளிவீதியார், காக்கைப்பாடினியார் போன்றோர் அதிகமான பாடல் பாடியுள்ளனர். இப்புலவர்கள் பாடல்களின் வழி சமூகக் கருத்துக்கள் கீழ்க்கண்டவாறு ஆராயப்பட்டுள்ளன.

**சமூகம்**

சமூகம் என்பது மக்கள் வாழும் அடிப்படைத் தேவைகளைப் பொறுத்தே கட்டமைக்கப்பட்ட ஒரு வடிவமாகும். அந்த வகையில் சங்க இலக்கியமானது பொருளாதார அடிப்படையில் நானில மக்களின் வாழ்வியலைப் பொறுத்து அமைகிறது. நால்வகை நிலங்களிலும் காணும் இயற்கை வளத்தை ஆதாரமாகக் கொண்டே பொருளாதாரம் அமைகிறது. இதனை,

"இயற்கைச் சூழலில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவாய் ஆதாரங்கள் குறைகின்றபோது வருவாய்ப் பெருக்கத்திற்கான வழி முறைகளில் திணை நில மக்கள் ஈடுபட்டு நின்றதனையே சங்கப் பாடல்கள் பொருளாக்கியுள்ளன" (கு.வெ. பாலசுப்பிரமணியன், 1994:37) சங்ககால மக்களின் வாழ்வியல் கூறுகளாக காதல், போர், வீரம், கொடை, கற்பு, பண்பாடு போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுச் சமூகமாக உருவாக்கப்பட்டுள்ளன. குறுந்தொகைப் பாடல்கள் அனைத்தும் காதலும், காமமுமாக பொருளுக்கான பிரிவை நோக்கியே சித்திரிக்கப்பட்டுள்ளன. அகநூல் என்பதால் போர்க்கான பிரிவுகளோ, மன்னனது கொடைக்கான செய்திகளோ குறைவு.

**பொருள் தேடல்**

மனித வாழ்விற்குச் செல்வம் இன்றியமையாத தேவையாகும். இது எளிதில் கிடைப்பதில்லை. கடின உழைப்பாலும், முயற்சியாலுமே கிடைக்கின்றன. பொருளீட்டும் திறம் சங்க இலக்கியங்களில் அவரவர் நிலம் சார்ந்தே அமைகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களின் இயற்கை வளங்களைக் கொண்டே பொருளீட்டப்படுகிறது. பாலை நிலம், குடியிருப்பு நிலம் அல்லாததால் அது பொருளீட்டச் செல்லும் வழியாகவே தான் கருதப்படுகிறது.

"பாலைத்திணைப் பாடல்களில் பாலை நில மக்களின் வாழ்க்கைப் படைப்போ, பாலை நில நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து விரிவுப்படுத்தபட்டனவோ அல்ல, அவை ஏனைய நான்கு நிலத்தலைவர்களின் பிரிவு குறித்த பாடல்களாகும். பிற நான்கு நில மக்களுக்கும் பொதுவாக உள்ளமையால் பாலைப் பாடல்களின் எண்ணிக்கையும் மிகுதியாக உள்ளது" (தமிழண்ணல், 2009 :40).

நானிலங்களிலிருந்து உருவாக்கப்பட்டதால் பாலை நிலத்தில் பொருளீட்டும் பிரிவு அதிகம் உள்ளதாகக் குறிப்பிடுகிறார் தமிழண்ணல். சங்க காலத்தில் பொருளீட்டும் கடமையென்பது இன்றியமையாததாக உள்ளது. அவ்வகையில் பொருளீட்டச் செல்லும் தலைவன் தன் காதல் தலைவியைப் பிரிய நேரிடுகிறது. இதனால் உறவு நிலைகளுக்குள் மனக்கசிவும், உளவியல் சிக்கல்களும் ஏற்படுகிறது. இப்பொருளீட்டும் பிரிவானது வேற்று நாடுகளுக்குச் செல்வதாகவும்,

தமிழகத்தைக் கடந்து சென்றதாகவும் குறுந்தொகைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இங்ஙனம் தலைவன் பொருளீட்டச் செல்வதும், ஈட்டிய பொருளைப் பாதுகாப்பதும், துயரம் தரத்தக்க செய்தியாக இருப்பினும், மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதால் இன்றியமையாததாகப் போற்றப்படுகின்றது.

"பெருந்தேன் கண்படு வரையில் முதுமால்பு
அறியாது ஏறிய மடவோன் போல" (குறு.273: 5-6)

என, பொருள்தேடும் முயற்சி என்பது ஏணியாகவும், அவ்வேணியில் ஏறும் மடவோன் தலைவனாகவும் குறிப்பிடப்படுகிறது. இதில் தேனினை நம்பி மரத்தில் ஏறும் தலைவன் அதன் இனிமை கண்டு மேலும் மரத்தில் ஏறினால் ஆபத்து என்பதை அறியாது தேனின் சுவையால் மேலும் முயற்சிக்கிறான். அதுபோல் பொருளீட்டச் செல்லும் தலைவன், தலைவியின் இனிமையை அறியாது, பொருளின் இனிமையை அறிய நுகரும் தலைவனுக்கு ஆபத்தாக முடியும் என்பதை எடுத்துரைப்பதாக இப்பாடலின் பொருள் அமைகிறது.

"நிலையில்லாதவற்றை நிலைபெறச் செய்து, ஒருவர் செய்யும் செயல்களே இவ்வுலகில் புகழ்பெற வாழவைக்கிறது. அவ்வாறு வாழத் தகுதியில்லாதவர்கள் வாழ்வதினும் வீழ்வது நேரிது. நிலையில்லாத செல்வத்தை, நிலைத்த புகழ்பெற வேண்டித் தேடிச் செல்லும் நிலைப்பாட்டினையே குறுந்தொகைப் பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன" (கு.வெ. பாலசுப்பிரமணியன், 1994:25).

என்று செல்வம் நிலையாமையைப் பற்றி குறுந்தொகைப் பாடல்களின் வழி எடுத்துரைக்கிறார் கு.வெ.பா.

"உள்ளார் கொல்லோ தோழி! உள்ளியும்
வாய்ப்பு உணர்வு இன்மையின் வாரார் கொல்லோ?
மா இருஞ்சோலை மலை இறந்தோரே" (குறு.232: 1-3)

மரத்தின் இலையை உணவாக பெரிய கழுத்தினைக் கொண்ட இரலைமான், வலிய பெரிய காலினை உடைய யானை ஒடித்து உண்டது போக, எஞ்சிய யாமரத்தின் வரிவரியான நிழலில் படுத்து உறங்கும். அத்தகைய மலையைக் கடந்து சென்றவர் தம்மை நினைப்பாரோ, நினைத்தும் வரும் வாய்ப்பு இருந்தும், வரவில்லையோ என்று கூறி வருந்துகிறாள். பொருள் ஈட்டப் பிரிந்து சென்ற தலைவனைஎண்ணி, நினைத்துக் கலங்குகிறாள் தலைவி.

"வெந்திறல் கடுவளி பொங்கர் போந்தென,
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை அருஞ்சுரம் என்ப, நம்
முலைஇடை முனிநர் சென்ற ஆறே" (குறு.39)

இன்பத்தினை வெறுத்து, பொருள்மீது ஆசைகொண்டு சென்ற வழி, மிகுந்த காற்றினால் வாகை மரத்தின் நெற்றுகள் ஒன்றோடொன்று அடித்துச் சலசலக்கும் மலைகளை உடைய கொடிய பாலை நிலம் அத்தகைய நிலத்தைக் கடந்து சென்றவர் நிலையை எண்ணி, வருந்துகிறாள் தலைவி. இது தலைவியின் நிலையான அன்பைத் தவிர்த்து, நிலையில்லாத செல்வத்தின் மீது வேட்கை கொண்ட தலைவனின் உள்ள மனப்பாங்கை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

**காதல்**

சங்ககாலப் பாடுபொருள்களில் முக்கியமான ஒன்றாக விளங்குவது அகம். இதனை தொல்காப்பியர் களவு, கற்பு என இரு நிலைகளில் பொருத்திக் காட்டுகிறார். "ஒத்த அன்பான ஒருவனும், ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும்

உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதாலின் அதனை அகம் என்றார்." (நச்சினார்கினியர் உரை, 2000 : 58).

என சங்க இலக்கியங்களில் காணும் சமூகக் காரணிகளில் காதலும் ஒன்று. அது மனிதனின் உளவியலை ஆளும் ஒரு சக்தியாகவும் விளங்குகிறது. சமூகத்தில் அதிக அளவில் வாழ்வியல் தாக்கத்தை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதனை முன்னிறுத்தி சங்க இலக்கியப் பாடல்களில் பெண்பாற்புலவர்கள் பாடல்களில் காதலின் நிலைப்பாடு குறித்தும், அவை சமூகத்தில் ஏற்படுத்தும் உளவியல் சிக்கல்கள் குறித்தும் காணுதல் அவசியம். காதலை வெளிப்படுத்துவதற்கு ஆண், பெண் என்ற பாகுபாடுகள் நிலவுகின்றன. இன்றைக்கும் அது ஒரு வழக்கமாகிவிட்டது. இருப்பினும் ஆணுக்கு நிகராகப் பெண் தன் காதலை வெளிப்படுத்துவதாகச் சில இடங்களில் பார்க்கலாம். அவற்றை,சங்க காலத்தில் ஆண் - பெண் சமத்துவம் நிலவியது எனக் குறிப்பிட்டுள்ளார் வ.சுப. மாணிக்கம்.

"பண்டைத் தமிழ்ச் சமுதாய அளவில் நோக்கின் பெண் கற்கும் உரிமையும், கவிபாடும் உரிமையும், காதல் உரிமையும், காதற்களவு செய்யும் உரிமையும், காதலனை இடித்துரைக்கும் உரிமையும், இல்லற தொழிலுரிமையும், பெருமையும், புகழும் எல்லாம் ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தனர் என்பது நெற்றித்திலகம்" (வ.சுப.மாணிக்கம், 2011 : 60).

என்று சங்க இலக்கியங்களில் காதலை வெளிப்படுத்துவதிலும், உணர்வுகளை வெளிக்கொணர்வதிலும் சம உரிமை இருப்பதாகவும் வ.சுப. மாணிக்கனார் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். உணர்வுகளை வெளிப்படுத்துவதில் சமமான நிலை இருப்பினும், இன்பம் துய்ப்பதில் போகப் பொருளாகவே பெண் பார்க்கப்படுகிறாள். சங்ககாலப் பெண் ஆணைத் தேர்ந்தெடுத்து அவனுடன் இணைவதில் தனித்த இயல்புடையவளாக இருக்கிறாள். இவ்வியல்புகள் சங்ககாலச் சமூகத்தில்,

"பாலியல் மிக இயற்கையானதாகக் கருதப்பட்ட சூழலில், சிற்றின்பம், புலன்களை மறுத்தல் போன்ற பேச்சுகளுக்கு அறவே இடமில்லை. எனினும் புறவாழ்க்கையில் பெண் பற்றிய பல்வேறு புனைவுகளையும் வரையறைகளையும் முன் வைப்பதன் மூலம் சங்க இலக்கியப் பிரதிகள் வலியுறுத்தும் கருத்தியல்கள், நுண் அரசியல் சார்ந்தவை என்பது புலனாகிறது. ஆணின் சமூக உடைமைக்கு வாரிசு உருவாக்கிடவும், இனக்குழுச் சமூக அமைப்பைக் கட்டிக் காப்பாற்றவும் பெண்ணின் தூய உடல் பற்றிய கருத்துத் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது" (கே.பி. அழகம்மை, 2001: 36.)

என்று ஆணின் உடைமைப் பொருளாகப் பெண் கையாளப்படுவதைச் சுட்டுகிறார் அழகம்மை. மேலும் பெண்ணின் தனிப்பட்ட மனஉணர்வு, பாலியல் வேட்கை விருப்பு, வெறுப்பு போன்றவற்றைச் சிதைத்து அவளை நுகர்வுப் பொருளாக்கி அவளை ஆணின் மேலாதிக்கத்திற்கேற்ப மாற்றும் முயற்சியே சங்க இலக்கியம் என்கிறார் அவர். எல்லா நிலைகளிலும் பெண் ஒடுக்கப்பட்டாலும் அவள் தன்னுடைய அன்பின் வெளிப்பாட்டையும், அடிமைத்தனத்தின் எதிர்க்குரலையும் தன் காவியங்களில் காட்டத் தவறியதில்லை.

"நல்உரை இகந்து, புல்உரை தாஅய்,
பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல
அகன்உறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே" (குறு.29: 1-3)

தலைவன் தலைவியை சந்தித்து அவளுடன் கூட நினைக்கிறான். ஆனால் தலைவியோ அதனை மறுத்து தன்னை மனம் முடித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறாள். தலைவன் தலைவியோடு சேர இயலாத இந்த நிலையானது தாய் குரங்கு தனது குட்டியினை இறுகத் தழுவுவது போல, தன்னை இறுகத் தழுவி அணைத்துத் தன் குறைகளை கேட்க யாரும் இல்லை என்று தலைவன் ஏங்குவதைப் போல அமைகிறது இப்பாடல்.

இதில் தலைவன் சந்திப்பை தலைவி மறுத்து விரைந்து தன்னை மணமுடிக்கக் கூறுகிறாள். காதலர்கள் இருவரும் மனம் ஒருமித்து வாழ்ந்தாலும் இச்சமுதாயத்திற்கு மத்தியில் திருமணம் என்ற

நிகழ்ச்சிக்குப் பின்னரே அவர்கள் கணவன் மனைவி என்ற அங்கீகாரத்துடன் தனது வாழ்வை இனிமையாக சிறப்புடன் வாழ முடியும் என்பதற்கு உதாரணமாக இப்பாடலின் கருத்து மிக அழகாக வெளிப்படுகிறது.

"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி
விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே" (குறு. 210)

தலைவனின் வருகை அறிவிக்கும் பெரிய தேரினை உடைய நள்ளியின் காட்டில் உள்ள ஆயர்கள் கொடுத்த நெய்யினையும், முற்றி விளைந்த நெல்லில் சமைத்த சுடு சோற்றினையும், ஏழு கிண்ணங்களில் கொடுத்தாலும் தலைவனை நினைத்து வருந்தும், என் தோழியின் பெரிய தோள்கள் இளைத்து போகாமல் காப்பதற்கு, காக்கைக்கு அது சிறிய உணவே ஆகும் என்று தோழி தலைவியின் வருத்தத்தை கூறுகிறாள்.

**காமம்**

காமத்தை வெளிப்படுத்துவதில் ஆண், பெண் என்கிற வேறுபாடுகளும் இல்லை. ஆணை விட பெண்ணின் தவிப்பும், காமத்திற்கான ஏக்கமும் பெண்பாற் புலவர் பாடல்களில் காணலாம். தொழிலுக்காகப் பிரியும் தலைவன், தன் பிரிவு ஆற்றாமையை வெளிப்படுத்துதல், தலைவியின் குழந்தைப்பேறு சூழலில் பரத்தையிடம் செல்லுதல் போன்ற பல காரணங்களில் தலைவன் தன் தேவைக்கேற்ப தகுந்த சூழலில் தன் வேட்கையைத் தணித்துக் கொள்கிறான். ஆனால் இல்லத்திலிருக்கும் பெண் தன் வேதனையைத் தீர்க்க முடியாது. ஒழுக்கம் என்ற வரையரைக்குள் கட்டுப்பட்டு புலம்பிக் கொண்டே வாழ்க்கையை நடத்தி வருகிறாள். ஆகவே பெண்பாற்புலவர் பாடல்களில் தலைவியின் பசலை சார்ந்த ஏக்கப்பாடல்களே அதிகம் காணப்படுகின்றன. மேலும் இதற்கான காரணமாக,

"ஆண்கள் வேட்டை நிமித்தம் வாழுமிடம் விட்டு வெளியேறுவதும், பெண்கள் தினைப்புனத்தில் மையம் கொள்வதும் நடைமுறையானது. இப்பொருளியல் நடத்தையே, தகாப்புணர்ச்சி கொண்டிருந்த இனக்குழுவை தகுபுணர்ச்சி கொண்ட குழுவாக மாற்றியது. ஒரு கணத்தின் ஆண்கள் வேட்டைக்குச் செல்லும்போது, தினைப்புனம் காக்கும் வேற்று கணங்களின் பெண்களுடன் புணர்ச்சி நடத்தினர். அகமண முறை நகர்ந்து புறமணமுறை உருக்கொண்டது. 'வயமான் அடித் தேர்வான் போல்' அவளைத் தேடி இளைஞன் சந்தித்து அவளுடன் புணர்ச்சி நடத்தியதாகக் கலித்தொகை கூறுகிறது." (பரமேஸ்வரி, 2012: 71).

வினை முடிந்து வரவிருக்கும் தலைவன் தன் வரவைப் பாகனின் வழி தலைவிக்குச் செய்தி அனுப்புகிறான். அவனது தகவலறிந்து தலைவி தன்னை ஒப்பனை செய்து கொள்கிறாள். இங்கு அவளது ஒழுக்கமும், கண்ணியமும் பேணப்படுவதைச் சங்க இலக்கியப் பாடலின் வழி அறியலாம். இக்கருத்தினை அன்பு சிவம் தன் நூலில் பெண்ணடிமைத் தனமாகப் பேணப்படுவதாக விளக்குகிறார்.

"ஆணின் ஆளுமை மேலும் உயர்நிலையில் கட்டமைக்கப்பட்டதும், பெண்ணின் ஆளுமை கீழ்நிலைக்கு தள்ளப்பட்டதுமான வரலாற்றை சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது. நிலவுடைமயின் வளர்ச்சிக் போக்கு பெண்ணை அவளின் ஆளுமையை அழித்து, அடிமையாக்கிய வரலாறே, தமிழ்ப் பண்பாட்டின் அசைவியக்க வரலாறு ஆகும்." (அன்புசிவம், 2011 :30).

**பரத்தைச் சமூகம்**

சங்க இலக்கியப் பாடல்கள் காட்டும் சமூகப் பிரிவுகளில் பரத்தை குலமும் ஒன்று. இதில் இருவகை பரத்தையர்கள் காணப்படுகின்றனர். அவை சேரிப்பரத்தை, காதல் பரத்தை தனிப்பட்டு ஒருவரையும் விரும்பாது பலருக்கும் உரிமை பொருளாய் விளங்குபவள். சேரிப்பரத்தை. சேரிப்பரத்தையின் மகளாய் ஒருவனுக்கே உரிமையாய் விளங்குபவள் காதல் பரத்தை. இவர்களை

'வரைவின் மகளிர்' என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். (வரைவு - திருமணம்) திருமணம் செய்து கொள்ளும் கட்டுப்பாடின்றி, பொருளுக்காக இன்பம் துய்க்கும் மகளிர் என்று விளக்கம் அளிக்கிறார் வள்ளுவர். பெண்களின் குடும்பச் சூழல் கருதி பரத்தையர்கள் உருவாகினாலும் அவர்கள் ஆண் சமூகத்தின் வேட்கை தீர்க்கும் போகப் பொருளாகவும் பார்க்கப்படுகின்றனர்.

இதனைப்பெண் ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாகக் கருதினாலும் அதே வேளையில் இதற்குள் தனக்கான ஒரு வெளியை உருவாக்கிக் கொள்கிறாள் பரத்தை. ஆண் சமூகத்தின் அடிமைப் பொருளாக பெண்ணின் இயலாமையை பயன்படுத்தும் பரத்தை வாழ்வை அறிஞர்கள் பலரும் பலவாறு விளக்குகின்றனர். அவ்வகையில்,

"ஆணின் பாலியல் பசிக்கு இரையாகும் பரத்தை, ஆணாதிக்கச் சமூகத்தால் சுரண்டப்பட்டு, ஒதுக்கப்பட்டே வாழ்வு நடத்துகின்றாள். விளிம்பு நிலையில் வாழும் பரத்தையைச் சுரண்டும் ஆண் சமூகமே மீண்டும் அவள் மீது குற்றச்சாட்டுகளையும் சுமத்துகிறது." (ப.சு. மூவேந்தன், 2017: 45).

ஆணின் தேடலுக்கான உரிமைப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டாலும், விமர்சிக்கப்படுவதும், குற்றப்படுத்தப்படுவதும் பெண்ணாகத்தான் இருக்கிறாள். ஆண் நிறைவு பெற்றாலும், இப்படியொரு சமூகத்தை உருவாக்கியவனே கேலிப்பொருளாக எண்ணி அவமதிக்கிறான் என்று பரமேசுவரி தன் நூலில் பதிவிட்டுள்ளார். பரத்தை சமூகமானது சங்ககாலம் தொட்டு இன்று வரை ஆணுக்கான மனநிறைவை கொடுப்பவளாக இருப்பினும், ஆனால் விமர்சிக்கப்படுபவளாகவும் அமைகிறாள் என்பது நிதர்சனம். ஆனால் பரத்தை தலைவனை உரிமையோடு, கண்டிப்பதும், கோவிப்பதும், இன்றைக்கும் பல இடங்களில் நிகழும் வழக்கமாகி விட்டது. அந்த வகையில் சங்க இலக்கியங்களில் தலைவன் மீதான சினத்தை அவனிடம் தெரிவிக்க இயலாத பரத்தை அவன் தலைவியிடம் காட்டுவது இயல்பாகிவிட்டது.

"தலைவியிடம், நான் உன்னுடைய பகை அல்ல. உனக்கும் எனக்கும் இடையில் நின்று நம் இருவரையும் ஒடுக்கும் தலைவனே உனக்கு உடனுறை பகை என்று பேசுகிறாள். இந்த இடத்தில் பரத்தையின் பேச்சு அதிகாரத்திற்கெதிரான கலகச் செயற்பாடாக மாற்றம் பெறுகிறது. அறிவு நுட்பத்துடன் சிந்தித்து ஆணின் வல்லாதிக்கத்தைக் கேள்வி கேட்பவளாக, எள்ளல் செய்பவளாக, விமர்சிப்பவளாக சங்க இலக்கியத்தில் பரத்தையே இருக்கிறாள் என்றும் எடுத்துக்கொள்ளலாம்." (பரமேஸ்வரி, 2012: 46).

பரத்தை தலைவனைக் கண்டிக்கும் இடங்களும் சங்க இலக்கியங்களில் மிகுந்துள்ளன. இங்ஙனம் பரத்தையின் உரிமை மீறல், அச்சமூகத்தின் வளர்ச்சியையும் ஆண் சமூகத்தின் தேடல்களையும் காட்டுகிறது எனலாம். இதுபோல் தலைவனைக் கண்டிக்கும் பரத்தை கூற்றுப் பாடல் குறுந்தொகையிலும் இடம்பெற்றுள்ளது.

"கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்,
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி,
கிளையொடு காக்க, தன் கொழுநன் மார்பே" (குறு.80)

தலைவனைக் கவர்ந்த பரத்தை, தன் அழகினால் செருக்குடையவள், தானும் தலைவியின் கணவனுமான தலைவனோடு நீராட நீர்த்துறைக்குச் செல்கிறோம். அது அவளுக்கு அச்சமாக இருந்தால் தன் சுற்றத்தாரோடு வந்து, தன் கணவனைக் காத்துக்கொள்ளட்டும். பல்வேல் எழினியை எதிர்த்து யாரும் தங்கள் பசுக்களைக் காக்க இயலாது. அதுபோல தலைவனைத் தன்னிடமிருந்து யாரும் பிரிக்க முடியாது என்பதால், பல்வேல் எழினி போர் முனையில் மாற்றார் தம் பசுக்களைக் காப்பது போல காத்துக்கொள்ளட்டும் என்ற ஆணவத்துடன் கூறுகிறாள்.

இப்பாடலில் வரும் பரத்தையானவள் தலைவியின் கணவனைக் காத்துக் கொள்ளும்படி கூறுவது அவளின் பரத்தையின் தவறல்ல. அவளுக்கு அத்துணிச்சலைக் கொடுக்கும் தலைவனின் தவறே ஆகும். தன் மனைவியை விடுத்து வேறொரு பெண்ணிடம் கொண்ட பிறத் தொடர்பே இவ்விளைவுக்குக் காரணம். இதனால் தலைவி மிகவும் மன பாதிப்புள்ளாகிறாள். தன்

மனைவியிருக்க வேறொரு பெண்ணை நாடிச் செல்லும் இத்தகைய ஆண் சமூகம் இன்றைக்கும் நிலவிக்கொண்டுதான் இருக்கிறது. இதனால் பெண்கள்தான் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்பதை இப்பாடல் வழி நன்கு அறிய முடிகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களின் பாடுபொருள்களுள் முக்கியமான ஒன்று சமூகம். இது அக்கால மக்களின் வாழ்வியலையும், சமூக சிக்கல்களையும் மனித உளவியலின் வழி எடுத்துரைக்கிறது. மேலும் தலைவன் தலைவியரது எண்ண ஓட்டத்தையும் வெளிப்படுத்துகிறது. அவ்வகையில் குறுந்தொகைப் பாடல்களில் காணும் சமூக கட்டமைப்புகளாக விளங்கும் பொருள் தேடல், காதல், காமம், பரத்தை போன்றவைகளை எடுத்துரைக்கிறது இக்கட்டுரை.

**துணைநின்றவை (References)**


- அழகம்மை கே.பி., (2001), சமூக நோக்கில் சங்க மகளிர், சென்னை: மணிவாசகா் பதிப்பகம்.
- அன்புசிவம், (2011), சங்கப் பெண்கவிகளின் அகம், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- சாமிநாதையர் உ.வே., (1983), குறுந்தொகை, சென்னை: உமா பதிப்பகம்.
- தமிழண்ணல், (2009), சங்க மரபு, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
- பரமேஸ்வரி, (2012), பரத்தை கூற்று, சென்னை: உமா பதிப்பகம்.
- பாலசுப்பிரமணியன் கு.வெ., (1994), சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- மாணிக்கம் வ.சுப., (2011), தமிழ்காதல், சென்னை: மல்லிகா பதிப்பகம்.
- மூவேந்தன் ப.சு., (2017), குறுந்தொகை காட்டும் பாலைத்திணைச் சமூகம், சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

# சங்ககாலத் திருமண புழங்குபொருள்கள் காட்டும் பண்பாடு
# SANGAM PERIOD WEDDING RITUAL OBJECTS SHOW CULTURE

முனைவர் இரா. ரவி | Dr. R. Ravi

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli -620 017

E-mail: ramravidevi88@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்க்கை நிலையை எடுத்துரைக்கின்றன. மக்களின் வாழ்க்கை இயக்கம் அவர்களின் வாழ்விடம், இயற்கை அமைப்பு, காலநிலை, நீர்வளம் ஆகியவற்றை உள்ளடக்கியது. அவர்களின் ஒவ்வொரு நகர்வுக்கும் ஏதேனும் ஒரு பொருள் துணையாகத் தேவைப்படுகிறது. அவ்வாறு பயன்படும் பொருள்களை புழங்கு பொருள்கள் என்று அழைக்கின்றனர். அப்பொருள்கள் மக்களின் பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள், விழுமியங்கள் ஆகியவற்றின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. அக்காலத்தில் திருமணத்திற்கு முன் பெண்கள் காலில் சிலம்பு அணிந்துள்ளனர். திருமண நிகழ்வின் பொழுது அச்சிலம்பினை அகற்றியுள்ளனர். அக்காலத்தில் திருமணம் நடைபெறும் இல்லங்களில் செம்மண், மணல், குடம் விளக்கு, மட்பாண்டம், சங்கு, பறை முதலிய பொருள்களைப் புழங்கும் பொருள்களாகப் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரையில் புழங்கு பொருள்கள் மக்களின் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன என்று ஆராயப்பட்டுள்ளது.

**Abstract**

The Sangam literature describes the living conditions of the people of that time. People's life cycle includes their habitat, ecosystem, climate, and water resources. Their every move needs something to support them. The objects that are used in this way are called root objects. These objects are symbols of people's culture, beliefs, rituals and values. During that time women wear 'Silambu' on their feet before marriage. Silambu was removed during the wedding ceremony. In the house where the marriage takes place, clay, sand, pitcher, lamp, pottery, conch and drum are used as props. In this article it is explored that artifacts reveal the cultural elements of the people.

**திறவுச்சொற்கள் (Keywords):** சங்க காலம், புழங்குபொருள்கள், பண்பாடு, திருமணம், sangam period, pesticides, culture, wedding.

**முன்னுரை**

மக்களின் வாழ்க்கை இயக்கம் அவர்களின் வாழ்விடம், இயற்கை அமைப்பு, கால நிலை, நீர்வளம், முதலிய சுற்றுச்சூழலை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்படுகிறது. அவர்களின் ஒவ்வொரு நகர்வுக்கும் ஏதேனும் ஒரு பொருள் துணையாகத் தேவைப்படுகிறது. அவ்வாறு மக்களின் வாழ்க்கைப் பயணத்திற்குப் பயன்படும் பொருள்களைப் புழங்கு பொருள்கள் என்று அழைக்கின்றனர். மக்களின் இனம், மதம், பொருளாதாரச்சூழல், நுகர்வு மனப்பான்மை, கலை அழகு உணர்வுகள், விழுமியங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடையாளங்களாகப் புழங்கு பொருள்கள் விளங்குகின்றன. மக்களால் பயன்படுத்தப்படும் புழங்கு பொருள்கள் பண்பாட்டு மரபுகளை உட்கொண்டுள்ளன. இக்கட்டுரையில் சங்ககாலத் திருமணங்களில் பயன்படுத்தப்படும் புழங்கு பொருள்கள் புலப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகள் குறித்து ஆராயப்படுகிறது.

**புழங்குபொருளும் பண்பாடும்**

புழங்குபொருள்கள் மக்களின் வாழ்வியல் பண்பாட்டு ஆன்மீகக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் இன்றியமையாததாக அமைவது திருமண நிகழ்வாகும். தமிழர்களின் திருமண முறை புனிதத்தன்மை கொண்ட நிகழ்வாகும். மணமக்கள் சடங்குகளின் வாயிலாகத் தெய்வத்துடன் தொடர்பு கொள்ள புனிதப்படுத்துகின்ற செயலாக நிகழ்த்தப்படுகின்றன.

மணமக்கள் முழுமையாக முகச்சவரம் செய்து நீராடி, புதுப்பட்டாடை அணிந்து, மணக்கும் பூ மாலைகளைச் சூடிக்கொண்டு, புதுப்பந்தலில் சுற்றமும் நட்பும் சூழ்ந்துள்ள மணவறையில் நெருங்கிய உறவினர் திருவிளக்கு ஏந்த, வண்ணம் தீட்டிய மங்களகரமான அரசாணை பானையில் நீர் தேங்கியிருக்க, மங்கல இசை ஒலிக்க, 'தாய்வழி மரபைப் பேணும் பாலூறும் மரக்கிளைகள் நட்டிருக்க, பந்தலின் முன் வாழ்வு ஈரியல் சீர்மை கொண்டது (சிமெட்ரிக்) என்பதன் குறியீடாய் வாழைக் குலைகளுடன் மரங்கள் கட்டியிருக்க இவ்வாறான இன்னும் பிற சடங்கியல் கூறுகள் இணைய புனிதச் சூழலில் மங்கல நாண் கட்டுவதே எதார்த்த வாழ்வில் நிகழும் திருமணமாகும்" என்பர் (பக்தவத்சல பாரதி,ப.86). திருமண நிகழ்வில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு புழங்கு பொருள்களும் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன.

பண்பாடு குறித்து, 'எந்த ஒரு பண்பாட்டிலும் அதன் வழக்கங்கள் பயன்படும் பொருள்கள், கருத்துக்கள், நம்பிக்கைகள் போன்ற அனைத்துக் கூறுகளும் மனிதனின் தேவைகளை நிறைவு செய்வதாக உள்ளன. ஏதோ ஒன்றை முழுமை பெறச் செய்யும் நோக்கத்தைக் கொண்டுள்ளன. இவை அனைத்தும் பண்பாடு என்ற அமைப்பில் பிரிக்க முடியாத உறுப்புகளாக உள்ளன" என்பர்(பக்தவத்சல பாரதி,ப.33).

மேலும்,

'ஒரு சமூகத்தின் நடத்தை முறைகளின் எல்லா வெளிப்பாடுகளையும் கொண்டதே பண்பாடு. இதில் குழுவுக்குள் வாழும் தனிமனிதன் அக்குழுவின் பழக்க வழக்கங்களால் அடையும் தாக்கமும் இப்பழக்கவழக்கங்களால் நிர்ணயிக்கப்பட்ட செயல்பாடுகளின் தொகுப்புமாகும்"என்பர்(பக்தவத்சல பாரதி,ப.62).

**சிலம்பு**

சங்ககாலத் திருமணத்தில் சிலம்பு ஓர் இன்றியமையாத புழங்கு பொருளாக விளங்குகின்றது. சிலம்பு இளம் வயதிலிருந்து அணிந்து வரும் ஓர் அணிகலனாக விளங்குகிறது. ஆனால், திருமணம் நடைபெறுவதற்கு முதல் நாளில் தாய் வீட்டில் அச்சிலம்பை அகற்றும் சடங்கு நடைபெறுவது பண்பாட்டு மரபாகக் கொண்டாடப்பட்டுள்ளது. சிலம்பு ஓர் அணிகலனாக மட்டுமின்றி திருமணத்திற்கு முன் நிகழ்வாக அதனை அகற்றும் பண்பாட்டு விழா நிகழ்ந்துள்ளது.

காலில் சிலம்பு அணிந்திருப்பவள் குமரி என்று ஒரு சமுதாய மரபு வழங்கியுள்ளது. 'குமரிக்கு அடையாளம் சிலம்பு எனக் கொண்டர். குமரிமை கழிவிற்குச் சிலம்பு அகற்றப்படுகிறது. இவ்வாறு சிலம்பு அகற்றுவதையே சிலம்பு கழி நோன்பு எனக் குறிப்பிடுகின்றனர்"என்பர்(வி.சி.சசிவல்லி,ப.44). உடன் போக்குச் சென்ற மகள் உடன் சென்றவரின் வீட்டில் திருமணம் செய்து கொண்டாலும், தாய் சிலம்பினை அகற்றுதல் தன் இல்லத்தில் நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதை ,

'உள்ளாது கனிந்த முள்ளெயிற்றுத் துவர்வாய்ச்
சிறுவன் கண்ணி சிலம்பு கழீஇய
அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே" (அகநானூறு-385)

என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும்,

'சிலம்பு கழீஇய செல்வம்
பிறருணக் கழிந்தவென் னாயிழை யடியே" (நற்றிணை-275)

என்ற பாடலடிகளில் சிலம்பு கழிதல் ஒரு செல்வம் என்றும், அதைப் பெற்ற தாய்க்கு அளிக்காது பிறருக்கு அளிக்கப் போய்விட்டாள் என்று எண்ணித் துன்பமடைகிறாள்.

சிலம்பு கழிதல் தாய் வீட்டில் தான் நடைபெற வேண்டுமென்ற பண்பாட்டு மரபு இருந்துள்ளது. பண்டைய காலத்தில் இந்நோன்பு திருமண பண்பாட்டுச் சடங்காக நிகழ்ந்துள்ளதை,

'நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிக" (ஐங்குறுநூறு-399)

என்ற பாடலடிகள் நற்றாயின் விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. சிலம்பு கழிநோன்பு தலைவியின் இல்லத்தில் நடைபெறுவது மரபு. நற்றாய் சிலம்பு கழிநோன்பு தலைவன் இல்லத்தில் நிகழ்ந்தாலும், திருமணமாவது தன் இல்லத்தில் நடைபெற வேண்டுமென்று விரும்புகின்றாள். சங்ககால மகளிர் சிலம்பினைக் களைதல் திருமணத்தின் அடையாளமாகத் திகழ்கிறது.

**சங்கு, பறை**

சங்ககாலத்தில் திருவிழா, திருமணம், இறப்பு, வெற்றி விழா முதலிய நிகழ்வுகளில் இசைக் கருவிகளை இயக்கி இசை உண்டாக்குதல் பண்பாட்டு மரபாகப் புழக்கத்தில் இருந்துள்ளது. அவர்கள் விழாவின் நிலையைப் பொருத்து அதற்கு ஏற்றார் போல் இசைக்கருவிகளை இயக்கியுள்ளனர். அத்தகைய இசைக்கருவிகளில் சங்கு, பறை ஆகியவை புழங்குபொருள்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருமண நிகழ்வுகளில் மங்கலகரமான இசையை உருவாக்குவதற்கு இக்கருவிகள் கையாளப்பட்டுள்ளன. சங்ககாலம் தொட்டே தமிழர்கள் இசைக்கலையில் பரிணாம வளர்ச்சியினைப் பெற்றுள்ளனர் என்பதற்கு இவை சான்றுகளாக அமைகின்றன. கலைத் தொழிலில் பாணர், பொருநர், கூத்தர், விறலியர், பாடினியர் முதலியோர் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு வகையான இசைக்கருவிகளைப் பயன்படுத்தி இவர்கள் மக்களை மகிழ்வித்துள்ளனர். திருமண விழாவில் இவர்களின் பங்களிப்பும் இருந்துள்ளது. திருமணம் நடைபெறும் பொழுது மங்கல இசையினை முழங்கும் மரபினை,

'பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு" (குறுந்தொகை -15)

என்ற பாடலடி வெளிப்படுத்துகிறது. திருமண விழாவில் இசையை இசைக்கப் பலகருவிகள் இருந்துள்ளன. அவற்றில் சங்கு, பறை ஆகிய கருவிகள் முக்கிய இசைக்கருவிகளாக விளங்கியுள்ளன. சங்ககாலத்தில் இசையை எழுப்பித் திருமண விழாவை நிகழ்த்தும் பண்பாட்டு மரபு கையாளப்பட்டுள்ளது.

**செம்மண், மணல்**

சங்ககாலத் திருமண நிகழ்விற்காக இல்லத்தினைத் தூய்மை செய்து அழகுபடுத்தும் மரபு இருந்துள்ளது. அலங்காரம் செய்வதற்காகப் பல்வேறு புழங்கு பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனர். அவற்றுள் செம்மண், மணல் ஆகியவை அழகுபடுத்தும் புழங்கு பொருள்களாகக் கையாளப்பட்டுள்ளன. புது வாழ்வினைத் தொடங்க இருக்கும் மணமக்களும், திருமணத்தில் கலந்துகொள்ளும் உறவினர்களும், அழகிய சூழலில் மகிழ்ச்சியாக மணமக்களை வாழ்த்தும் சூழலை உருவாக்குவதற்குப் புதுப்பந்தல் அமைத்து வீட்டின் சுவர்களுக்குச் சிவப்பு வண்ணத்தாலான செம்மண்ணைக் கொண்டு அழகுபடுத்தியுள்ளனர். மணல் கோடைக் காலத்தில் குளிர்ச்சியை உருவாக்க மணப்பந்தலின் கீழ் புதுமணலைப் பரப்பி அழகுபடுத்தியுள்ளனர். இதனை,

'புனைமான் இஞ்சி பூவல் ஊட்டி
மனை மணல் அடுத்து மாலை நாற்று
உவந்தினிது அயரும் என்ப" (அக.-195)

என்ற பாடல் எடுத்துக்காட்டுகிறது.

**குடம், விளக்கு, மட்பாண்டம்**

சங்ககாலத் திருமணத்தில் விளக்கு, குடம், மட்பாண்டம் ஆகியவை புழங்கு பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. விளக்கு இருளை அகற்றி ஒளி உருவாக்குவது போல மணமக்களின் வாழ்வில் மகிழ்ச்சியும், வளர்ச்சியும் உருவாக்கும் என்ற நோக்கத்தில் விளக்குகளை ஏற்றும் பண்பாட்டு நிலை இருந்துள்ளது. மணமகளை திருமணத்திற்கு முன்பாக நீராட்டிப் புனிதப்படுத்தித் திருமணத்தை நடத்தும் சூழல் இருந்துள்ளது. குடத்தில் தண்ணீரைக் கொண்டு வந்து மட்பாண்டத்தில் ஊற்றி அதனோடு நெல், மலர் ஆகியவற்றைக் கலந்து மணமகளை நீராட்டும் பண்பாட்டு நடைமுறை இருந்துள்ளதை,

'மனை விளக்குறுத்து மாலை தொடரி,
கனைஇருள் அகன்ற கவின்பெறு காலை
உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முது செம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர,
புதல்வற் பயந்த திதலை அவ்வயிற்று
வால் இழை மகளிர் நால்வர் கூடி,
நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி
பல் இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழித்த பின்றை" (அக.86)

என்ற பாடல் வெளிப்படுத்துகிறது. புழங்கு பொருள்கள் மக்களின் வாழ்க்கை இயக்கத்திற்கு உரிய தேவைகளை நிறைவு செய்கின்றன. இவை அவர்களின் மத, இன, பண்பாட்டு, நம்பிக்கைகளை வெளிப்படுத்துகின்றன. மக்கள் தங்களின் பொருளாதார வாழ்வியல் சூழலுக்கேற்ப இப்புழங்கு பொருள்களைக் கையாண்டுள்ளனர். சங்ககாலத் திருமணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள புழங்கு பொருள்கள் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. திருமணத்திற்கு முன்பு சிலம்பினை அகற்றும் பண்பாட்டு விழாவாகக் காணப்படுகிறது. திருமண விழாவில் இசைக்கப்படும் சங்கு, பறை ஆகிய இசைக்கருவிகள் மங்கலகரமான இசையை உருவாக்கும் புழங்கு பொருள்களாகத் திகழ்ந்துள்ளன. திருமண அலங்காரப் பொருள்களாக இல்லத்தை அழகுபடுத்த செம்மண், மணல் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. குடம், விளக்கு, மட்பாண்டம் ஆகியவை, திருமண நிகழ்விற்குப் பயன்படும் புழங்கு பொருள்களாகவும் மக்களின் ஆன்மீக நம்பிக்கைகளை வெளிக்காட்டுவனவாகவும் விளங்குகின்றன.

**துணைநின்றவை (References)**


- சசிவல்லி வி.சி., (1985), தமிழர் திருமணம், சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
- பக்தவத்சல பாரதி, (2008), தமிழர் மானிடவியல், தமிழர் மானிடவியல், புத்தாநத்தம்: அடையாளம் பதிப்பகம்.
- பக்தவத்சல பாரதி, (2008), பண்பாட்டு மானிடவியல், புத்தாநத்தம்: அடையாளம் பதிப்பகம்.
- பக்தவத்சல பாரதி, (2013), தமிழில்-சமூக-பண்பாட்டு மானிடவியல், புத்தாநத்தம்: அடையாளம் பதிப்பகம்.

# கம்பராமாயணம் - பாலகாண்டம் புலப்படுத்தும் சமூக, பண்பாட்டுப் புனைவுகள் Social and Cultural Legends that reveals in Kambaramayana Baalakaandam

முனைவர் மு.புஷ்ப ரெஜினா | Dr. M. Pushpa Regina

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017.

E-mail:pushpargn@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பெருங்காப்பியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளை உணர்த்தி நிற்கும் என்பர். பெருங்காப்பியங்களுள் ஒன்றாக, பல்வேறு வாய்மொழிக்கதைகளாக நிலவிவந்த இராமனின் வாழ்க்கையையும் அது தொடர்பான வழக்காறுகளையும் தொகுத்து வடமொழியில் எழுதிய வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவி, தமிழ்க் காப்பியமாகத் தமிழ்நிலத்தில் நிலவிவரும் சமூகப்பண்பாட்டுப் புனைவுகளை எக்காலத்திலும் வாழும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் உருவாக்கித் தந்த பெருமை கம்பரையே சாரும். கம்பராமாயணத்திலுள்ள ஆறு காண்டங்களுள் முதலாவதாகிய பாலகாண்டத்தில் காணப்படும் சமூகப்பண்பாட்டுப் புனைவுகளை விளக்குவதே இக்கட்டுரை.

**Abstract**

Epics are said to represent the four things of Virtue, Wealth, Pleasure, and Salvation. As one of the great epics, Rama's life and related ideas were compiled in various oral stories and adapted to Ramayana in the vernacular language which was authored by Valmigi. The legends of Rama's life in a way that people living in all eras can accept in the Tamil language which created and the credit goes to the poet Kambar. This article is to explain the sociocultural myths of society found in Balakanda, the first of the six kandam in Kamba Ramayanam.

**திறவுச்சொற்கள் (Keywords):** குடும்பம், சமூகம், பீஜ தானம், சௌளம், உபநயனம், ஐம்படைத்தாலி, Family, Society, Beeja thaanam, Sowlam, Ubanayanam, Aimbadaiththaali).

## முன்னுரை

இலக்கியங்கள் அந்தந்தக் காலங்களில் நடைபெறும் நிகழ்வுகளை அடுத்தது காட்டும் பளிங்குபோல் காட்டுவன. தமிழ் இலக்கியங்களும் காலந்தோறும் பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளைக் கடந்து இன்றளவும் தமிழ்மொழி நிலைத்து நிற்க உறுதுணை புரிந்து வருகின்றன. இவ்விலக்கியங்களுள் தமிழ்மொழியிலேயே எழுந்த நூல்களும், பிறமொழி நூல்களைத் தழுவியோ, மொழிபெயர்த்தோ பல இலக்கியங்களும் தோன்றியுள்ளன. அவ்வகையில் இந்தியப் பண்பாட்டுப் புனைவாக வால்மீகி வடமொழியில் எழுதிய இராமாயணக் கதையை, இராமகாதையாகத் தமிழில் தமிழர்களின் பண்பாட்டுப் புனைவாகக் கம்பர் வழங்கிட முயற்சித்து, வெற்றியும் கண்டுள்ளார். கம்பராமாயணம் - பாலகாண்டத்தில் காணலாகும் சமூகப் பண்பாட்டுப் புனைவுகளை எடுத்தியம்புவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## கம்பராமாயணம் - கதைக்களம்

மானிடர்களின் துன்பத்தைப் போக்க தக்க சமயத்தில் இறைவன் மனிதனாக அவதரிப்பான் என்பது பொதுவாக நம் மக்களின் நம்பிக்கையாகும். இலங்கையை ஆண்டுவந்த இராவணன் எனும் அரக்கர்களுடைய அரசனின் கொடுங்கோன்மையை முடிவுக்குக் கொண்டு வர, தேவர்களுக்கு வாக்களித்ததன் அடிப்படையில் திருமால் அயோத்தி அரசனான தசரதனுக்கு மகனாக அவதரித்து, தன் மனைவியாகிய சீதையைக் கவர்ந்து சென்றதைக் காரணமாகக் கொண்டு இராவணனை அழித்தான் என்பதைக் கதைக்கருவாகக் கொண்டு வால்மீகியைப் போல கம்பரும் இராமனின் அவதாரத்தை ஏறத்தாழ 10,000 பாடல்களில் இயற்றியுள்ளார்.

## சமூக, பண்பாட்டுப் புனைவுகள்

காடுகளிலும் மலைகளிலும் தனிமையில் வாழ்ந்த மனிதன், குழுக்களாக வாழத் தொடங்கிய பொழுதே குடும்பம், சமூகம் போன்ற படிநிலைகள் உருவாகின. அச்சூழலில் அவனால் பின்பற்றப்பட்ட வாழ்க்கைமுறை மற்றும் பழக்கவழக்கங்களே பிற்கால இலக்கியங்களில் சமூகப் பண்பாட்டுப் புனைவுகளாக உருமாற்றம் பெற்றன எனலாம். அந்தவகையில், திருமணம், புனித நீராட்டுப்பயணம், உணவு அளித்தல், விருந்தோம்பல், தலைவனுக்கு அடங்கி நடக்கும் பண்பு, செய்ந்நன்றியறிதல், வாக்குத்தவறாமை, குடும்ப ஒற்றுமை, குடும்ப பாசம், தாய்ப்பாசம், தாய்/சிறிய தாய் வேறுபாடு காட்டாமை, கற்ற கலைகளை மதிக்கும் பண்பு, பெரியோரை - ஆசிரியரை மதிக்கும் பண்பு, கொடைத்தன்மை, வேள்வி செய்தல், ஆநிரை கவர்தல், போர், போரில் நேர்மை, போருக்கு முன் வெற்றி கருதிப் பலி இடுதல், கணவனை இழந்த பெண்கள் உயிர்விடல் போன்ற பல்வேறு சமூக, பண்பாட்டுப் புனைவுகளைக் கம்பராமாயணத்தில் காண முடிகிறது.

## குடும்பம்

அரச குடும்பத்தைச் சார்ந்த அயோத்தி மன்னன் தசரதன் மூன்று மனைவியருடன் ஆட்சி புரிந்து வந்தான்.

> "அறுபதி னாயிர மாண்டு மாண்டுற
> உறுபகை யொடுக்கியிவ் வுலகை யோம்பினேன்
> பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
> மறுகுறு மென்பதோர் மறுக்க முண்டரோ" *(கம்ப.5:183)*

அறுபதினாயிரம் ஆண்டுகள் அரசாண்ட மகாசக்கரவர்த்தியான தசரதன், தனக்குப்பின் அரசுபுரியப் புத்திரர் பிறவாக்குறையைத் தன் மந்திரியும், குருவுமான வசிட்டனிடம் கூற, வசிட்டன் 'அரக்கர் கொடுமை தீர்க்க தசரதனுக்குப் புதல்வனாய் வருவோமென்று' திருமால் அமரர்க்குத் தெரிவித்ததை நினைத்துப்பார்த்து, இருசியசிருங்க முனிவனைக் கொண்டு புத்திரகாம யாகத்தைச் செய்ய அறிவுறுத்துகிறார். தசரதன் தனக்குப் பிறந்த சாந்தை என்ற மகளை உரோமபாத மன்னனுக்குத் தத்துக் கொடுத்துவிட்டார் என்பதும், சாந்தையின் கணவனே இருசியசிருங்க முனிவன் என்பதும் (பால. பா.234) இங்கு நோக்கத்தக்கது.

இதன்மூலம் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்குப் பல மனைவியர் இருந்துள்ளனர் என்பதையும், பெண்பிள்ளையொன்று பிறந்திருந்தாலும், ஆண்வாரிசு இருந்தால் மட்டுமே முடிசூட்ட இயலும் எனும் மரபு இருந்துள்ளதையும், புத்திர பாக்கியத்திற்காக யாகம் செய்யும் வழக்கம் இருந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

## குடும்ப உறவுப் பிணைப்பு

குடும்பத்தில் ஒருவரோடொருவர் அன்பு கொண்டு இணைந்து இருந்தமையைக் கூறலாம். கணவனோடு மனைவியும், பெற்றோரோடு பிள்ளைகளும், பிள்ளைகள் தமக்குள்ளேயே உடன்பிறப்புப் பாசத்துடனும் வாழ்தலைக் கம்பராமாயணத்தில் காணமுடிகிறது.

தசரதன் தன் மனைவியர் மூவரையும் ஒரே தன்மையிலான அன்புடனேயே காத்துவந்தார். மூத்தமகன் இராமன் மீது அதிக அன்புகொண்டிருந்தார் (வை.மு.கோ., 2006:207). இதனை,

"தருவனத்துள் யானியற்றுந் தகைவேள்விக் கிடையூறாத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம் வெகுளியென நிருதரிடை விலக்கா வண்ணஞ்
செரு முகத்துக் காத்தியென நின்சிறுவர் நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத் தந்தீதியென வுயிரிரக்குங் கொடுங் கூற்றி னுளையச் சொன்னான்" *(கம்ப.6.:327)*

என்ற பாடல்வழி இமயமலையில் வாசம் செய்து வந்த கௌசிகன் எனும் விசுவாமித்திர முனிவன் தலவிசேடம் கருதி சித்தாச்சிரமத்துக்கு வந்து, தான் செய்யவிருக்கின்ற யாகத்திற்கு, முனிவர்கள் அஞ்சும் காமக்குரோதங்கள் போல இராக்கதர்கள் (தாடகை, சுபாகுமாரீசர்) இடையூறு விளைவிக்காத வண்ணம் காத்திட, புத்திரர்கள் நால்வருள்ளும் கரிய திருமேனியனான இராமனை என்னுடன் அனுப்புவாயாக என்ற வேண்டுகோள், "பிராணனை யாசிக்கின்ற கொடிய யமன் போலத்" தசரதனை வருத்துவதாகக் கூறுவதிலிருந்து இராமன் மீது தசரதன் கொண்ட அளவிடற்கரிய அன்பு வெளிப்படுகிறது.

கடவுள் மானுடனாக அவதரித்துத் தன் சேவடியால் தீண்டும் பாக்கியம் பூமிதேவிக்குக் கிடைத்திருந்த வேளையில், ராமனும், லக்குமணனும் ஒருவரையொருவர் எப்போதும் பிரியாது அன்போடிருந்ததைப் போலவே பரத சத்துருக்கனரும் பிரியவில்லை.

இவ்வாறு கணவன் மனைவி, தந்தை மகன், சகோதரர்களிடையேயான பிணைப்பு உணர்வுகளோடு, தன் தாய், சிறிய தாய் என்ற வேறுபாடற்ற அன்பு பரிமாறுதலையும் கம்பராமாயணத்தில் காண முடிகிறது.

**சமூகம்**

இயற்கைவளம் மிகுந்த அயோத்தியின் மன்னரான தசரதன், குடும்பத்தில் மட்டுமல்லாது, அரசனுக்கு உரிய இயல்பும் நற்குணங்களும் மாறாது, தாயை ஒத்த அன்புடன் மக்களைப் பாதுகாத்து, பகையின்றி, யாவரும் தாளில் விழும் வெற்றியுடன் வெண்கொற்றக்குடைக்கீழ் ஆட்சி புரிபவனாகக் கம்பனால் அரசியற்படலத்தில் காட்சிப்படுத்தப்படுகிறான். (வை.மு.கோ., 2006:121-123 & 126-128).

**குடிப்பிறப்பு**

குடிகளுக்கெல்லாம் திரவியங்களை வர்த்தகத்துக்குச் செல்லும் மரக்கலங்கள் கொடுப்பதாகவும், பூமியானது மிகுந்த விளைச்சலைக் கொடுப்பதாகவும், கனிகள் சிறந்த இரத்தினங்களைக் கொடுப்பதாகவும், அவரவர்கள் பிறந்த குலமானது அடைய முடியாத நல்லொழுக்கங்களைக் கொடுக்கும் என்பதாகவும் கம்பர் நாட்டுப்படலத்தில் கூறுவதன் மூலம் குடிப்பிறப்புடைமைக்கு அடையாளமாக ஒழுக்கமுடைமையைச் சுட்டுகிறார்.

அவ்வாறு இஷ்வாகு மன்னன் பிரம்மனை நோக்கித் தவம் புரிந்து அரங்கநாதனாகிய திருமாலைப் பெற்றான். அதுமுதல் அக்குலத்து மன்னவர் அப்பரமனைப் பூசித்து வந்தனர் என்றும், ஆகவே தசரதனுக்குத் திருமால் முறைக்கடவுளானான் என்றும் (பால. பா.274) கம்பராமாயணம்வழி அறியலாகிறது.

**தொழில் / சாதி**

'வருணாசிரமக் கொள்கை அக்காலத்தில் பின்பற்றப்பட்டு வந்தது என்றே பலரும் கூறக்காண்கிறோம். அரசர், அந்தணர், முனிவர்கள் நீங்கலாக அவ்வச்சாதியார் தத்தமக்கு உரிய தொழிலைச் செய்வரென்று' (வை.மு.கோ., 2006:60) கூறியுள்ளவாறு, ஆய்ச்சியர் தயிர் கடைதலையும்(2006:46), கள்விற்போர் பழையர் என்றும், உழவுத்தொழில் செய்வோர் உழவர் என்றும்,

பறைகொட்டும் இளையர் மழவர் என்றும், பாண்தொழில் புரியும் பாணர் இசைக்கிழவர் என்றும், யானைமீது சென்று பறையறைவோர் வள்ளுவர் என்றும் அழைக்கப்பட்டனர்.

அருமையான பல பொருள்களை மிகுதியாக விளைவித்தல் மற்றும் வேண்டியவை போக எஞ்சியவற்றை வேற்றுநாட்டிற்கு மரக்கலங்கள் ஏற்றிச் சென்று இறக்குவதாகக் கூறுவதன் மூலம் (பால.பா.51) அயல்நாட்டு வாணிகம் நடைபெற்றமையையும் கம்பராமாயணம் சுட்டியுள்ளது.

**கலைகள்**

ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பாரும் உளர். அவற்றுள், தசரதன் தன் வளரும் அரசிளங்குமரர்க்கு, பொதுக்கலைகள் (வை.மு.கோ.,2006:209) என்றழைக்கப்படும் ஆறங்கம், மீமாம்சை, நியாயம், புராணம், தருமசாத்திரம் என்பவற்றுடன், வேதங்கள், சாத்திரங்களையும் இன்னபிற கலைகளையும், வேந்தர்க்குரிய வித்தைகளான யானையேறும் தொழில், தேரேறும் தொழில், குதிரையேறும் தொழில், ஏனைய கோவேறு கழுதை, ஒட்டகம் முதலியவற்றில் ஏறும் தொழில்கள் ஆகிய கலைகளையும் கற்க ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கித் தந்ததோடு, பகலில் அந்நகரத்து வெளியிலுள்ள சோலைகளில் வசிக்கும் முனிவர்களிடம் அளவளாவிப் பல நுண்ணிய நூற்பொருள்களை அவர்கள் வினவி அறிந்தனர் என்பதாகக் கம்பர் பாலகாண்டத்தில் (பால. பா. 311) குறிப்பிட்டுள்ளார்.

**பொழுதுபோக்கு**

கம்பராமாயணத்தின் பாலகாண்டத்தில் நாட்டுப்படலத்தின் மூலம் அந்நாட்டில் வாழ்ந்த மக்களின் பொழுதுபோக்குகளாக எவையெல்லாம் இருந்தனவென்பதைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

- ➔ புதிதாய் மணந்த மகளிரோடு இன்பம் துய்த்தல் (பால.பா.47).
- ➔ இயலிசைப் பயன் துய்த்தல் (மேலது).
- ➔ இன்கேள்விகளை நுகர்தல் (மேலது).
- ➔ கோழிப்போர் (பால.பா.48).
- ➔ எருமைக்கடாக்களைப் போர் செய்ய விடல் (பால.பா.49) .
- ➔ அரச சிறுவர்கள் யானைகளைத் தம்முடன் கொண்டு விளையாடுகையில் யானைகள் உண்டாக்கிய பள்ளங்களில் அம்மைந்தர்கள் மேனியில் பூசியுள்ள வாசனைப்பொடிகள் நிரப்புதல் (பால.பா.137).
- ➔ மகளிர் பந்தாடுதல் - அப்பொழுது அதிர்ச்சியால் முத்துக்கள் சிந்துதல் (பால.பா.138).

இவைபோன்று பல்வேறு வகையான பொழுதுபோக்குகளில் அம்மக்கள் ஈடுபட்டு மகிழ்ந்திருந்தமையை அறியமுடிகிறது.

**சடங்குகள், நம்பிக்கைகள்**

சமுதாயத்தில் பொதுவாக மக்கள் தங்கள் வாழ்க்கைமுறைகளில் பின்பற்றும் ஒரு சில செயல்பாடுகள், விருப்பங்கள் பிற்காலத்தில் சடங்குகளாகவும், நம்பிக்கைகளாகவும் உருவெடுக்கின்றன எனலாம்.

- பதின்மூன்றாம் நாள் - நாமகரணம் செய்தல் - பெயரிடல் (பால.பா.298)
- ஐந்தாவது மாதத்தில் - ஐம்படைத்தாலி அணிவித்தல் - அனுக்கம் நேராமலிருத்தல் (பால.பா.90)
- மூன்றாமாண்டு - சௌளம் - குடுமி வைத்தல் (பால.பா.306)
- சத்திரியர்களுக்குப் பத்தாமாண்டில் - உபநயனம் - பூணூல் அணிவித்தல் (பால.பா.306)

இத்தகைய சடங்குகளைத் தசரதனும் தன்னுடைய மகன்களுக்குச் செய்வித்தமை கம்பராமாயணம் வழி அறிய முடிகிறது. சடங்குகள் மட்டுமல்லாது ஒரு சில நம்பிக்கைகளும் அக்கால மக்களிடையே இருந்துவந்துள்ளன.

சான்றாக, கம்பராமாயணத்தின் நூற்பயன் (13-20) கூற விழையும் கம்பர் இராமாயணம் பற்றிய அத்தகைய நம்பிக்கைகளை எடுத்தியம்புகிறார்.

- இராமாயணத்தை எந்த மொழியிலாயினும் சரி, பயபக்தி, விசுவாசத்தோடு கேட்பவர் மோட்சம் அடைவர். (வை.மு.கோ.,2006:பா.14)
- இராமாயணத்தில் உள்ள சரித்திரங்களுள் ஏதேனும் ஒன்றைப் படித்தவர்களும், பிறர் சொல்லக் கேட்டவர்களும் பெரியோர் சொல்லக் கேட்டதால் ராம சரித்திரத்தை நன்று என்று சொன்னவர்களும் நரகம் அடையார். (வை.மு.கோ.,2006:பா.15)
- இராமாயணத்திலுள்ள ஒரு பாடலினது ஓரடியை மாத்திரம் உரைப்பவர்கள் மரணமடைந்த பின்பு பிரம்மலோகத்தை அடைந்து, மகிழ்வோடு வாழ்ந்து, அப்பொன்னுலகம் அழிகின்ற காலத்திலும் அனந்த சயனனாகிய விமலனது பரமபதத்தை அடைவர். (வை.மு.கோ.,2006:பா.16)
- ராமநாமோச்சாரணம் செய்பவர், இம்மையில் தீச்செயல், தீவினை விளைவின்றி எல்லா ஐசுவரியங்களும் பெற்று இனிது வாழ்ந்து, பிறப்பு இறப்புகளில்லாத மோட்சத்தைப் பெறுவர். (வை.மு.கோ.,2006:பா.13)

இவைபோன்ற நம்பிக்கைகள் இராமாவதாரத்தின் பெருமையை மக்கள் மத்தியில் பரவச்செய்து, நிலைத்திருக்க வைக்கத் தோன்றியவையாக இருக்கலாம்.

**சோதிடம் பார்த்தல்**

வானில் சுற்றித்திரியும் கோள்கள், நட்சத்திரங்கள் ஆகியவைகளைக் கொண்டு எதிர்காலத்தைக் கணிக்கும் காலக்கணிதம் எனப்படும் சோதிடம் பார்த்தல் அக்காலத்தில் பெருவழக்காக இருந்தது. அவ்வாறு கணித்துக் கூறப்படும் தகவல்களை உண்மையென்று நம்பும் குணம் கொண்டவர்களாக மக்கள் வாழ்ந்தனர் என்பதைக் கம்பராமாயணத்தின் மூலம் (வை.மு.கோ.,2006:197) அறியலாம்.

குழந்தை பிறந்த நாள், நேரம் ஆகியவைகளைக் கொண்டு ஜாதகம் எழுதுவர். அந்த ஜாதகக் கட்டங்களின் அடிப்படையிலேயே வாழ்க்கை அமையும் என்று நம்பினர். ஒருவரின் ஜாதகத்தில்,

| | | |
|---|---|---|
| ஒரு கிரகம் உச்சம் பெற்றிருந்தால் | - | கிராமணி |
| இரண்டு கிரகங்கள் உச்சம் பெற்றிருந்தால் | - | பலவூர்க் கிராமணி |
| மூன்று கிரகங்கள் உச்சம் பெற்றிருந்தால் | - | மன்னவன் |
| நான்கு கிரகங்கள் உச்சம் பெற்றிருந்தால் | - | மண்டல நாயகன் |
| ஐந்து கிரகங்கள் உச்சம் பெற்றிருந்தால் | - | பூலோக நாயகன் |

இவ்வாறு கிரகங்களே நம் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன என்பதை நம்பும் நிலையைக் கம்பராமாயணம் வழிக் (வை.மு.கோ., 2006:199) காணமுடிகிறது.

**கொடை / தானம்**

அக்காலத்தில் மக்கள் பல்வேறு சூழ்நிலைகளில் கொடை வழங்குதலை ஒரு கட்டாயமாகவோ அல்லது ஒரு நம்பிக்கையாகவோ பின்பற்றி வந்துள்ளனர். தசரதனும் இயல்பாகவே கொடை

வழங்குவதில் சிறந்து விளங்கியதைக் கம்பர் தம்நூலில் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார். புத்திர காமேஷ்டி யாகம் செய்த தசரதன் நூலில் கூறியபடி திருமால் மற்றும் தேவ இருடியருக்கு ஆகுதி வழங்கியபின் அந்தணர்க்குத் தட்சிணை கொடுத்ததாகவும், அரசர்கட்கு அரசாட்சி, செல்வம், தேர், குதிரை, ஆடைகள் என அவர்தம் தகுதிக்குத் தக்கவற்றை ஈந்ததாகவும் (பால.பா.275) கம்பர் கூறியுள்ளார்.

தசரதன் அசுவமேத யாகம், புத்திர காமயாகத்தைச் செய்து முடித்தபின் தானம் வழங்கியது போலவே, குழந்தை பிறந்த பின்பு பீஜதானம் எனும் வித்து வழங்கும் தானமும் (வை.மு.கோ., 2006:200), குழந்தைக்கு நாமகரணம் செய்தபோதும் மன்னன் தானம் வழங்கியதைக் கம்பராமாயணம் வழி (பால.பா.303) அறிய முடிகிறது.

**விருந்தோம்பல்**

உழுபடை கொண்டு நிலத்தை உழும் மள்ளர்கள் நெற்கதிர்களை அறுத்துக் கடாக்களைக் கொண்டு துவைப்பித்து நெற்களைக் குவித்துக் களப்பிச்சை முதலியவற்றை ஈந்தனர் என்றும், தமக்குரிய பகுதியை வண்டிகளில் நிறைய ஏற்றித் தமது மனையில் சேர்ப்பார்கள் என்றும், விருந்தினர்களோடு உண்ணுவர் என்றும் கம்பராமாயணம் (பால.பா.52) குறிப்பிடுவதைக் காணலாம்.

மள்ளர் அந்தணர் முதலியோர்க்குத் தந்து விருந்தோடு உண்ணும் நிகழ்வு கூறப்படுகிறது. மள்ளர் பல பொருள்களையும், விளைவித்துத் தாம் கொள்வதோடு, அவ்விளைபொருள்களை அம்மள்ளர் எல்லா வருணத்தார்க்கும் பயன்படுமாறு அந்தணர் முதலானோரை உண்ணச்செய்து தம்முடைய வீட்டிலே விருந்தினரோடும், பந்துக்களோடும், தாமும் இருந்து முப்பழங்களினாலும், பலவகைப் பருப்புக்களினாலும், அப்பருப்புகளை முழுத்துகின்ற அளவிற்கு மிக்க நெய்யினாலும், செந்நிறமுள்ள தயிர்க்கட்டிகளினாலும், கண்டசர்க்கரைகளினாலும் நடுநடுவே நெருங்கிய சோற்றினாலும் ஆரவாரமுடன் உண்ணும் நிகழ்வு கம்பரால் (பால.பா.54) வருணிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

கம்பர் இயற்றிய இராமாயணத்தில் அயோத்தி மன்னனான தசரதனின் ஆட்சிச் சிறப்பு, மக்களின் வாழ்க்கைமுறை, தொழில், பொழுதுபோக்குகள், சடங்குகள், நம்பிக்கைகள், கொடை, விருந்தோம்பல் முதலான பண்பாட்டுப் புனைவுகள் எங்ஙனம் காட்சிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன என்பதைப் பாலகாண்டத்தின்வழி அறிய முடிந்தது. தழுவல் காப்பியமாகத் திகழினும் தமிழ்நிலத்திற்கு ஏற்ற பண்பாட்டு நிகழ்வுகளைக் காப்பியப் போக்கில் இடம்பெறச் செய்து படைப்பாக்கத்தில் வெற்றி கண்டுள்ளார் கம்பர்.

**துணைநின்றவை (References)**


- இராமநாதன் ஆறு., (2006), *தமிழர் வழிபாட்டு மரபுகள்*, சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.
- கோபாலகிருஷ்ணமாச்சாரியார் வை.மு.(உரை.), (2006), *கம்பராமாயணம் மூலமும் உரையும், பாலகாண்டம்,* சென்னை : உமா பதிப்பகம்.
- சிவம் சுகி., (2003), *கம்பன் நேற்று - இன்று - நாளை*, சென்னை : வானதி பதிப்பகம்.
- செல்லம் வே.தி.,(1998), *தமிழக வரலாறும் பண்பாடும்*, சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
- செல்வகணபதி இரா.,(2000), *கம்பனில் பெண்ணியம்*, சென்னை : வானதி பதிப்பகம்.
- விசுவநாதன் அ., (1998), *சமுதாயச் சிந்தனைகள்*, காரைக்குடி : மங்கை பதிப்பகம்.

# பாரதிதாசனின் படைப்புகளில் பெண்நிலைவாதம் THE STATUS OF WOMEN RIGHTS IN BHARATHIDASAN'S POETRY

முனைவர் சு. மோகனப்பிரியா | DR. S.MOHANAPRIYA

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017.

E-mail: isaipriya24@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பெண் என்பவள் ஆணைப் போன்ற ஒரு சக உயிரி. அவளுக்கும் சமூக, பொருளாதார, கலாச்சார சுதந்திரங்கள் மறுக்கப்படக் கூடாது. பொதுவெளிகளில் ஆணைப்போலவும் சில தருணங்களில் ஆணை விடவும் பெண் அறிவுத்தளத்தில் இயங்க முடியும் என்கிற கருத்துடைய பாரதிதாசனின் படைப்புகளை முன்னிறுத்தி, பெண்நிலைவாதத்தை எடுத்துக்கூறுவது இந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

**Abstract**

A woman is a fellow creature like a man. She should not be denied social, economic and cultural freedoms. The purpose of this study is to take feminism forward by putting forward the works of Bharathidasan that women can operate in the field of knowledge like men and sometimes more than men in public spaces.

**திறவுச்சொற்கள் (Keywords):** பெண்நிலைவாதம், பாரதிதாசன், பொருளாதாரம், கலாச்சாரம், மறுத்தல், feminism, Bharathidasan, economic, cultural, denied.

**முன்னுரை**

19ஆம் நூற்றாண்டில் இறுதியில் தோன்றியது பெண்நிலை வாதம் எனும் கோட்பாடு. இக்கோட்பாடு பெண்கள் மீதான சமூக,பொருளாதார, கலாச்சார ஒடுக்கு முறைகளைக் களைவதை முக்கியத்துவமாகக் கொண்டுள்ளது. ஆண் பெண் என்று தனித்தனியே அவரவர்குரிய பண்புகளை வரையறுத்துக்கூறாது பெண் என்பவளை உடன் வாழும்உயிரியாக கருதி மானிடர்கள் என்கிற பொதுநிலையில் வைத்து, ஒத்த பண்புகள், ஒத்த கடமைகள், ஒத்த உரிமைகள் என இருபாலார்க்கும் பொதுவான பண்பு நிலைகளை அமைக்கச் சொல்லுவதே இந்தப் பெண்நிலை வாதமாகும்.

சமுதாயத்தில் ஆண் இனத்துக்கு மட்டும் உரியதாய்ப் பார்க்கப்படுகின்ற கருத்துச் சுதந்திரம் பிறப்புக்கட்டுப்பாட்டுக்கு எதிரான உரிமை சுரண்டலுக்கு எதிரான குரல் போன்ற ஜனநாயக உரிமைகள் பெண்களுக்கும் உரியன. இத்தகு ஜனநாயக உரிமைகளைப் பெண்களுக்கும் உரிய சிந்தனையாகக் கட்டடமைத்து எழுதிய கவிஞர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் பாரதிதாசன் ஆவார்.

**பாரதிதாசன் படைப்புகளில் பெண் நிலைவாதச் சிந்தனைகள்**

பாரதிதாசன் எனும் கவிஞர் ஒரு முருக பக்தனாய் தன் எழுத்துப் பயணத்தை துவங்கி, தன்னைத் தமிழ் தீவிரவாதியாகவும், காந்தியவாதியாகவும் உருமாற்றி பின்னர் தமிழ்த் தேசியத்தைத் தனது படைப்புகளில் அதிகமாக எழுதியவர் புரட்சிக்கவிஞராகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட பாரதிதாசனின் தமிழ் கொடையை தமிழ் உலகம் மறக்க இயலாது.

இலக்கிய உலகம் அதிகமாக முதலாளி வர்க்கத்தைப் புகழ்ந்து கொண்டிருந்த சூழலில் முதலாளி வர்க்கத்தை அதிகம் பாடாது வண்டிக்காரன்,ஆலைத் தொழிலாளி,பூக்காரி, குறவன் போன்ற உழைப்பாளி வர்க்கத்தையும் மிகுதியாகத் தன் கவிதைகளில் எடுத்துச் சொல்லிப்பாடிய பெருமையும் பாவேந்தருக்கு உண்டு. 1964இல் முதன்முறையாக ஞானபீட பரிசு அறிவிக்கப்பட்ட போது பரிந்துரை செய்யப்பட்ட கவிஞர் பாரதிதாசன். (ஞானபீட பரிசு என்பது உயிரோடு இருப்பவருக்கு வழங்கப்படும் முறை பின்பற்றப்பட்டதாலும், அப்போது கவிஞர் பாரதிதாசன் மறைந்து விட்டதாலும் பரிசு மலையாள கவிஞரான சங்கர் குரூப்புக்கு வழங்கப்பட்டது) பெண் மீதான மதிப்பீடுகளை மேன்மைப்படுத்தக்கூடிய படைப்புகளை அதிகம் படைத்த கவிஞர் பாரதிதாசன் ஆவார். அவர்தம் படைப்புகளில் பெண்கள் வீரம் மிகுந்தவராயும், தன்னம்பிக்கையும் திறமையும் நிறைந்தவராயும் காணப்பட்டனர்.

ஆணுக்குச்சமமாகவும், சில தருணங்களில் ஆணை விடவும் கலை அறிவு மிகுந்தவளாகவும் மூடப்பழக்க வழக்கத்தில் சமூகம் மூழ்கிய போது அம்மூடப்பழக்க வழக்கங்களில் இருந்து மீட்கும் அறிவுத்தன்மை பெற்றவளாகவும், பகுத்தறிவு நிறைந்தவளாகவும் பாரதிதாசன் பெண்களைத் தன் படைப்புகளில் முன்னிறுத்தி இருக்கின்றார்.

**ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பாரதிதாசனுடைய படைப்புகள்**

சஞ்சீவி பர்வதத்தின் சாரல் (காவியம்-1930)

புரட்சிக்கவி (குறுங்காவியம்-1937)

குடும்ப விளக்கு (காவியம்-1942)

தமிழச்சியின் கத்தி (குறுங்காவியம்-1949)

மேற்கூறிய படைப்புகளில் இருக்கும் பெண்களையும், அவர்களுடைய பெண் நிலை வாத நிலைப்பாட்டையும் பின்வரும் பகுதி எடுத்துக்காட்டுகின்றது.

**கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்**

சமூகத்தில் ஆணைப்போல் பெண்ணுக்குக் கருத்து சுதந்திரம் இல்லை . அதிலும் குறிப்பாக காதலைச் சொல்லுவதற்கு ஆணுக்கு இருக்கும் உரிமை பெண்ணிடத்தில் மறுக்கப்படுகிறது.

காதல் என்பது ஒரு உணர்வு. .பசி, தூக்கம், துக்கம், அழுகை போன்று காதல் என்னும் உணர்வும் இயல்பான ஒன்றாகும். அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான ஓர் உணர்வு ஆனால் இலக்கியங்கள் பெரும்பான்மை காதலை வெளிப்படுத்துவதில் ஆண் முதன்மை பங்கு வகிப்பவனாகவும் பெண் நாணத்தினால் தன்னுடைய விருப்பை வெளிப்படுத்தாமல் செல்பவளாகவும் படைத்துக் காட்டுகின்றன. ஆனால் பாரதிதாசன் தன்னுடைய புரட்சிக்கவி எனும் குறுங்காவியத்தில் அரசனின் மகளாக வரும் அமுதவல்லி சாதாரண உழைப்பாளி வர்க்கத்தில் இருக்கும் உதாரணனிடம் தானே முன்வந்து தன் காதலை முதலில் சொல்லும் மனவலிமை மிக்கவளாகப் படைத்துக் காட்டியிருக்கிறார்.

**வன்முறை எதிர்ப்பு**

சமூகத்தில் ஆணை விடப் பெண்ணுக்குப் பாதுகாப்புக் குறைவாகவே இருந்து வருகின்றது. பெண் என்பவளை வெறும் உடலாகப் பார்க்கும் ஆண்களின் கூட்டத்துக்கு மத்தியில் பெண் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது. பெண்ணின் அனுமதி இன்றி அவளின் உடல் நலனைச் சீரழிக்கத் துடிக்கும் ஆண்களுக்கு மத்தியில் அவள் வாழத் தகுதியற்றவளாக, தன்

வாழ்வை முடித்துக் கொள்பவளாக,பயந்தவளாக இருக்கும் சூழலில் பாரதிதாசன் தன்னுடைய தமிழச்சியின் கத்தி என்னும் குறுங்காவியத்தில் வரும் சுப்பம்மா என்கிற பெண்ணினுடைய உடல் நலனை சுதர்சன் எனும் ஆண் அழிக்க வரும்போது அதற்கு பயந்து தானே தற்கொலை செய்து கொள்ளாது, தன் உடல் நலனை அழித்து பிறகு சுதந்திரமாக திரிய நினைக்கும் சுதர்சனைக் கொலை செய்யத் துணியும் அளவிற்கு மன வலிமை மிகுந்தவளாக, தன் உடல் மீதான சுரண்டலுக்குத் தானே எதிர்ப்புக் குரல் எழுப்புவளாக சுப்பம்மாள் படைக்கப்பட்டுள்ளாள்.

தன் விருப்பின்றி அத்துமீறி தன் உடல் மீது உரிமை எடுத்துக் கொள்கிற சுதர்சனை நோக்கி

"வல்லியைத் தொட்டிடுவானேல்-அவன்
வாழ்வை மீட்பவர் இல்லை" - (த.க. 104)

என்று அவனை எச்சரிக்கை செய்பவளாக அச்சுறுத்துபவளாகக் காட்டப்பட்டுள்ளாள். எச்சரிக்கையை தாண்டி பெண் என்பவளை வெறும் போகப் பொருளாக நுகரத் துடிக்கும் சுதர்சனனை சுப்பம்மாள் எதிர்க்கத் துணியும் நிலையை

"வெற்பை இடித்து விடும் -
உனது வீரத்தையும் காணும்
நிற்க மனம் இருந்தால்- நின்று பார்
நெஞ்சைப்பிளக்கும் என்கை"- (த. க.106)

என்று எச்சரித்ததோடு நில்லாது அவனைக் கத்தியால் குத்தி வீழ்த்தியதையும் தன் படைப்பில் எடுத்துக்காட்டி இருக்கிறார் .

தனி ஒருத்தியாய் நின்று படைகளைச் சூறையாடுபவளாகவும் சுப்பம்மாவை வீரத்தின் அடையாளமாகப் படைத்துக் காட்டியுள்ளார்.

### அடக்குமுறைக்கு எதிரான போராட்டம்

பெண் என்பவள் எப்பொழுதும் ஆணை விட உடல் அளவிலும் மனதளவிலும் வலிமை குன்றியவளாக இச்சமூகம் சித்திரித்து வைத்திருக்கின்றது. அத்தகைய சித்திரிப்பிலிருந்து பெண் இனத்தை வெளிக்கொணர்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் பாரதிதாசன் என்பது அவருடைய படைப்புகளின் வழி புலனாகின்றது. அவரது படைப்பான **'வீரத்தாய்'** எனும் நாடகத்தில் வரும் ராணி விஜயராணி தன் மகனுக்காக ஆணைப் போல் வேடம் தரித்து நாட்டின் சேனாதிபதியையே துரத்தி அடித்து வாள் பயிற்சியில் சிறந்து விளங்கும் பெண்ணாகப் படைத்திருப்பது பெண்ணின் மன, உடல் வலிமைக்குச் சான்றாக அமைகின்றது.

பெண் என்பவள் தனக்கு மட்டுமல்ல தன்னை சார்ந்தவருக்கும் பிரச்சனை ஏற்படுகின்ற பொழுது அந்தப் பிரச்சனையிலிருந்து தன்னையும் தற்காத்து தன்னைச் சார்ந்தவரையும் தற்காக்க வேண்டிய சூழலில் வீரமாகவும் வலிமையாகவும் செயல்படக்கூடியவள் என்பதை இந்தக்கதாபாத்திரம் எடுத்துரைக்கின்றது.

### பிறப்புக்கட்டுப்பாட்டுக்கு எதிரான குரல்

பெண்குழந்தை பிறப்பு என்பது பாரதிதாசன் காலகட்டத்தில் வெறுக்கப்பட்ட ஒரு செயலாக இருந்து வந்தது. பெண்குழந்தையைப் பூமிக்குப் பாரமாகப் பார்க்கும் நிலையும் இருந்து வந்தது. .பெண் என்பவள் மூடப்பழக்க வழக்கத்தின் மொத்த உருவமாகவும் பெண்ணுக்குப்பகுத்தறிவு என்பது கிடையாது என்கிற கருத்தாக்கங்களுமே அன்றைய காலகட்டத்தில் நிலவி வந்தது. சான்றாக

"நுண்ணறி வுடையோர் நூலோடு பழகினும்

பெண்அறிவு என்பது பெரும்பே தமைத்து"

எனும் முதுமொழியே அன்று கோலோச்சி வந்தது. ஆனால் பாரதிதாசன் தன்னுடைய படைப்பில் பெண்ணை ஒரு பகுத்தறிவுப் பெட்டகமாகக் காட்ட முயன்றிருக்கிறார்.சான்றாக பெண் குழந்தை தாலாட்டில் அவர்

"வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டாய் விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி"

என்றும் '**பகுத்தறிவே"** என்றும் **"புதுமை செய்ய வந்தவளே"** என்றும் பெண்ணை அறியாமை இல்லாத பகுத்தறிவு நிறைந்த புதிய சமுதாயத்தைப் படைக்க வருபவளாக் காட்டியுள்ளார். தமிழ் மொழியின் முதல் அங்கத காவியமான தன்னுடைய சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் கூட

"ஊமை என்று பெண்ணை உரைக்கும் மட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமை தான் ஆடவர்க்கும் உண்டு'

என பெண்ணுக்குப் பேச்சுரிமை உண்டு என்பதைத் தன் படைப்புகளில் நிலையாகச் சுட்டி எழுதியுள்ளார். ராமன் வந்து சஞ்சீவி மலையைத் தூக்கப் போவதாக எண்ணி குப்பன் பயம் கொள்ளும் வேளையில் இளவஞ்சி

'...இவற்றில்
கொஞ்சமும் உண்மை இருந்தால் நாம் கொத்தவரைப்
பிஞ்சுகள் போல் வாடி பிழைப்பது அரிதாகி
அடிமையாய் வாழ்வோமோ? ஆண்மை தான் இன்றி
மிடிமையில் ஆழ்ந்து விழியோமோ?"

என்று ஆணுக்குப் புத்தி புகட்டுபவளாக பகுத்தறிவுச் சிந்தனையை ஊட்டுபவளாக இங்கு இளவஞ்சி என்னும் கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தகுந்தது.

**சமூக வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள்**

ஆண் என்பவன் மட்டுமே சமூகசேவை செய்பவனாக இலக்கியங்கள் சித்திரித்துக் கொண்டிருந்த வேளையில் பெண்ணுக்கும் பொதுத்தொண்டின் மீது நாட்டம் அதிகம் அவளும் ஆண் இடத்தில் பொதுத்தொண்டை முன்வைக்கிறாள் எனும் விதமாக குடும்ப விளக்கு என்னும் தன்னுடைய படைப்பில் அந்தக் குடும்பத்தினுடைய தலைவி

"வீட்டுத்தொண்டா? பொதுத்தொண்டு என்றும்
செந்தாழை வாங்குவோமா? கொழுக்கட்டைசெய்யலாமா?"

என்று தன்னலத்தை மட்டுமே யோசித்து வாழும் ஆண்களிடம் தன் நாட்டின் மீதும் அக்கறை கொள்ள வேண்டும். வீட்டுத் தொண்டு மட்டுமே பொதுத்தொண்டு ஆகாது சமுதாயத்திற்கும் நமது வாழ்வு பயனுடையதாக அமைய வேண்டும் என்று சமூகத்தின் மீது அக்கறை செலுத்துபவளாக சமூக சேவையின் மீது அதிக நாட்டம் கொண்டவளாக இந்தப்பாத்திரம் படைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தகுந்தது.

அதேசமயம் பெண் என்பவள் ஆணுக்குக் கட்டுப்பட்டு நடப்பவள் அவளுக்கு கலைகள் ரீதியான அறிவோ கலாச்சார ரீதியான அறிவோ குறைவு தான் என்று ஒதுக்கப்படும் சூழலில், பாரதிதாசனுடைய குடும்பவிளக்குத் தலைவி ஒரு பன்முகத் தன்மை கொண்டவளாக படைக்கப்பட்டுள்ளாள் ஒரு பெண் சமையலறையை தாண்டிச் சிந்திக்க கூடியவள் என்பதை

"ஆடிக்கொண்டிருந்த தையல்

பொறியினை அசைக்கும் ஓர்கை"

என்றும்,

"முன் உள்ள மரச்சாமான்கள்
ஒடிந்தவை பழுது பார்த்தாள் என்றும்"

"இடிந்துள்ள சுவர் எடுத்தாள்
சுண்ணாம்பால் போரை பார்த்தாள் என்றும்"

பெண் வெறும் இல்லத்தலைவி என்பதையும் தாண்டி ஒரு பொறியியலாளர் நிலையிலும் பல்வேறு துறைகளிலும் சிறப்பாகப்பணிபுரிய கூடியவள் எனும் நிலையிலும் படைத்துக்காட்டியவர் பாரதிதாசன்.

ஆணை விடவும் பெண்ணுக்கு வணிக ரீதியான அறிவு அதிகம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பிய பாரதிதாசன் தன்னுடைய குடும்ப விளக்கு என்னும் படைப்பில் ஒரு கணவன் தன் மனைவியிடம் வேண்டும் விதமாக

"கண்ணல்ல நீதான் சற்றே
கடைக்குப் போய்க் கணக்கர் தம்மை
உண்பதற்கு அனுப்பி உண்டு
வந்தபின் வா…
…என்று சொல்லி
சோம்பலால் பிச்சை கேட்டான்."

என்று தன் மனைவியின் வணிகத் திறத்தைப் புரிந்தவனாக அதனால் அவளுக்கு வணிக ரீதியான சுதந்திரத்தை அளிப்பவனாக படைத்துக் காட்டியிருக்கிறார்.

### தொகுப்புரை

பெண் என்பவளுக்கு அடிப்படை உரிமைகளும், கடமைகளும் உண்டு, என்பதும், அவள் சுரண்டலுக்கு எதிராகக் குரல் கொடுக்கக் கூடியவள் மட்டுமல்ல போராடவும் கூடியவள்.. அடக்குமுறை இன்றிச் சுதந்திரமாக வாழ்வதற்கு அவளும் உரியவளே என்பதை கட்டுரை எடுத்துரைக்கின்றது.

### துணைநின்றவை (References)

- ………, (2012), புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கவிதைகள், நாமக்கல்: அமராவதி பதிப்பகம்.
- தேவானந் தே.(பதி.ஆ.), கூத்தரங்கம்-இதழ், (2004), யாழ்ப்பாணம்: செயல்திறன் அரங்கு வெளியீடு.

# முல்லைத்திணையுள் ஆயர் வாழ்வியல் Pastoral Life in Mullai thinai

முனைவர் ச.ராஜேஸ் | Dr. S.Rajesh

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017.

**Email:** rajtamilrajesh752@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

முல்லைத்திணை தோற்றுவாய் நிலைகளில் தொல்காப்பியம் வழிநின்று விளக்குவதும், பிற இலக்கண, இலக்கிய நூல்களில் பயின்று வரும் கோட்பாடுகளைக் கொண்டு 'அன்பின் ஐந்திணை' என்ற நிலையில் பாகுபாடு செய்து அவற்றின் முடிவாகக் காணலாகும் முல்லைத்திணை சார்ந்த ஒழுக்கமும், மக்களின் வாழ்வியல் சிந்தனைகளான பழக்கவழக்கம், தொழில்கள், சடங்கு முறைகள் மற்றும் இன்று இம்மக்களை அழைக்கும் முறைமை குறித்து விளக்குவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும். அன்பின் ஐந்திணையில் தொல்காப்பியர் சுட்டும் முதன்மைத் திணையான முல்லைத்திணையில் வாழும் ஆயர் மக்களைப் பற்றியும் வாழ்வியல் செய்திகளும் முதன்மை ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது. ஆய்வாளர் கருத்துக்கள் துணைமை ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது.

**Abstract**

The purpose of the critical is to investigate the origins of Mullaithinai through Tolkappiyam and to discriminate with the principles learned in other grammar and literary texts in the state of the fifth of love and see as their end, the morals of Mullaithinai. The lift values of the people such as cutoms, professions, rituals and the current state of Mullaithinai people. In the literature of the sangam period, the kurinji lands are the primary land in Tamil kudi, although they are referred to as mullai thinai, but in the Tholkappiyam. The mullai land is the primary land, therefore the people of the sangam period divided the land areas into four types and added the land called primary 'thinai' and discriminated in the state of 'Anbin Ainthinai'.

**திறவுச்சொற்கள் (Keywords):** முல்லைத்திணை, முல்லை, திணை, ஐந்திணை, ஆயர், சங்ககாலம், இலக்கியம், இலக்கணம்

**முன்னுரை**

சங்ககாலத்தில் தோன்றிய இலக்கியங்களில் பழம்பெருமை பேசும் தமிழ்க்குடியில் குறிஞ்சி நிலமே இருப்பினும், முதன்மையானது என்று புறப்பொருள் வெண்பாமாலையில் கூறப்பெற்றிருந்தாலும். சங்க இலக்கியத்திற்கு இலக்கணமாக அமைந்துள்ள தொல்காப்பியம் முல்லை நிலத்தையே முதன்மைப்படுத்தியுள்ளது. (தொல்.அகம்.5)

சங்ககால மக்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளை நிலவியல் அடிப்படையில் நான்கு வகையாகப் பிரித்து, 'நடுவணைந்திணை' என்று பாலைநிலத்தையும் சேர்த்து 'அன்பின் ஐந்திணை' என்ற நிலையில் பாகுபாடு செய்துள்ளனர்.

திணை என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் வழங்கப்பெற்று வந்தாலும் இவ்விடத்தில் திணை என்பது இடத்தையும் ஒழுக்கத்தையும் குறிக்கப்பெறுகின்றது. இடத்தான் குறிப்பது முதற்பொருளாகிய நிலமும் ஒழுக்கத்தான் குறிப்பது அந்நிலத்திற்குரிய மக்களின் உரிப்பொருளாகும்.

செம்மண் பரந்திருத்தலால் முல்லை நிலமானது செம்புலம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நிலம் முல்லை மலரைத் தழுவிப் பெயரிடப்பட்டது. 'மாயோன் மேய காடுறை உலகம்' (தொல்.அகத்.5 ) என்பது தொல்காப்பியம் குறிப்பிடும் முல்லை நில வரையறை.

**தொல்காப்பியர் சுட்டும் முல்லைநில மக்கள்**

ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே (தொல்.அகத்.23)

என்று முல்லைநில மக்கள் ஆயர், வேட்டுவர் என்றும் அவ்வகையில் வரும் ஏனையோரும் முல்லைநில மக்கள் என்பதும் புலனாகிறது. மேலும் ஏனையோர் என்றமையால் முல்லை நில மக்களை இரண்டு வகையாகக் கூறியுள்ளனர் உரையாசிரியர்கள். அவையாவன,

குலம் குறித்து வருவோன் - பொதுவன் ஆயன்
ஆட்சி குறித்து வருவோர் - குறும்பொறை நாடன் (இளம்பூரணா் உரை)

என்றும் மேற்கூறிய நூற்பாவில் பெண்களின் பெயர் சுட்டப்பெறாததால் வந்தது கொண்டு வராதது முடித்தல் எனும் உத்திப்படி ஆயர் மகளிரை ஆய்ச்சியர் என்றும் பெயர் சுட்டியுள்ளனர்.

**ஆயர்**

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் ஆகும். இந்நிலத்தில் வாழும் மக்கள் ஆயர், ஆய்ச்சியர் எனப்பெற்றனர். ஆயர்குடி மிகவும் பழமையான குடி என்பதைச் சங்க இலக்கியங்கள், பிற இலக்கியங்களும் எடுத்துக்கூறுகின்றன.

ஆயர்கள் பிறருக்குத் தீங்கிழைக்காத தன்மையினை உடையவர்கள் என்றும், தன்னிடம் அடைக்கலமாக வரும் பொருள்களைப் பேணிக்காத்து ஓம்பும் பண்புடையவர்கள் என்பதை,

அறநெறி முதற்றே யரசின் கொற்றம்
திங்களன்ன தண்பெருஞ் சாயலும் (புறம்.55)

என்று புறநானூற்றுப் பாடலடிகளும்

ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கைஓர் கொடும்பாடு இல்லை (சிலம்பு - அடைக்கலக்காதை)

என்னும் சிலப்பதிகாரப் பாடலடிகளும் விளக்குகின்றன.

**ஆயர்களின் தொழில்**

ஆயர்குல ஆடவரும் மகளிரும் பல்வேறு வகையான தொழில் செய்பவர்களாக இருந்தாலும், அவர்கள் வாழ்ந்த நிலப் பாகுப்பாட்டிற்குரியவாறு மூவினம் வளர்த்தலையே முதன்மையான தொழிலாகக் கொண்டு விளங்கினர்.

**மூவினம் வளர்த்தல்**

எருமை, பசு, ஆடு ஆகிய மூவினத்தை வளர்த்து அவற்றின் பயன்களால் வாழ்க்கை நடத்தும் ஆயர் மூவகைப்படுவர்.

கோட்டினத்து ஆயர் - எருமைக் கூட்டத்தை உடையவர்

கோவினத்து ஆயர் - பசுக் கூட்டத்தை உடையவர்

புல்லினத்து ஆயர் - ஆடுகளை உடையவர்

மறப்பண்பில் பசுவின் ஆயரை விட எருமை இன ஆயரே உயர்ந்தவர் என்ற கொள்கை ஆயருக்கு உண்டு. இதனை,

கோட்டினத்து ஆயர்மகன் அன்றே மீட்டுஓரான்
போர்புகல் ஏற்றுப் பிணர்எருத்தில் தத்துபு
தார்போல் தழீஇ யவன் (கலி.103.32-35)

எனவும், பசுவினங்களை மட்டுமே பேணிக் காக்கக் கூடியவர் கோவினத்தாயர். இவர்களை,

இகுளை யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
கோவினத்து ஆயர் மகனன்றே ஓவான்
மறையேற்றின் மேலிருந்தாடித் துறையம்பி
ஊர்வான் போற்றோன்று மவன் (கலி.103:36-39)

எனவும், ஆட்டினத்தை மட்டுமே உடையவர்கள் புல்லினத்தாயர்,

இகுளை யிஃதொன்று கண்டை இஃதொத்தன்
புல்லினத்து ஆயர் மகனன்றே புள்ளி
வெறுத்த வயவெள்ளேற்று அம்புடைத் திங்கள்
மறுப்போல் பொருந்தி யவன் (கலி.103:46-49)

என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளனர். இவர்கள் தொழிலால் வெவ்வேறுவராக இருந்தாலும், குலத்தாலும் குடியாலும் ஒருவரே என்பதைக் கலித்தொகை வழிநின்று உணர முடிகிறது.

**பால், மோர் விற்றல்**

ஆவினத்தை வளர்த்து ஆவின் பயனான பால் மோர், வெண்ணெய் விற்று வருகிறாள் ஆயர் குலப்பெண் ஒருத்தி. தலையில் மோர்ப்பானையை ஏந்திப் பெரிய ஊர்களையும், சிறிய ஊர்களையும் கடந்து செல்கிறாள். இவ்வாறாகப் பால், மோர், வெண்ணெய் விற்போர் 'வினைவல பாங்கர்' எனக் குறிக்கப்படுகின்றனர்.

**ஆயரின் வீரமும், கற்பும்**

ஆயர்கள் தன் தொழிலுக்குத் தக்கவாறு காடும் காடு சார்ந்த இடங்களிலும் வாழும் தன்மையுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். ஆகவே தங்களுடைய நிரைகளுக்குக் காட்டில் வாழும் விலங்குகளாலும் பகைவர்களாலும் எந்தத் தீங்கும் வராவண்ணம் அவற்றைப் பேணிக்காக்க வேண்டிய நிலை உருவாயிற்று. தங்களை எதிர்க்கும் சக்தியுடைய, விலங்குகள் மற்றும் பகைவர்களிடமிருந்து தங்களுடைய ஆநிரைகளைக் காக்க வேண்டி ஆயர்கள் வீரமுடையவர்களாகத் திகழ்ந்தனர்.

ஏறு தழுவல் நிலையில் ஆயர் தம் மகளை மணக்க வரும் ஆடவர் வீரம் மிக்கவராய் விளங்க வேண்டும் என எண்ணினர். அதன் காரணமாக ஏறு தழுவும் நிகழ்ச்சியை ஏற்படுத்தினர். தனக்காக வளர்க்கப் பெற்ற வலிமையுடைய ஏறுகளை (காளை) அடக்க அஞ்சுபவனை ஆயர் குலப்பெண் இம்மையில் மட்டுமல்லாமல் மறுமையிலும் கணவனாக அடைய விரும்பமாட்டாள். இதனை,

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்

புல்லாளே ஆய மகள் (கலி.103:63-64)

எனவும்,

ஏறுகளை அடக்க அஞ்சுபவனை நெஞ்சிலும் நினைக்கமாட்டாள் ஆயமகள் என்பதனை,

அஞ்சார் கொலையேறு கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற் கரிய உயிர்துறந்து
நைவாரா ஆயமகள் தோள். (கலி.103:65-67)

எனவும் ஆயர்களின் வீரத்தைக் கலித்தொகைவழி அறிய முடிகின்றது. மேலும் ஆய மகளிர் வீரமிக்க ஆயர்களைக் கணவனாக மணப்பது மட்டுமல்லாமல் கற்பிலும் சிறந்து விளங்கினர். எனவேதான் கற்பிற்கு அடையாளமாகத் திகழும் முல்லை மலர்களை அணியும் பண்புடையவர்களாகவும் திகழ்கின்றனர். கற்பிற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் ஆய மகளிரை,

முல்லை சான்ற கற்பின்
மெல்இயற் குறுமகள் (நற்.241:10-11)

என நற்றிணை குறிப்பிடுகின்றது. கற்பிற்கு இலக்கணமாகத் திகழும் முல்லை நில ஆயமகளிர் ஒருவனை மனத்தில் கணவனாக ஏற்றுக்கொண்ட பின்னர், எக்காரணத்தாலும் வேறொருவனைக் கணவனாக அடைய விரும்பமாட்டார் என்பதும் ஆயர்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கப் பண்புடையவர்களாகத் திகழ்ந்தனர் என்பதையும் உணர முடிகின்றது.

### வேறு பெயர்களில் ஆயர்கள்

ஆயர்குடி மிகவும் பழமையான குடி என்றும் முல்லைநில மக்கள் இன்றைக்கும் தமிழகம் எங்கணும், பிற மாநிலங்களிலும் பல பெயர்களால் வாழ்கின்றனர். இவர்களுக்கு வேறு பெயராக முல்லைநில ஆடவர், அண்டர், அமுதர், ஆயர், ஆண்வல்லோர், தொறுவர், இடையர், குடவர், பொதுவர், பாலர் கோவலர், கோனார், யாதவர் போன்ற ஆண்பாற் பெயர்களாகவும், ஆயமகளிர் ஆய்ச்சியர், அண்டர் மகளிர், பொதுவமகளிர், இடைச்சியர் போன்ற பெயர்கள் பெண்பாற் பெயர்களாகவும் வழங்கப்படுகின்றன.

### ஆயர் மக்கள் பாகுபாடு

பல சொல்லாலும், பெயர்களாலும் வழங்கப்பெறும் ஆயர் இன மக்களில் குடும்பப்பெயர் அடிப்படையில் பாகுபாடும் செய்துள்ளனர். ஆயர்களுக்கு வழங்கப்பெறும் முக்கிய குடும்பப் பெயர்களான கல்கட்டி, கள்ள, கருத்த, பால், பஞ்சாரம் கட்டி, பெண்டுக்கு, மக்கி, பாசி, பெரும் சிறு, புது நாடன், சாம்பன், சங்கு கட்டி, சிவியர், சோழியர், துமத்து, தெலுகு போன்றவையாகும்.

'கல்கட்டி' 'சங்குகட்டி' போன்ற குடும்பப் பெயர் உடையவர் திருமணத்தன்று தாலியோடு கல்லையும் கட்டிக்கொள்ளும் வழக்குடையவர்கள். சாம்பன் எனும் குடும்பப் பெயரை உடையவர்கள் சிவபெருமானை வழிபடக் கூடியவர்கள். மேனி எங்கும் திறுநீறு பூசிக் கொள்ளும் வழக்கமுடையவர்கள். 'பஞ்சாரம் கட்டி' எனும் குடும்பப் பெயர் உடையவர்கள் பஞ்சமுகத்தாலி (ஐந்து முகமுடைய தாலி) அணிந்து கொள்ளும் வழக்கமுடையவர்கள். இவை போன்ற பழக்கங்கள் உடைய ஆயர்கள் (இடையர்கள்) தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றனர்.

### முடிவுரை

முல்லைத்திணையில் இத்திணைக்குரிய ஒழுக்கம், ஆயர்களின் தொழில்கள், வீரம், கற்பும் சார்ந்த செய்திகளைக் குறிப்பிட்டு, ஆயர்களின் வேறு பெயர்கள், ஆயர் மக்களின் குடும்பப் பெயர்

பாகுபாடு நிலை பற்றி எடுத்துக்கூறி, இன்றைய காலத்திலும் இம்மக்களின் வாழ்வுநிலை தமிழகம் மற்றும் பிற பகுதிகளிலும் பரவிக் காணப்படுகின்றது என்பதையும் இக்கட்டுரை உணர்த்துகிறது.

**துணைநின்றவை (References)**


- இராசமாணிக்கனார் மா. (பதி.ஆ.), (2011), கலித்தொகை, சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- சிவலிங்கனார் ஆ. (பதி.ஆ.), (1987), தொல்காப்பியம் - அகத்திணையியல் உரைவளம், சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
- துரைசாமிப்பிள்ளை ஔவை சு. (பதி.ஆ.), (1996), புறநானூறு மூலமும் உரையும், சென்னை: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
- வேங்கடராமன் எச். (பதி.ஆ.), (1986), நற்றிணை மூலமும் உரையும், சென்னை: உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்.

# சு. தமிழ்ச்செல்வியின் புதினங்களில் கல்வி மறுக்கப்பட்ட சிறுமிகளின் நிலை The Status of Girl child Denied Education in the novels of Su.TamilSelvi

முனைவர் தே.ஷீலா | Dr. D.Sheela

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017

**Email:** sheelamariappan.m56@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பெண்குழந்தைகளுக்கான முக்கியத்துவத்தினைச் சமுதாயத்தில் நாம் கொண்டு வரவில்லையென்றால், நமது அடுத்த தலைமுறை ஆரோக்கியமானதாக இருக்க முடியுமா என்பதில் ஐயப்பாடு உண்டு. பெண்கல்விக்குத் தேவையான மாற்றங்களையும், முக்கியத்துவத்தையும், செயல் வடிவில் சட்டத்திலும் சமூக முறைகளிலும் நாம் கொண்டு வரவேண்டும். இத்தகைய மாற்றங்களைக் கொண்டு வந்தால் மட்டுமே அடுத்த தலைமுறையினர் நன்முறையில் வாழ்வதற்குத் தேவையானதொரு அடிப்படையினை நம்மால் உருவாக்க முடியும். இதற்கான மிகச்சிறந்த கருவி கல்வியாகும்.

**Abstract**

Girl child education is more important to develop the society. We need to bring about education in legal and social systems. Only by bring about such a change we can create the necessary basis for the next generation to live well. Women education is only platform to create the great and ideal society.

**திறவுச்சொற்கள் (Keywords):** கல்விமறுப்பு, தமிழ்ச்செல்வி, கல்வி, பெண்குழந்தை, Denied Education, TamilSelvi, Education, Girlchild.

**முன்னுரை**

ஒரு குழந்தையைக் கருவிலிருந்து வளர்த்து, அந்தக் குழந்தையைப் பிறக்கின்ற நிலைக்கு கொணர்ந்து, பிறந்த குழந்தையைச் சமூகத்தில் ஒரு நல்ல மனிதனாக உருவாக்குவதில் பெண்ணின் பங்கு மிகமிக இன்றியமையாததாய் இருக்கின்றது. உண்ணும் உணவாக இருந்தால்கூட ஆண்குழந்தைக்கு நல்ல உணவாகவும் பெண்குழந்தைக்குப் பழையதும் கொடுக்கும் சில பெற்றோர்களை இன்றும் காண முடிகிறது. இவ்வாறிருக்கும் பட்சத்தில் ஒரு பெண்குழந்தை சமுதாயத்தில் உயர்நிலைக்கு வருவது என்பது சாத்தியமாகாது என்பதை விளக்கும் ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

பெண்கல்வி என்பது ஒரு சமூகத்தின் உடல்நலம் மற்றும் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான மிக சக்தி வாய்ந்த காரணிகளில் ஒன்றாகும். பெண்கல்வியானது தாமதமான திருமணத்திற்கு வழிவகுக்கிறது என்று சிலர் கூறலாம். ஆனால், அதுவே திருமணத்திற்குப்பின் அளவான, ஆரோக்கியமான குழந்தைகள் பெற்றுக் குடும்பத்தின் வறுமை குறைப்பிற்கும் வழிவகுக்கிறது. பெண்கல்வி மற்றும் பெண்களின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துகின்ற சமுதாயத்தில் வறுமை வேகமாக ஒழிய வாய்ப்புகள் உள்ளது. இக்கட்டுரையில் கண்ணகி, அளம், கற்றாழை, கீதாரி ஆகிய புதினங்களில் படைக்கப்பட்டுள்ள சிறுமிகளுக்குக் கல்வி மறுக்கப்பட்ட நிலையைக் காணவிருக்கின்றோம். மேற்சொல்லப்பட்ட புதினங்களில் காணலாகும் தகவல்கள் முதல்நிலைத் தரவுகளைத் தர ஆய்வாளர் கருத்துக்கள் இரண்டாம்நிலைத் தரவுகளாக விளக்கமுறை ஆய்வாகக் கட்டுரை உருப்பெறுகிறது.

பெண் குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்படுவதற்கு முக்கியமாக இரண்டு காரணிகளைக் கூறலாம்.

1. குடும்பச் சூழல்
2. சமுதாயச் சூழல்

**குடும்பச்சூழல்**

'கற்றாழை' புதினத்தில் 'ரெத்தினசாமி' என்பவன் எல்லாரிடமும் எடக்கு மடக்காகப் பேசுபவனாவான். கதைநாயகி மணிமேகலையின் தந்தை சண்முகமும் ரெத்தினசாமியும் சாராயக் கடையில் சந்தித்துக் கொண்டார்கள். அப்பொழுது மணிமேகலையை ஆறாம் வகுப்பில் சேர்த்திருப்பதை அறிந்த ரெத்தினசாமி சண்முகத்திடம்,

> "சண்முகம், ஒம் மவள பள்ளிக்கொடம் போச்சொல்லுறதவிட ஒரு சைக்கிள்பம்பு வாங்கிகுடுத்து ரோட்டு ஓரமா ஒக்கார வச்சியின்னா தெனமும் ஒங் குடிக்கி மொடயில்லாம காசி கெடக்கிமுல்ல" (சு. தமிழ்ச்செல்வி, கற்றாழை, ப.37)

என்றான். ரெத்தினசாமியின் பேச்சில் மதி மயங்கிய சண்முகம் மறுநாளே தனது மகள் மணிமேகலைக்கு ஒரு சைக்கிள் கடை வைத்துக் கட்டாயப்படுத்தி அதில் மணிமேகலையை உட்கார வைத்து, மகளின் கல்விக்கு முட்டுக்கட்டை போட்டுவிடுகின்றான். மணிமேகலையின் கல்விக் கனவு நிராசையானது. பெற்ற தந்தையே மகளின் கல்வியைத் தடை செய்வதாகப் புதின ஆசிரியர் "கற்றாழை" என்னும் புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

'கீதாரி' புதினத்தில் சாம்பசிவம் என்பவன் வீட்டில் வளரும் 'சிவப்பி' என்னும் சிறுமி தான் பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்க வேண்டுமென்று எவ்வளவோ ஆசைப்பட்டாள். ஆனால் சாம்பசிவத்தின் இரண்டு மனைவிகளும் சிவப்பியை அடுத்தடுத்து வீட்டு வேலைகளிலும் வயல் வேலைகளிலும்; ஈடுபடுத்தி அவளின் பள்ளிப் படிப்புக் கனவில் வெந்நீரை ஊற்றினர்.

> "மெல்ல மெல்ல பள்ளிக்கூடம் போகும் ஆசையும் படிக்கும் ஆசையும் சிவப்பியை விட்டுப் போயே போய்விட்டது. நிற்க நேரமில்லாமல் எப்பொழுதும் வேலை செய்து கொண்டிருப்பாள். பெரியவள் ஒரு வேலையைச் சிவப்பியிடம் விட்டால் போதும். தனக்கும் அதிகாரம் உண்டு என்பதைக் காட்ட வேண்டுமென்பதற்காகச் சின்னவளும் ஒரு வேலையை விடுவாள். இருவருக்கும் மாற்றிமாற்றி ஓடியோடியே பழகிப் போனது சிவப்பிக்கு. தன்னையொத்த பிள்ளைகளுடன் விளையாட வேண்டும் என்ற ஏக்கமிருந்தாலும் அதை ஒருபோதும் அனுமதித்தில்லை சாம்பசிவத்தின் மனைவிகள்" (சு. தமிழ்ச்செல்வி, கீதாரி, ப.65)

என்கிறார் ஆசிரியர்.

இனிமையான கனவுகளை மட்டும் கண்டு இரசிக்கும் இளமைப் பருவத்தில் உறங்குவதற்குக்கூட நேரமின்றி உழைத்து வருந்தும் கொடுமையான நிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றனர் சிறு பெண்கள். வசந்த காலத்தில் பூத்துக் குலுங்கும் புன்னகைப் பூக்களாக மலர வேண்டிய வயதில், கந்தக பூமியில் காய்ந்துக் கருகும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

'அளம்' என்னும் புதினத்தில் 'அஞ்சம்மாள்' என்னும் சிறுமி தனது தாயின் குடும்ப பாரத்தைக் குறைக்க எண்ணி அவளுக்குத் தெரியாமல் 'உப்பள' வேலைக்குச் செல்கிறாள். அங்கே,

"உப்பளத்தில் கிணறு தோண்டும் வேலை நடந்தது. உப்பளத்தில் மண்வெட்டி போட்டு வெட்டிகளியள்ள முடியாது. கிணறு தோண்டும்போது கீழே வெறும் கருங்களியாக இருக்கும் கருங்களியை கையிலேயே தோண்டியெடுக்க வேண்டும். கருங்களி தூக்குவதற்குக் கனமாகவும் இருக்கும். இந்த வேலைக்குக் கட்டுப்படியாகதென்று சிறிய பிள்ளைகளைக் கூப்பிட்டிருந்தார்கள். கருங்களியைத் தோண்டி ஒவ்வொரு கொட்டாய் சிறுவர்களின் தலையில் தூக்கி விடுவார்கள்.

சிறுவர்கள் நீண்டதூரம் நடந்துபோய் தட்டிமேட்டில் போட்டுவிட்டு வருவார்கள். சிற்றெறும்புகள் போல் அங்கும்மிங்கும் ஓடிக் கொண்டிருப்பார்கள் சிறுவர்கள்" (சு. தமிழ்செல்வி, அளம், ப.5) என்று கூறப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் புரையோடிப் போயுள்ள வறுமைக் கொடுமையினால் பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டிய குழந்தைகள் தொழிலாளர் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அவ்வாறு அக்குழந்தைகள் குடும்பப் பொறுப்பைச் சுமக்கவேண்டிய அவலநிலைக்கு உட்படும் நிலையைக் கவிஞர் சிற்பி,

> "வெறிச்சோடிக் கொண்டிருந்த
> கடைத்தெருவில்
> வாடிக்கைக்காரர்கள் இல்லாது
> ஷூப் பாலிஸ் சிறுவர்கள்
> முடங்கிக் கிடந்தார்கள்" (ம. நடராஜன், மு. மதியழகன், (படைப்பு ஆசிரியர்) சிற்பியின் படைப்புலகம், ப. 23)

என்று தமது கவிதையில் குழந்தைத் தொழிலாளர் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**சமுதாயச் சூழல்**

'கண்ணகி' என்னும் புதினத்தில் கண்ணகி என்னும் கதாப்பாத்திரம் நான்காம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது பள்ளிக்கு அருகில் உள்ள அப்பாசாமி கோவிலுக்குள் செல்ல ஆசைப்பட்டுப் பள்ளி நேரத்தில் சென்று விடுகிறாள். பின்னர் அங்கு கிடைத்த சுண்டலை சுவைத்தபடி தன்னை மறந்து அங்கேயே தூங்கிவிடுகின்றாள். மாலைநேரத்தில் வீட்டிற்கு வராத கண்ணகியைத் தேடி அவளது குடும்பத்தினர் எங்கெங்கோ ஓடுகின்றனர்.

> "பள்ளிக்கூடம் விட்டு வீடு திரும்பாத கண்ணகியைத் தேடி சித்தேரி குப்பத்திற்கு ஓடினாள் அவளது தாய் கசந்தாமணி. அங்கு அவள் இல்லாததைக் கண்டு ஊரே அதிரும்படி ஒப்பாரி வைத்து அழுது புரண்டாள். கண்ணகியின் தாத்தாவும் மாமன்களும் திக்குக்கு ஒருவராய்த் தேடிச் சென்றார்கள்" (சு. தமிழ்ச்செல்வி, கண்ணகி, ப.32)

என்று கூறப்பட்டுள்ளது. அதன்பிறகு கண்ணகியைப் பள்ளியின் பக்கம் தலைவைத்துப் படுக்கக்கூட அனுமதிக்கவில்லை அவருடைய அம்மா கசந்தாமணி. காரணம், கண்ணகி இருந்த சூழல் அவளுக்குப் பாதுகாப்பற்ற, கயமைத்தனம் நிறைந்த ஆண்கள் பலர் இருந்ததால் கல்வியைவிட அவளின் பாதுகாப்பே முக்கியம் என்று கருதிய அவளது தாய் கசந்தாமணி, கண்ணகியை மேற்கொண்டு படிக்க அனுமதிக்கவில்லை என்று கதையாசிரியர் கூறியுள்ளார். பெண்குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்படுவதற்குச் சமுதாயச் சூழலும் ஒரு முக்கிய காரணி என்பது வேதனைக்குரியதாகும்.

**நிறைவுரை**

ஏழ்மைச் சூழலில் உள்ள சிறுமிகள் ஆடு மேய்க்கவும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் கூலி வேலைகளுக்குமே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். வருமானப் பற்றாக்குறையினால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்விச்சாலைக்கு அனுப்ப வேண்டும் என்று நினைப்பதுகூட இல்லை. இதனால் ஆரம்பக்கல்வி வசதியினைப் பெறவே பெண் குழந்தைகள் போராடும் நிலை உள்ளது. பெண் ஒடுக்கப்படுவதற்கு அவளுடைய அறியாமையும் பொருளாதார சுதந்திரமின்மையுமே காரணமாகும். இத்தகு அவலநிலையையே சு.தமிழ்ச்செல்வி தனது படைப்புகளில் வெட்ட வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார். இத்தகு அவலத்திலிருந்து விடுபட பெண்ணுக்கு விழிப்புணர்வும், சிந்திக்கும் ஆற்றலும் ஏற்பட வேண்டும். அதற்குப் பெண்கள் கல்வியறிவு பெறுதல் வேண்டும் எனும் சிந்தனை இக்கட்டுரைவழி முன்வைக்கப்படுகின்றது.

**துணைநின்றவை (References)**

- தமிழ்ச்செல்வி சு., (2005). கற்றாழை, சென்னை: மருதா பதிப்பகம்.
- தமிழ்ச்செல்வி சு., (2008), கீதாரி, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- தமிழ்ச்செல்வி சு., (2002), அளம், திருச்சி: மருதா பதிப்பகம்.
- தமிழ்ச்செல்வி சு., (2008), கண்ணகி, சென்னை: உயிர்மை பதிப்பகம்.
- கனகசுப்புரத்தினம் இரா., (1996), குறள், சென்னை: கவனகர் முழக்கம்.

# சங்க இலக்கிய மடலேறுதல் - பெண் மையநோக்கு 'MADAL EARUDHAL' IN SANGAM LITERATURE - FEMINISM VIEW

முனைவர் த. செல்வமணி | Dr. T. Selvamani

Assistant Professor of Tamil Bishop Heber College, Tiruchirappalli-17

**Email:** selvamanithangarasu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க காலத்தில் காதல் நிறைவேறாத ஆடவனுக்குத் தன் காதலை சமூகத்தினர்க்கு வெளிப்படுத்தும் உரிமை இருந்தது. ஆனால், பெண்ணுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டது. உரிமை மறுக்கப்பட்ட பெண்ணின் மனவுணர்வினை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**Abstract**

During the Sangam period, the unfulfilled man had the right to express through 'Madal earudhal' his love to the society. But, the woman was denied that right. This analysis highlights the lack of rights of the woman and her mentality.

**திறவுச்சொற்கள் (Keywords):** மடலேறுதல், சங்க இலக்கியம், காதல், பெண்மைய நோக்கு, Madal Earudhal, sangam literature, love, feminism view.

**முன்னுரை**

தமிழ்ச்சமூக அக இலக்கிய மரபில் வரலாற்றில் ஒரு கூறாக இருந்த மடலேறுதல் என்பது அன்றைய நிலையில் ஆண்களுக்கு உரித்தான ஒரு செயலாகவே இருந்துள்ளது. தன் காதலைப் பலர் அறியும் விதமாக நிகழ்த்தும் அரங்கேற்றமாகவே இம்மடலேறுதல் நிகழ்ந்துள்ளது. எனவே, மடலேறுதல் என்னும் நிலைப்பாடு ஆண்களுக்கு மட்டுமே உரியதாகவும், பெண்களுக்கு மறுக்கப்பட்ட நிலையுமே சமூகத்தில் திணிக்கப்பட்ட கருத்தாடல்களே என்னும் நிலைப்பாடு உண்டாகின்றது.

**பொற்புடைய நெறி இல்லை**

கைக்கிளை முதலாய ஏழு திணையுள்ளும் தலைவி மடலேறியதாகப் புலனெறி வழக்கம் செய்தல் இல்லை. அது பொற்புடைய நெறியும் இல்லை என்பதனைத் தொல்காப்பியர்,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்

பொற்புடை நெறிமை இன்மை யான" (தொல்.பொருள்.அகத்.37)

எனக் குறிப்பிட்டுள்ளார். பொற்பாவது - பெண்மைக்குரிய தெய்வத்தன்மை என்றும், மடலேறுதல் தன்மையால் அதனை இழக்க நேரிடும் என்றவாறு ஒரு கருத்தைக் கட்டமைத்துள்ளது.

இதன் மூலம் பெண்ணுக்கான வரையறையை ஒரு ஆண் கட்டமைப்பதாகவே சூழல் உருவாகிறது. அதாவது, ஒரு பெண் என்பவள் இப்படித்தான் செயல்படுபவளாக இருக்க வேண்டும் என்ற ஒரு வரையறையைச் செய்தது ஆணாகத்தான் இருந்திருக்க முடியும். அப்படியானால் தன் விருப்பத்திற்கேற்றவாறே ஆணின் வரையறையும் இருக்க முடியும். அப்பொழுது, அது நிச்சயமாக ஆதிக்க அதிகாரத்தைத் திணிப்பதாகவே இருக்க வாய்ப்பு உண்டு. அதாவது, ஆண் மடலேறுவது

தான் இலக்கிய மரபு என்றும், பெண் மடலேறுதல் வழக்கில் இல்லை என்றும் இலக்கியங்களில் பதிவாகியுள்ளன.

**பெண்ணிய நோக்கில் மடலேறுதல்**

பெண்ணியம் என்பது பெண்களைத் தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள், கட்டமைப்புகள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும் கவனப்படுத்தும் சமூக, கலாசார அரசியல் இயக்கங்கள், செயற்பாடுகள், கோட்பாடுகளின் தொகுப்பாகும்.

Feminism என்னும் ஆங்கிலச்சொல் Femina எனும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண்நிலை ஏற்பு, மகளிரியல், பெண் நலக்கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

ஆண் பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் கோட்பாடாகவும் இது வரையறுக்கப்படுவதுண்டு. சமத்துவமின்மையின் மூலங்கள், சமத்துவத்தை அடைவதற்கான வழிமுறைகள், பால் மற்றும் பால்நிலை அடையாளங்களை விமர்சிப்பது, கேள்விக்குட்படுத்துவதற்கான எல்லைகள் போன்றன தொடர்பில் பெண்ணியவாதிகளிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு.

மடலூர்தல் பற்றி, தொல்காப்பியர் காலத் தமிழர் என்னும் நூலில் புலவர் குழந்தை குறிப்பிடுகையில், நாணத்தால் உடன்படாதவளை வற்புறுத்தினால் மறுத்துவிடுவாள். அங்ஙனம் வற்புறுத்தல் காதலன்புக்குப் புறம்பான செயலாகும். இன்றும் கள்ளத்தாலி கட்டுதல், அவளுக்கும் எனக்கும் பழக்கம் உண்டென்று பிறரிடம் கூறுதல், வெளிப்படகாதற்கடிதம் எழுதுதல் போன்ற செயல்கள் நிகழ்கின்றன. இவை மடன்மாகூறல், மடலூர்தல் போன்றவையேயாம். இன்றும் ஒழுக்கத்தை மதியாத கீழ்மக்களே இத்தகைய கீழ்மையான செயல் செய்கின்றனர் (புலவர் குழந்தை, 2012) என்கிறார்.

மணத்திற்கு முன் ஒருவன், ஒருத்தியின் உருவமும் பெயரும் எழுதிய ஓலையுடன், குதிரை மேலேறிக் கொண்டு, அவளுக்கும் தனக்கும் உள்ள தொடர்பைக் கூறிக் கொண்டு, அவள் ஊர்த் தெருவிடைச் செல்லும் அத்தகு உரிமையுடன் அன்று களவொழுக்கம் இருந்து வந்தது. ஆனால், எத்தகைய காமமிக்க கையறு நிலையிலும் மகளிர் மடலூர்தல் வழக்கமில்லை. அதைச் செய்யப் பெண்களும் முன்வரவில்லை. அதாவது, தன் காதலன் பெயரைச் சொல்லிக்கொண்டு அவனுக்கும் எனக்கும் தொடர்பு உண்டென்று கூறிக்கொண்டு பழி உண்டாக்கும் செயலில் பெண்கள் ஈடுபடவில்லை. பெண்கட்குரிய உயிரினும் சிறந்த நாணுடைமையே இதற்குக் காரணமாகும். இதனை வள்ளுவரும்,

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்"

என்று குறிப்பிடுகிறார்.

**மடலேறுதல் - தனிமனித வன்முறை**

தலைவன் தான் விரும்பிய பெண்ணை அடைய பல வகையான தனி மனித வன்முறையில் இறங்கி தலைவி அதற்கு இசைவு தரவில்லையென்றால், காமம் மிகுந்தால் ஆடவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வர். ஏன் உயிரைக் கூட விடத் துணிவர். யாரும் சூடாத பூவைச் சூடி மடலேறி தலைவி வசிக்கும் இடம் வந்து தலைவியைத் தூற்றுவேன். அதன் பின்பும் தலைவி தன் காதலை ஏற்கவில்லையெனில், இறந்துவிடுவேன் என்று தோழியிடம் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தி, தன் செயலை வெற்றி பெறச் செய்யும் சூழ்ச்சியினைக் கையாளுகின்றான். இவ்வாறு பிறரை

அச்சங்கொள்ளச் செய்து தன் தேவையினை நிறைவேற்றிக் கொள்வது ஒரு வகையான தனிமனித வன்மம் ஆகும். இதனை குறுந்தொகை பாடல் எண் 17 வெளிப்படுத்துகிறது. தோழியும் தலைவனின் இவ்வன்மத்துக்கு அஞ்சித் தலைவியிடம் தூது சென்று உரைப்பதை,

"மாவென மதித்து மடலூர்ந்து ஆங்கு
மதிலென மதித்து வெண்தேர் ஏறி
என்வாய் நின்மொழிமாட்டேன் நின்வயின்
சேரிசேரா வருவோரக் கென்றும்
அருளல் வேண்டும் அன்புடை யோயெனக்" (நற்.342)

என்பதிலிருந்து தலைவனின் தனிமனித வன்முறைக்குப் பயந்தே தலைவியிடம் தூது சென்றதைக் காணமுடிகிறது. மேலும்,

"பல்லார்நக் கௌ்ளப் படுமடன் மாவேறி
மல்லலூ ராங்கட் படுமே நறுநுதல்
நல்காள்கண் மாறி விடினெச் செல்வான்நாம்" (கலி. 61)

என்பதிலிருந்து, நீ அருள்செய்யாது கைவிட்டால் பலரும் சிரித்து நகையாட, மடல் ஏறி, ஊர் அலர் ஏற்படும்படி உன்னைப்பற்றி இழிவாகப் பேசும் வன்செயலில் இறங்கிவிடுவான் போலிருக்கிறது என்று கூறுவதிலிருந்து தனிமனித வன்செயலினை அறிய முடிகிறது.

**வன்செயலால் மணம் புரிதல்**

காமமீதுற்ற தலைவன், தலைவி தன் காதலை ஏற்காத பொழுதும் தலைவியின் சுற்றத்தார் வரைவிற்கு உடன்படாத போதும் தலைவன் மடல்மாவில் ஏறி, தலைவியின் ஊரில் உள்ள பொதுமன்றத்திலோ, தெருவிலோ தலைவியைப் பற்றியும், அவன் தமரைப் பற்றியும் இழிவுபடுத்திப் பாடுகின்றான். இதனை,

"மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறுக்குவென் போல்வல்யான் நீபடு பழியே" (கலி. 58)

"பல்லார் நக்கெள்ளப் படுமடன் மாவேறி" (கலி. 61)

என்ற அடிகளின் வழி அறியமுடிகிறது. இங்கு மடலேறுதல் என்பது பலரும் சிரித்து இகழப்படும் இழிவான செயலாகக் கருதப்பட்டதுடன் தலைவி மற்றும் அவளின் தமர்மீது ஊரார் பழி தூற்றவும் செய்வர் என்பது பெறப்படுகிறது.

"மல்லலூர் மறுகின்கண் இவட்பாடும் இஃதொத்தன்
எல்லீருங் கேட்டீமின் என்று
படரும் பனையீன்ற மாவும் சுடரிழை
நல்கியாள் நல்கியவை" (கலி. 138)

இப்பாடலடிகளில் தன்னை விரும்பாத தலைவியைப் பெறுதல் வேண்டி, ஊர் மன்றத்தினிடையே மடல் மாவில் ஏறி, தலைவியைப் பற்றிப் பாடுவதன் மூலம் தலைவியினிடத்தே தன் காதலைப் புலப்படுத்த வன்முறையில் ஈடுபடுகின்றான். சில நேரங்களில் தலைவி அக்காதலை ஏற்றுக் கொள்கிறாள்.

"அன்புறு கிளவியாள் அருளிவந் தளித்தலின்
துன்பத்திற் றுணையாய மடல் இனி இவட்பெற
இன்பத்துள் இடம்படலென் றிரங்கினன்" (கலி. 138)

என்பதன் மூலம் தலைவனின் வன்முறைக் காதலைத் தலைவி ஏற்றுக் கொள்கிறாள் என்பதை அறிய முடிகிறது. ஆனால், சில நேரங்களில் தலைவியின் விருப்பத்தைக் கேட்காமலேயே ஊரார் தூற்றும் பழிக்கு அஞ்சி மணமுடிக்கப்பட்டிருப்பதை,

"வருந்தமா வளர்ந்து மறுகின்கண் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்" (கலி. 141)

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. பாண்டியனின் போர்த்தொழிலுக்கு அஞ்சித் திறைகொடுத்த பகைவர்களைப் போன்று தலைவனின் மடல் ஏற்பாட்டால் விளைந்த குடிப்பழிக்கு அஞ்சி, பெண்ணை மணமுடித்துத் தந்துள்ளனர் என்பது மேற்சுட்டப்பட்ட பாடலடிகளின் பொருளாகும்.

வ.சுப. மாணிக்கனார் தனது தமிழ்க்காதல் நூலுள் 'திருந்திழைக்கு ஒத்த கிளவி' என்பதனால் மகளும் இவனைக் காதலிக்கின்றாள் என்பது பெறப்படும்' என்பார் (வ.சுப.மாணிக்கனார், 2009). ஆனால், இப்பாடலின் முன்பகுதியில் தலைவன் மட்டுமே விரும்பி தலைவி அதை ஏற்காமல் இருப்பதை,

"ஓரொருகால் உள்வழிய ளாகி நிறைமதி
நீருள் நிழற்போல் கொளற்கரியள் … …" (கலி. 141)

என்பதன் மூலமும், 'வையகமெல்லாம் வாழுமாறு செய்கின்ற உள்ளமுடைய என்னை இரந்து வேண்டித்திரியும் நிலையிலே சீரழியக் கொடிய துயரத்தினையும் விளைவித்தாளே' (கலி. 141) என்று தலைவன் தலைவியைத் தூற்றுவதன் வழியும் இங்கு தலைவன் மட்டுமே தலைவியின் அழகில் மயங்கிக் காதல் கொண்டமையை அறிய முடிகிறது. இனி, 'திருந்திழைக் கொத்த கிளவி' என்பதற்குத் திருந்திய இழையினை உடையவளைப் பெறுவதற்குப் "பொருந்தின வார்த்தைகள்"என்று நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார். பொருந்தின வார்த்தைகள் என்பதனைத் தலைவிக்கு தான் குடி, அழகு, வீரம், புகழ் போன்றவற்றால் பொருத்தமானவன் என்று கூறிய வார்த்தையாகவே கருதலாம். இப்பாடலில் நாங்கள் இருவரும் காதலிக்கின்றோம் என்று தலைவன் குறிப்பிடவில்லை. மேலும், தலைவியின் விருப்பத்தைக் கருத்தில் கொள்ளப்பட்டதற்கான குறிப்பும் பாடலில் இல்லை. எனவே, தலைவி தலைவனை விரும்பாத போதும் குடிப்பழிக்கு அஞ்சி. இசைவு தெரிவித்ததைக் காணமுடிகிறது.

**மடலேறுதலில் மாற்றமும், தனிமனித வன்முறை உச்சமும்**

முன்பு தலைவியின் தெருவிலோ, ஊர்மன்றத்திலோ, மடலேறுவதாக இருந்த பழக்கம் பின்பு பல ஊர்களிலும், நாடுகளிலும் மடலேறிச் செல்வதாக மாற்றமடைந்துள்ளதை,

"மடல் மா ஊர்ந்து மாலை சூடிக்
கண்ணகன் வைப்பின் நாடும் ஊரும்
ஒண்ணுதல் அரிவை நலம்பா ராட்டிப்
பண்ணல் மேவலம் ஆகி அரிதுற்று
அது பிணி ஆக விளியலங் கொல்லோ" (நற். 377)

"வில்லாப் பூவின் கண்ணி சூடி
நல்லே முறுவலெனப் பல்லூர் திரிதரும்
நெடுமாப் பெண்ணை மடல்மா னோயே" (நற். 146)

என்ற பாடலடிகளின் வழி அறியலாம். தலைவன் ஊர்த்தெருவில், மன்றத்தில் நடைபெற்ற மடலேற்றம் பல ஊர்களுக்கும், நாடுகளுக்கும் மடலேறிச் செல்வதாக மாற்றம் அடைவதற்குத் தலைவியின்

ஊரிலுள்ளவர்கள் மடலேறி வந்த தலைவனுக்கு ஆதரவு தராமை காரணமாக இருந்திருக்கக் கூடும். இதற்கு,

"கண்டுங் கண்ணோடா திவ்வூர்" (கலி. 140)

"உணர்ந்தும் உணரா திவ்வூர்" (கலி. 140)

"அறிந்தும் அறியா திவ்வூர்" (கலி. 140)

என்ற பாடலடிகள் தலைவனின் மடலேற்றத்திற்கு ஊர்மக்கள் ஆதரவு தராமல் இருந்ததை எடுத்துரைக்கின்றன. மேலும், தலைவன் மடலேறி வருவதற்குக் காரணமான பெண்ணை ஊரில் உள்ள பிற ஆடவர்கள் மணம் செய்து கொள்ளமாட்டார்கள் போலும். அதன்பின் வேற்றூரிலிருந்து வேற்றுவரைவு முடிக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம். எனவே, தலைவன் பிற ஊர்களுக்கும், நாடுகளுக்கும் மடல் ஏறிச் சென்று தலைவி மற்றும் அவளின் தமரின் குடிப்பழிக்கு இழுக்கு ஏற்படும்படி செய்து, வேற்றுவரைவும் தடைபட்டுப் போகச் செய்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இவ்வாறு தான் விரும்பிய பெண்ணைப் பெறுதல் வேண்டி, அப்பெண்ணின் சுயவிருப்பத்திற்கு மாறாக, அப்பெண்ணிற்கும் அவளின் குடிக்கும் இழுக்கு ஏற்படுமாறு தலைவன் வன்முறையில் ஈடுபட்டுள்ளான். தற்காலத்தில் தன்னைக் காதலிக்க மறுக்கும் பெண்கள் மீது திராவகம் வீசுதல், கொலை செய்தல் போன்ற வன்செயலில் இளைஞர்கள் ஈடுபடுவதை இம்மடலேற்றத்தின் மீட்சியாகக் கருதலாம்.

**பெண்கள் மீது திணிக்கப்பட்ட கருத்தியல் வன்முறை**

காதல் உணர்வு ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் ஒன்றாகும். காமத்துயரம் மீதுயரம் பெற்ற நிலையில் மடலேற்றம் நிகழ்த்தப்படுகிறது. மடலேறுதல் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரிய ஒன்றாகச் சங்க சமூகத்தில் நிலவியிருந்துள்ளது.

காமம் காரணமாக பெண்களும் துன்பமடைவர். ஆனால், பெண்கள் மடலேறியதாகச் சங்கப் பனுவல்களில் சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை. பெண்கள் மடலேறக் கூடாது என்பது மரபாகப் போற்றப்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகிறது. தொல்காப்பியமும், திருக்குறளும் இதற்குச் சான்றுபகர்கின்றன. பெண்கள் மடலேறக் கூடாது என்பது பெண்கள் மீது திணிக்கப்பட்ட ஒரு கருத்தியல் வன்முறையாகவே கருத முடியும். ஆனால், பெண்கள் மடலேறக்கூடாது என்ற கட்டமைப்புக்குட்பட்டு அல்லாமல் சிறப்பற்ற பழி உண்டாக்கும் செயலாதலால் மடலேற முன்வரவில்லை நம் பழந்தமிழ்ப் பெண்கள் என்றே எண்ணிப் பெருமை கொள்ள வைக்கிறது.

தலைவன் மடல் ஏறிய பொழுது, ஊரவர்கள் யாரும் அதனைக் கண்டு கொள்ளாத பொழுது, மடலேறித் துன்பப்படுவோரின் துன்பத்தைக் களைவது சான்றோரின் அறமாகும். தலைவன் தான் செய்யும் வன்செயலுக்குச் சான்றோர் ஆதரவினைப் பெறுவதற்கு 'அறம்', 'கடமை' என்னும் கருத்தினைக் கையாளுவதை,

"உயர்நிலை யுலகம் உறீஇ யாங்கென்
துயர்நிலை தீர்த்தல் நுந்தலைக் கடனே" (கலி. 139)

"இருளுறு கூந்தலாள் என்னை
அருளுறச் செயின்நுமக் கறனுமா ரதுவே" (கலி. 140)

என்பதன் மூலம் தான் செய்யும் வன்செயலுக்கு அறத்தின் சாயம் பூசப்படுவதினை உணரலாம். மேலும், தான் மடலேறுவதற்குச் சான்றோர்கள் எழுதி வைத்துள்ள அறநூல்கள் காரணமாகின்றன என்பதை,

"அறம் பொருளின்பமென் றம் மூன்றி னொன்றன்
திறஞ்சேரார் செய்யுங் தொழில் களைந்தன்
றணிநிலைப் பெண்ணை மடலூர்ந் தொருத்தி
அணிநலம் பாடி வரற்கு" (கலி. 138)

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. இங்கு அறநூல்கள் சாற்றியுள்ளதின்படி, நானும் மடலேறத் துணிந்தேன் என்று தன் வன்செயலுக்கு அறம், கடமை போன்ற கருத்துக்கள் வழி வன்செயலைச் செய்துள்ளனர்.

தலைவன் மடலேறித் தலைவிக்கும், தனக்குமுள்ள தொடர்பைத் தெருவிடையே கூறுகையில் தலைவியின் அழகைப் பல்லோர் அறிய வெளிப்படக் கூறுவதை,

"மின் அவிர் நுடக்கமும் கனவும் போல், மெய்காட்டி -
என் நெஞ்சம் என்னோடு நில்லாமை நனிவெளவி" (கலி. 138)

என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. தலைவியின் அழகை வர்ணிக்கும் பழக்கம் சிறப்பற்றதாகவே காண முடிகிறது. இது பெண்ணைக் காட்சிப்பொருளாகப் பார்க்கும் ஆணாதிக்கத்தின் இயல்பான வெளிப்பாடாகவே உணர வைக்கிறது. பெண்களை வர்ணிப்பது புலமை நெறியாக இருந்தாலும் அது அவளைக் காட்சிப் பொருளாக, போகப் பொருளாகப் பார்க்கும் ஆணாதிக்கப் போக்கை இனங்காட்டி நிற்கிறது.

**முடிவுரை**

மடலேறுதல் என்பது பொற்புடைய நெறி இல்லை. பிறரை அச்சம் கொள்ளச் செய்து தம் தேவையை நிறைவேற்றுதல் தவறாகும். மடலேறுதல் பலரும் சிரித்து இகழப்படும் இழிவான செயலாகும். தலைவி மற்றும் அவளின் தமர் மீதும் ஊரார் பழிதூற்றுகின்றனர். பெண்ணைக் காட்சிப் பொருளாகப் பார்க்கும் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாகவே இம்மடலேறுதல் அமைகிறது. பெண்களுக்கான வன்முறை உச்சத்தினையும், சமூகத்தின் மீது தலைவன் திணிக்கும் கருத்தியல் வன்முறைகளையும் இம்மடலேறுதல் விளக்கி நிற்கிறது.

**துணைநின்றவை (References)**


- கௌமாரீஸ்வரி எஸ்.(பதி.), (2005), தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்), சென்னை: சாரதா பதிப்பகம்.
- வையாபுரிப்பிள்ளை. எஸ். (1967), சங்க இலக்கியம் பாட்டும் தொகையும், சென்னை: பாரி நிலையம்.
- குழந்தை. (2012), தொல்காப்பியர் காலத்தமிழர், சென்னை: சாரதா பதிப்பகம்.
- மாணிக்கம் வ.சு.ப. (2009), தமிழ்க்காதல், சென்னை: சாரதா பதிப்பகம்.

# சங்ககால நெய்தல்நில மக்களின் வாழ்வியல் பின்புலம் Neithal Land of Sangam Period and the Background of that People's life

பெ.ராஜா | P.Raja

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017.

E-mail: rajamabed25@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:** கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் நிலம் என அழைக்கப் படுகின்றது. சங்க இலக்கிய நெய்தல் நிலப் பாடல்களில் இடம்பெற்றுள்ள நெய்தல் நில மக்களின் வாழ்க்கைப் பின்புலங்களை விளக்குவதாக இந்த கட்டுரை அமைகின்றது.

**Absract:** The sea and the land adjacent to the sea are called Neithal land. This article aims to explain the life backgrounds of the Neithal land people featured in Sangam literary Neithal land songs.

**திறவுச்சொற்கள் (Keywords):** நெய்தல்நிலம், சங்க இலக்கியம், பின்புலம், கடல், Neithal land, Sangam literature, backgrounds, sea.

### முன்னுரை

நெய்தல் திணைப் பாடல்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் பின்புலத்தில் நுணுக்கமாகப் பாடிச் சிறப்புப் பெற்றவர் உலோச்சனார். அவர்தம் நெய்தல் நிலக் காட்சிகளைத் தம் இதயம் கலந்து அனுபவித்துள்ளார். இவர்தம் குறியியல் சார்ந்த இயற்கை வருணனைகளால் அப்பொருண்மையை அறிய முடிகிறது.

தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலகட்டத்தைத் தமிழ்ச் சமூகத்தின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். தமிழில் முதலில் தோன்றிய இலக்கண நூலாகக் கருதப்படுகின்ற தொல்காப்பியம் நிலப்பகுப்புகளைக் கட்டமைத்தது. நிலத்தை மையமாகக் கொண்டே தமிழ்சார் பண்பாடு உருவானது. அவ்வந்நிலத்திற்குரிய மக்களின் வாழ்க்கை இயற்கையை மையமிட்டிருந்தது. தமிழில் அகத்திணை மற்றும் புறத்திணைக்கான பெயர்கள் அனைத்தும் அவ்வந்நிலம் சார்ந்த பூக்களின் பெயராக அமைந்திருக்கின்றன. நிலமே தமிழ்மக்களை அடையாளப்படுத்தியது. காடு, மலை, வயல், கடல் என்ற நான்கு வகையான பகுதிகளில் முதற்பொருள், கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் முறையே பதிவு செய்யப்பட்டுள்ளன. காடும் மலையும் திரிந்து வந்த வறட்சியான மணற்பகுதியைப் பாலையென்று வரையறுப்பர். இவ்வகை நிலப்பரப்புகளுள் நெய்தல் நிலம் முற்றிலும் மாறுபட்ட தன்மையுடையது. உலகின் மூன்று பகுதிகள் கடலால் சூழப்பட்டு ஒருபகுதி மட்டுமே நிலப்பரப்பைக் கொண்டது. அச்சூழலில் பிறநில மக்களின் வாழ்வியல் கூறப்பட்ட அளவில் நெய்தல் நில மக்களின் வாழ்வியல் பதிவு செய்யப்படவில்லை.

### நெய்தல் திணை

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடும்போது நெய்தல் நிலத்திற்கு, 'வருணன் மேய பெருமணல் உலகம்' (தொல். பொருள். நூற்பா.5) என அடைமொழி கொடுக்கிறார். இதனால் அன்று கடற்கரை என்பது மணல் நிறைந்த பெருவெளி என்று கொள்ளப்பட்டதாகக் கருத முடிகின்றது. சங்கப் பாடல்கள், கடற்கரைப் பகுதி வெண்மணல் வெளியாக இருந்தது என்றும், இங்குக் கடல்சார் மக்களின் குடியிருப்புகள் இருந்தன என்றும், கடற்கரை வெளியிலேயே அவர்களின் தொழில் கருவிகள் கிடந்தன என்றும் கூறுகின்றன. இத்தகைய ஐந்திணைகளில் ஒரு பகுதியாகவும் இரக்க உணர்வை உரிப்பொருளாகக் கொண்டதுமான நெய்தல் திணைக்குரிய பாடல்கள் சங்க இலக்கியத்தில்

பல உள்ளன. எட்டுத்தொகையில் முதலாவதாக வைத்தெண்ணப்படும் நற்றிணையில் 102 பாடலும் குறுந்தொகையில் 71 பாடல்களும் ஐங்குறுநூறில் ஒரு பகுதியாக 100-ம், கலித்தொகையில் 33 பாடலும் அகநானூற்றில் 40 பாடலும், இவ்வாறாக மொத்தம் நெய்தல் திணைப் பாடல்களின் எண்ணிக்கை 346 ஆகும்.

**முப்பொருள் விளக்கம்**

அகத்திணைப் பாடல்களின் கருத்தைச் செறிவாகவும் நிறைவாகவும் சங்கப் புலவர்கள் பாடுவதற்கு உறுதுணையாகவும் விளங்குவது முதல், கரு, உரிப்பொருள்கள் ஆகும். அன்பின் ஐந்திணை என்று அழைக்கப்படுகின்ற உயர் ஒழுக்கமாகிய உரிப்பொருளைக் கூறுவதற்கு முதல் மற்றும் கருப்பொருள்களாகிய பின்புலம் புலவர்களுக்குத் தேவையாயிற்று. இதனால் ஐந்திணை ஒழுக்கங்களுக்குப் பின்புலமாக முதல், கருப்பொருள்கள் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. அகவாழ்வின் சிறப்பை விளக்கும்போது பின்புலம் பற்றிய உணர்வு சிறப்பாக அமைதல் வேண்டும். முதல், கருப்பொருள் ஆகிய இரண்டும் பின்புல வருணனைக்காகவே கூறப்பெறுகின்றன என்பதிலிருந்தும் 'தமிழ் அகத்திணைப் பாடல்களில் கருத்துப் பின்னப்படும் முறையை முதல், கரு, உரி எனப்பகுப்பது மிகச் சிறந்த நாடக உத்தியாகும்' (இராம.பெரியகருப்பன், சங்க இலக்கிய ஒப்பீடு, பக்.115-116) என்பதிலிருந்தும் அகப்பாடல்கள் வழி நின்று ஒழுக்கங்களை விளக்க வந்த தமிழ்ப் புலவர்களுக்கு முதல், கருவாகிய இடப்பொருள்கள் பெரிதும் துணையாக விளங்கியமை தெளிவாகின்றது. ஒவ்வொரு திணைக்குரிய ஒழுக்கமும் முதல், கரு, உரி என்னும் முப்பொருளையும்,

"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை" (தொல்.பொருள்.அகத்.3)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இதன் வாயிலாக அகப்பாடல்களில் பயின்று வருபவை, முதல், கரு, உரி என்னும் முப்பொருள்கள் ஆகும் என்பதைத் தொல்காப்பியம் தெளிவாக்குகின்றது. இந்நூற்பாவில் அமைந்த 'முறை சிறந்தனவே' என்னும் குறிப்பிற்கு "முதலில் கருவும், கருவில் உரிப்பொருளும் சிறந்து வரும்" (தொல்.பொருள். அகத்.3) என்று விளக்கம் தருகிறார் நச்சினார்க்கினியர். இவ்வாறே ச.சோமசுந்தர பாரதியாரும்,

"முறை சிறந்தன என்பதனால் முதலிற்கருவும் கருவின் உரியும் ஒன்றினொன்று முறையே மேற்சிறப்புடைத்தாம். அகப்பாடல்களில் உரிப்பொருள் தலையாயதென்பதும், அதற்கு முதலும் கருவும் சிறப்புதவத் துணையாகச் சார்ந்து வருபொருள்களாம் என்பதும் வெளிப்படை" (தொல்.பொருள்.அகத். ப.11) எனப் பொருள் கொள்கின்றார்.

எனவே முதல், கரு, உரி ஆகிய முப்பொருள்களும் ஒன்றினொன்று முறையே சிறப்புடையது என்பது தெளிவாகிறது. மேலும் நிலத்தையும், பொழுதையும் அவற்றை நிலைக்களனாகக் கொண்ட கருப்பொருளையும் விளக்குவது. அகப்பாடல் நோக்கம் அன்று. உரிப்பொருளை விளக்குவது அதன் நோக்கமாகும். உரிப்பொருளை விளக்க முதல், கரு என்னும் இரு பொருள்களும் துணையாகின்றன. முதல், கரு, உரி என்னும் மூன்றும் உரி, கரு, முதல் என்ற நிரலில் சிறப்பினைப் பெறுகின்றன. எனினும் முதலின்றிக் கருவும் உரியும் அமையாதென்பதை உணர்த்தவே முதற்பொருளைத் தொல்காப்பியர் முதலில் கூறியிருக்கிறார் எனக்கொள்வது இங்கு பொருத்தமாக அமைகின்றது. மேலும் முதல், கரு, உரி மூன்றும் மயங்கும் என்பதற்குத் தொல்காப்பியர்,

"திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலன்நன் குணர்ந்த புலமை யோரே" (தொல்.பொருள்.அகத்.14)

என்று விதி வகுத்துள்ளார். ஆயினும் முதலினும் கருவும், கருவினும் உரியும் சிறந்ததென அவர் வழிவகுத்தாரல்லர். எனவே 'முறை சிறந்தனவே' என்ற அவர்தம் கூற்றுக்கு முதல், கரு, உரிப்பொருள்

என்பவை இவ்வமைப்பு முறைப்படியே சிறந்தன என்று பொருள் கொள்வது பொருத்தமாகின்றது. இது முற்ற முடிந்த கருத்து என்பதை அறிவுறுத்துவதற்கு 'முறை சிறந்தனவே' என்பதை அமைத்துள்ளார் எனக் கொள்வது பொருந்தும்.

மேலும், முப்பொருளுக்கும் விளக்கம் தரும் மீனாட்சி சுந்தரனார், "உரிப்பொருள் விளங்கக் கருப்பொருள் துணை செய்யும், கருப்பொருளோடு உரிப்பொருளுக்குரிய தொடர்பை மேலும் விளக்க முதற்பொருள் உதவும் என்றாலும் உரிப்பொருள் தான் கதை, கதைக்குக் கால் உண்டு என்பார்கள், அந்தக் கால் போல் வருவனவே முதல் கருப்பொருள்களாம்" (தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், தமிழ் இலக்கிய வரலாறு, சங்ககாலம், ப.75) என்று கூறுகின்றார். இவற்றால் அகப்பாடல்களின் அடிவரையறைக்கேற்ப இம்முப்பொருள்களையும் வைத்துப் பாடல்கள் அமைப்பது மரபாக இருந்து வந்திருக்கிறது என்பது தெரியவருகின்றது. இவற்றோடு அப்பாடல்களில் உரிப்பொருள் வெளிப்படையாகக் காட்டப்படுகின்ற ஒன்றாகவும், கருவும் முதலும் குறிப்பாகவேனும், வெளிப்படையாகவேனும் சுட்டப்படுகின்ற ஒன்றாகவும் காணப்படுவதை அறியமுடிகின்றது.

### நெய்தல் திணையுள் முப்பொருள்

ஐந்திணைகளில் ஒன்றாகத் திகழக்கூடிய நெய்தல் திணையில் உள்ள பாடல்களைத் தொகுத்து அவற்றின் கண் அமைந்த முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மூன்றையும் வகுத்து, ஒவ்வொன்றையும் தனித்தனியாக நிறுத்தி இங்கு விளக்கப்படுகின்றன.

### முதற்பொருள்

நிலமும் பொழுதும் சேர்ந்தது முதற்பொருள் என அழைக்கப் பெறுகின்றது. மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது நிலமும் பொழுதுமாகும். எனவே இவற்றை முதற்பொருள் என்றழைப்பது பொருத்தமாகின்றது. இம்முதற்பொருளைத் தொல்காப்பியம்,

"முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே" (தொல்.பொருள்.அகத்.4)

என்று சுட்டுகின்றது. முதற்பொருளுக்கும் கொள்கை வகுக்கையில் நிலம், பொழுது ஆகிய இரண்டை மட்டும் தொல்காப்பியர் கூறியிருக்கின்றார். அகவொழுக்கங்கள் நிகழும் இடத்தையும் காலத்தையும் முதற்பொருள் என்று அழைப்பதுதான் மரபாகின்றது. பிற கருவும் உரியும் நிலத்தையும் காலத்தையும் சார்ந்து வருதலினால், அவை முதற்பொருளாயின. நிலம், பொழுது என்ற தொல்காப்பியர் வறிதே குறிப்பிடாது அவற்றின் இயல்புகள் என்று குறிப்பிடுவது இங்கு நோக்குதற்குரியது. அவ்வொழுக்கங்கள் நிகழும் இடம், பொழுது ஆகியவற்றை அவ்வவற்றின் இயல்புகளோடு குறிப்பிடுவது புலனெறி வழக்கமாகும்.

"நுண்ணிய மனநிலைகளாக இவ்வொழுக்க உணர்வுகளைப் புலனெறி வழக்கமாக மாற்றி அக்காலக் காட்சிகளைக் கண்முன் கொண்டு நிறுத்த கால, இட, கருப்பொருட் பின்னணிகளை அமைத்துக் காட்டுவது அகப்பாடல் மரபு" என்று கூறும் ஜான் சாமுவேல், திறனாய்வுச் சிந்தனைகள், சங்க அகப்பாடல் மரபுகள் ஒரு புதிய பார்வை தனது நூலில் கூறியுள்ளார்.

முதற்பொருளைக் கூறும் தொல்காப்பியரின் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கத்தைக் காண்பதும் இங்குப் பொருத்தமாகின்றது. "காடுறை உலகம் (முல்லை), மைவரை உலகம் (குறிஞ்சி), தீம்புனல் உலகம் (மருதம்), பெருமணல் உலகம் (நெய்தல்) ஆகிய நான்கும் இயற்கை நிலம் என்றும், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் எனும் ஆறு சிறுபொழுதுகளும், கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் ஆறு பெரும்பொழுதுகளும் இயற்கைப் பொழுதுகள்" (தொல்.பொருள்.அகத்.5) என்றும் நச்சினார்க்கினியர் கருத்தில் கொண்டார் என்பது தெளிவாகின்றது.

மேலும் நச்சினார்க்கினியர் உரையைப் பார்க்கும்போது பாலையைச் செயற்கை நிலம் என்று அவர் கருதியமை புலனாகின்றது. கைபுனைந்து இயற்றா ஒன்றே இயற்கை என்றும் கைபுனைந்து இயற்றுவது செயற்கை என்றும் கூறுவது மரபாகும். "கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப்படாதது இயற்கை. மலையும், காடும், ஆறும், கடலும் எவர் கையால் ஆக்கப்பட்டன? இயல்பாக அரும்பிய இவைகளின் அழகே கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாகும். மற்றையது போலி" என்று இயற்கை, செயற்கை அழகினைப் பற்றி திரு.வி.கலியாண சுந்தரனார் தனது நூலானா முருகன் அல்லது அழகு நூலில் கூறுவதும் கருதற்குரியது.

ஆனால் நச்சினார்க்கினியர் குறிப்பிடும் செயற்கைப் பொழுதுகள் எவையென அறிய இயலவில்லை. செயற்கை நிலனும் பொழுதும் பின்னர் அறியப்படும் என்ற அவர் பின்னர் எவ்விடத்திலும் செயற்கைப் பொழுதுகளைக் கூறவில்லை. எனவே மேற்குறிக்கப் பெற்றவை செயற்கைப் பொழுதுகள் அல்ல என்பது புலனாகும். இவற்றால் இயற்கை நிலம், இயற்கைப் பொழுது என்று குறிப்பிடாது நிலத்தின் தன்மைகள் (இயல்புகள்) பொழுதின் தன்மைகள் (இயல்புகள்) என்ற பொருளிலேயே 'இயல்பு' என்னும் சொல்லைத் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகின்றது.

**நெய்தல் நிலம் - பெயர்க்காரணம்**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற இப்பகுதிகள் அந்தந்த நிலங்களில் மிகுதியாகக் காணப்படும் பூக்களால் பெயர் பெற்றன என்பது ஒரு சாரார் கருத்து. மற்றொரு சாரார் புணர்தல், இருத்தல், பிரிதல், ஊடல், இரங்கல் என்ற ஒழுக்கத்தால் பெயர் பெற்றன என்கின்றனர்.

"மாயோன் மேய காடுறை உலகமும்" (தொல்.பொருள்.அகத்.நூ.5) என்று தொடங்கும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர் இளம்பூரணர்,

முல்லை குறிஞ்சியென்பன இடுகுறியோ, காரணக்குறியோ எனின் ஏகதேச காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப்படும். இதற்கான காரணத்தைக் கூறுகின்ற பொழுது,

நெல்லொடு,
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய் (முல்லைப்பாட்டு, 8-10)

என்றமையால், காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது ஆகலானும்.

கடுங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்.3:3-4)

என்ற வழி, மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்தது ஆகலாம்.

"இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை உறங்குந் தண்துறை ஊர" (அகம்.286:6-7)

என்ற வழி, தீம்புனல் உலகிற்கு மருது சிறந்தமையானும்.

"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்" (குறுந்.1)

என்றவழிப் பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமையானும் நிலங்களை இவ்வாறு குறிப்பிட்டார் என்று கொள்ளப்படும். இவ்வாறு கூறி, அந்தந்த நிலத்தின்கண் சிறந்து விளங்கும் பூக்காரணமாகவே அந்த நிலத்திற்கு அப்பெயர் வழங்கலாயிற்று என்று கூறியுள்ளார் இளம்பூரணர்.

இக்கருத்தினை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஏற்காது முல்லை முதலிய பூவாற் பெயர் பெற்றன இவ்வொழுக்கங்களென், அவ்வந்நிலங்கட்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின் அவற்றாற் பெயர் கூறலும் உரியவெனக் கடாயினார்க்கு விடையின்மை உணர்க எனக்கூறி மறுக்கிறார். நச்சினார்க்கினியருடைய இந்தக் கொள்கை, குறிஞ்சிக்கு உரியதாகக் கூறப்பட்ட ஒழுக்கம் புணர்தல் என்பதாகும். இப்புணர்ச்சி ஒழுக்கத்திற்கே குறிஞ்சி என்பது ஒரு பெயர். இவ்வாறு இருத்தலாகிய ஒழுக்கத்திற்கு மறுபெயர் முல்லை, ஊடலாகிய ஒழுக்கத்திற்கு மறுபெயர் மருதம், பிரிதலாகிய ஒழுக்கத்திற்கு மறுபெயர் பாலை, இரங்கலாகிய ஒழுக்கத்திற்கு மறுபெயர் நெய்தல் இவ்வாறு அந்தந்த ஒழுக்கம் சார்ந்த நிகழ்வினால் நிலம் அந்தந்தப் பெயரினைப் பெற்றுள்ளது என்பதனை அறியமுடிகின்றது.

**கடலும் மனித வாழ்க்கையும்**

நெய்தல் நிலத்தில் வாழ்கின்றவர்களுக்கு இயற்கையானது சாதகமாக அமைகின்றது. மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் நெய்தல் நிலத்து மக்கள் கவலை கொள்வதில்லை. எந்த நிலப்பகுதியில் நீர் வற்றினாலும், கடல்நீர் வற்றுவது இல்லை. வறட்சி என்பதைக் கடல் அறியாது. கடலை விளைநிலமாகக் கொண்டு உழுதொழில் இல்லாமலே விளைபயன் அடைவர்.

இத்தகைய கடல் மிக மிகப் பழமையானது. இது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். அதனால் தான் பண்டைத் தமிழர் இதனை 'முந்நீர்' என்று குறிப்பிட்டனர். பழந்தமிழ் இலக்கியங்களில் கடலின் தோற்றம் பற்றிய கருத்துரைகள் இல்லை. எனினும் ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்னும் மூவகை நீர்களும் கலந்த ஒரு கலவையாகக் கடல் விளங்குகின்றது என்பதை,

"முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயும்
தாங்கா வுறையு ணல்லூர் கெழீஇய" (புறம்., 24:16-17)

என்னும் புறப்பாடலடிகள் குறிப்பிடுகின்றன. இப்பாடலடிகளில் இடம்பெறும் 'உடத்த' 'வளைஇய' என்னும் சொற்கள் கடல் தொடர்ச்சியானது என்பதையும் கடலின் பரப்பானது நிலத்தின் பரப்பைவிடக் கூடுதலானது என்பதையும் குறிப்பிடுகின்றன.

நெய்தல் நிலத்தின் பின்புலம் வருணனையாகக் காணப்படும் இக்கடல் 'முதுநீர்ப் புணரி' (குறுந்., 299:1), 'நீனிறப் பெருங்கடல்' (அகம்., 40:2), 'உரவுக்கடல்' (குறுந்., 316:4), 'உரும் இசைப் புணரி' (குறுந்., 351:4), 'ஊர்க்கடல்' (நற்., 211:1), 'நளிகடல்' (நற்., 219:5), 'மணிக்கேழ் அன்ன மாநீர்' (குறுந்., 49:2) என்று குறிக்கப்படுகின்றது.

நீலமணி களங்கமின்றித் தெளிந்திருந்தாற் போலக் கரிய பெரிய கடற்பரப்புத் தெளிந்திருந்தது என்பதை,

"மணிதுணிந்து அன்ன மாயிரும் பரப்பின்" (நற்., 159:1)

என்னும் தொடர் காட்டுகின்றது. கடல்களில் பொங்கி வரும் அலைகள் பல பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளன.

'முழங்குதிரை' (நற்., 235:1, 375:7), 'பொங்குதிரை' (நற்., 335:2), 'அல்கலும் தயங்குதிரை' (குறுந்., 226:5), 'படுதிரை' (அகம்., 200:8) எனப் பல பாடல்களில் (குறுந்., 163, 166, 228, 303, 345, 381, நற்., 159) அலை பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன.

வில்லால் அடிப்பட்ட பஞ்சுபோல அலைகள் காணப்படுகின்றன என்பதை,

"வில்லெறி பஞ்சி போல மல்குதிரை

வளிபொரு வயங்குபிசிர் பொங்கும்" (நற்., 299:7-8)

என்றும், முதியோரைப் போன்ற வெண்மையான தலை பொருந்திய அலையை உடைய கடல் இளம் பெண்கள் செய்து விளையாடும் மணல் வீட்டை அழிக்கும் என்பதை,

"மூத்தோ ரன்ன வெண்டலைப் புணரி
இறையோ ராடும் வரிமனை சிதைக்கும்" (அகம்., 90:1-2)

என்னும் உவமை நயம்பட வருணிக்கப்படுவதை அறியமுடிகின்றது.

இவ்வாறு கடல் பற்றிய பாடல்கள் நற்றிணையில் 58 பாடல்களும், குறுந்தொகையில் 36 பாடல்களும், ஐங்குறுநூற்றில் 40 பாடல்களும், அகநானூற்றில் 30 பாடல்களும் கலித்தொகையில் 16 பாடல்களும் காணப்படுகின்றன.

**கடற்புயல்**

நெய்தல் பாடல்களின் பல உவமைகளில் கடற்புயல் இடம்பெறுகின்றது. மதம் கொண்டு மோதும் களிறு தன்னைப் பிணித்துள்ள கந்தினைச் சாடிச் சிதைத்து, தன்னைக் கட்டுப்படுத்துவதும் குத்துக் கோலாளரையும் பிறரையும் அலைக்கழித்து அழித்துத் திரிவது உண்டு. அந்த மதக்களிற்றுக்கு உவமையாகப் புயலால் எழுதரும் கடலலைகள் பேசப்படுகின்றன. துறைமுகத்தின் அமைதிக் கொழுவிலே அமைந்து கிடந்தது கப்பல், அதன் "நங்கூரம் பாய்ச்சிய கயிறு இற்றுப்போகவும், துறைநீங்கி அலைச்சூழலில் சிக்கவும், பாய்மரம் முறியவும் கடும்புயல் எழுந்து பெரும் பேரலைகளை உருவாக்குகின்றது. புயல் தரும் அலையால் கலங்கிப் பிறரையும் கலக்கியது களிறு" என்பது மதுரைக்காஞ்சி (அடி 375-383) தரும் காட்சியாகும். இவ்உவமைக் காட்சியில் வரும் பொருட்கள் பலவும் கடலலைக்கும் நீருக்கும் ஒப்புமை பெற்றுச் சிறப்பதைக் காணலாம்.

மதுரை நகரில் ஓங்கிப் பரக்கும் கொடியும் கூட கடலலையைப் போலவே அசைந்தாடுவதாக மதுரைக் காஞ்சியில் உவமை சொல்லப்பட்டிருக்கின்றது.

"திண்காழ் ஏற்ற வியலிரு விலோதம்
தெண்கடல் திரையின் அசைவளி புடைப்ப" (மதுரைக்., 449-450)

ஆரவாரமும் முயற்சியும் மிகுந்த மதுரை மாநகர் இரவுக் காலத்தில் அமைதியின் புகலிடமாக விளங்குகின்றது. அந்நிலையினை அதே மதுரைக்காஞ்சி ஒலியும் அசைவும் ஒடுங்கி ஓய்வு கொள்ளும் கடலுக்கு ஒப்பாகக் கூறுகின்றது.

"பாடான்று அவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடுப்ப" (மதுரைக்., 629-630)

என்பது அப்பொருளை உணர்த்தும் தொடராகும்.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் நெய்தல் திணைப் பாடல்கள் மிகுதி. அப்பாடல்களில் நெய்தல் நிலம் பற்றிய வருணனைகள் சிறப்பிடம் பெறினும், கடற்கரைச் சார்பே பெரிதும் வருணிக்கப்பட்டுள்ளன. கடலின் உட்பரப்புப் பற்றிய வருணனைகள் இல்லை. ஷெல்லி, பைரன் போன்ற மேலைநாட்டுக் கவிஞர்களுக்குக் கடல் ஒருவகை எழுச்சியையும் ஒட்டுறவையும் ஏற்படுத்துவதைப் போல சங்கப் புலவர்களுக்குக் கடல் சார்ந்த பின்புலம் மனவெழுச்சியைத் தோற்றுவிக்கவில்லை.

குறிஞ்சிக் காதலர் அடிக்கடிக் கூடுவதில் ஆர்வமுள்ளவர், நெய்தல் நிலப் பின்புலத்தில் காதலர்கள் இத்தகைய வாய்ப்புகளைப் பெறவழியில்லை. நெய்தலில் களவுக் காலப் பிரிவு நீண்டது. ஆதலால் நெய்தல் தலைவியர்கள் தங்கள் களவு கற்பாக மாறுமா? என்று ஏங்கும் நிலையில் தங்கள் வாழ்வைக் குறித்து வருந்துகின்றனர்.

நெய்தல்திணைப் பாடல்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், பின்புலத்தில் நுணுக்கமாகப் பாடிச் சிறப்புப் பெற்ற உலோச்சனார், நெய்தல் நிலக்காட்சிகளைத் தம் இதயம் கலந்து அனுபவித்துள்ளார். இவர்தம் குறியியல் சார்ந்த இயற்கை வருணனைகளால் அதனை அறிய முடிகின்றது. அவற்றுள் குறிப்பிடத் தக்கது புன்னைமரம் தலைவியின் தங்கையாவாள் என்ற உருவக்குறியீடு ஆகும். இவரது நெய்தல் பாடல்களில் முகர்வுப்புலன் சார்ந்த குறியீடுகளும் உண்டு. பரதவர் சேரியில் பரவுகின்ற மீன்களின் புலால் நாற்றத்தைக் கடற்கரை கானலில் வளர்ந்துள்ள புன்னை, தாழை ஆகியனவற்றின் நறுமணம் போக்கும் எனச் சுட்டுவது இதற்குச் சான்றாகும்.

பரணர் பாடிய நெய்தல் பாடல்களில் செயலும் இயக்கமும் நிறைந்த குறியீட்டுக் காட்சிகள் மிகுதி. பேரிசாத்தனாரின் நெய்தல் பாடல்களில் பனைமரம், புன்னைமரம், தேரின் மணியொலி, வண்டுகள், அன்றில் பறவைகள் ஆகியன முதல், கருப்பொருள் பின்புலங்களில் குறியீடுகளாக அமைந்து குறியியல் நோக்கில் உரிப்பொருளைச் சிறப்பிக்கின்றன.

நெய்தல் திணைப் பாடல்கள் முழுவதையும் ஓரிடத்தில் தொகுத்து வைத்துப் பார்க்கும்போது, பெரும்பான்மையான பாடல்கள் நெய்தல் நில வருணனை காரணமாகவே நெய்தல் திணையில் வைக்கப்பட்டுள்ளன என்னும் உண்மை புலனாகின்றது. நெய்தல் திணையில் நெய்தல் நிலத்திற்குரிய இரங்கல் உரிப்பொருளைக் கொண்டுள்ள பாடல்கள் மிகச் சிலவாகவே உள்ளன. இரங்குவதாகப் பாடும்போதும், தலைவியின் இரங்கலே சிறப்பிக்கப்படுகின்றது. குறுந்தொகை, அகநானூறு, நற்றிணை எனும் மூன்று தொகைநூல்களிலும் தலைவன் இரங்குவது போன்று பாடப்பட்டுள்ள பாடல்கள் இல்லை. நெய்தல்நிலம் கடலோடு தொடர்புடையதாயினும், மீன்வேட்டம் பற்றிப் பேசப்படுகிறதே ஒழிய, அயல்நாட்டுக் கடல் பயணம் பற்றி நெய்தல் திணைப்பாக்களில் பேசப்படவில்லை என்பது எண்ணத்தக்கது.

**துணைநின்றவை (References)**


- கௌமாரீஸ்வரி (ப.ஆ.) (2006), திரு.வி.க.வின் முருகன் அல்லது அழகு, சென்னை: சாரதா பதிப்பகம்.
- சுப்பிரமணியன் ச.வே. (1998), தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பு, பாரிமுனை, சென்னை-8.
- சோமசுந்தர பாரதியார் ச. (1997), தொல்காப்பியப் பொருட்படலப் புத்துரை, சென்னை: வசுமதி பதிப்பகம்.
- மீனாட்சி சுந்தரனார் தெ.பொ., (2000), இலக்கிய வரலாறு, மதுரை: தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அறக்கட்டளை.
- ஜான் சாமுவேல் ஜி., (1986), திறனாய்வுச் சிந்தனைகள் சங்க அகப்பாடல் மரபுகள் புதிய பார்வை, சென்னை, பாரி நிலையம்.

# அம்மன்கிளி முருகதாஸின் சங்க இலக்கிய ஆய்வு Ammangili murugadasin sanga ilakkiya aaivu

முனைவர் ஆ.நளினிசுந்தரி | Dr. A.Nalini Sundari

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017
E-mail: nalini.tm@bhc.edu.in

**ஆய்வுச்சுருக்கம்**

அம்மன்கிளி முருகதாஸின் சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும் எனும் ஆய்வின் வழி அவர் அறிந்த உண்மைகள் ஆய்வு உள்ளடக்கம், ஆய்வுப்பிரச்னைகள், ஆய்வின் மூலங்கள், ஆய்வு அடங்கல் எனும் பகுப்பின்கீழ் விளக்கப் பெறுகின்றது. பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸின் இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்ட உண்மைகள் தமிழ் ஆய்வுலகிற்கு நல்ல சிந்தனைத் தூண்டலை முன்வைக்கின்றன என்ற உண்மையை வெளி உலகிற்கு எடுத்துச்சொல்லும் ஆய்வாக இது அமைகிறது.

**Abstract**

The aim of this research paper is " Prof. Ammangili Murugadoss' Sangam study presents a significant thought in the field of study. This study titled "Sangkavithiyakam: Tradition and Change" was his PhD thesis in 1999. This article examines the content of his study of Sangha literature. As an extension of the Tamil literature studies that occur from time to time, Sangam literature studies are able to realize the ancient excellence of Tamil.From the 19th century to the present day, the history and language of Tamils have been studied from many angles.Although Sangha literary studies have come in many stages, This article examines the content of his study of Sangha literature.

1. In some cases problems were found between sections and songs.
2. Dissimilarity or dissimilarity between the composers of the interlocutor's hymns.
3. Uncategorized 'emotional' songs Visibility
4. The status of the singers influenced the songs (e.g. the difference between Panar songs and Vendar songs).
5. Gender differences have influenced songs, etc., have been identified significantly. Also, some specific books in Sangha literature have been studied separately with their special features.

**திறவுச்சொற்கள் (Keywords):** திணைப்பிரிவு, பால்நிலைவேறுபாடு, திணைக்கோட்பாடு, நூல்களின் காலப்பிரச்சனை, புலவர் பாணர், பாடல் தொகுப்பு, தொல்காப்பிய திணைவகுப்பு, சங்க நூல், திணைப்பகுப்பு, அகம், புறம், thinaipirivu, paalnila verupadu, thinai kottupaadu, noolgalin kaalapriachanai, pulavar paanar, thinaipaguppum paadal thoguppum, agam puram pattriya thelivu

## முன்னுரை

சங்க இலக்கியத்துக்குள்ளேயே காணப்பட்ட கவிதையாக்க வளர்ச்சி நிலையையும் அவை அக்கவிதை மரபிலிருந்து மெல்ல மெல்ல மாறிச் செல்லும் தன்மையையும் அல்லது புதிய சிந்தனைகளுக்கு வழிவிடும் தன்மையையும் எடுத்துக்காட்டுவனவாக அமைந்திருந்தன என்கிறார். அத்துடன் சங்கப் பாடல்களில் அகப்பாடல்களும் புறப்பாடல்களும் அவற்றின் ஆக்கமுறையில் வெவ்வேறு இயல்புகளையும் இலக்கணங்களையும் கொண்டிருந்தமையும் இந்நூலில் சொல்லப்பட்ட ஆய்வு முடிவுகளை இன்றைய ஆய்வாளர்களுக்கு இரண்டாம் நிலைத் தரவுகளாகின்றன.

## அம்மன்கிளி முருகதாஸின் சங்க இலக்கிய ஆய்வு

காலந்தோறும் நிகழும் தமிழ் இலக்கிய ஆய்வுகளின் நீட்சியில் தமிழரின் தொன்மை சிறப்பை உணர்த்தவல்லவை சங்க இலக்கிய ஆய்வுகள். 19 ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்றுவரை நிகழ்த்தப்பெறும் ஆய்வுப்பாதையில் தமிழர் வரலாறையும் மொழிக்கூறுகளையும் பல கோணங்களில் எண்ணிப்பார்க்க முடிந்தது. அவ்வாறு சங்கஇலக்கிய ஆய்வுகள் பல நிலைகளில் வந்துள்ள போதிலும் பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸின் சங்க ஆய்வு ஒரு குறிப்பிடத்தகுந்த சிந்தனையை ஆய்வுலகில் முன் வைக்கிறது. "சங்கக்கவிதையாக்கம் : மரபும் மாற்றமும்" என்னும் தலைப்பின் கீழ் அவர் செய்த இந்த ஆய்வு 1999இல் அவரது முனைவர் பட்டத்துக்குரிய ஆய்வாகும். அவரது சங்க இலக்கிய ஆய்வின் உள்ளடக்கம் குறித்த செய்திகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

சங்க இலக்கியம் பற்றிய ஆய்வில் இது புதிய சில சிந்தனைகளை ஆராய்கிறது. இந்த ஆய்வின் செய்வதற்கு மூலமாக அமைந்தவை அல்லது சிந்திக்க வைத்தவை பேராசிரியர் கா.சிவத்தம்பியின் சங்க இலக்கியக் கட்டுரைகளும் பேராசிரியர் பெ.மாதையனின் சங்க இலக்கிய கட்டுரைகளும் மிக முக்கிய காரணமாக அமைகின்றன என்கிறார் அம்மன்கிளி முருகதாஸ் அவர்கள். பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுகளில் அந்த இலக்கியங்களுக்கிடையே காணப்படும் புலவர், பாணர் வேறுபாடுகள் இலக்கியத்தில் இருக்க முடியும் என்பதையும் அகமும் புறமும் தனித்தனியாக இல்லாமல் இணைந்தும் செயறல்படுகின்றன என்பதையும் அடிக்கடி வற்புறுத்தி வந்தார். இந்த சிந்தனை அல்லது பார்வை எனக்கு அதனை மேலும் ஆராயத் தூண்டுதல் அளித்ததுஎன்கிறார் அம்மன்கிளி. முனைவர் பட்ட ஆய்வுக்காக 1998இல் அவர் தமிழ்நாட்டுக்கு வந்திருந்த போது தஞ்சையில்

பேராசிரியராக இருந்த பெ.மாதையனின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அவரிடமிருந்து பெற்றிருக்கிறார். அவரது கட்டுரைகள்அரச உருவாக்கம் பற்றியும் புறநானூற்றின் சில திணை துறைகளுக்கும் சமூக நிலைக்குமிடையேயிருந்திருக்கக்கூடிய தொடர்பை ஆராய்ந்தனவாகவும் அமைந்திருந்தன. அவரது அக்கட்டுரைகளின் தூண்டுதலால் சங்க கால சமூக அமைப்பு அக்காலக் கவிதையியலில் செல்வாக்குச் செலுத்தியிருக்கக் கூடிய சூழ்நிலைகளை முற்றிலுமாக நோக்க அம்மன்கிளி அவர்களுக்கு வழி வகுத்திருக்கிறது.

**சங்கக் கவிதையாக்கம்: மரபும் மாற்றமும்**

அம்மன்கிளி முருகதாஸின் சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும் " எனும் ஆய்வின் வழி அவர் அறிந்த உண்மைகளை கண்டு நோக்கினால் அதனை கீழ்வருமாறு காணலாம்.

1. திணைபிரிவுகளுக்கும் பாடல்களுக்குமிடையே சில சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள் காணப்பட்டமை.
2. உரையாசிரியர் பாடல்களுக்குத் திணை வகுத்தோரிடையே ஒற்றுமை காணப்படாமை அல்லது ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக அமைந்திருந்தமை.
3. திணை பகுப்புச் செய்யமுடியாத 'உணர்வு நிலை'ப் பாடல்கள் காணப்பட்டமை.
4. பாடல்களைப் பாடியவர்களின் அந்தஸ்து நிலை பாடல்களிற் செல்வாக்குச் செலுத்தியிருந்தமை (உ-ம்: பாணர் பாடல்கள், வேந்தர் பாடல்களுக்கிடையிலான வேறுபாடு)
5. பால்நிலை வேறுபாடு பாடல்களிற் செல்வாக்குச் செலுத்தியிருந்தமை.

போன்றவை குறிப்பிடத்தக்க வகையில் இனங்காணப்பட்டிருக்கின்றது. அத்துடன் சங்க இலக்கியத்தில் குறிப்பிட்ட சில நூல்கள் அவற்றின் சிறப்புத்தன்மை கொண்டு தனித் தனியே ஆராயப்பட்டுள்ளன. அவை, சங்க இலக்கியத்துக்குள்ளேயே காணப்பட்ட கவிதையாக்க வளர்ச்சி நிலையையும் அவை அக்கவிதை மரபிலிருந்து மெல்ல மெல்ல மாறிச் செல்லும் தன்மையையும் அல்லது புதிய சிந்தனைகளுக்கு வழிவிடும் தன்மையையும் எடுத்துக்காட்டுவனவாக அமைந்திருந்தன என்கிறார். அத்துடன் சங்கப் பாடல்களில் அகப்பாடல்களும் புறப்பாடல்களும் அவற்றின் ஆக்கமுறையில் வெவ்வேறு இயல்புகளையும் இலக்கணங்களையும் கொண்டிருந்தமையையும் ஆராய்ந்துள்ளார்.

**ஆய்வு உள்ளடக்கம்**

தொல்காப்பியத்திற் கூறப்பட்ட கவிதை இலக்கணம் பற்றிக் கூறியுள்ளதுடன் சங்க இலக்கியங்களினூடே தெரியும் கவிதை மரபுகளை ஆராய்ந்து முடிவுகளைக் கண்டுள்ளார். புறத்திணைப் பாடல்களின் திணை துறை வகுப்புமுறைச் சிக்கல்களையும் புறப்பாடல்களின் திணைதுறை வைப்பும் அவை சுட்டும் சமூகம் பற்றியும் பாடுநர் வேறுபாடுகளும் முறைமைகளும் பற்றியும் ஆராய்ந்திருக்கிறார். கவிதையாக்க மரபின் மாற்றங்களை எடுத்துக் கூறுவதுடன் ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்ந்திருக்கிறார்.

எனவே, அம்மன்கிளி அவர்களின் இந்த ஆய்வு சங்க இலக்கியத்தின் நீண்ட வரலாறு கொண்ட நீட்சிக்குள் அவ்விலக்கியம் கவிதையாக்க மரபில் தனக்குள்ளே பெற்ற மாற்றங்களை குறித்து விவரிக்கின்றார் என்பதை இங்கு எடுத்துக்கூற முடிகிறது. இந்த ஆய்வின் போது பேராசிரியர் பெ. மாதையன் தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கியம் பற்றி நடந்தேறிய ஆய்வுக் கட்டுரைகளின் தட்டச்சுப் பிரதிகளையும் ஆலோசனைகளையும் ஏற்றுக்கொண்டு ஆய்வினை மேற்கொண்டிருப்பதாக தனது முன்னுரையில் அம்மன் கிளிமுருகதாஸ் கூறியிருக்கிறார். மேலும், அவரது துறைத் தலைவியும் அவரது ஆசிரியையுமான பேராசிரியை சித்ரலேகா மௌனகுரு இலக்கியங்களில் பால்நிலை பற்றிய ஆராய்ச்சி அறிவை அவருக்கு அளித்தவர் என்கிறார்.

சங்கக் கவிதையாக்கம் - மரபும் மாற்றமும்' என்ற இந்த நூல் எட்டுத்தொகை எனவரும் சங்கத் தொகை நூல்களுள்ளே காணப்படுகின்ற செய்யுள்நிலை வளர்ச்சிகளையும் அவ் வளர்ச்சியினூடே காணப்பெறும் புலமைச் சிக்கல்களையும் எடுத்துக் கூறுகின்றது. இந்த ஆய்வு முனைவர்பட்ட ஆய்வாகக் செய்யப் பெற்ற பொழுது இம்முயற்சியின் வெற்றி தமிழ்ச் சமூகத்திற்கு கிடைத்த பொக்கிஷம் என்று சொல்ல முடியும்.

அவரது சங்க ஆய்வு குறித்த சிந்தனையோட்டம் 1990களின் முற்பகுதியில் தமிழ்க்கவிதை பற்றிய கொள்கையாக்கங்கள் (theorization) பற்றி ஆராயத் தொடங்கி சென்னைப் பல்கலைக்கழகத்தில் 2003இல் 'தமிழ்க் கவிதையியல் ஒரு தேடல்' என்ற ஒரு தொடர் விரிவுரையை மேற்கொண்தடிருக்கிறார். அம்மன்கிளி முருகதாஸ். சங்க இலக்கியத்தினை குறிப்பாக எட்டுத்தொகையினுள் வரும் பாடல் ஆக்கம், வகுப்பு முறை போன்ற விஷேயங்களை மிக நுண்ணிதாக ஆராய்ந்துள்ளார்.

“இவரது ஆய்வு எட்டுத்தொகையினுள் வரும் பாடல் ஆக்கம், வகுப்பு முறை போன்ற விடயங்களை மிக நுண்ணியதாக ஆராய்ந்துள்ளார்” என்று பேராசிரியர் க. சிவத்தம்பி தந்துள்ள அணிந்துரையில் மதிப்பிட்டு சொல்லிருப்பது தமிழ் ஆய்வுலகிற்கு கூடுதல் கவனத்தை பெற்றுத்தருகிறது. அம்மன்கிளி முருகதாஸ் இவ்வாய்விலே சில முக்கிய வினாக்களைக் முன் வைப்பதை அறிய முடிகிறது. அந்த வினாக்களினூடே சங்க இலக்கியத் முழுமையைப் புரிந்து கொள்ளவும் புலமைக் கவனிப்புக்கு நம்மை உட்படுத்த வேண்டும் என்று கருத முடியும்.

**ஆய்வுச்சிக்கலை அடையாளப்படுத்தல்**

1. சங்க இலக்கியங்களில் சங்க காலத்துக்குப் பிற்பட்டவை என்று ஆராய்ச்சியாளர்களால் நிறுவப்பட்ட கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்கள் இலக்கிய தொடர்ச்சி , மாற்றம் என்பதால் ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார்.

2. சங்க இலக்கியங்களின் இலக்கண அமைப்பு, சங்க கால சமூகம், அரசியல், இயற்கைச்சூழல், பாடல் இயல்பு, கலைகள், மொழி பற்றியும் சங்க இலக்கியத்தின் சமூகச் சூழல், அரசியல், உளவியல், கவிதையியல் போன்றவற்றை ஆராய்வதற்கான சூழல் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து 20 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை காத்திரமான ஆய்வுகளும் ஆய்வுக்கட்டுரைகளும் வெளிவந்த போதிலும் அம்மன்கிளி முருகதாஸ் சங்க இலக்கிய ஆய்வுத்தேவையின் மிகச்சரியான காரணத்தை முன் மொழிந்துள்ளார். (ச.க.ம.மா. ப.4)

3. சங்க இலக்கியம் பற்றிய தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் சங்க இலக்கியப் பாடல்களை சமூக மானிடவியல்

அடிப்படையில் தொல்காப்பியத் திணைக் கோட்பாட்டை அறிந்த ஆய்வுகள் இவரது ஆய்விற்கு துணைப்புரிந்திருக்கிறன.

4. சங்க இலக்கியங்களில் புலவர்களின் பெயர்களும் பாடல்களும் குறித்த சிந்தனையை முன்னெடுக்கிறார்.புலவர்களின் புலமைக் காரணமாக அடை மொழியால் அறியப்பட்டுப் பெயர் மறிந்திருக்கலாம். அது மேலும் நுணுக்கமான ஆய்வு செய்ய வேண்டும் என்றும் முன்மொழிகிறார்.

5. புலவரும் பாணரும் குறித்த சிந்தனையில் 'தமிழ்ப்புலமையின் ஆரம்பக்கர்த்தாக்கள் பாணர்கள் தான் எனில் பாணர்களினூடாகத்தான் திணைக்கோட்பாடு சங்க இலக்கியத்தில் நிலை பெற்றது என்கிறார்.(ப.9)

6. திணைக் கோட்பாடு சங்க இலக்கியத்தில் பயிலப்பட்டத் தன்மைகளைக் கூறுகையில் "திணை என்ற சொல் சங்க இலக்கியத்தில் பல்வேறு அர்த்தங்களில் காணப்படுவதைச் சுட்டுகிறார். திணை என்பது நிலத்தைக் குறித்த சொற்களாகி பின்னர் ஒழுக்கங்களைக் குறித்தவையாக மாறத்தொடங்கின என்கிறார். (ச.க.ம.மா. ப.12)

7. திணைப் பகுப்பும் பாடல்தொகுப்பும் அமையப்பட்ட காரண காரியத்தை அறிய வேண்டும் என்கிறார். "சங்க நூல்களில் உள்ள எல்லாப் பாடல்களுக்கும் தொல்காப்பியர் கூறிய அடிப்படையில் தினை வகுப்பது சிரமம் என்கிறார்". (ச.க.ம.மா. ப.13)

8. தொல்காப்பியர் கூறும் ஏழு திணை கலித்தொகையில் மட்டும் காணப்படும் காரணத்தை ஆராய வேண்டும் என்கிறார்.

**ஆய்வின் மூலங்கள்**

1. இவரது ஆய்வின் மூலங்களாக எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மட்டுமின்றி தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவும் உதவியிருக்கின்றன.

2. சங்கம் பற்றிய ஐதீகம், தமிழ் செய்யுள்களின் ஆரம்பம், தமிழ் நாட்டின் எழுத்துப் புழக்கம், (அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்த தினி நட்டனரே கல்லும் (புறம்: 264; 3-4)

3. நூல் தொகுப்பு வரலாறு, தொகுப்பட்டக் காரணம், தொகுப்பில் ஏற்பட்டிருக்க கூடிய பிரச்சனைகள், நூல்கள் நோகளின் பெயர்கள் குறித்த ஆய்வுத்தேவை. ஒவ்வொரு சங்க நூல்கள் குறித்த குறிப்புகள் பற்றி சிந்திக்கச்செய்கிறார்.

4. சங்க நூல்கள் பற்றிய இலக்கண நூல்கள் தரும் செய்திகளை அறிந்து விளக்குகிறார். தொல்க்காப்பியம், இறையனார் களவியல் , புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றை முக்கியமான ஆய்வு மூலங்களாக பயன் படுத்துகிறார்.

என ஆய்வு மூலங்களைக் கொண்டு ஆராய்கிறார். இவரது ஆய்வின் வழி பல்வகை வினாக்களும் ஆய்வுச்சிந்தனைகளும் தமிழுலகம் அறிய முடியும். இவரது ஆய்வின் வழி ஆய்வு அடங்கலை இக்கட்டுரை இனம் காண முயல்கிறது. ஆய்வு அடங்கல் கீழ்வருமாறு:

1. சங்கக்கவிதையியலில் திணைக்கோட்பாட்டின் முக்கியத்துவம்
2. நூல்களின் காலப்பிரச்சனை
3. புலவர் பாணர்
4. திணைக்கோட்பாடு சங்க இலக்கியத்தில் பயிலப்பட்ட விதம்
5. திணைப்பகுப்பும் பாடல் தொகுப்பும்
6. தொல்க்காப்பிய திணைவகுப்பும் சங்க நூல்களின் திணைப்பகுப்பும்
7. அகம் புறம் பற்றிய தெளிவு

என்பதாக அமைகிறது.

அம்மன்கிளி முருகதாஸின் சங்க ஆய்வுகளின் பெறப்படும் ஆய்வு முடிவுகள் பல்வேறு வினாக்களை எழுப்புகின்றன என்பதோடு மட்டுமின்றி பல்வகை ஆய்வுக்களங்களை முன்னெடுக்கிறது என்று தான் சொல்லவேண்டும். அவற்றில் சில கீழ்வருமாறு:

- ❖ தொல்காப்பியத்தினை மட்டும் அடிப்டையாகக் கொள்ள முடியாது. வேறு நூல்களும் வேறு மரபுகளும் ஆதாரமாக இருந்திருக்கின்றன.
- ❖ சங்க இலக்கிய பாத்திரங்கள் உயர் வர்க்கத்தினரே
- ❖ பாடலைகள் அரசவை நோக்கத்திற்காக தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ❖ சில சந்தர்ப்பந்தங்களில் உரைகளை இயற்றியோர் வலிந்து பொருள் கொள்ள முயன்றுகின்றனர்.
- ❖ பாடல்கள் வளர்ச்சியடைந்த சமூகத்தினதே.
- ❖ சமூக அந்தஸ்த்தும் பால்நிலையும் பாடல்களின் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.
- ❖ கலி, பரிபாடல் ஆகியவற்றின் பாடல்கள் புதியதொரு வளர்ச்சிப்போக்கை எடுத்துக் காட்டுகின்றன.

எண்ணற்ற ஆய்வுககளைக் கண்ட சங்கப்பாடல்கள் காலம் முழுமைக்கும் ஆய்வுலகம் மேற்கொள்ளும் ஆய்வுக்களமாக அமையும். பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸின் இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்ட உண்மைகள் தமிழ் ஆய்வுலகிற்கு நல்ல சிந்தனைத் தூண்டலை முன்வைக்கிறது.

**துணைநின்றவை (References)**


- அம்மன்கிளி முருகதாஸ், (2006), சங்கக் கவிதையாக்கம் : மரபும் மாற்றமும், கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.

# வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் நாவலில் சமுதாயச் சிந்தனைகள் Social thoughts in the novel Vairamuthu's Third World War

## கி. கண்மணி | K. Kanmani

உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620 017. Email: kanmani.tm@bhc.edu.in

### ஆய்வுச்சுருக்கம்

வைரமுத்து அடித்தட்டு மக்களோடு நெருங்கிய தொடர்புடையவர். அவரது படைப்புகளில் கிராம மக்களின் வாழ்வியல் முறைகள். விவசாய மக்களின் தற்கால வாழ்வியல் பிரச்சனைகள், விவசாயத் தொழிலில் உள்ள சிக்கல்கள், இயற்கை விவசாயம், கல்வி, சுற்றுச்சூழலில் முதன்மையாக உள்ள நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபாடு அடைதல், புவி வெப்பமயமாதல் அதன் விளைவுகள், போன்ற கருத்துக்களை வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் நாவல் பதிவு செய்துள்ள திறத்தினை ஆராய்வதே இக்கட்டுரையின் மையப் பொருண்மையாகும்.

### Abstract

Vairamuthu is closely associated with the lower peoples. Among his works are the lifestyles of the villagers. The contemporary life problems of today's agricultural people, the problems in the agricultural industry, the pollution of land, water and air in the environment, and the effects of global warming are also explained. The effects of destruction of nature's children like forests, mountains, rivers, education, organic farming and so on the position of the farmer is also explained.

**திறவுச் சொற்கள் (Keywords):** வைரமுத்து, மூன்றாம் உலகப்போர், புவி வெப்பமயமாதல், இயற்கை வளம் பாதுகாத்தல், விவசாயிகள் நிலை, கல்வி, புவிவெப்பம், தடுக்கும் முறை, Vairamuthu, third world war globalization, resource conservation, farmers status and education

### முன்னுரை

இலக்கிய வகைகளுள் புனைகதை வடிவில் அமைந்த நாவலும் ஒன்றாகும். நாடறிந்த கவிஞர் எழுத்தாளர் வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் என்ற நாவல் ஆய்வின் நூலாகக் கொள்ளப்படுகிறது. இந்நாவல் அடித்தட்டு விவசாயிகளின் வாழ்வியலையும் விவசாயத்தின் தற்காலச் சிக்கல்களையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### சமுதாயத் தோற்றம்

ஒரு மனிதன் தன் தேவைக்காக மற்றொருவனை நாடுவது சமுதாயத் தோற்றத்தின் அடிப்படையாகும். அவ்வாறு ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளும் உறவுகளின் அடிப்படையில் சமுதாயம் தோற்றம் பெறுகிறது என்று கூறலாம்.

"மனிதன் சேர்ந்து வாழத்தொடங்கிய நாளே சமுதாய அமைப்புக்கு வித்திட்ட நாளாகும். கூட்டு வாழ்க்கையை சமுதாய வாழ்க்கை என்றாலும் பிழையாகாது". (பரமசிவானந்தம் 1962:30)

"சமுதாயத்தின் எல்லாக் காலங்களிலும் முரண்பாடுகளும் போராட்டங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன". இருப்பினும் இன்றைய வாழ்க்கை முறையில் மனிதன் தனியாக வாழ்தல் என்பது இயலாத ஒன்று. ஒன்றோடொன்று சார்ந்தும், இணைந்தும் கூட்டமாக வாழ்தலே சமுதாயமாகும் (க.கைலாசபதி 1983:21-22)

"சமுதாயம் என்பது அனைத்து மக்களின் கூட்டு அமைப்பாகும். சமுதாயம் ஒவ்வொன்றும் மாறிக்கொண்டே செல்கிறது". சமுதாயத்தில் நிகழ்கின்ற மாற்றங்களையும் போராட்டங்களையும், சமூக அமைப்புகளையும் சூழல்களையும் பதிவு செய்வதில் இலக்கியங்களே முக்கியப் பங்கு வகிக்கின்றன (சி.இ.மறைமலை 1991:18)

**சுற்றுச்சூழல் பாதிப்பு**

இன்று அதிகளவிலான மக்கள்தொகைப் பெருக்கத்தினாலும் முறையற்ற வாழ்வியல் முறையாலும் மனிதர்களைச் சார்ந்த சுற்றுப்புறங்களும் சூழ்நிலைகளும் பெருமளவிலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. மனிதர்கள் உயிர்வாழ அடிப்படையான நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபாடு அடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது.

**நீர் மாசுபாடு**

அதிகமான மக்களின் பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்கும் வகையில் பல தொழிற்சாலைகள் தோன்றிவிட்டன. ஆனால் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவுநீர் மனிதர்கள் பயன்படுத்தக்கூடிய நீர்நிலைகளை முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலை உருவாகி வருகிறது. "கரட்டுல பில்லு கட்டியிருக்காங்க. அவுங்க சாயக்கழிவுத் தண்ணித்தான் கசிஞ்சி கசிஞ்சி கெணருகள்ல செந்தண்ணியா எறங்குது. மில்லு வந்தா குடிக்க கஞ்சி கிடைக்கும்னு பாத்தா இப்ப குடிக்க தண்ணி கிடைக்காது போல இருக்கே" (வைரமுத்து 2012:.26-27).

பெரும்பாலான நகரங்களில் தொழிற்சாலைகளும், சாயப்பட்டறைகளும் இயங்கிவருகின்றன. இதுபோன்ற தொழிற்கூடங்கள் கிராமங்களிலும் புகுந்துவிட்டன. இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை முறையான சுத்திகரிப்பு இல்லாமல் ஆறுகளிலும் விவசாய நிலங்களிலும் விட்டுவிடுகின்றனர். இதனால் நிலத்தடி நீர், கிணறுகளில் சுரக்கின்ற நீர்த்தன்மையும் பாதிப்படைகிறது. மேலும் மக்கள் குடிப்பதற்கும் மற்றும் விவசாயப் புழக்கத்திற்கும் நீர்த்தட்டுப்பாடு ஏற்படுகின்ற நிலையினை சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் நாவலாசிரியர் கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

**புவி மாசுபாடு**

சுற்றுச்சூழல் பாதிப்புகளில் முதன்மையாக இருப்பது மனிதன் வாழும் இந்த பூமிதான். கழிவுறுப்புக்குப் பக்கத்தில் கருவளருவதைப் போல தீமைக்குப் பக்கத்தில்தான் இந்தச் சமூகம் வளர்ந்து வந்திருக்கிறது. பூமிப்பந்தில் எங்குப் பார்த்தாலும் குப்பைகள் குவிந்த வண்ணம் காணப்படுகின்றன. அதிலும் மண்ணில் மக்காத பாலிதீன் பைகளும் பிளாஸ்டிக் பொருட்களும் பூமியின் மேற்புறத் தோற்றத்தை அழுக்கு தேசமாக்கிக் காட்டுகின்றன. "இந்த உலகில் எரியும் பிரச்சனைகளுக்கு மத்தியில் எரிக்க முடியாத பிரச்சனை குப்பை. மண்ணில் மக்கப்போகும் மனிதன் மண்ணில் மக்காத பிளாஸ்டிக்கையும் பெட்ரோலிய இழைகளையும் கண்டறிந்துவிட்டான்" (வைரமுத்து 2012:.249-250). இதுபோன்ற பிளாஸ்டிக் பாலிதீன் பை பொருட்களின் பயன்பாட்டுக் கழிவுகளால் மண்ணின் தரமும் அதன் திடத்தன்மையும் சீர்குலைகின்றன. மேலும் நிலத்தடி நீர் குறைகிறது. இதனால் மக்கள் அனைவரும் மக்காத பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்த்து புவி மாசுபடுதலைத் தடுக்க வேண்டும் என்பதை இஷிமுரா பாத்திரம் மூலம் உலக மக்களுக்கு அறிவுறுத்துகிறார் நாவலாசிரியர் வைரமுத்து.

**காற்று மாசுபாடு**

வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகைகள், தொழிற்சாலைப் புகைகள், மனிதர் குப்பைகளை எரிப்பதனால் உண்டாகும் புகைகள் போன்றவற்றால் காற்றானது அதிகளவில் மாசுபாடு அடைகிறது. இதனால் மனிதர்களின் சுவாசமும் சுற்றுச்சூழலும் பாதிப்படைகிறது. "ஆண்டுக்கு இருநூறு மில்லியன் டன் கார்பன் மோனாக்ஸைடும், ஐம்பது மில்லியன் டன் ஹைட்ரோகார்பனும், நூற்றைம்பது மில்லியன் டன் சல்பர் டை ஆக்ஸைடும், நூற்றுத் தொண்ணூறு மில்லியன் டன் சாம்பலும் காற்றில் கலந்து கொண்டிருக்கிறது" (வைரமுத்து 2012:55). இவ்வாறு காற்றில் கலப்பதால் காற்று பெருமளவு பாதிக்கப்படுவதோடு ஓசோன் மண்டலம் எனப்படும் காற்றடுக்கு படலம் கிழிந்து அதன் வழியாக சூரியனிலிருந்து வெளிப்படும் புறஊதாக்கதிர்கள் பூமியிலுள்ள உயிரினங்களை நேரிடையாக பாதிப்படையச் செய்கின்றன. ஆகவே மக்கள், காற்றும் காற்று மண்டலமும் பாதிக்காத வாழ்க்கை முறைகளை மேற்கொள்ள வேண்டும் என எமிலி பாத்திரம் மூலம் தன் நாவல்வழி வலியுறுத்துகிறார் வைரமுத்து.

**புவி வெப்பமயமாதல்**

புவியானது அதிகளவில் வெப்பமடைந்து வருகிறது. இதற்கு முழுமுதற்காரணம் மனிதன். ஏனெனில் காடுகளையும் மரங்களையும் வெட்டித் தன் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறான். மேலும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் புவிவெப்பமாதலுக்குக் காரணமாகின்றன. "புவிவெப்பமாதலில் பருவநிலை மாற்றம் கண்டுவிட்டது. கடந்த நூற்றாண்டுகளில் இந்திய வெப்பநிலை 0.48 டிகிரி செல்சியஸ் கூடியிருக்கிறது" (வைரமுத்து 2012:308).

புவி வெப்பம் இனிமேலும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் ஐரோப்பின் ஒரு பகுதியும் மத்திய கிழக்கின் பெரும்பகுதியும் வாழத் தகுதி இழந்துபோகும் நிலை உண்டாகும். "புவி வெப்பம் கூடிக்கொண்டே இருக்கிறது. ஒரு டிகிரி வெப்பம் கூடியதற்கே சில பறவை இனங்களும், கம்பளித்தோல் கொண்ட விலங்கினங்களும் பூமியைவிட்டே போய்விட்டன. புவிவெப்பத்தால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு உயிரினம் அழிந்து கொண்டிருக்கிறது" (வைரமுத்து 2012:55).

நாளுக்கு நாள் உயரும் புவிவெப்பம் காரணமாக பறவைகளும், விலங்குகளும் மட்டுமல்ல மண்ணில் மனித இனமும் இல்லாமல் போகும் நிலை வந்துவிடும் என்று எமிலி பாத்திரம் மூலம் விளக்குகிறார் நாவலாசிரியர்.

**புவி வெப்பத்தின் விளைவுகள்**

புவி வெப்பத்தின் காரணமாக எதிர்பாராத பல நிகழ்வுகளும் விளைவுகளும் ஏற்பட்டுவிட்டன. "ஆர்கன்சாஸ் மாநிலத்தில் தலைக்கு மேலே பறந்த ஐயாயிரம் பறவைகள் பொத்தென்று தரையில் விழுந்து செத்தன. ரஷ்யாவில் நீராடப்போன பலர் சூடு தாங்காமல் நீர்நிலைகளில் செத்து மிதந்தனர். விஸ்காலின் நகரத்தில் மேய்ந்து கொண்டிருந்த சில நூறு பசுக்கள் சூடு தாங்காமல் ஒரே நேரத்தில் இறந்து போயின" (வைரமுத்து 2012:56) என்பதை எமிலி பாத்திரம் மூலம் விளக்குகிறார் நாவலாசிரியர்.

"உலகத்தின் பத்துக்கோடி மக்கள் கடல் மட்டத்திலிருந்து மூன்றடி உயரத்தில் தான் வாழ்கிறார்கள். புவிச்சூடு கட்டுப்படுத்தப்படாவிட்டால் இப்போதுள்ள கடல் மட்டம் மூன்றடி கூடும். இதனால் ஏழுகோடி மக்கள் இடம்பெயர நேரிடும்" (வைரமுத்து 2012:192).

அதிகரித்து வரும் புவிச் சூட்டினால் பனிப்பாறைகள் வேகமாக உருகிவருகின்றன. இதனால் கடல் மட்டம் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. மேன்மேலும் கடல் மட்டம் உயர்ந்தால் மக்கள் இடம்பெயர நேரிடுவதோடு மக்கள்தொகைப் பெருக்கமும் சுற்றுச்சூழல் பாதிப்பும் மிகுதியாக ஏற்படும். எனவே புவிச்சூடு அதிகரிக்காமல் கட்டுப்படுத்த மக்களோடு அரசும் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என இஷிமுரா பாத்திரத்தின் மூலமாக புவிவெப்பத்தின் விளைவுகளைக் குறிப்பிடுகிறார் நாவலாசிரியர்.

### புவிவெப்பம் தடுக்கும் முறைகள்

புவிவெப்பம் தடுக்கவும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்தவும் "பூமியை மரங்களால் நிரப்புவோம், மரங்களெல்லாம் புவிவெப்பத்திற்கு எதிராய்க் கைதூக்கிப் போராடும் போராளிகள். மரங்களின் சிறகடியில் ஊர் பத்திரமாய் பாதுகாக்கப்படட்டும். புவிவெப்பத்திற்கு எதிராக மனிதன் தொடுக்கும் முதல் போர் இதுவாக இருக்கட்டும்" (வைரமுத்து 2012:341-342).

மனிதர்கள் காடுகளை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். புதிய பல மரக்கன்றுகளை நட்டு வளர்த்தல் வேண்டும். அப்போதுதான் புவிச்சூடு குறையும் என்று எமிலி பாத்திரம் கூறுவதாக அமைகிறது.

### இயற்கை வளம் பாதுகாத்தல்

இயற்கை வளங்களான மலைகள், ஆறுகள், காடுகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். "மேற்குதொடர்ச்சி மலையைக் காப்பது அவசியமாகும். இந்தியாவின் அறுபது சதவீதம் நனைக்கும் நதிகள் மேற்குதொடர்ச்சி மலையிலேதான் ஊற்றெடுக்கின்றன" (வைரமுத்து 2012:286). மலையின் மேலுள்ள மரங்களை வெட்டுவதால் மலையின் உயரம் குறைகிறது. மலையின் உயரம் குறையுமானால் மழையின் அளவும் குறையும். ஆகவே மலையைப் பாதுகாக்க வேண்டும் என சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் குறிப்பிடுகிறார் வைரமுத்து. மேலும் "இந்திய நதிகளை இணைப்பது இருக்கட்டும். முதலில் நதிகளை வாழவிடுங்கள். மலையைக் காப்பாற்றுங்கள். மழையைக் காப்பாற்றலாம். முப்பத்தொரு விழுக்காடு காடுகள் இருக்க வேண்டிய தேசத்தில் இருபத்தைந்து விழுக்காடுதான் உள்ளன" (வைரமுத்து 2012:31). எனவே சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கவும் வேளாண்மைத் தொழிலை மேம்படுத்தவும் முதலில் இயற்கை வளங்களை அழிக்காமல் பாதுகாக்க வேண்டுமென எமிலி பாத்திரம் மூலம் விளக்கியுள்ளார் வைரமுத்து.

### விவசாயிகள் நிலை

"மழையில்ல, வயித்துல ஈரத்துணிய கட்டி படுத்திருக்கான் விவசாயி. வெளச்சல் இருந்தா வெலை இருக்காது. வெலை இருந்தா வெளச்சல் இருக்காது. காசு இருந்தா ஆள் கிடைக்காது. ஆள் கிடைச்சா காசு இருக்காது. கரண்டு இருந்தா தண்ணி இருக்காது. தண்ணி இருந்தா கரண்டு இருக்காது. எடஞ்சல் மேலே எடஞ்சலாகிப் போச்சப்பா கலப்பை புடிச்சவன் பொழப்பு" (வைரமுத்து 2012:24-25) என்று கிராம மக்களான கெடாவீரன், பரமனாண்டி, ஒத்தவீட்டு மூளி போன்ற பாத்திரங்கள் மூலம் விவசாயத் தொழிலுக்குண்டான சிக்கலைக் குறிப்பிடுகிறார் நாவலாசிரியர்.

"புவி வெப்பமயமாதல் உலகமயமாதல் என்ற இரண்டு பூதங்களால் ஒரு விவசாயி ஒரே நேரத்தில் விழுங்கப்படுகிறான். அவனது உற்பத்திப் பொருளின் விலையைப் பங்குச் சந்தைகளும், தங்கச் சந்தைகளும் தீர்மானிக்கின்றன" (வைரமுத்து 2012:57). பொருளை உற்பத்தி செய்பவனுக்கு அதன் விலையை நிர்ணயம் செய்ய உரிமை இல்லை என்கிற நிலையை எமிலி எழுதியுள்ள கட்டுரையின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்.

### கல்வி

படிப்பின் வாசம் அறியாத விவசாயி கருத்தமாயி தன் மகன் சின்னப்பாண்டியிடம் "என்னோட ஒழியட்டும்டா மகனே இந்த மண்ணோட மாரடிக்கிற பொழப்பு. நீயாச்சும் நகரத்துல அழுக்கு ஒட்டாம நாலெழுத்துப் படிச்சு நல்ல பொழப்பு பொழச்சுக்க" (வைரமுத்து 2012:69) என்று கல்வியும் கல்வியறிவும் வாய்க்கப்பெறாத கருத்தமாயி பாத்திரம் மூலம் கல்வியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி உள்ளார் வைரமுத்து. "முருகராசு பழைய பத்திரத்து மேல ஒரு லச்சருவா எச்சா குடுத்தீங்கன்னா என் சின்னப்பயல அமெரிக்காவுல ஒரு படிப்பு படிக்க வச்சு அழகு பாத்திருவேன்" (வைரமுத்து 2012:362) என்று கருத்தமாயி கூறுவதன் மூலம் கடன்பட்டாவது நல்ல கல்வியைப் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் என்னும் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் நாவலாசிரியர்.

**ஏழ்மை**

"விதைகடலைக்கு காசில்ல. நான் இருக்கேன்னு கூப்புடுது காதுல ஆடுன பொண்டாட்டியோட தண்டட்டிய அடகு வச்சு கடல நட்டாக மழையைக் காணோம். நட்டமாச்சு. ஐப்பசியில் நல்ல மழை நெல்லு நடலாம்னு உழுது பரம்படிச்சாரு, சீனிச்சாமி தச கூலிக்கு அடகு வச்சாரு அண்டாவ. பத்தல தன் மகளிடம் உன் கால் கொலுசக் கொடுதாயி! அப்பன் வட்டி போட்டு வளவி தாரேன்" (வைரமுத்து 2012:33).

இதைப்போலவே கையில் முதலீடு இல்லாமலும் கடன் வாங்கியும் கையில் இருக்கும் பொருளை அடகு வைத்தும் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளின் ஏழ்மை நிலையினை சீனிச்சாமி பாத்திரம் மூலம் படம்பிடித்துக் காட்டியுள்ளார் நாவலாசிரியர்.

**தற்கொலை**

ஊரையே சிரிக்க வச்சவன் ஊரையே அழுகவிட்டுட்டுப் போய்ட்டானப்பா. "மூணுவெள்ளாம ஏய்ச்சுட்டுப் போயிருச்சப்பா பொன்னுச்சாமிய, கடைசியா மகவீட்டுல போயி நகைய வாங்கி அடகு வச்சு விவசாயம் பண்ணினான். கருது தொண்டையில நிக்குது. குழை நோயி வந்து பயிறு நாறிப்போச்சு. அடகு வச்ச நகைய திருப்பி கேட்ட மருமகன் கெட்ட வார்த்தை கேட்டுப்புட்டான். கடைசியா பூச்சிக்கு வச்சிருந்த மருந்த அடிச்சிட்டுப் படுத்துட்டான். பூச்சிய கொல்லாத மருந்து பொன்னுச்சாமிய கொன்னுருச்சு" (வைரமுத்து 2012:100). விவசாய நட்டம், கடன் பிரச்சனை போன்றவற்றால் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்ட பொன்னுச்சாமியின் நிலையே அனைத்து விவசாய மக்களுக்கும் பொருந்துவதாகப் படைத்துள்ளார் வைரமுத்து.

**குடிப்பழக்கம்**

விவசாயத் தொழில் செய்யும் பெருவாரியான மக்கள் மதுவிற்கு அடிமையாகிவிட்டனர். "மதுக்கடை வாசல்களில் செத்துக் கொண்டிருக்கிறார்கள் விவசாயத் தொழிலாளிகள் தவணை முறையில். இது அவர்களின் அன்றாட உணவுப் பணத்திலும் கைவைக்கிறது" (வைரமுத்து 2012:134). உடல் அசதிக்கு மது மருந்தென வாழப்பழகியவன் மதுக்கடையின் வாசல்களில் மண்டியிருக்கிறான். மக்கள் மதுவிற்கு அடிமையாகும் நிலையினை சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் வெளிக்காட்டியுள்ளார்.

**அரசு தரும் இலவசம்**

அரசு தருகின்ற இலவசத்தால் மக்கள் சோம்பேறிகளாகி விட்டனர். விவசாயத் தொழில்புரியும் கிராம மக்கள் "சாராயத்திலும் தொலைக்காட்சியிலும், இலவசத்திலும் கிறங்கிக்கிடக்கிறார்கள். இலவசத்தில் வாழப்பழகியவர்கள் மதுரசத்தில் மூழ்கிப் போனார்கள். ஊனமுற்றோர், முதியவர்கள், அனாதைக் குழந்தைகள், ஆதரவற்ற நோயாளிகள் இவர்களுக்கு தானே இலவசம் பொருந்தும். உற்பத்தி பெருக்காத இலவசம் உற்பாதம் தானே விளைவிக்கும்" (வைரமுத்து 2012:132-134). உழைப்பாளிகள் இலவசத்தில் வாழப்பழகி உழைத்த தலைமுறை உளுத்த தலைமுறையாகிவிட்டது என்பதை சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் பதிவு செய்துள்ளார் வைரமுத்து.

**விவசாய வீழ்ச்சி**

மண் வளமின்மை, நீர்ப் பற்றாக்குறை, விளைநிலம் விற்பனை போன்ற காரணங்களால் விவசாயம் வீழ்ச்சியடைந்து விட்டது. கடந்த இருபது ஆண்டுகளில் விளைநிலங்கள் சுருங்கிவிட்டன. "உலகம் உயிர்களைச் சார்ந்திருக்கிறது. உயிர்கள் உணவை சார்ந்திருக்கிறது. உணவு விவசாயத்தைச் சார்ந்திருக்கிறது. இன்று விவசாயத்தின் நாற்பது விழுக்காட்டு நிலங்கள் ஈனும் சக்தியை இழந்துவிட்டன" (வைரமுத்து 2012:136). மண்ணில் அதிகமான இரசாயன உரங்கள் இடுவதால் மண் மலடாகி மண்ணிலுள்ள உயிர்ச்சத்து அழிந்து ஈனும் தன்மையை இழக்கிறது. இதனால் விவசாயமும் உற்பத்தியும் பெருமளவில் வீழ்ச்சியடைந்து விட்டது.

### இயற்கை விவசாயம்

"இந்தியா கண்டடைந்த மிகப்பெரிய தொழில்நுட்பம் இயற்கை விவசாயம். அதைத் தொலைத்துவிட்டது இந்தியா. மண் ஈன்று கொடுப்பதெல்லாம் உள்ளிருக்கும் உயிர்த் தன்மையால் தான். அந்த உயிர்த் தன்மை இரசாயன உரமிட்டுக் கொல்லப்படுகிறது. பன்னிரண்டு கிலோ மண்ணின் உயிர்த்தன்மை கொல்லப்பட்ட பிறகுதான் ஒரு கிலோ விளைகிறது" (வைரமுத்து 2012:289). ஆகவே விவசாயிகள் விவசாயத்திற்கு ஆடு, மாடு முதலியவற்றின் எருக்களைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு மக்கள் அதிகமான கால்நடைகளைப் பெருக்க வேண்டுமென இஷிமுரா பாத்திரம் மூலம் மக்களுக்கு உணர்த்தியுள்ளார் வைரமுத்து.

### தொகுப்புரை

மூன்றாம் உலகப்போர் நாவலில் வைரமுத்து பல்வேறு சமூகச் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார். நிலம், நீர், காற்று மாசுபடுதல் மற்றும் புவி வெப்பமயமாதலின் காரணம், அதன் விளைவுகள், புவி வெப்பம் தடுக்கும் முறைகள், இயற்கை வளம் பாதுகாத்தல், விவசாயிகள் நிலை, கல்வி, ஏழ்மை, விவசாயி தற்கொலை, தற்கொலையின் காரணங்கள், குடிப்பழக்கம் மற்றும் அரசு தரும் இலவசத்தால் உழைப்பை மறந்த விவசாயிகள், விவசாய வீழ்ச்சி, அதன் காரணங்கள், இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் போன்றவை இந்நாவலின் மையக்கருத்துக்களாக இடம்பெற்றுள்ளன..

### துணைநின்றவை (References)


- வைரமுத்து, (பதி,), (2012), மூன்றாம் உலகப்போர் நாவல், சென்னை-24,சூர்யா வெளியீடு.
- கைலாசபதி. க., (1983), இலக்கியச் சிந்தனை, கொழும்பு-12, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- பரமசிவானந்தம், (1962), சமுதாயமும் பண்பாடும், சென்னை-30, தமிழ்க்கலை பதிப்பகம்.
- மறைமலை, சி.இ., (1991), இலக்கியமும் சமூகவியலும், , சென்னை.-17, மணிவாசகர் பதிப்பகம்.

# தலயாத்திரையில் திருஞானசம்பந்தரின் அறநெறி Morality of Thirugnanasambandar on Thalayatra

முனைவர் மோ.ஸ்ரீதர் | Dr. M.Srithar

Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli - 620 017

**E-mail:** msrithar0684@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இறைவனைத் தரிசிக்க வேண்டித் தலயாத்திரை மேற்கொண்ட திருஞானசம்பந்தர் தாம் செல்லும் இடங்களில் இருக்கின்ற மெய் அன்பர்க்கும், சிவனடியார்களுக்கும் இடையூறாக உள்ள உடல் பற்றி வருகிற நோய், உயிர் பற்றி வருகிற பிறவிப் பிணி, மனம் பற்றி வரும் கவலை, வாழ்வு பற்றி வறுமை இவை தீரத் தீர்வுகளைத் தருகிறார். அந்தத் தீர்வுகளின் வழி நின்று திருநீற்றினை நிறையப் பூசிச் சைவ மெய்த் திருவின் சார்வே பொருள் என உணர்ந்து இன்னிசைத் திருப்பதிகங்கள் பாட வேண்டும் என்னும் பெருவழியினையும், திருவீழிமிழலையில் பசிப்பிணி தீர்க்கவும், திருப்பாச்சிலாசிராமத்தில் முயலகன் பீடிக்கப்பட்ட மன்னனின் மகளைக் காத்ததும், திருச்செங்கோட்டில் அவ்வூரை வாட்டிய குளிர்சுரத்தை நீக்கியதும், இவை போன்ற இன்னும் பெரிய அறங்களையும் அற்புதங்களையும் தேவராலும் யாவராலும் கனவிலும் கூட நிறைவேற்ற இயலாத அதிசயச் செயல்களைத் திருவருளின் வழி நின்றே திருப்பதிகங்கள் கொண்டு செய்து காட்டியுள்ளார். எந்தச் சோதனையையும், சோகத்தையும், இடையூறினையும் திருவருள் வழிநின்றே தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இதன் வழி உணரப்படுகிறது.

**Abstract**

Thirugnasambandar, who undertook the Talayatra to pray to the Lord, provides solutions to the ailments of the body, birth problems of the body, anxiety of the mind, and poverty of life that hinder the true love and Shivanadiyar in the places he goes to. The way of those solutions is that the Saiva body should be worshiped as the object of the Lord and worshiped in Thiruneeru, the way to cure hunger in Thiruveezhimilalai, the muyalagan in Tirupachilasiramam protected the daughter of the afflicted king, and in Thiruchengode removed the cold that was raging in the area. He has performed miracles by standing in the way of the Lord with the Tirupatigams. Through this the faith is felt that any trial, sadness or disturbance can be resolved through the Lord.

**திறவுச்சொற்கள் (Keywords):** தல யாத்திரை, சிவனடியார்கள், பசிப்பிணி, நோய் தீர்த்தல், Thala yathirai, sivanadiyargal, pasipini, disease releif.

**முன்னுரை**

மனிதர்களிடையே பயணம் என்பது மனித இனம் தோன்றிய போதே தொடங்கிவிட்டது. உணவு, பொருள், உறைவிடம், வேட்டை போன்றவைகளைத் தேடும்போதே பயணம் தொடங்கலாயிற்று. இவ்வகையில் பின்வரும் காலங்களில் நாகரிகம் கொண்ட மனிதன் வாணிகம், போர், சமயம், புலம்பெயர்தல் மூலம் பயணத்தில் முன்னேற்றம் கண்டான். தலயாத்திரை மேற்கொண்ட சமய அருளாளர்கள் வெவ்வேறு இடங்களில் வாழும் மக்களிடையே சென்று சமயம்சார் கருத்துகளையும், நல்லுணர்வையும் போதித்தனர். இவ்வாறாகச் சமயங்களில் பயணம் உண்டாயிற்று. அவ்வகையில் ஞானசம்பந்தர் சென்று வந்த தல யாத்திரையில் செய்த அற நெறிகளை இக்கட்டுரை சிந்திக்கிறது

**தலயாத்திரை**

பயணங்களில் பலவகை இருப்பின் மிக முக்கியத்துவம் பெற்றது சமயப் பயணமாகும். இதனைத் தலயாத்திரை, திருச்செலவு என்று அறிய முடிகிறது. சிவனார் திருப்பதிகளை முறையாகச் சென்று தொழுதற்கு மேற்கொள்ளும் திருத்தல யாத்திரையில் சைவ சமயத்தின் 274 திருத்தலங்கள் இடம் பெற்றுள்ளன. இதனை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

- தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம்
- தேவார பாடல் பெறாத் திருத்தலங்கள் (வைப்புத் தலம்)

என்று அறிய முடிகின்றது.

இத்தலயாத்திரையினைச் சைவ சமயத்தின் பெரும் அருளாளர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் என நால்வரும் மேற்கொண்டனர். இதில் அதிக தலயாத்திரையும், பதிகமும் பாடியவர் திருஞானசம்பந்தர் ஆவார். இவர் தாம் சென்று பாடிய தலங்களே இன்றளவும் பதிகங்கள் பெற்ற திருப்பதிகளாகச் சான்றுடன் விளங்கிக் கொண்டிருக்கின்றன. பதிகம் பெறாதவை, பதிகம் கண்டறியப்படாதவை வைப்புத்தலமாகக் கூறப்படுகிறது. திருஞானசம்பந்தர் தாம் சென்று வந்த தல யாத்திரையினை,

1. முதல் தலயாத்திரை – 1 திருத்தலம்
2. இரண்டாம் தலயாத்திரை – 7 திருத்தலங்கள்
3. மூன்றாம் தலயாத்திரை – 5 திருத்தலங்கள்
4. நான்காம் தலயாத்திரை – 21 திருத்தலங்கள்
5. ஐந்தாம் தலயாத்திரை – 170 திருத்தலங்கள்
6. ஆறாம் தலயாத்திரை – 49 திருத்தலங்கள்
7. ஏழாம் தலயாத்திரை – 1 திருத்தலம்.

என்றவாறு பகுக்கலாம்.

**தலயாத்திரையும் அறநெறியும்**

நாட்டிலே வறுமை, பசி, பஞ்சம், நோய், பிணி, இயற்கை சீர் அழிவுகள் போன்றவை நேராவண்ணம் மக்கள் நன்கு வாழ வேண்டுமானால், திருக்கோயில்களில் வழிபாடுகள் செம்மையாக நடைபெறுதல் வேண்டும் என்பதைத் தமிழ் ஞானசம்பந்தர் கொள்கையாகவும், குறிக்கோளாகவும் கொண்டு தலயாத்திரை மேற்கொண்டார் என்னும் உண்மை திருத்தொண்டர் புராணம் மூலம் உணர்த்தப் பெறுகின்றது.

**i. திருவீழிமிழலை - பசி, பஞ்சம் தீர்த்தல்**

திருஞானசம்பந்தர் சென்ற ஐந்தாம் தலயாத்திரையில் திருவீழிமிழலையில் ஞானப்பிள்ளையாரும், அரசுகளும் இருக்கையில் ஆறு, குளங்களில் இருக்கும் நீர் வற்றியும், மாரி இன்றியும் இருக்கும் காலத்தில் கொஞ்சம் போக்கத் துணை புரிந்தனர்

"மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி

மன்உயிர்கள் கண்சாம்பி உணவு மாறி
விண்ணவர்க்கும் சிறப்பில்வரும் பூசை ஆற்றா
மிக்கபெரும் பசிஉலகில் விரவக் கண்டு
பண்அமரும் மொழிஉமையாள் முலையின் ஞானப்
பாலறா வாயர்உடன் அரசும் பார்மேல்
கண்நுதலான் திருநீற்றுச் சார்வி னோர்க்கும்
கவலைவரு மோ?"என்று கருத்தில் கொண்டார். (பெரியபுராணம், 2465)

என்பது ஞானசம்பந்தரின் சிறப்பைக் கூறும் பாடல் ஆகும். ஞானசம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலை இறைவனிடம் திருப்பதிகங்கள் பாடித் தினமும் படிக்காசு பெற்றனர். இதனை,

"வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசலில்லையே" (பன்னிரு திருமுறை, 1.92.1)

என்னும் பாடல் எடுத்துரைக்கிறது.

"குற்றமில்லாத, கலக்கம் இல்லாத வீழிமிழலை ஈசரே! குற்றம் தீர்ந்த காசைத் தந்து, என் துன்பத்தைத் தீரும்" என்று கூறுகிறார். பின் அங்கு இருக்கும் அனைத்து சிவனடியார்களுக்கும், ஊர் மக்களுக்கும் மற்றும் உணவின்றி இருந்த அனைவருக்கும் உணவு படைத்தனர் என்று திருச்சரிதம் எடுத்துரைக்கின்றது. மேலும்,

காதலொடும் தொழு(து)எடுத்துக் கொண்டு நின்று
கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க
"நாதர்விரும்(பு) அடியார்கள் நாளும் நாளும்
நல்விருந்தாய் உண்பதற்கு வருக" என்று
தீதில்பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர்
திருஅமுது கறி,நெய்,பால் தயிர்என்(று) இன்ன
ஏதம்உறா(து) இனி(து)உண்ண ஊட்டி அங்கண்
இருதிறத்துப் பெருந்தவரும் இருந்த நாளில்! (பெரியபுராணம், 2469)

என்ற பாடல் மூலம் பஞ்சத்தினால் உணவின்றி இருந்த சிவனடியார்களுக்கும் ஊர்ப் பொது மக்களுக்கும் தீதின்றிப் பறையால் செய்தி அறிவித்து, சோறு, காய்கறி, பசுநெய், பால், தயிர் போன்ற உணவுப்பண்டங்கள் கொண்டு உணவு படைத்தனர். மேலும் அவர் குற்றமின்றிப் பெற்ற காசு மூலம் அனைவருக்கும் உண்ண உண்ண உணவு குறைபடாமல் பெரும் சோற்று விருந்து அளித்தனர். இச்செய்தியை,

அருவிலையில் பெரும்காசும் அவையே ஆகி
அமுதுசெய்யத் தொண்டர்அள(வு) இறந்து பொங்கி
வரும்அவர்கள் எல்லார்க்கும் வந்தா ருக்கும்
மகிழ்ந்(து)உண்ண இன்அடிசில் மாளா தாகத்
திருமுடிமேல் திங்களொடு கங்கை சூடும்
சிவபெருமான் அருள்செய்யச் சிறப்பின் மிக்க
பெருமைதரு சண்பைநகர் வேந்தர் நாவுக்
கரசர்இவர் பெரும்சோற்றுப் பிறங்கல் ஈந்தார். (பெரியபுராணம், 2474)

என்னும் இப்பாடலின் வழி அறியமுடிகின்றது. மேலும் இந்நிகழ்ச்சியைப் பஞ்சகாலம் நீங்கி மக்களின் இயல்பு வாழ்க்கை வரும் வரையிலும் வேறு எங்கும் செல்லாமல் அங்கேயேயிருந்து படிக்காசு பெற்று மக்களுக்கு உணவளிக்கும் அறத்தைப் பின்பற்றினார். இக்கருத்தை,

அவனிமிசை மழைபொழிய உணவு மல்கி
அனைத்(து)உயிரும் துயர்நீங்கி அருளி னாலே

புவனம்எலாம் பொலி(வு)எய்தும் காலம் எய்தப்
புரிசடையார் கழல்பலநாள் போற்றி வைகித்
தவமுனிவர் சொல்வேந்த ரோடும் கூடத்
தம்பிரான் அருள்பெற்றுத் தலத்தின் மீது
சிவன்மகிழும் தானங்கள் வணங்கப் போவார்
தென்திருவாஞ் சியமூதூர் சென்று சேர்ந்தார். (பெரியபுராணம், 2475)

என்னும் பாடல் காட்டுகிறது.இவ்வாறாகத் தான் திருத்தலயாத்திரை சென்ற இடத்தில் ஏற்பட்ட பசி பஞ்சம் ஆகியவை நீங்கும் வரையிலும் அங்கேயே இருந்து இறைவனின் திருவருளினால் அந்நிலை மாற்றம் அடையும் அளவிலும் அனைவருக்கும் இறைவரிடம் பெற்ற படிக்காசின் மூலமாக மாளாத திருவமுது படையல் அளித்தார் என்பது புலனாகிறது.

**ii. நோய் தீர்த்தல்**

ஐந்தாம் தலயாத்திரையில் திருஞானசம்பந்தர் பல இடங்களில் அறங்கள் செய்திருப்பினும் சில இடங்களில் நோயினைத் தீர்த்து வைத்துள்ளார். உடலை நொய்ய வைப்பது நோயாகும்.

காவிரியின் வடகரைத் தலமாகிய திருவாசி என்று தற்போது அழைக்கக்கூடிய திருப்பாச்சிலாசிராமம் என்ற திருத்தலத்தில் கொல்லிமழவன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனின் மகளுக்கு முயலகன் என்னும் முடக்குவாதம் நோய் அதிகமாக உடலை வாட்டி வைத்தது. வேறு செயலின்றி வேந்தனும் அங்கு வீற்றிருக்கும் இறைவனிடம் தஞ்சம் அடைந்தான்.

"தன்னை அடைந்தார் வினைத் தீர்ப்பதன்றோ
தலையாயவர் தம்கடன் ஆவதுதான்" (பன்னிரு திருமுறை 4.1.4)

என்ற வாகீசர் கூற்றின்படி திருஞானசம்பந்தர் அக்கொல்லி மழவன் மகளைத் "துணிவளர் திங்கள் துளங்கி விளங்க" என்ற பதிகம் பாடிக் காப்பாற்றினார் என உணர முடிகின்றது.

பின்னர், கொங்கு நாட்டில் இடம் கொண்டிருக்கும் திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்னும் தலத்தில் குளிர்பனிச்சுரம் மிகவும் மக்களையும் அங்குள்ள ஞானமுண்ட பிள்ளையாரின் பரிசனங்களையும் தாக்க, அதற்கு இந்நிலத்தின் இயல்பு எனினும் நமக்கு எய்தப் பெறா என்று சென்னி மதி அணிந்தாரை வேண்டித் திருப்பதிகம் பாடினார். இப்பதிகம் பாடிய பின் அப்பகுதியில் உள்ள மக்களுக்குப் பனிப்பிணி தீர்ந்தது மட்டுமல்லாமல் பனிப்பிணி அந்நாடு முழுவதும் உள்ள அனைவருக்கும் நீங்கியது என அப்பதிகப் பாடல் கூறுகிறது. இச்செய்தியை,

"ஆய குறிப்பினில் ஆணை நிகழ அருளிச் செய்து
தூய பதிக திருக்கடைக்காப்பு தொடுத்தணிய
மேய அப்பொற்பதி வாழ்பவர்க்கே அன்றி மேவும் அந்நாள்
தீய பனிப்பிணி அந்நாடு அடங்கவும் தீர்ந்தது அன்றே" (பெரிய புராணம், 2239)

இன்னும் பாடல் வழி அறிய முடிகிறது. இத்திருப்பதிகம் பாடிய பின் ஆணையிட்டுப் பாட அங்கு வாழ்ந்தவர்க்கு அன்றி அந்த ஊரைச் சுற்றியுள்ள அனைத்து இடங்களிலும் இந்நோய் இருந்த தடயம் இல்லாமல் அழிந்துவிட்டது என இப்பாடல் உணர்த்துகிறது.

**முடிவுரை**

எல்லாம் ஈசன் செயலே என உணர்ந்து வாழ்வில் எது நேர்ந்தாலும் தளராது இறை அருளில் தோய்ந்து திருத்தொண்டில் உறுதியாக நின்றால் துன்பங்கள் விரைவில் அகலும் என்னும் உண்மை ஞானசம்பந்தர் வரலாற்றின் வழி அறியலாகிறது. சிறுசிறு நோய்களுக்கு மருத்துவரை நாடி, பொருள் நாட்டமும், மன வாட்டமும் பெற்று நோய் நீக்கம் பெறாத இந்நாளில் இறையுணர்வோடு திருநீறு பூசித் திருப்பதிகம் ஓதினால் நோய் மட்டுமின்றி எந்தத் துன்பமும் நீங்கும் என்னும் நம்பிக்கை

திகழ்ந்துள்ளதனை இதன்மூலம் அறிய முடிகின்றது. தன்னலம் கருதாது பிறர்நலம் கருதும் திருஞானசம்பந்தர் தலயாத்திரை மூலம் எல்லா இடங்களிலும் அறச்செயல்கள் செய்தார் என்று இக்கட்டுரை புலப்படுத்துகிறது.

**துணைநின்றவை (References)**


- ஞானசம்பந்தன் அ.ச., (1999) பெரிய புராணம் - ஓர் ஆய்வு, சென்னை: கங்கை புத்தக நிலையம்.
- சுப்பிரமணிய முதலியார் சி.கே., (2007), திருத்தொண்டர் புராணம் உரை (தொகுப்பு-4), கோயம்புத்தூர்: சேக்கிழார் நிலையம்.
- சுப்பிரமணிய முதலியார் சி.கே., (2013), சேக்கிழார், கோயம்புத்தூர்: சேக்கிழார் நிலையம்.
- மனோன்மணி சண்முகதாஸ், (2010) பெரிய புராணம் காட்டும் வாழ்வியல், சென்னை: குமரன் புத்தக இல்லம்.
- வசந்தகுமார், இராச. (பதி.ஆ.), (2014), பன்னிரு திருமுறை, கோவை: கற்பகம் பல்கலைக்கழகம்.